No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 7

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 7

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 ரபீ உல் ஆகிர் ௴ 1936 ௵ ஜுலை ௴

1. அல்குர்ஆன் ... 185
2. நாயக வாக்கியம் ... 187
3. ஜனாப் அப்துல்லா காந்தி ... 189
4. வஹ்தத்துல் உஜூத். அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே ... 192
5. இஸ்லாம்தான் ஸ்திரீகளை முன்னேற்றத்தின் கடைசி எல்லைவரை இட்டுச்சென்றது ... 196
6. இஸ்லாத்தின் சத்தியத் தன்மையைப்பற்றி விரோதிகளின் புகழுரைகள் ... 198
7. இஸ்லாமும் யாசகமும் ... 200
8. வர்த்தகயுக்தி, 9. சில படிப்பினைகள் 203, 206
10. நன்மையை ஏவித் தீயதை விலக்குதல் ... 209
11. முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன? 212
12. பருவத்தே பயிர்செய் ... 216
13. இப்போதேனும் விழித்தலாகாதா? ... 219
14. யவ்முந்நபிவிழா கொண்டாட்டம் ... 222

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
20834
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1355 ரபீஉல் ஆகிர் மீ 1936 ளூ ஜுலை மீ	இதழ் 7

அல் குர்ஆன்

அல்லாஹ்வுக்கு அழகான கடன் கொடுப்பவர் யார்? (அல்லாஹ்) அந்த ஐசுவரியத்துக்குள்ள புண்ணியத்தை பன்மடங்கு அதிகமாக்கிவிடுகிறான். இன்னும் அல்லாஹ் (தான் நாடியவர்களை) கஷ்டதிசையிலிருப்பவர்களாகவும், (சிலரை) சீமான்களாகவும் ஆக்கிவிடுகிறான். இன்னும் (கடைசியில் நீங்கள் மரணமான பின்) அவனளவில் மீண்டும் செல்லவேண்டியதிருக்கிறது.
(திருகுர்ஆன்)

சோதரீர்! அல்லாஹ் தஆலா எவரிடத்திலும் கடன் கேழ்ப்பதை விட்டும் தூய்மையுடையவனாக விருக்கிறான். அவன் யாரிடத்திலும் தேவையுறாத சீமானாகும். சகல வஸ்த்துக்களும் அவனால் சிருஷ்டிக்கப்பட்டனவாகும். அவன்தான் சகல காருண்யங்களுக்கும் ஊற்றுக்கண்ணாக விருக்கிறான். உதயகிரி முதல் அஸ்தகிரிவரையுள்ள சகல வஸ்த்துக்களும், வானமும் பூமியும் அவனுடையதாகும். இந்நிலைமையில் அல்லாஹ் தஆலாவுக்கு அழகான கடன் கொடுப்பவர் யார்? என வினவப்படுவதற்குள்ள கருத்து உண்மையில் வேறாக இருக்கவேண்டும். அதாவது, எவர் அல்லாஹ்வின் பாதையில் செலவிடுகின்றாரோ அவர் அதற்குப் பகரமாய் அல்லாஹ் தஆலாவால் மேலான நற்கூலியைப் பெற்றுக்கொள்கிறார் என்பதே.

இதற்குப்பின், அவன்தான் மானிடனை கஷ்டத்தில் வைக்கிறான்; அவன்தான் ஐசுவரியவானாகச் செய்துவிடுகிறான் என்று கூறப்பட்டிருப்பதின் கருத்தாவது, உலகமடங்கலையும் படைத்து அவையடங்கலையும் இரக்ஷித்து வரும் எஜமான் அவனேயாகும்; அவன்தான் சகல வஸ்த்துக்களையும் போஷித்து வளர்க்கக்கூடியவனாகும்; அவன் நாடிய சிலரை மிடிமைத்தனமுடையவர்களாகவும் வேறு சிலரை நிம்மதியோடு காலம் கழிக்கிறவர்களாகவும் செய்துவிடுகிறான் என்பதே.

ஆகவே மானிடன் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வது கொண்டு அவன் மிடிமைத்தனமுடையவனாகவும் தாழ்மையானவனாகவே ஆகிவிடுகிறான் என்று கருதலாகாது. அல்லாஹ் தஆலா மானிடனுக்கு அளவற்ற ஐசுவரியங்களை சன்மானமாக அளித்திருக்கிறா

னுகையால் அவன் உலுத்தத்தனத்தைக் கைக்கொள்ளுவானுகில் அல்லாஹ் தஆலா இவனை மிடுமைத்தனமுடையவனுகவும் நிம்மதியற்ற வாழ்க்கை நடத்துபவனுகவுமாக்கிவிடுவதற்கும் சக்தியுடையவனுகவிருக்கிறுன். ஆகவே மானிடன் முழுமனதோடு அல்லாஹ்வின் பாதையிற் செலவுசெய்வதுகொண்டு அவ்வல்லோனுல் வாக்களிக்கப்பெற்ற சன்மானத்தின்மீது நம்பிக்கை வைக்கவேண்டியது மிகமிக ஆவசியமாகும்.

இத்திரு அத்தியாயம் இறங்குவதற்குமுன் அறபிகளிடையே தயாளமற்றதன்மைகள் தாண்டவமாடிக்கொண்டிருந்தன; சகோதரவாஞ்சை, பிறருக்கு உபகாரஞ் செய்வது முதலிய சற்குணத்தின் வாடைகூட அன்னேரில் காணப்படாதிருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குள்ள சுகபோகங்களை அனுபவிப்பதிலேயே காலங்கழித்துக்கொண்டு இதரர்களின் சுகதுக்கங்களில் கலந்துகொள்வது தேவையற்ற காரியமென கருதிக்கொண்டு மிருந்தனர். இஸ்லாம் தோன்றி காட்டுமிராண்டித்தனமான இத்துற்குணங்களை யெல்லாம் நீக்கி மக்களிடையே சகோதரவாஞ்சை பிரீதி அந்நியோன்யம் முதலிய அழகிய கருமங்களை கற்பித்துக் கொடுத்தது. இதன்பயனுய் கல்நெஞ்சர்கள் கருணை ஹிருதயமுடையவர்களாகவும், மிருக வாழ்க்கையுடையவர்கள் மனிதவாழ்க்கையுடையவர்களாகவும் மாறிவிட்டார்கள். சுருங்கக்கூறின், இஸ்லாம் அந்த அறபிகளிடையே புதிய ஓர் பெரும் மாறுதலை யுண்டுபண்ணிவிட்டதென்பது மிகையாகாது என, ஹஸ்ரத் இமாம் பக்ருத்தீன் ருஜீ தங்கள் விரித்துரையில் கூறியிருக்கிறுர்கள்.

இந்த அத்தியாயம் இறங்கியவுடன் நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் அர்த்தபுஷ்டியுள்ள அழகிய சொற்பெருக்கொன்றுற்றினுர்கள். அதில் குறிப்பிட்டதாவது:—இஸ்லாமிய மக்காள்! அல்லாஹ் தஆலா தியாகஞ்செய்யுமாறு உங்களுக்கு கட்டளை பிறப்பித்திருக்கிறுன். எனவே அவனுடைய பாதையிற் செலவிடுங்கள். அத்துடன் உங்களுடைய காசுபணம் முதலிய எதுவும் அவனுக்குத் தேவையில்லை என்பதையும், அவன் சகல வஸ்துக்களையும் விட்டு தேவையற்ற சீமானுக இருக்கிறுன் என்பதையும், மானிடன் அவன் பாதையில் செலவுசெய்வதின் பிரயோசனத்தைப் பெற்றுக்கொள்வானெனவும், சுயநலமற்ற தியாகம் அல்லாஹ்வுக்கும் சுவர்க்கத்துக்கும் சமீபமாகவும் நரகத்தைவிட்டு தூரமானதாயும் இருக்கிறதென்றும், சுயநல வாதி அல்லாஹ்வினின்றும், சுவர்க்கத்தினின்றும் தூரமாகவும் நரகிற்குச் சமீபமாகவும் இருக்கின்றுன் என்றும், மக்கள் அல்லாஹ்வின் பாதையிற் செலவிடுவதுகொண்டு அவர்களுடைய ஐசுவரியங்கள் அழிந்துபோகாது விர்த்தியாகிக்கொண்டே போகிறதென்றும், உலகிலேற்படும் பிரயோசனங்களைத் தவிர மறுமையிலும் அனந்தம் பிரயோசனம் கிட்டுமென்றும் கூறியதுடன், எவர்களின் சிரங்கள் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் சாய்கின்றனவோ, இன்னும் எவர்களின் வாழ்க்கையின் மிகுதபாகம் அல்லாஹ்தஆலாவை வணங்குவதில் செலவாகின்றனவோ, இன்னும் எவர்கள் தங்களுக்குத் தேவையானதைவிட தங்கள் சகோதிரர்களுக்குத் தேவையுள்ளதில் கவனஞ் செலுத்துகின்றுர்களோ இவர்களடங்கலும் அல்லாஹ் தஆலாவினுல் அங்கீகரிக்கப்பட்ட நல்லடியார்களாகும். முஸ்லிம்காள்! எவன் தன் சோதிரனுடைய தேவையைப் பூர்த்தி செய்துவைக்கிறுனே அவனுடைய தேவையை அல்லாஹ் தஆலா பூர்த்திசெய்து வைக்கிறுன்; எவன் முஸ்லிம்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கிறுனே அல்லாஹ்தஆலா கியாமத் நாளில் அவனுக்கு அளவற்ற கஷ்டங்களைக் கொடுப்பான். ஆகவே, நீங்கள் சுயநலம் உலுத்தத்தனம் ஆகியவைகளை விட்டுத் தவிழ்ந்துகொள்ளுங்கள். அல்லாஹ்தஆலா உங்களை சுயநலமற்ற தியாகியாய்ச் செய்துவிடுவான், எனக் கூறினுர்கள். நபிகள் பெருமானுர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களின் அர்த்தபுஷ்டி ததும்பிய இவ்வரும் உபதேசமானது அறபியர்களிடையே ஓர் பெரும் மாறுதலை உண்டுபண்ணிவிட்டது; சுயநல நோக்கமென்னும் இருள் நீங்கி பிரகாசமென்னும் தியாகத்தன்மை தோன்ற ஆரம்பித்துவிட்டது. தயாளம் அன்பு தியாகம் இவைகளின் உணர்ச்சி காட்டுத் தீபோல் நாலுபாகங்களிலும் பரவ ஆரம்பித்துவிட்டது. அவர்கள் அதன் ஒளியில் பிரகாசித்துக்கொண்டிருந்தனர். இதுகாலை இத்தியாகத்தின் அடையாளமாவது நம்மிலிருக்கிறதா வென்பதை சிந்தித்துப் பார்த்து ஆவனசெய்ய முற்படுவோமாக.

நாயகவாக்கியம்

ஈமானுடைய மனிதன் பசுமையான மரத்தைப்போலிருக்கிறான்

இவ்வுலகமானது ஈமானையுடைய சாலிஹான மனிதர்களை இழந்து கொண்டே வருகிறது. தூய்மைவாய்ந்த அவ் ஆத்மாக்கள் இவ்வுலகினின்றும் சென்றுகொண்டே இருக்கின்றன. இவ்வாறான மனிதர்கள் விஷயமாய் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், "ஈமானையுடைய மனிதனுக்கு அதனுடைய இலைகள் உதிராதவும், நிழலற்றுப் போகாதவுமாகிய மரத்தை உதாரணமாக்கி அதுபேரீச்சமரமாகும்" என அறிவித்தார்கள்.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் உதாரணம் காட்டியதற் கேற்ப, ஈமானையுடைய மனிதன் அல்லாஹ்வின்படைப்புகளுக்கு தன்னிடம் கார்மான மளிப்பான். அன்னோருக்குவேண்டிய உபகாரஞ் செய்வான். சதாவும் அல்லாஹ்வின் அடியார்களை கவனித்து அவர்களுக்குத் தேவையான தொண்டுபுரிந்து வருவான். ஆனால் நிகழ்பெறும் இதுகாலை உலகம் இவ்வாறான மக்களை இழந்து உட்கார்ந்திருக்கிறது. ஆகவே அல்லாஹ் தஆலா முஸ்லிம்கள் மீது கிருபை புரிந்து அன்னோர் அல்லாஹ் தஆலாவின் படைப்புகள் மீது அன்பு பூண்டொழுகுபவராகச் செய்தருள்வானாக.

சக்திக்குத்தக்க காரியங்கள் புரியுங்கள்

மானிடன் தன் சக்திக்கு மேம்பட்ட காரியத்தைச் செய்வதிலீடுபடுவதைக் கண்ட நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், "மானிடர்காள்! உங்கள் சக்திக்குத் தக்க காரியங்கள் புரியுங்கள்; அல்லாஹ் உங்களுக்கு நற்கூலிகொடுப்பதினின்று பின் வாங்குவதில்லை. நீங்கள் நற்கருமங்கள் புரிவதிலீடுபட்டு அதைவிட்டு பின்னோக்கிவிடவும் கூடும்; எவ்வளவு கம்மியாக இருந்த போதிலும் சதாவும் நடைபெற வேண்டிய காரியங்கள்தான் அல்லாஹ் தஆலாவுக்கு மிகமிக விருப்பமுடையதாகும்" எனத் தெரிவித்தார்கள்.

நற்கருமங்கள் புரிவது, அல்லாஹ்வின் பாதையில் உயிர் ஐசுவரியங்களை தியாகஞ் செய்வது புகழுக்குரிய காரியங்களாக விருந்தபோதிலும், அக்காரியங்களுக்கும் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒரு வரை குறிப்பிட்டு, உங்கள் சக்திக்குடைய காரியங்களையே சதாபுரிந்து கொண்டுவாருங்களெனவும், வரம்பைவிட்டுக் கடந்து போகவேண்டாமெனவும், நல்ல அமல்கள் செய்வதிலும் மிதமிஞ்சி சென்றுவிட வேண்டாமென்றும், வரம்பைக் கடந்துவிடும் காரியங்கள் நேமமாக இருக்க முடியாதென்றும், எவ்வளவு கம்மியாக இருந்தபோதிலும் ஒழுங்காக - நேமமாக நடக்கக்கூடிய காரியம்தான் அல்லாஹ் தஆலாவுக்குப் பிரியமானதெனவும் கூறியிருக்கிறார்கள்.

அநீதியை விலக்கவில்லையாயின் அல்லாஹ்வின் வேதனை இறங்கிவிடும்

இக்காலை உலகில் அநீதிஅக்கிரமம் தலைவிரித்துத் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. அநீதி புரிபவர்களின் அக்கிரமத்தைத்தட்டி விலக்குவதற்கு யாருக்கும் தைரியமேற்படுவதில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்திற்காகவே நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், "மக்கள் அநீதிபுரிபவர்களின் அவ்அநீதியைப் பார்த்து அவர்கள் விலக்க வில்லையானால் சீக்கிரமாக அல்லாஹ்தஆலா அவர்கள்மீது வேதனையை இறக்கிவிடுகிறான். ஒரு வர்க்கத்தாரில் பாவங்கள் மிகைத்து அக்கூட்டத்திலுள்ள எவரும் அதனை விலக்கவில்லையாயின் உடனே அவர்களெல்லோரையும் வேதனை சூழ்ந்து கொள்ளும்படி செய்கிறான்" என அறிவித்தார்கள்.

இக்காலைகெட்டவன் அநீதிபுரிகின்றான். அவ் அநீதியைவிட்டு மக்களைத்தடுக்க யாருக்கும் சக்திகிடையாது. கெட்ட காரியங்கள் மிதமிஞ்சி தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. அதனைத் தடுக்க மக்கள் சக்தியும் பெற்றிருக்கிறார்

கள். ஆனால் யாரும் இத்தொண்டுபுரிய முன் வராது நமக்கென்னவென வாளாவிருக்கின்றனர். இதன்பயனாய் அல்லாஹ் தஆலாவின் வேதனை மக்கள் மீது அடிக்கடி இறங்கிக் கொண்டிருக்கிறது. நாம் பலவாறான கஷ்ட சங்கடங்களில் அகப்பட்டு விழிக்கிறோம்.

தாயின் பணிவிடை ஜிஹாதாகும்

"ஒரு மனிதர் பெருமானார் (ஸல்) அவர்கள் சமுகம் வந்து அல்லாஹ் உடைய ரஸுலே! யுத்தம் புரியவேண்டுமென என் மனம் நாடுகிறபடியால் தங்கள் அனுமதியை எதிர்பார்க்கிறேன் எனக் கூறினார். அதற்கு சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள், உமக்கு தாய் இருக்கின்றாரா வென வினவியதற்கு அவர் ஆம் என்று கூறவே, அத்தாய் இடம் சென்று இருந்துகொள்ளும். சுவர்க்கம் தாயினது காலுக்குக் கீழ் இருக்கிறது என கூறினார்கள்"

மேனாட்டு நவீன சீர்திருத்த ஒழுக்கங்களானது இக்காலை முஸ்லிம் வாலிபர்களை தாய் தந்தையர்களுக்கு வழிப்பட்டு நடப்பதைவிட்டு தூரத்திலாக்கிவைத்துவிட்டது. தாயாருக்குப் பணியாற்றும் விஷயமாய் சத்தியத்தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். அதாவது:—

இஸ்லாமிய விரோதிகளுடன் மார்க்க யுத்தம் புரிவது மார்க்கசேவையிற் சிறந்ததாக விருந்த போதிலும், நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தாய்க்குப் பணிவிடை செய்வதை அதைவிட மேலான காரியமெனக் கூறியிருக்கின்றார்கள். பெருமானார் (ஸல்.) அவர்களது இத்திரு உபதேசத்தை சிரமேற்கொண்டு சிறந்து விளங்குபவர் எங்கிருக்கிறார்? என்பதுதான் கஷ்டமாக விருக்கிறது.

மனிதன் புரிந்த உபகாரத்திற்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்வின் உபகாரத்திற்கு நன்றி செலுத்தமாட்டான்.

நன்றி மறந்துவிடுவதுதான் தினே தினே அதிகரித்துக்கொண்டே போகிறது. மனிதனுடைய கல்பில் திரை விழுந்துபோயிருக்கிறது. ஒவ்வொரு நாளும் எத்தனையோ நன்றி மறந்த காரியங்கள் நம் கண்முன் புரியப்படுவதை நாம் காண்கின்றோம். இது சம்மந்தமாய் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், "ஒரு மனிதர் மற்றவருக்கு உபகாரம் செய்வாராயின், அவ்வாறு உபகாரம் செய்யப்பெற்றவர் தகுதியான அந்தஸ்திலிருப்பாராயின் தனக்கு உபகாரம் செய்தவருக்கு இவர் பகரம் செய்துவிடுவது அவசியமாகும். அவர் தகுதியுடையவராக இருக்கவில்லையாயின் தனக்கு உபகாரஞ்செய்தவரைப் புகழ்ந்துகொண்டாகிலு மிருக்கவேண்டும். ஏனெனில், எவர் தனக்கு உபகாரம் செய்தவரைப் புகழ்ந்துகொண்டிருக்கின்றாரோ அவர் நன்றி செலுத்துபவராகவும், எவர் அவ்உபகாரத்தை மறைத்து வைத்திருக்கின்றாரோ அவர் நன்றி கெட்டவராகவும் ஆகிவிடுகிறார். எவர் மக்கள் புரிந்த உபகாரத்துக்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் அல்லாஹ் தஆலா செய்த உபகாரத்துக்கும் நன்றி செலுத்தமாட்டார்" எனக் கூறியிருக்கின்றார்கள்.

நமக்கு உபகாரம் புரிந்தவருக்குப் பகரம் செய்ய வேண்டுமெனவும், அவரைப் புகழ்ந்து கொண்டிருக்க வேண்டுமெனவும் நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாய் நாம் நன்மைபுரிந்தவருக்கு தீங்கே செய்துகொண்டு வருகிறோம். எவ்வகுப்பாரில் இந்தத் துர்க்குணம் ஏற்பட்டிருக்கிறதோ அவ்வகுப்பு ஒருக்காலும் முன்னேற்றமடையமுடியாது. அவ்வகுப்பினரை நன்றியறிதலுள்ள சமூகமென ஒருக்காலும் அழைக்கமுடியாது. இது திண்ணம்.

பொறாமை நன்மையை சாப்பிட்டு விடுகின்றது.

பொறாமை என்னும் நெருப்பானது மானிட வாழ்க்கையை நிலையற்றதாகச் செய்துவிடுகிறது என்பது மாத்திரமல்ல, அது ஈமானையும் எறித்துவிடுகிறது. இது சம்மந்தமாய் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், "பொறாமை கொள்வதைவிட்டுப் பேணிக்கொள்ளுங்கள். நெருப்புவிறகை எவ்வாறு சாப்பிட்டுவிடுகிறதோ அவ்வாறு பொறாமை நன்மைகளைச் சாப்பிட்டு விடுகிறது" என அறிவித்தார்கள்.

பொறாமை கொள்வது ஓர் ஆத்மார்த்த விஷயமாக இருப்பதால் அது மானிடனுக்கு ஏற்பட்டுவிடுமாயின் அவன் இவ்வுலகில் சந்துஷ்டியாக வாழவும்முடியாது; நிம்மதியாக காலம் கழிக்கவும் முடியாது.



ஜனாப் அப்துல்லா காந்தி

இந்திய ராஜிய உலகில் மிகவும் கீர்த்தி பெற்று விளங்கிவருபவரும், காங்கிரஸ் வாதிகளால் "மகாத்மா" என்று மரியாதையாக அழைக்கப்படுபவருமான ஸ்ரீமான் காந்தியவர்களின் ஜேஷ்டப் புதல்வர் ஹீராலால் காந்தி சில தினங்களுக்கு முன் இஸ்லாம் மதத்தைத்தழுவி அப்துல்லா காந்தி என்ற திருநாமத்தால் இப்பொழுது அழைக்கப்பட்டு வருகிறார். இவருக்கு இறைவன் ஈமானில் உறுதியையளித்து இகபரசாதனங்களை தந்தருள்வானாக.

ஜனாப் அப்துல்லா காந்தி இஸ்லாம் மதத்தைத்தழுவிய விருத்தாந்தத்தைப் பற்றி அவரே தம்முடைய பம்பாய் பிரசங்கத்தில் விஸ்தாரமாகக் கூறியுள்ளார். அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவியதற்கு முக்கிய காரணஸ்தர்களாகவிருந்த நமது மீரட் மௌலானா அப்துல் அலீம் ஸித்தீக்கீ அவர்களது சோதர் மௌலானா நஸீர் அஹ்மத் சாஹிப் குஸந்தி அவர்களுக்கும், பம்பாய் தப்லீகுல் இஸ்லாம் சங்கக் காரியதரிசிக்கும் இறைவன் இனியில்லா வண்ணம் மென்மேலும் வெற்றியை அளிப்பானாக. இது முஸ்லிமாக வுள்ள எவரும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவும் சகோதரர்களுக்கும், அவர்களை இஸ்லாத்தில் சேர்ப்பதற்காக முயற்சி எடுத்துக்கொள்ளும் சகோதரர்களுக்கும் இறைவனிடம் செய்யும் பிரார்த்தனையாகும். இந்திய ராஜிய உலகில் முடிசூடா மன்னராக விளங்கும் ஒருவருடைய புதல்வர் இஸ்லாம் மதத்தைத் தழுவியதற்காக இஸ்லாம் மதத்திற்குப் புதிய கௌரவம் வந்துவிட்டது என்பதற்காகவோ, அல்லது இப்படிப்பட்ட ஒருவரை இஸ்லாத்திற் சேர்த்துவிட்டதால் இஸ்லாத்திற்கு புது பலம் வந்து விட்டது என்பதற்காகவோ செய்யும் பிரார்த்தனையன்று. "நீங்கள் இஸ்லாத்திற் சேர்ந்ததைப்பற்றி என்னிடம் நன்றி சொல்லிக் காண்பிக்க வேண்டாம். ஆனால், நீங்கள் ஈமான் கொள்ளும்படி அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அவன் உங்களிடம் நன்றி சொல்லிக் காண்பிக்கிறான்" என்பதாகக் கூறும்படி இறைவன் தனது திருமறையில் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டளையிட்டுள்ளான்.

ஸ்ரீமான் காந்தியும் சரி, அவரது குடும்பத்தாரும் சரி, மற்றெவரானாலும் சரி, ஈமானில்லாதவராக இருப்பின் அவர்கள் மறுமைப் பேறுகளனைத்தையும் இழக்கக் கூடியவராகவே இருக்கிறார்கள். ஆனால், அவர்களோ அல்லது கீழ்மக்களெனக் கருதப்படுபவரோ ஈமான் கொண்டு இஸ்லாத்தைத் தழுவுவார்களாயின் அவர்கள் மறுமைப் பேறுகளை அடைய அருகதையுள்ளவராகி விடுகின்றனர். எனவே, ஒருவர் இஸ்லாத்தைத் தழுவுவதால் அவருக்கு நன்மை ஏற்படுகின்றதே யல்லாமல் வேறொன்றுமில்லை. ஆதலின், இஸ்லாத்தைத்தழுவும்எவரும் தம்முடைய இச்செய்கையால் முஸ்லிம் சமூகத்திற்கு நன்றிசெய்து விட்டதாகவோ, இஸ்லாத்திற்கு உதவி செய்ததாகவோ கருதமுடியாது. ஆதலின், ஸ்ரீமான் காந்திஜியின் புதல்வர் இஸ்லாத்தைத் தழுவிய

தானது முஸ்லிம் சமூகத்தில் சாதாரண மாக நடைபெறும் ஒரு சம்பவமேயன்றி, அதற்கு விசேஷமெதுவுமில்லை. ஆனாலும், ஹிந்து சமூகத்திற்கு இவ்விஷயம் ஒரு மகத்தான சம்பவமாகவும், சாட்டையாக வும் இருக்கிற தென்பதில் ஐயமில்லை. ஏனெனில், இந்தியாவிலுள்ள சமூகங் களில் ஹிந்து சமூகம் பெரும்பான்மை யினரின் சமூகமாக இருந்து வருவது டன் அச்சமூகத்திலுள்ள வருணாசிரம தர்மத்தால் அவதிப்பட்ட அநேகம் தாழ் ந்த வகுப்பினர் ஹிந்து மதத்தைவிட்டு வேறுமதம் தழுவிக்கொண்டும் அதிலும் பிற மதத்தைத் தழுவும் ஹிந்து சகோத ரர்கள் பெரும்பாலும் இஸ்லாம் மதத் தையும் கிறிஸ்துவ மதத்தையும் தழுவி யும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஹிந்து மதத்தைவிட்டு விலகித் தங்களுக்குச் சமத்துவமும் ராஜீயப் பொருளாதார வுரிமைகளும் வசதிகளும் அளிக்கத்தக்க வேறு மதத்தைத் தழுவவேண்டும் என்று கிளர்ச்சியும், பிரசாரமும், ஆலோசனை யும் செய்தும் வருகிற இச்சந்தர்ப்பத்தில்- ஹிந்து மகா சபையினரும், ஹிந்து மத பக்தர்களும் தாழ்த்தப்பட்ட சகோதரர் கள் புத்தமதம், சீக்கியமதம், ஜைனமதம் போன்ற மதங்களில் ஏதேனும் ஒன்றைத் தழுவிக் கொள்ளலாம் என்றும் இஸ் லாம் மதத்தைத் தழுவவேண்டா மென் றும் கூறிவரும் இத்தருணத்தில்— ஹிந்து சமூகத்தில் முடிசூடா மன்னராக விளங்கிவரும் பிரபல ராஜீய தலைவரான ஸ்ரீமான் காந்திஜியின் புதல்வர் இஸ் லாத்தைத் தழுவி, இஸ்லாம் மதத்தி லுள்ள சமத்துவத்தையும் இதர பல சிறப்புகளையும் போற்றிப் புகழ்ந்து பிர சங்கம்செய்ததானது மேற்கண்ட ஹிந்து மதபக்தர்களுக்குத்தக்க பதிலாக வும், தாழ்ந்த வகுப்பினருக்குச் சிறந்த முன்மாதிரியாகவு மிருந்து வருகின்றது. இது விஷயமாய் ஹிந்து சமூகத்திற்கேற் படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் நோக்கோடு அதற்கும் தக்க சமாதான மாக இருக்கும் பொருட்டு அவர்மீது பல வாறான குற்றங்குறைகள் சுமத்திவரப் படுகிறது. அவருக்குப் பொருள்மீது அதிகத்தேவை, அவர் கடன்காரர், மது பானம் அருந்துபவர் என்றெல்லாம் ஸ்ரீ மான் காந்திஜியே தமது புதல்வரைக் குறித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார் என்றால், ஹிந்து சமூகத்தினரின் எதிர்ப் பிரசாரத்திற்கு வேறொரு அத்தாட்சி யும் வேண்டியதில்லை. “எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு” என்றபடி முஸ்லிம் சமூகம் அறிவுள்ள சமூகமாகை யால் ஹிந்து சமூகத்தாரின் எதிர்ப் பிர சாரத்தைக்கண்டேமார்ந்துவிடப் போவ தில்லை. முஸ்லிம் சமூகத்தினரைக் கொண்டே ஜனப் அப்துல்லா காந்தியை இஸ்லாத்தைவிட்டு வெளியேற்றி விட லாம் என்று பிரயத்தனம்செய்வது வீண் வேலையே யாகும். துன்மார்க்கர்களாக வும், ஒழுக்கமில்லாதவர்களாகவும், அஞ் ஞானிகளாகவும் இருக்கிறவர்களையே இஸ்லாம் மதம் சீர்திருத்திச் சன்மார்க் கர்களாகவும், சிறந்த நற்குண நன்னடத் தையுள்ளவர்களாகவும், மெஞ்ஞானிக ளாகவும் ஆக்குவதற்காகவே இவ்வுலகிற் றோன்றியதாதலின் இஸ்லாம்மதத்தைத் தழுவ விரும்பும் சகோதரர்கள் நன் னடத்தையுள்ளவர்களா? நற்குண சாலி களா? மெஞ்ஞானம் படைத்தவர்களா? சன்மார்க்கர்களா என்ற விஷயத்தை முஸ்லிம் சமூகம் கவனித்ததுமில்லை, கவ னிப்பதுமில்லை, இனிமேல் கவனிக்கப் போவதுமில்லை. ஆதலின், ஜனப் அப் துல்லா காந்தி இதற்குமுன் மதுபானம் அருந்தியவராகவோ, பேராசைக்கார ராகவோ, வேறெவ்விதமானவராகவோ இருந்தாலும் இது சம்மந்தமாய் முஸ்லிம் கள் அவரை வெறுக்கவோ, தூஷிக் கவோ, இஸ்லாத்தைவிட்டுப் பிரஷ்டம் செய்யவோ போவதில்லை. ஸ்ரீமான் காந்திஜீ கூறுவதுபோல் ஜனப் அப் துல்லா காந்தி உண்மையாகவே பல

குறைகளுள்ளவராக இருக்கும் பக்ஷத்தில் அவரை இஸ்லாம் மதம் சீர்திருத்தி நல்வழிக்காளாக்கிவிடும். அவர் அவ்வாறு குறைகளில்லாதவராக இருப்பின் ஹிந்து சமூகத்திலுள்ள ஒரு பெரிய மனிதருடைய தன்மை எத்தன்மைத்து என்பதை எல்லா சமூகத்தினரும் நன்குணர்ந்து கொள்வர் என்பது நிச்சயம். தவிரவும்; உண்மையாகவே அவர் குறைகளுள்ளவராக இருப்பின் அதுவும் ஸ்ரீமான் காந்திஜீயின் மகாத்மியத்திற்குப் பங்கம் உண்டுபண்ணுவதாக இருக்கிறதேயன்றி, அவருக்கு விசேஷமான பலனை அளிக்கக் கூடியதாக இல்லை. "தான் றேருன் பிறனை எப்படித்தேற்றுவான்" என்பதுபோலத் தமது மக்களைச் சீர்திருத்தி ஒழுங்கு செய்யமுடியாத ஒருவர் பிறரை எங்ஙனம் சீர்திருத்த முடியும்? என்பது எல்லாருக்கும் வெளிப்படை.

ஸ்ரீமான் காந்திஜீயின் புதல்வர் இஸ்லாம் மதத்தைத் தழுவி அப்துல்லா காந்தியாக மாறிவிட்டதால் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் இதனுல் உணர்ந்து கொள்ள வேண்டிய படிப்பினைகளைப்பற்றிக் கவனிப்போம். தாழ்த்தப்பட்ட சகோதரர்களும் ஹிந்து சமூகத்தினரேயாவர். தங்களது ராஜீய வழிகாட்டியான ஸ்ரீ காந்திஜியின் குடும்பத்தினரே இஸ்லாம் மதத்தின் மேன்மையை யுணர்ந்து இஸ்லாத்தில் சேருவதென்ருல் இஸ்லாத்தின் சிறப்பைப் பற்றி நாம் கூருமலே அவர்கள் நன்குணர்ந்துகொள்ள முடியும். தவிரவும் ஸ்ரீமான் காந்தி தமது புதல்வரின் மத மாற்றத்தைக்குறித்து வெளியிட்ட அறிக்கையில், இஸ்லாம் மதத்தைச் சன்மார்க்கம் என்று ஒப்புக்கொண்டிருப்பதால் இஸ்லாம் மதம் சன்மார்க்கமாக இருப்பதுடன் யாவருக்கும் சமத்துவத்தை அளித்து உலக சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவதாக இருக்கிறது என்பதும் நன்கு வெளியாகிறது. இவ்விஷயத்தைத் தாழ்த்தப்பட்டோர் நன்குணர்ந்து கொள்ளவேண்டும். மேலும், ஜனப் அப்துல்லா காந்தி இஸ்லாத்தைத் தழுவு முன் கிறிஸ்துவமதம் உள்பட வேறு பல மதத்தைப்பற்றியும் பலகாலம் ஆராய்ச்சி செய்ததாகவும், அவைகளில் தாம் விரும்பிய உண்மையும், சமத்துவமும், சகோதரத்துவமும் காணுமற் றவித்துக்கொண்டிருந்ததாகவும், அப்பால் இஸ்லாம் மதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த பிறகு இஸ்லாம் மதத்தில்தான் தமது தாக விடாய் தீரும் அருமருந்துகளிருப்பதாகக் கண்டுகொண்டதாகவும் கூறி இருக்கிருர். ஆதலின், ஹிந்துமதத்தைவிட்டு விலகி, வேறு எந்த மதத்திற் சேருவதெனத் தெரியாமல் தயங்கிக்கொண்டிருக்கும் தாழ்ந்த வகுப்புச் சகோதரர்கள் பல மதத்திலுமுள்ள உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு ஜனப் அப்துல்லா காந்தியின் இவ் ஆராய்ச்சியும் சிறந்த வழிகாட்டியாக இருக்குமென நம்புகிறேம். நிலைமை இவ்வாறிருக்க. தாழ்ந்த வகுப்பினர் ஜனப் அப்துல்லா காந்தியின் வழிமுறையைப் பின்பற்றிப் பல மதங்களையும் ஆராய்ச்சி செய்து, இஸ்லாம் மதத்தின் சிறப்பினையுணர்ந்து கட்டுப்பாடாக இஸ்லாம் மதத்தைத் தழுவ முன்வருவார்களாயின் இந்தியாவில் ஹிந்து சமூகத்திற்குள்ள பெரும்பான்மை அந்தஸ்து சீரழிந்து முஸ்லிம் சமூகம் சொற்ப வித்தியாசத்துடன் பெரும்பான்மைச் சமுகமாகிவிடுமோ எனவும், இதுவரை ஹிந்து சமுகம் சகல விஷயங்களிலும் ஏகபோக பாத்தியமே போல் ஆதிக்கம் செலுத்தி வந்தது குன்றிவிடுமோ எனவும் கருதி அஞ்சி, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஜனப் அப்துல்லா காந்தியைப் பின்பற்ருமலிருக்கும்பொருட்டு அவரைப் பிறர் கேவலமாக மதிக்கும் தோரணையில் ஹிந்துக்கள் எழுதி வருகின்றனர் என்பதும், இஸ்லாம் மதத்தைப்பற்றி ஆரிய சமாஜிகள் முதலிய சில ஹிந்துக்களும், கிறிஸ்

துவர்களில் சிலரும் பற்பல விதமாகக் குறை கூறியும் தூற்றியும் வந்தது சுத்தத்தவறு என்பதும், அவர்கள் வேண்டுமென்றே இஸ்லாத்தின் உண்மைகளை மறைத்துப் பழிசுமத்தி வந்திருக்கிறார்கள் என்பதும் இம்மதமாற்றத்தால் பிறமதத்தவர் உணர்ந்து கொள்ளத்தக்கனவாக இருக்கின்றன என்பதைத்தாழ்ந்த வகுப்பினர் உணர்வார்களாக. எனவே, ஜனப் அப்துல்லா காந்தி அவர்கள், இஸ்லாத்தைத் தழுவிய சம்பவத்தால் இஸ்லாம் மதத்திற்கு விசேஷ மகத்துவம் எதுவும் புதிதாக உண்டாகி விடப் போவதில்லை என்றாலும், அதன் விரோதிகள் இஸ்லாத்திற்கு எதிராகக்கூறி வந்த பல அபாண்டங்கள் அம்பலத்திற்கு வர ஹேதுவாக இருப்பதுடன் ஹிந்துமதம் முதலிய பல மதங்களிலும் இஸ்லாம் மதம் சிறந்ததாக இருக்கிறதென்ற உண்மையைப் பொதுவாக முஸ்லிம் அல்லாதாரும், முக்கியமாகத் தாழ்த்தப்பட்டவர்களும் உணர்ந்து கொள்ள முடியும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

வஹ்தத்துல் உஜூத். அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே

சோதரீர்! சூபிய்யாக்கள் எனப்படுவோரான சாதுக்கள், அல்லாஹ்வினால் அருளப்பெற்ற சட்டதிட்டங்களுக்கு மாறு செய்யாது அவனது கட்டளைகளைச் சிரமேற்றாங்கி நடந்துவருகிறார்கள். வல்லநாயனின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அவனல்லாத எவரையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. மேலும் அவர்கள் சாதாரண மனிதர்களைபோன்று தங்கள் வெளியுறுப்புக்களை பல்வேறு வேலைகளிலிடுபடுத்திக்கொண்டிருந்தாலும், அவர்களின் பரிசுத்த ஹிருதயம் எப்பொழுதும் அல்லாஹ்வையே நினைத்துத் துதித்துக்கொண்டிருக்கும். அல்லாஹ்வை நாம் பார்க்கமுடியாதுபோனாலும் அல்லாஹ் நம்மை பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்பதனால் அவர்கள் அல்லாஹ்வைப் பார்ப்பதைப்போல் எண்ணி வணங்கிக் கொண்டும், பாபகாரியங்களை விட்டகன்று கொண்டும் வருகிறார்கள். பொதுவாய் அவர்கள் தங்கள் ஹிருதயத்தை அல்லாஹ்வின்பால் ஒப்படைத்துவிடுகிறார்கள் என்பது மிகையன்று.

வல்லநாயனும் அல்லாஹு சுபுஹானஹூவ தஆலா இவர்களின் தியாகத்தை உகந்து அவர்களின் ஹிருதயத்திற்கு தனது சமுகத்தில் இடமளித்து அதனை தன் ஆதிக்கத்திலே வைத்துக்கொள்கிறான். இவ்வித அந்தஸ்த்தை அடைந்த ஒருவரின் ஹிருதயத்தின் மீது இகலோக ஆசாபாச மாய் கைக்கும், அதற்கு ஆதரவளிக்கும் சாத்தானுக்கும் ஆதிக்கம் பெறமுடியாதென்பது ஸ்பஷ்டம். மேலும், வல்லநாயன் அவர்களின் தியாக அந்தஸ்த்திற்குத் தக்கவாறு அவர்களை ஆத்மார்த்தநுறையில் பரிபக்குவப்படுத்தக் கருதுகிறானதலால், அப்பரிசுத்த சாதுக்களுக்கு பசித்திருப்பதே பூரண திருப்தியளிக்கக்கூடிய புசிப்பாகவும், விழித்திருப்பதே வினோத சுகம் தரத்தக்க நித்ராரோக்கியமாகவும், தனித்திருப்பதுதான் அவர்களுக்கு தேசசஞ்சாரமாகவும் மாறிவிடுகின்றன. ஊண், உறக்கம், இணை, துணையற்ற இறைவன்பால் அடைக்கலம் புகுந்து அவனின் பாதுகாப்பு, பரிபக்குவம் முதலிய நல்லருளிற்கு ஆளான ஒருவர் உண்டு உறங்கி கூடிக் களிப்புறுவதென்றால் அது எவ்வனம் சாலும்?

இவ்வாறு நீண்டநாள் அப்பியசித்து சாதனை பெற்றவர்களின் மனதில் நித்திய மெய்ப்பொருளான அல்லாஹ்வைத் தவிர்த்துள்ள அநித்திய பொய்ப்பொருள்களாம் 'கல்கு' (படைப்பு) களுக்கு கொஞ்சமும் இடம் இருப்பதே இல்லை. அவர்களைப் பொறுத்தவரை அனித்தியப் பொருள் (கல்கு)கள் யாவும் மறைந்தழிந்து போய்விடுகின்றன. நித்தியப்பொருள் (ஹக்கு) மாத்திரம் நிலைத்திருக்கின்றது. இத்தருணத்தில் அவர்கள் அல்லாஹ்வைத் தவிர்ந்துள்ள

எப்பொருளையும் நினைப்பதுமில்லை ; அறிவதுமில்லை யாதலால், உள்ளபொருள் ஒன்றே என்றும், அல்லாஹ்வைத் தவிரவேறுபொருள் இல்லவே இல்லை என்றும் தங்களையும் மறந்து அல்லாஹ்வைத் தனித்தவனென்று கிரியாம்சையிலும் ருஜூப்பித்து ஸ்திரப்படுத்துகிறார்கள்.

இவர்கள் ஏகத்துவத்தின் (தவ்ஹீதின்) உச்சஸ்தானத்தை அடைந்திருப்பதனால் அங்கே கனிந்தொழுகும் தேனினுமினிய திவ்யாமிர்தம்போன்ற பாக்கியங்களை ஆண்டவன் இவர்களுக்கருளுகின்றான். 'கறாமத்' என்பது அவைகளிலொன்றே. அதனை பின்னொரு சமயம் விளக்குவாம். (இன்ஷா அல்லாஹ்)

சூபியாக்கள் ஆகாக்காரியங்களையும் துற்குணங்களையும் முதலில் களைந்து பிறகு ஆண்டவனின் கட்டளைக்குத் தலைசாய்த்து நடந்துவருகிறார்கள் என்பதுமட்டிலுமல்ல, அப்பரமசாதுக்கள் எல்லா நற்குணங்களையும் ஆபரணமாய்ப் பூண்டு இலங்குவதோடு தங்களுக்கு ஆகுமான சுகபோகங்களையெல்லாம் விட்டுவிடுகிறார்கள். மேலும் முக்கிய மல்லாத நற்கருமங்கள் யாவையும் பேணி எடுத்து நடக்கின்றனர். இவ்வப்பியாசச் சாதனையில் இவர்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை மாத்திரம் பொருளென மதிக்கின்றார்கள். மற்றவைகளெல்லாம் ஒரு சந்தர்ப்பத்தில் இல்லாதிருந்தது, மற்றொரு சந்தர்ப்பத்தில் இல்லாமலாகக் கூடியது என்பதையொட்டி இப்பொழுதும் இல்லாதிருப்பதாகவே கருதுகின்றனர். இவ்வுத்தேசம் முற்றிக்கொண்டே வந்து நாளடைவில் 'கல்கு' (அநித்தியப்பொருள்)கள் யாவையும் மறந்து விடுகிறார்கள். இதுவென்ன ! தங்களையும் மறந்துவிடுகிறார்கள். இவர்கள் இவ்வுச்சஸ்தானத்தை அடைந்த பிறகுதான் "வஹ்ததத்துல் உஜூத்" என்னும் மதுவூட்டப் பெறுகிறார்கள். அம்மதுவருந்திய இவர்கள் இன்னும் மயங்கிவிடுகிறார்கள். அதேமயக்கத்தில் கடைசிவரை இருப்பவர்களுமுண்டு, அதிலிருந்து தெளிவுபெற்று திரும்புகிறவர்களுமுண்டு. இவர்களில் முந்திய சாராருக்கு "மஜ்தூபெஸாலிக்" என்றும், இரண்டாவது சாராருக்கு "ஸாலிகெ மஜ்தூப்" என்றும் சொல்வதுண்டு. இதை மற்றோரிடத்தில் விளக்குவாம்.

அந்த ஸூபியாக்கள் தங்கள் சாதனையை மெய்ப்படுத்துவான் வேண்டி அநித்தியப் பொருளான 'கல்கு' என்பதை நினைக்காமல் மறந்துவிடுவதினால் அவர்களைப் பொறுத்தவரை 'கல்கு' அழிந்துபோனதாய்க் கருதப்படுவது உண்மையானாலும், எதார்த்தத்தில் 'கல்கு' அழிந்து இல்லாமலாகிவிட்டதென்பதல்ல. ஆனால் சூபிய்யாக்கள் தவறாய் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் கருதுவதற்கில்லை. ஏனெனில், முன்னால் இல்லாதிருந்ததும் இனி இல்லாமலாகக் கூடியதுமான ஒன்றைத்தான் தங்களைப் பொறுத்தவரை இல்லாமலாக்கிக்கொள்ளுகிறார்கள். ஆதலால் அவர்களை அறிவாளர்களென்றும் அதிஜாக்கிரதையுடையவர்களென்றுமே போற்றக்கடவோம்.

"வஹ்ததத்துல் உஜூத்" உடைய உண்மை இவ்வாறிருக்க, இறைவனின் கட்டளைகள் இன்னின்னது என்றுகூட சற்றும் உணராத மாக்களும் இன்று "வஹ்ததத்துல் உஜூத்", என்பதை சாதாரண மக்கட்கு வகுத்துக்காட்ட முற்பட்டிருக்கின்றனர். இதுவும் காலாகோலங்களில் ஒன்றேயாம்.

வல்லநாயனின் கட்டளைகளுக்கு நேர்மாறாக சாத்தானின் சமிக்கைக்கு கட்டுப்பட்டு நடப்பவர்கள், அல்லும் பகலும் அல்லாஹ்வை மறந்து அவனல்லாதவைகளிலேயே தங்கள் நினைவை ஒட்டிக்கொண்டிருப்பவர்கள், நித்திய வாழ்வை மறந்து அநித்தியத்தையே மனதில் கொண்டு ஆசாபாச சுழலிலே தங்கள் மனதை மூழ்கடித்தவர்களென்று இகழப்பெறும் இவர்களுக்கும் "வஹ்ததத்துல் உஜூத்" என்பதற்கும் என்ன சம்பந்தமிருக்கின்றது.

"வஹ்ததத்துல் உஜூத்" என்றால், 'ஹக்கு' (நித்திய பொருள்) 'கல்கு' (அநித்தியப் பொருள்) என்று சொல்லப்படக்கூடிய இரண்டும் ஒன்றுதான் என்று இவர்கள் விபரீதமாய் வகுத்துக் காட்டுவதில் நமக்கொன்றும் வியப்பேற்படுவதற்கில்லை. இவ்வித தான்தோன்றிகளின் கதி இவ்வாறுதான் வந்து முடியும் என்பதை உலகம் அறிந்திருக்கிறது. ஆனால், படைத்தோனை 'ஹக்கு'வே படைக்கப் பெற்றதான 'கல்க்' என்றும், இரண்டு பொருள்களும் ஒன்றுதான் என்றும் இயம்புவோர், உண்மையில் நாஸ்தீகத் தான்தோன்றிகளைவிட தீயராவர் என்பதை உணரல் வேண்டும். இத்தகைய நம்பிக்கை கொண்டவர்கள், தங்கள் மனையாளுக்கும் மாதாவிற்கும் மத்தி

யில் என்ன வித்தியாசத்தைத்தான் விட்டு வைத்திருக்கப் போகின்றார்கள். ஆ! இவர்களின் மௌடீகம்தானென்னே!

"வஹ்தத்துல் உஜூத்" என்பது வஹதத்-அல்-உஜூத் என்னும் மூன்று பதங்களால் இணைக்கப்பெற்ற ஒரு சொற்றொடராகும். உள்ளமைப்பொருள் ஒன்று என்பதுதான் அதற்கு சரியான கருத்து என நாம் கூறுமிடத்து, இத்தனை கோடானுகோடி எண்ணற்ற பொருள்கள் தோன்றி நிற்கும் இத்தருவாயில் உள்ளமைப்பொருள் ஒன்றே என்றியம்புவதெங்ஙனம்? என்று ஒரு சிலர் எண்ணவும் இடமுண்டு. அவர்களின் சந்தேகம் நீங்கும்வான் வேண்டி அதைப்பற்றி கொஞ்சம் ஆராய்வோம்.

நித்தியம், அநித்தியம் என்னும் கருவிகளைக் கொண்டு பொதுவாய் பொருள்களை பகிர்ந்து பார்ப்போமெனில், ஒரு பொருள் மாத்திரம் நித்தியமாகவும், மற்றெல்லாப் பொருள்களும் அநித்தியமாகவும் இருக்கின்றதென்னும் முடிவிற்கு வெகு சுலபமாய் வந்து விடலாம். அந்த நித்தியமான பொருளிற்கே 'ஹக்கு' என்றும், அநித்தியமான மற்றெல்லாப் பொருள்களுக்கும் 'கல்கு' என்றும் நாம் கூறுகின்றோம்.

'ஹக்கு' என்பது ஆதிமுதற் பொருளாகவும், அந்தமற்றதாகவும், மாறுதலடையக்கூடாததாகவும், தன்னைக்கொண்டு தானே சுயநிலைப் பெற்றதாகவும், மற்றெல்லாப் பொருள்களையும் ஆக்கி நிலைபெறச்செய்து காத்தளிக்க வல்லதாயும் இருத்தல் வேண்டும் என்பதை யாவரும் அறிந்திருக்கிறோம். 'கல்கு' என்பதோவெனில், அதற்கு மாற்றமானதாகும். இதற்கு ஆதிஅந்தம் உண்டு; மாறுதல் அடையக்கூடியதாகும்; தன்னல்லாததை (ஹக்கை)க் கொண்டு நிலைபெற்றிருப்பதாகும். மேலும் கல்கின் பூர்வாங்கம் இல்லாமையாகும். ஹக்கின் பூர்வாங்கமோவெனில் இல்லாமைக்கு நேர் மாற்றமான உள்ளமை என்பதாம். இத்தியாதி காரணங்களினால் உள்ளமைக்குரிய பொருள் ஒன்றென்பது உண்மையாகின்றது.

இவ்விரண்டு பொருள்களில் முதற்பொருளான 'ஹக்கு' தன்னைக்கொண்டே நிலைபெற்றிருப்பதற்கும், இரண்டாவது பொருளான 'கல்கு' சுயநிலை பெறாமல் தன்னல்லாத பொருளான அம்முதற் பொருளைக்கொண்டு நிலைபெற்றிருப்பதர்க்கும் உதாரணமாக மரத்தையும் நிழலையும் ஒப்பிட்டுக் கூறலாம். மேலும் அவ்விரண்டின் நித்திய அநித்திய தன்மைக்கு உதாரணமாய் அலையையும் கடலையும், நீரையும் குமிழியையும் சொல்லப்படுவதுண்டு. இவ்வுதாரணங்கள் ஹக்கு, கல்கின் எத்தன்மையை விளக்கிக் காட்டுவதற்காக கூறப்படுகிறதென்பதை சற்றும் உணர்ந்து கொள்ளாத சிலர், இவ்வுதாரணங்களை மேற்கோளாய் வைத்துக்கொண்டு 'ஹக்கு'தான் கல்காக ரூபமெடுக்கின்றது. பின்னும் அந்த 'கல்கு' ஹக்காக போய்விடுகிறதென்று கருதிக்கொண்டு காபிராகிவிடுகின்றனர்.

அந்தோ! பரிதாபம்!! இவர்கள், சூபிய்யாக்களின் ஆரம்ப அறிச்சுவடிகளையாவது கண்டிருப்பார்களா, வென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில், 'கல்கு' எத்தனைபடிமேல் போனாலும் ஹக்காகமாட்டாது; ஹக்கு எவ்வளவு கீழ்போனாலும் கல்காகமாட்டாது, என்பது சூபிய்யாக்களின் மெஞ்ஞான கலையின் அஸ்திவாரமாகும். மேலும் ஆதி முதற்பொருளான 'ஹக்கு' ஆதியில் எந்நிலைமையிலிருந்ததோ அதே நிலைமையில் எண்ணிறந்தகோடி அநித்தியமான கல்கு தோன்றிய பின்னும் இருந்துகொண்டிருக்கிறது என்பது அவ்வஸ்திவாரத்தின்மீது நாட்டிய முதற் கல்லாகும்.

எனவே, நித்திய அநித்திய பொருள்களுக்கு உதாரணமாக, மரத்தையும் நிழலையும் கூறப்படுவதன் கருத்தென்னவெனில், நிழலில்லாமற் மரம் இருக்கலாம்; ஆனால் மரம் இல்லாது நிழல் இருக்கமுடியாது என்பதைப் போன்று, அநித்தியப் பொருளான 'கல்கு' இல்லாமல் நித்திய பொருளாய 'ஹக்கு' இருக்கலாம், ஆனால் நித்தியப்பொருளில்லாமல் அநித்தியப் பொருள் இருக்கமுடியாதென்பதே. மேலும் மரம் தன்னைக்கொண்டு சுயநிலை பெற்றிருப்பதைப் போலும், நிழல் தன்னல்லாத பொருளை (மரத்தை)க் கொண்டு நிலைபெற்றிருப்பதைப் போலும், நித்தியப்பொருளான வல்லநாயன் தன்னைக்கொண்டு சுயநிலை கொண்டிருக்கிறான்; அநித்திய பொருள் தன்னல்லாததை (நாயனை) கொண்டு நிலைபெற்றிருக்கின்றது என்பதைத்தான் இவ்வுதாரணத்திலிருந்து விளங்கிக்கொள்ள வேண்டுமேயன்றி மரந்தான் நிழல், நிழல்தான் மரம் என்றோ? அல்லது மரமும் நிழலும் சேர்ந்ததுதான் மரம் என்றோ? கொள்ளலாகா.

இதைப்போன்றே அலையில்லாது கடலிருக்கலாம், கடலில்லாது அலை தோன்ற முடியாதென்றும், குமிழி இல்லாது நீரிருக்கலாம், நீர் இல்லாமல் குமிழி தோன்ற முடியாதென்றும் கருத்துக் கொள்ளுவதோடு கடலும் நீரும் சுய நிலைபெற்றனவாகும், அலையும் குமிழியும் சுய நிலையற்று பரநிலைகொண்டு தோன்றி நிற்பனவாகும் என்னும் கருத்துக்களை மாத்திரம் இவ்வுதாரணங்களினின்று எடுத்துக்கொண்டு இதற்கிணங்க ஹக்கையும் கல்கையும் வைத்துப் பார்க்கவேண்டும்.

உதாரணமாக, அலீ என்பார் ஒரு புலி என்று சொல்லப்பட்டால் அன்னாரின் வீரபருக்கிரமத்தில்தான் அவரைப் புலியைப்போல் எண்ணிக்கொள்ள வேண்டுமேயன்றி நாலுகாலிலும் ஒரு வாலிலும் அன்னாரை புலியைப்போல் எண்ணுவது மடமையாகுமன்றோ?

இவ்வுதாரணங்களிலிருந்து தப்பருத்தம் கொள்ளக்கூடியவர்கள், குமிழியும் அலையும் நீரும் கடலுந்தான், கடலிலேயே அலைதோன்றுகிறது; நீரிலேயே குமிழி உற்பத்தியாகின்றது; அவைகளிலேயே இவைகள் மடிந்துபோய் விடுகின்றன வென்பதிலும் ஹக்கையும் கல்கையும் ஒப்பிட்டு பார்க்கின்றனர். இவர்களுக்கும், அலீயெனப்படுவோர் ஒரு புலி எனப்படும் பொழுது காலிலும் வாலிலும் ஒப்பிட்டுப்பார்ப்போனுக்கு மிடையே வித்தியாசம் இருப்பதாய்க் கருதமுடியுமா? இல்லை. ஆனல் இவர்கள் தப்பருத்தங் கொள்ளுவதைப் போன்று மற்றொருவன், அலையும் கடலும் நீரும் குமிழியும் இளகல் பதார்த்தமாயிருப்பதை போன்று, ஹக்கும் கல்கும் இளகற்பதார்த்தங்கள்தான் என்று வாதாடினுல் இவர்கள் அவனை எங்ஙனம் மறுக்கமுடியும் என்பதை நினைத்து நினைத்து நாம் வருந்தவேண்டி இருக்கின்றது. "வஹ்தத்துல் உஜூதை" விளக்கப் புகுந்த யாம் பலரின் விதண்டா வாதங்களுக்கும் வீணர்களின் விபரீத கொள்கைக்கும் வாயளந்து கொட்ட வேண்டிய சங்கடம் வந்து சேர்ந்து விடுகிறது. அதுபோகட்டும் சங்கடம். இனி "வஹ்தத்துல் உஜூத்" என்பதை இன்னும் சற்று அலசிப்பார்ப்போம்.

நீண்ட நாளைக்குமுன் இப்பூமண்டலக் கூட்டிலே கருங்குயிலை யொத்த 'லைலா' வென்னும் கன்னிகை குடிகொண்டிருந்தாள். அக்கருப்பியை 'கைஸ்' என்னும் ஆடவர் காதலித்தார். காதலி, தன்னை கருதாததைக்கண்ட கைஸ் (மஜ்னூன்) கலங்கி அழுதார். கதறி தவித்தார். அன்னுளுக் (லைலாவிற்)காக, என்னுளும் புண்ணுளாய் ஏங்கிப் புலம்பி அலைந்தார். அவர் எங்கு சென்றலைந்தாலும் அவரின் ஹிருதயம் லைலாவை விட்டகல்வதே இல்லை. அன்னுளின் திருவடிகளை சுற்றி நிற்பதே அவரின் ஹிருதயத்தின் திருத்தொண்டாய் முடிந்தது. இவ்வாறு அம்மாதுவினிடம் மனதை ஒப்படைத்த இப்பெரியார் ஊண் உறக்கத்தை மறந்தார். உலகப்பற்றை துறந்தார் என்பதென்ன! அவ்வம்மையாரைத் தவிர மற்றவர்களையும் தன்னையும் மறந்தே போய்விட்டார். அவரைப் பொறுத்த மட்டில் லைலாவைத் தவிர்த்துள்ளவைகளெல்லாம் இல்லாமற் போய்விட்டது. எங்கு பார்த்தாலும் லைலாதான். நாயைப்பிடித்து லைலா வென்ரு முத்துகிருர். அவர் முத்தும்பொழுது அது கடித்துவிட்டால் அவளும் (லைலாவும்) தன்னை முத்தி முகர்வதாகவே கருதி மகிழ்வார் பாவம்!. 'கைஸ்வின் இக்கருமங்களையெல்லாம் கண்ணுறும் எவர்கள்தான், இன்னுரின் பயித்தியகாரத்தனத்தைப் பார்த்து சகித்துக்கொண்டிருப்பர். எல்லோராலும் மஜ்னூன், மஜ்னூன் (பயித்தியம் பயித்தியம்) என்று பரிகசிக்கப்பட்டு விரட்டப்படுவார். காதற் கவசம் அணிந்த இவ்வீர 'கைஸு'வினுல் இப்பொழுதென்ன செய்யமுடியும்? காடேகுவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே, மனையாளும் மக்களைவிட்டகன்றகன்று காட்டிற் புகுந்துவிட்டார். அங்கு வந்தாலும் அவரின் நிலைமை என்னே? அதுவேதான். காட்டிலுள்ள மான் மரைகளெல்லாம் லைலாவாகத் தான் அவருக்குத் தோன்றுகிறது. அவை கால்களை வெட்டி பாய்ந்து பாய்ந்து ஓடும்பொழுது இவர் லைலா! லைலா!! வென்றே கூவிக்கொண்டு அவைகளுக்குப் பின்னுல் ஓடி ஓடி களைத்து மூர்ச்சையாகி கீழே அடித்து விழுவார்.

(தொடரும்)

அறிவிப்பு

"வஹ்தத்துல் உஜூத் அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே" என்னும் மகுடந் தாங்கிய வியாசம் தொடர்படியாய் நமது மாசிகையின்கண் வரையப்பெற்று வருமாகையால் அன்பர்கள் படித்துணர்ந்து பயன் பெறுவார்களாக.

இஸ்லாம்தான் ஸ்திரீகளை முன்னேற்றத்தின் கடைசி எல்லைவரை இட்டுச் சென்றது

இஸ்லாம் மதம் ஸ்திரீகளின் நன்மைக்காக எவ்வளவு காரியம் செய்திருக்கிறது என்பதும், அவர்களின் முன்னேற்ற விஷயத்தில் இஸ்லாம் சிரத்தை எடுத்துக்கொண்டதுபோல வேறெந்த மதமும் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்பதும் இஸ்லாமிய சரித்திரங்களையும் இஸ்லாமிய கிரந்தங்களையும் நன்கு கவனிக்கும்போது பட்டப்பகலேபோல் வெளியாகின்றன.

இஸ்லாம் மதம் ஸ்திரீகளின் நன்மைக்காக உழைத்திருக்கிறது என்பதை ருஜுப்படுத்துவதற்கான காலம் இனி இல்லை என்பதையும், தற்கால நாகரிகத்தின் முக்கிய அங்கம் ஸ்திரீகளின் முன்னேற்றம்தான் என்பதையும், அரை நூற்றுண்டுக்கு முன்னர் ஐரோப்பாவும்கூட அன்னேரின் உரிமைகளை அபகரித்துக்கொண்டிருந்ததென்பதையும், முற்காலத்திலேயே இஸ்லாம் மதம் முஸ்லிம் ஸ்திரீகளுக்களித்த உரிமைகளை இன்று ஐரோப்பா மிகவும் கஷ்டத்துடன் அவர்களுக்கு அளித்துவருகிறதென்பதையும் விஷயஞானமுள்ளவர் அறிந்துகொள்வர். முஸ்லிம் ஆடவர்களது முன்னேற்றத்துடன் முஸ்லிம் ஸ்திரீகளும் முன்னேற்றமடைந்து வந்திருக்கிருர்கள் என்பது இஸ்லாமிய நாகரீகம், வாழ்க்கை முறைகளைப்பற்றிய சரித்திரத்திலிருந்து தெரியவருகிறது. முஸ்லிம் ஸ்திரீகள் முற்காலத்தில் அநேகம் கல்விகளிலும் கலைகளிலும் பாண்டித்துவமும் நிபுணத்துவமுமடைந்திருந்தனர் என்பதைப்பற்றி இஸ்லாமிய சரித்திரம் பெருமைகொள்வது மிகவும் நியாயமாகும். முஸ்லிம் ஸ்திரீகள் வாழ்க்கையின் ஒவ்வொரு பிரிவிலும், கல்வியின் கைங்கரியத்திலும் ஆற்றிய அருந்தொண்டுகளுக்கு நிகர் பூர்விக காலத்திய சமூகங்களிலும் கிடையாது ; நவநாகரீகமுள்ள இக்காலத்திலும் கூட மிகவும் குறைவாகவே இருக்கிறது என்பதை இஸ்லாமிய சரித்திரத்தை ஆராய்ச்சி முறையுடன் துருவிப்பார்த்தவர்கள் எள்ளளவும் சந்தேகங்கொள்ளாமற் தெரிந்துகொள்வர். ஆனல் முஸ்லிம் ஸ்திரீகளின் பிரகாசமான இப்பாகத்தை இருளாகப் காண்பிக்க இஸ்லாத்தின் விரோதிகள் மட்டுமின்றி சில முஸ்லிம்களும் கூட முயற்சிசெய்து வருவது வருந்தத்தக்க விஷயமாகும். இஸ்லாம் மதம் ஸ்திரீ ஜாதியினரை கையுங்காலுமற்ற முடவர்களாகவும் மூடர்களாகவும் வைத்திருந்ததென்று ருஜுச் செய்ய இன்னேர் விரும்புகின்றனர். இஸ்லாம் மதத்திற்குக் கெட்ட பெயர் உண்டுபண்ண வேண்டுமென்பதே இவர்களது முயற்சியின் நோக்கமாக இருந்துவருகிறது. அதிலும், இவர்கள் செய்யும் முயற்சி இஸ்லாமிய ஊழியம் என்பதாக கருதி இவர்களைப் பாராட்ட வேண்டுமென்றும் இவர்கள் எதிர்பார்க்கின்றனர். அந்தோ! இவர்கள் இஸ்லாத்திற்கு உண்மையான ஊழியம் செய்வது ஒருபக்கமிருக்கட்டும், இவர்கள் மீது ஏற்பட்டுள்ள கடமையையுங்கூட இன்னேர் சரிவர நிறைவேற்றுவதாகக் காணேம். இந்நிலைமையில் இவர்கள் தங்களது அடிச்சுவட்டினை மற்றவர்கள் பின்பற்ற வேண்டுமென்றுங் கூறுகின்றனர். இவ்வாறு மேனுட்டு நாகரீகத்தின் வசிய சக்தியானது முஸ்லிம் சிறுவர் சிறுமிகளிடம் பரவிவிட்டதால் இஸ்லாமிய வாழ்க்கை முறைகளைக் கொஞ்சங் கொஞ்சமாக அவர்கள் கைவிட்டு வருகின்றனர் என்ருல் அதில் ஆச்சரியப்படத்தக்ககாரியம் ஒன்றுமில்லை. இவர்கள் கண்மூடித்தனமாக மேனுட்டைப் பின்பற்றி வருவதால் தற்போது மதவாழ்க்கையானது முஸ்லிம்களிடம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகின்றது. பாமரஜனங்களோ வீணுன ஆசாரங்களையும் சடங்குகளையும் மிகமிக பிடிவாதமாக செய்துவருவதால் அவர்களிடை இஸ்லாத்தின் ஏகதெய்வக் கொள்கைக்கு முற்றிலும் மாருனகுப்ரு, ஷிர்க்கு முதலிய கொள்கைகள் பரவுமென ஐயுறவேண்டியதாக விருக்கிறது.

சமூகத்தின் சிறந்த ஆசாரமுறைகளைக் காப்பாற்றுபவர்கள் ஸ்திரீகளேயாவர். எனவே, சமூக முன்னேற்றத்தின் இரகசியம் அவர்களின் குடும்ப வாழ்க்கைக்குள்ளிருக்கின்றதென்று ஒரு தத்துவஞானி கூறியிருக்கிருர். ஆகவே, பாமரமுஸ்லிம் ஸ்திரீகள் வீண்சடங்குகளிலும் இஸ்லாத்திற்கு முரணுன ஆசாரங்

களிலும் ஈடுபட்டிருப்பார்களாயின் அன்னோர் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு வெகு தூரமானவர்களாகி விடுகின்றனர். ஆகவே, அவர்களைச் சீர்திருத்தி பிரயோஜனகரமானவர்களாக்குவது மிகவும் அவசியமாகும்.

இஸ்லாத்தின் பொற்காலத்தில் (இஸ்லாம் முன்னேற்ற மடைந்திருந்த காலத்தில்) முஸ்லிம் ஸ்திரீகள் மதசமூக சம்பந்தமான காரியங்களில் ஆடவர்களுக்குச் சரிசமமாகவே பங்கெடுத்துக் கொண்டிருந்தார்கள். பெரும் பெரும் கல்வியாளரும், முஹத்திதுகளும் (ஹதீது கலையில் தேர்ச்சிபெற்றோரும்) கூட அவர்களிடம் கல்வி பயின்றிருக்கிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது புனிதகாலத்திலிருந்த முஸ்லிம் ஸ்திரீகள் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் ஹதீதுகளையும் மார்க்கச் சட்டங்களையும் கேட்டுத்தெரிந்து கொண்டிருந்தனர். குர்ஆன், ஹதீது, பிக்ஹு ஆகியவைகளை ஸஹாபிகளும், முஹத்திதுகளும் இவர்களிடம் கற்றுத் தேர்ந்திருக்கின்றனர். இஸ்லாமிய உலகமும் கூட இவர்களது ஊழியத்திற்கு மிகவும் கடமைப்பட்டதாக இருக்கின்றது. இப்புனித முஸ்லிம் ஸ்திரீகளின் மூலமாக இன்றுவரை இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டதிட்டங்கள் பல தெரிந்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. உம்முல் முமினீன் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி), கரீமா பின்துஹாத்தம் (ரலி.), ஜைனப் பின்து உதுமான் (றலி), அல்அம்ஷக்கிய்யா பின்துல்வுஜரா (றலி.) முதலியவர்கள் பிரபலமான முஹத்திதுகளைச் சேர்ந்தவர்கள். நாயகம் (ஸல்.) அவர்கள் ஸ்திரீகளுக்கு உபதேசம் செய்வதற்கென்றே ஒருநாளை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அவர்களது உபதேசத்தைக்கேட்ட அந்த ஸ்திரீகள் தங்கள் காதுகளிலிருந்த வாளிகளையும், கைக்காப்புகளையும், நகைகளையும்கூட கழற்றி தர்மக் காரியங்களுக்கு உதவி இருக்கிறார்கள். இவ்வித சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. முஸ்லிம் ஸ்திரீகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திலும் அதற்குப் பின்னரும் அநேகம் பொதுக்காரியங்களில் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்கள் முன்னேற்றத்திலிருந்தபோழ்தும், அவர்களில் இஸ்லாமிய உணர்ச்சி இருந்தகாலத்திலும், அவர்களது வாழ்க்கையில் சத்திருந்த சமயத்தும் அந்த ஸ்திரீகள் வீணாக இருந்திருக்கவில்லை. எனவே, இஸ்லாமிய முன்னேற்றத்தையும், முஸ்லிம்களின் மதிப்பையும் பெருக்குவதில் ஆடவர்களுடன் ஸ்திரீகளும் சமபங்கெடுத்துக்கொண்டிருந்தனர்.

ஒருகாலத்தில் பூலோக சுவர்க்கமென கருதப்பட்டு வந்த உந்துலுஸ் (ஸ்பெயின்) தேசத்திலுள்ள முஸ்லிம் ஸ்திரீகள் புலமை, இலக்கியம், சரித்திரம், இதர லௌகிகக் கல்வி, கலைகளில் செய்த அரிய ஊழியங்கள் மிகவும் தெளிவாக இன்னமும் காணப்படுகின்றன. முஸ்லிம் ஸ்திரீகளின் முயற்சியின் பலனாகவே உந்துலுஸ் தேசத்தின் நாகரீகம், கல்வி, கலை, உலக வைபவங்கள் இவ்வுலகமெல்லாம் மிளிர்ந்து பிரகாசித்துக்கொண்டிருந்தன. இதனைத்தவிர இஸ்லாமிய தேசங்களில் கஷ்டமும் சங்கடமும் ஏற்பட்ட காலத்தில் முஸ்லிம் ஸ்திரீகள்தான் ஏக தெய்வக்கொள்கையின் புதல்வர்களது தளர்ந்த மனத்தில் உற்சாகத்தை யுண்டாக்கினார்கள். இவர்களது தூண்டுதலின்பேரிலேயே அவர்கள் இழந்த நம்பிக்கையை மறுபடியும் அடைந்து மிக ஊக்கத்துடன் இஸ்லாத்திற்குத் தொண்டாற்றினார்கள். இவ்வாறு இஸ்லாம் ஸ்திரீகளின் அந்தஸ்தை உயர்த்தி உச்சஸ்தானத்தின் கடைசி எல்லைவரை இட்டுச்சென்றிருக்கின்றது. ஆனால் இஸ்லாத்தின்மீது குறைகூறவேண்டுமென சதா நினைத்துக்கொண்டிருப்போர், இஸ்லாம் மதம்தான் ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்குத் தடைகல்லாக விருக்கிறது, அது ஸ்திரிகளுக்கு சம அந்தஸ்த்து அளிக்காது தாழ்ந்த நிலைமையில் வைத்திருக்கிறது என பிதற்றித் திரிகின்றனர். இது அன்னோரின் அறியாமையேயாகும். அல்லாஹ் தஆலா அன்னோருக்கு சரியான—நேரான அறிவாற்றலை அருள்புரிவானாகவும்.

முந்துங்கள்! **இனாம்** முந்துங்கள்!!

இவ்வாண்டு மீலாத் ஷரீப் கொண்டாட்ட வைபவத்திற்காகவே நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் தயாரித்து வெளியாக்கப்பெற்ற "பெருமானின் பிரசாரம்" என்னும் ஸீரத் பிரசங்கநூலை அன்பர்கள் வாசித்துப் பார்த்து அதிலுள்ள அரும்விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டியது மிக மிக அவசியமாகும். ஆதலின் தபால் செலவிற்காக 9பை ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒரு புஸ்தகம் இனாமாக அனுப்பி வைக்கப்படும்.

இஸ்லாத்தின் சத்தியத் தன்மையைப்பற்றி விரோதிகளின் புகழுரைகள்

இஸ்லாத்தைப் பார்க்கினும் அதிகமாக எதிர்க்கப்பட்ட மதம் இவ்வுலகில் வேறொன்றுமில்லை என்று கூறுவது மிகைப்படக் கூறியதாகாது. வாளாயுதத்தினுல் இஸ்லாத்தை அழிக்க முயற்சி செய்யப்பட்டது. பிரசாரத்தின் மூலமாக அழிப்பதற்கான பிரயத்தனம் இப்பொழுதும் நடைபெற்றுவருகிறது. அப்படி இருந்தும் இஸ்லாம் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்துகொண்டும் பெருகிக்கொண்டும், தனது விரோதிகளையே தனது காலில் விழும்படிச் செய்துகொண்டுமிருப்பது இறைவனின் வல்லமையேயாகும். இஸ்லாத்தின் விரோதிகளும்கூட இஸ்லாத்தின் சத்தியத்தன்மையைப் பற்றி எவ்வித அபிப்பிராயங் கொண்டுள்ளார்கள் என்பதை ருஜுப்பிப்பதற்காக இதனடியில் ஐரோப்பிய ஆசிரியர்களில் பிரபலஸ்தர்களுடைய அபிப்பிராயங்களிற் சிலவற்றைத் தருகிறோம்.

1. எகிப்து தேசத்திலுள்ள பிரபல பத்திரிகையான "ஈஜிப்ட்" என்ற பத்திரிகையில் ஒரு கிறிஸ்துவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

"கிறிஸ்துமதத்தையும் இஸ்லாம் மதத்தையும் நாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால் இரண்டிற்குமிடையிலுள்ள மகத்தான வித்தியாசம் நமக்குத் தெரியவருகிறது. கிறிஸ்துவ மதத்தின் வழியில் கல்வியும் கலைகளும் வந்தபோது மிகவும் இரக்கமற்றவிதமாக அவைகளை கிறிஸ்து மதம் அழித்துவிட்டது. ஆனுல், இஸ்லாம் மதமானது கல்வியையும் கலைகளையும் உற்பத்தி செய்தது. கிறிஸ்துமதமும் மஜூஸிமதமும் கல்விப் பிரியர்களை அவர்களது கல்விப்பிரியத்தின் காரணமாக தேசப்பிரஷ்டம் செய்தது. ஆனுல், இஸ்லாம்மதம் அவர்களுக்கு அபயம் அளித்தது. கல்வி நாகரீகம் என்ற மைதானில் இஸ்லாம் மதத்துடன் கிறிஸ்துமதம் தோளோடு தோள்சேர்த்து நிற்கமுடியாதது போல ஒழுக்கவிஷயத்திலும் இஸ்லாம் மதத்துடன் சமமாக நிற்கமுடியாது"

2. பேருத்தில் பிரசுரமாகும் கிறிஸ்துவப் பத்திரிகையான "அல்வத்தன்" என்ற பத்திரிகையில் ஒரு கிறிஸ்துவ நிரூபர் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

"முஸ்லிம்கள் திருகுர்ஆன் ஹதீது ஆகியவைகளை நன்கு கவனித்து ஆராய்ந்து பார்ப்பார்களாயின் தங்களுக்குரிய சகலவிதமான இம்மைமறுமைத் தேவைகளனைத்தையும் அவைகளில் கண்டுகொள்ளுவார்கள். ஆதலின், இஸ்லாத்தின் திருநபி (ஸல்.) முஸ்லிம் சமூகம் பரவுவதற்கும் நிலைத்திருப்பதற்கும் வேண்டிய சகல காரியங்களையும் அமைத்துவைத்திருக்கிறுர். அவர் தம்மைப் பின் பற்றுபவர்களுக்காக அகில உலகக் கான்பரன்சு நடைபெறுவதற்கான அஸ்திபாரமு மிட்டுள்ளார். அதாவது, ஹஜ்ஜின் மூலமாக உலகத்திலுள்ள எல்லா செல்வந்தர்களும் செல்வாக்குள்ளவர்களும் ஓரிடத்தில் ஒன்றுகூடித் தங்களுக்குள் ஒற்றுமையையும் இணைப்பையும் வளர்த்துக் கொள்ள முடியும். அவர் ஜக்காத்தைக் கடமையாக்கி ஏழை ஜனங்களுக்குப் போதுமான முன்னேற்பாட்டைச் செய்திருக்கிறுர். இன்னமும் அவர், உயிருள்ள—என்றும் நிலைத்திருக்கக் கூடிய ஒரு பாஷையையும் உண்டாக்கிவிட்டார். ஏனெனில், குர்ஆன் அறபிப் பாஷையிலிருக்கிறது. அதனை அறிந்துகொள்வது ஒவ்வொரு முஸ்லிமின்மீதிலும் கடமையாக இருக்கிறது. ஒரு முஸ்லிமைப்பார்க்கினும் இன்னெரு முஸ்லிம் சிறந்தவர் என்பதற்கு 'தக்வா'வை (அல்லாஹ்வை பயந்து நடப்பதை) உறைகல்லாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படி ஏற்படுத்தியது முஸ்லிம் பொதுஜனங்களைத் தூண்டுவதற்கும் முன்னுக்குக் கொண்டுவருவதற்கும் மிகவும் சிறந்தமுறையாக இருக்கிறது. முஸ்லிம்கள் தங்களது தலைவராகிய கலீபாவைத் தாங்களே நேர்முகமாகத் தெரிந்தெடுத்துக் கொள்கிறுர்கள். சிருஷ்டிப் பொருள்களனைத்தும் ஆண்டவனின் குடும்பம் அதாவது அவ

னுடைய சிருஷ்டி என்றும், அவனது குடும்பத்தினருக்கு நன்மை செய்பவர்கள் அவனிடம் மிகவும் விரும்பத்தக்கவர் என்றும் கட்டளையிடப்பட்டிருப்பதால் முஸ்லிம் அல்லாதார்கள் இஸ்லாமிய நாடுகளில் மிகவும் சௌகரியமாக இருப்பதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. ஸ்திரீகளின் அந்தஸ்தை இஸ்லாம் மதம் உயர்த்திவிட்டது. 'பைத்துல்மால்' என்னும் பொது பொக்கிஷத்திற்குரிய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அறிவு விவேகம் ஆகியவைகள் முஸ்லிம்களின் விழுபொருள் என்று கூறி அவைகளை தேடி எடுத்துச் சேர்த்துக்கொள்ளத் தாக்கீதும் செய்யப்பட்டிருக்கிறது.''

3. ஜான்டேவன் போர்ட் என்பவர் பின்வருமாறு எழுதி இருக்கிறார் :—

"குர்ஆனுடைய மதம் வாள் பலத்தால் பரவிற்றென்பது சுத்தத் தவறு. ஏனெனில், மதத்துவேஷமற்ற எவரும் சொற்ப ஆராய்ச்சி செய்வதின்மூலம், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது மதத்தில் ரத்தம் சிந்துவதற்கும் மனிதரைக் கொல்வதற்கும் பதிலாக தொழுகை, நோன்பு ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்துகொள்ள முடியும். சதா சச்சரவும் வியவகாரங்களும் செய்துகொண்டிருப்பதற்குப் பதிலாக உண்மையுடன்கூடிய அபிமானமும் அன்பும் உண்டாவதற்கான அஸ்திவாரமிடப்பட்டிருக்கிறது. இதுதான் முன்னேற்றத்திற்குக் காரணமாயிற்று. உண்மையில் இந்த மதம் கீழ்நாட்டாருக்கு உச்சி தொடுத்து உள்ளங்கால்வரை நல்அதிர்ஷ்டமானதாக அமைந்திருக்கிறது. ஹஜரத் மூஸா (அலை.) அவர்கள் விக்கிரக ஆராதனையை வேருடன் பிடுங்குவதற்காக ரத்தம் சிந்திய அளவிற்கு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ரத்தம் சிந்தவில்லை.''

4. பிரபல சரித்திராசிரியரான எட்வர்ட் கிப்பன் பின்வருமாறு எழுதுகிறார் :—

"ஒவ்வொரு மனிதரும் வாளாயுதத்தின் மூலம் தனது ஸ்தூலத்தையும் சொத்தையும் பாதுகாத்துக்கொள்ள உரிமை பெற்றிருக்கிறார் என்று தெய்வச் சட்டத்திலிருப்பதால் அவர் தனது பகைவர்களை வாளாயுதத்தின்மூலம் தடைசெய்யவோ அல்லது பழிவாங்கிக்கொள்ளவோ முடியும். ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) தம்முடைய பரோபகாரமான மதத்தையும் சமாதானத் தூதையும் பின்பற்றி நடந்துகொண்டிருந்தபோது அவருடைய சுயதேசத்தாரின் அக்கிரமங்கள் அவரை தேசப் பிரஷ்டம் செய்தது.''

5. லெக்சர்ஸ்ஆன் ஹீரோஸ் என்ற மிஸ்டர் தாமஸ் கார்லைல் என்பவர் தம்முடைய புத்தகத்தில் பின்வருமாறு எழுதி இருக்கிறார் :—

"இஸ்லாம் வந்ததானது அறபி சமூகத்தாருக்கு இருளில் வெளிச்சம் வந்தது போலிருக்கிறது. அறபிகள்தான் அதன்மூலம் முதலாவதாக உயிர்பெற்றனர். அறபிகள் ஆடு மேய்ப்பவர்களான ஏழை ஜனங்களாக இருந்தனர். உலகம் உண்டானதுமுதல் அறபிகள் பாலைவனத்தில் அலைந்து திரிந்துகொண்டிருந்தனர். இவர்களைப்பற்றி வேறெவருக்கும் எவ்விதச் சிரத்தையுமிருந்ததில்லை. இச்சமூகத்தாரிடம் உறுதியும் துணிவுமுள்ள ஒரு நபி உறுதியான வாக்கியத்துடன் (திருகுர்ஆனுடன்) அனுப்பப்பட்டார். இதன்பலனாக அந்த ஜனங்கள் உலகம் முழுவதும் பிரபல்யமடைந்துவிட்டனர். சிறிய வஸ்து மிகவும் பெரிய வஸ்தாக மாறிவிட்டது. அதற்குப்பின் ஒரு நூற்றாண்டுக்குள் 'கர்னாத்தா'விலிருந்து டில்லிவரை அவர்கள் கைவசமாயிற்று. இருள்சூழ்ந்திருந்த மணற்பாங்கான காட்டிலிருந்து கிளம்பிய நெருப்புப் பொறியானது இப்பிரதேசங்களனைத்திலும் பிரகாசத்தை யுண்டாக்கிவிட்டது.''

6. ஜே. எம். ராட்வேல் என்பவர் எழுதுவது :—

"நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது எல்லாக்காரியமும் நல்லெண்ணத்துடன் தூண்டப்பட்டிருந்தன என்பதற்குத் தக்க ஆதாரங்களிருக்கின்றன. ஜனங்களை அறியாமையிலிருந்தும் விக்கிரக ஆராதனையிலிருந்தும் விடுவிக்க வேண்டும் என்பது அவரது நோக்கம். இறைவனின் ஏக தெய்வக்கொள்கையின் உணர்ச்சி அவர்களது ஆன்மாவில் மிகவும் ஊறிவிட வேண்டும் என்றும், அதனை அவர்கள் மிகவும் தெளிவாகவும் பகிரங்கமாகவும் அறிவித்துவிட வேண்டும் என்றும் அவர் விரும்பினர். திருகுர்ஆனில் ஆழ்ந்த உண்மைகளிருக்கிறது; இது மிகவும் சுருக்கமான வார்த்தைகளில் நேரான வழிகாட்டுகையும் தெய்வ அறிவிப்புகளும் நிறைந்ததாக இருக்கின்றது.''

7. அம்மானுவேல் டேவிஷ் என்ற ஜேர்மன் பேரறிஞர் எழுதி இருப்பதாவது :—

" திருகுர்ஆனது உதவியின் மூலமாக அறபிகள் மகா அலக்ஜாண்டருடையவும், உரோமர்களினுடையவும் அரசாங்கத்தைப்பார்க்கினும் அதிக விஸ்தீரணமான உலகத்தை ஜெயித்துக் கொண்டனர். நூற்றுக்கணக்கான வருஷங்களாக முயற்சிசெய்தபின் உரோமர்கள்அடைந்த வெற்றிகளை அறபிகள் அதில் பத்திலொரு பங்கு காலத்திற்குள் செய்து முடித்துவிட்டார்கள். இதே குர்ஆனின் உதவியால் அறபியர்கள் ஐரோப்பாவில் ராஜரீக முறையில் பிரவேசித்தனர். அந்த அறபியர்கள், இருள்சூழ்ந்திருந்த காலத்தில் மனிதவர்க்கத்தினருக்குப் பிரகாசத்தைக் காண்பித்தனர். தற்போதைய சயன்ஸ் ஜனனமாகுவதற்கு அவர்கள் அதிகம் பங்கெடுத்து உழைத்தார்கள். 'கர்னுத்தா' நகரம் அறபியரின் கையைவிட்டுச் சென்ற தினத்தை நாம் எல்லோரும் துக்கநாளாக என்றென்றும் அனுஷ்டிக்கவேண்டும்.''

இவ்வாறு பிரமதஸ்தரிலுள்ள பிரபலஸ்தர்கள் இஸ்லாத்தையும் அதன் திருநபி அவர்களையும் அம்மகான் அவர்கள்மீது இறக்கப்பட்ட குர்ஆன் ஷரீபையும் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். ஆனால் சில குறுகிய நோக்குடைய தான்தோன்றித் தம்பிரான்கள் இக்காலை குறைகூற முற்பட்டிருப்பது அன்னோரின் அறியாமையேயன்றி வேறில்லை என்பது திண்ணம்.

இஸ்லாமும் யாசகமும்

முஸ்லிம்கள் இந்தியாவில் சுதேசிகளுடன் ஒரு ஆயிரம் வருஷங்களுக்கதிகமாக கலந்துறவாடி வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு நீண்டகாலமாக கலந்துறவாடியதானது முஸ்லிம்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அதன் குணபாட்டைச் செய்தே வந்திருக்கிறது. எனவே நாகரீகம், கூடிவாழ்தல், ஒழுக்கம், குணம், குடும்பவாழ்க்கை, பாஷை, பேசுதல், மதம், நம்பிக்கை ஆகிய ஒவ்வொன்றும் இந்திய வாளாயுதத்தால் காயம்பட்டிருப்பதாகவே காணப்படுகிறது.

இதர சில காரியங்களைப்பற்றி அஜாக்கிரதையாக இருந்துவிடலாம். ஆனால், சமூகம் என்ற உடலின் ஈரல்குலையில் (மார்க்கம்-ஈமான்) பட்டகாயத்தில் கவனக்குறைவாக இருப்பதானது அபாயத்தை விளைவிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இவ்விதமான ஒரு காய இனத்தைச் சார்ந்ததுதான் யாசகத்தொழில்.

தரித்திரம், வறுமை இஸ்லாமிய போதனை

இஸ்லாம் தனது புதல்வர்களை சுயமரியாதையாக இருக்கும்படி போதித்து யாசகம் கேட்பதற்காக இதரர்களிடம் கையேந்துவது கேவலம் என்பதாக கூறி இருக்கிறது. இப்படிச் செய்வது காபிர்களின் வழக்கம் என்றும் அறிவுறுத்துகிறது. இஸ்லாம் மதமானது உழைக்கும்படி கூறி ஒவ்வொருவரும் தேக உழைப்பால் ஜீவனம் செய்யவேண்டும் என்றறிவிக்கிறது. யாசகம் செய்து வயிறு வளர்ப்பதைப் பார்க்கினும் விறகு வெட்டி ஜீவனம் செய்வது மேல் என்பதாகப் போதிக்கிறது.

1. மனிதன் செய்யும் முயற்சியின் அளவுதான் அவனுக்குக் கிடைக்கிறது. "குர்ஆன்"

2. அல்லாஹ்வின் கடாக்ஷத்தால் (ஜீவனோபாயத்தைத்) தேடுங்கள். "குர்ஆன்"

3. மேலேயுள்ள கை கீழேயுள்ள கையைப் பார்க்கினும் சிறந்தது. (அதாவது கொடுக்கும் கை வாங்கும் கையைப் பார்க்கினும் சிறந்தது) "ஹதீது"

4. உங்களில் ஒருவர் கயிற்றை எடுத்துக் கொண்டு கானகம் சென்று, தனது முதுகின்மீது விறகுக் கட்டைச் சுமந்துவந்து அதனை விற்பனை செய்வது அவர் ஒருவரிடம் யாசகம்கேட்டு அவருக்கு ஒருவர்கொடுத்தும், மற்றொருவர் கொடுக்காமலு மிருப்பதைப் பார்க்கினும் சிறந்தது. "ஹதீது'

ஆனால், ஏழையாக இருப்பதைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் போற்றிப் புகழ்ந்

திருப்பதாகச் சில ஹதீதுகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது "நாயனே! என்னை மிஸ்கீனாகவே ஜீவித்திருக்கச்செய்! இன்னும் மிஸ்கீனாகவே மரிக்கச்செய்" என்று பிரார்த்தனை செய்ததாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறதே என்று நினைக்கக்கூடாது. இந்த ஹதீதுகள் யாசகம் செய்வதை ஆதரிக்கவில்லை. இந்த ஹதீதில் சொல்லப்பட்ட விஷயம் ஏழ்மையைப் பற்றியதேயாகும். ஏழையாக இருப்பதால் பொறுமை, தெய்வபக்தி, திருப்தி, பணிவு ஆகிய சில நற்குணங்களுண்டாகின்றன. எனவே, ஏழையாக இருப்பவர் பொறுமையுடனும் திருப்தியுடனுமிருப்பதும் பிறரிடம் யாசகம் கேட்காமலிருப்பதும்தான் மிஸ்கீனாக இருத்தல் என்பதன் கருத்தாகும்.

தர்மங்களின் கருத்து

நாம் மேலே கூறிய திருகுர்ஆன் ஆயத்துக்களையும் ஹதீதுகளையும் பார்த்துவிட்டு இஸ்லாம் மதத்தில் தர்மங்களைப்பற்றிய போதனைகளே இல்லை என்று நினைக்கவேண்டாம். தர்மத்தைப்பற்றி இஸ்லாம் மதம் கூறி இருக்கிற அளவிற்கு வேறெந்த மதத்திலும் கூறப்பட்டில்லை என தைரியமாய்ச்சொல்லலாம். இஸ்லாம் மதத்தின் ஐந்து பெரும் கடமைகளுள் ஸதக்கா அதாவது ஜக்காத் (தர்மம்) என்பதும் ஒன்று. ஆனால், இந்த தர்மங்களை விநியோகிக்கும் விஷயத்தில்தான் இஸ்லாம் மதம் கட்டுத்திட்டம் செய்திருக்கிறது. உண்மையிலேயே அத்தர்மங்களை அடைவதற்கு அருகதையுள்ளவர்களுக்குத்தான் அது கிடைக்கவேண்டும் என்று இஸ்லாம் மதம் விரும்புகிறது. பொதுவுடமைக் கொள்கை, முதலாளித்துவம் ஆகிய இரண்டிற்கும் பொதுவாக பணக்காரர்களிடமிருந்து வாங்கி ஏழை களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்பது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது உபதேசத்தின் கருத்தாகும். ஆனால், பணக்காரர்களும் சந்தோஷமாக கொடுக்கத்தக்கவிதமாக தர்மத்தை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனினும், யாசகத்தை ஒரு தொழிலாக நடத்த இஸ்லாம் மதம் சம்மதிக்கவில்லை.

தர்மத்தை யாருக்குக் கொடுக்கலாம், எப்படிப்பட்டவர்கள் தர்மம் வாங்கலாம் என்ற விஷயங்களை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இவ்விரண்டும் தனித்தனி பிரசினைகள். தர்மம்கொடுக்கும் விஷயத்தில் இஸ்லாம் தாராளமாகவும், தர்மம் வாங்கும் விஷயத்தில் மிகவும் கண்டிப்பாகவும் கட்டளையிட்டிருக்கிறது. எனவே, ஒருநாளுக்கு வேண்டிய உணவும்கூட இல்லாதவர்கள்தான் தர்மம் கேட்கலாம் என்றும், ஒருநாளுக்குப் போதுமான உணவுள்ளவர்கள் தர்மம் கேட்பது ஹறாம் என்றும் ஹனபி இமாம்கள் கூறி இருக்கிறார்கள். இதனை ஆதரித்து அல்லாமா தனாவுல்லா சாகிப் பானிப்பட்டீ என்பவர் தம்முடைய "தப்ஸீர் மல்ஹரீ"யில் "போதுமான அளவிருந்து யாசகம் கேட்பவர் நரகத்தின் நெருப்பைத்தான் அதிகமாகக் கேட்கிறார்" என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாகவும், அதற்கு ஸஹாபிகள் "அல்லாஹ்வுடைய தூதரே! போதுமான அளவு என்பது எவ்வளவு?" என்று கேட்டதாகவும், அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "காலை மாலை (இரண்டு வேளை)ச் சாப்பாட்டிற்குப் போதுமான அளவு" என்பதாகப் பதிலளித்ததாகவும் ஒரு ஹதீதை எடுத்தெழுதி இருக்கிறார்.

யாசகம் செய்யும் ஜனங்களில் சிலரிடம் உண்மையாகவே ஒருநாள் சாப்பாடுகூட இல்லை என்று நீங்கள் கூறலாம். ஆனால் ஏழையாகவும் வறுமையாகவுமிருப்பதன் காரணமாக கூலி வேலை செய்வதற்குக்கூட லாயக்காக இல்லாதவர்களுக்குத்தான் பிறரிடம் கேட்டுவாங்குவதற்கு அனுமதியிருக்கிறது. ஆகவே, பலமும் தேக சவுக்கியமுமிருந்து, பகல் முழுவதும் அலைந்தாலும்கூட களைப்புண்டாகாமலிருப்பதுடன், அவர்கள்போடும் கூக்குரலால் அந்த மஹல்லா முழுவதும் கிடுகிடுத்துப் போகும்படியானவர் எவ்விதத்திலும் யாசகம் வாங்குவதற்குத் தகுதியில்லை.

"ஒருநாளுக்குத் தக்க உணவுள்ளவருக்கும், தேகவலிமையும் சுகமும் உள்ளவருக்கும் ஸதக்கா ஹலாலாகமாட்டாது" என்பதாக நாயகம் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"நஸயீ"

நாயகம் (ஸல்.) அவர்களிடம் ஸதக்காவின் பொருள்கள் கொண்டுவரப்பட்டன. சில ஜனங்கள் அவைகளை வாங்குவதற்காக வந்தார்கள். அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள் "ஜனங்களே! இது சீமான்களுக்கும் (ஒருநாளுணவுள்ளவருக்கும்), அங்கஹீனமில்லாமலிருப்பவருக்கும், வேலைக்குத் தகுதிவாய்ந்த பலசாலிகளுக்கும் ஜாயிஸ் இல்லை என்று கூறினார்கள்"

தகாதவர்களுக்குத் தர்மம் கொடுப்பதால் ஏற்படும் தீமை.

நாம் இதுவரை கூறியவைகள் மார்க்கச் சட்டத்தைப்பற்றியவைகள். இனி பொருளாதார நிலை, நிர்மாணவேலை ஆகியவைகள் சம்பந்தமாக இதனைக்குறித்துக் கவனம் செலுத்துவோம்.

1. யாசகத்தொழில் செய்வோர், யாசகம் கேட்பதைத் தங்களுக்குள்ள நிரந்தரமானதும் தலைமுறையாகவுள்ளதுமான தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களது சிறு சிறு குழந்தைகளுக்கும்—அவர்களுக்கு விளுத் தெரிந்ததுமுதல்—இதனைக் கிரியாம்சையில் பயிற்சியளிக்க வாரம்பித்துவிடுகின்றனர். அவர்கள் கஷ்டப்பட்டுத் தங்களுக்குரிய ஜீவனத்தைச் சம்பாதித்துக்கொள்வதற்குப் பதிலாக இரண்டு மூன்று பாடல்களைக் கற்றுக்கொடுத்து 'தாயிரா' என்னும் கொட்டையும் அவர்களிடம் கொடுத்து யாசகம் வாங்கும்படி அவர்களை அனுப்புகின்றனர். நஞ்சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஆதரவாகவும், வளரும் பயிர்களாகவும், இஸ்லாமிய சமூகம் என்ற ஸ்தூலத்திற்கு முக்கிய உருப்பாகவுமுள்ளவர்கள் இவ்வாறு பக்கவாதஜன்னியால் பீடிக்கப்பட்டு வேலைக்குதவாத அங்கமாகிவிடுகின்றனர்.

2. தர்மங்கள், ஸதக்காக்களினுடைய ரூபாய்கள் பாத்தியமில்லாத பக்கீர்களின் பையில் போய்விடுவதன்காரணமாக பொருளாதாரம், முன்னேற்றம், கல்வி, ஒழுக்கம், சீர்திருத்தம் சம்மந்தமாகச் செய்யவேண்டிய நூற்றுக்கணக்கான முக்கிய காரியங்கள் பூர்த்திசெய்யப்படாமலே நின்றுவிடுகின்றன. இவ்வாறு சமூகத்தின் முன்னேற்ற நக்ஷத்திரம் யாசகத் தொழில் என்ற கருமேகத்தின் இருளுக்குள் மறைந்துவிடுகிறது.

வேலைசெய்து கஷ்டப்பட்டுழைப்பதன் அவசியம்

மதசம்மந்தமாகவும், சமூக சம்மந்தமாகவும் யாசகத் தொழில் குற்றச் செய்கையாக இருக்கிறது என்பது ருஜுவாகிவிட்டது. 'குற்றத்திற்கு உடந்தையாக இருப்பதும் குற்றமேயாகும்' என்பது மதத்திலும், அரசாங்கத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சட்டமாகும். யாசகத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் யாசகம் செய்து குற்றவாளிகளானால், நாம் அவர்களுக்கு யாசகம்கொடுத்து அக்குற்றச் செய்கைக்கு உடந்தையாக இருக்கிறோம். ஆகவே, யாசகத்தொழில் செய்வோரும் குற்றவாளிகள், அவர்களுக்கு உடந்தையாக இருக்கிற நாமும் குற்றவாளிகளாகிவிடுகிறோம். "பாவத்திற்கும் அக்கிரமத்திற்கும் நீங்கள் உதவிசெய்யாதீர்கள். இன்னும் அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள்" என்பதாகத் திருமறை செப்புகின்றது.

ஆதலின், புஜபலமும், தேகசுகமும், தேகக்கட்டும் வாய்ந்த பக்கீர்களுக்குச் செல்லாக்காசும்கூடக் கொடுப்பதில்லை என்று நாம் உறுதி செய்து கொள்ளவேண்டும். காசைக் கொடுத்தும் கஷ்டத்தை வாங்கிக்கொள்வது புத்திசாலிகளின் வேலையல்ல. இதனடியில் இது சம்மந்தமாக இரண்டு சம்பவங்களைக் குறிப்பிடுவாம்:-

1. நபிகள் நாயகம் (ஸல்,) அவர்கள் சமூகத்தில் ஒரு அன்ஸாரி வந்து தர்மம் கேட்டார். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "உம்மிடம் ஒன்றுமில்லையா?" என்று வினவினார்கள். அதற்கவர் "ஒரு கம்பளியும் ஒரு கொட்டராவும் இருக்கின்றன" என்பதாகப் பதில்கூறினார். நாயகம் (ஸல்.) அவர்கள் அவ்விரண்டையும் இரண்டு திர்ஹம்களுக்கு ஏலம்வைத்து விற்பனை செய்து அவரிடம் கொடுத்து" ஒரு திர்ஹமை உணவுப்பொருள் வாங்குவதற்காக வீட்டில் கொடுத்துவிட்டு ஒரு திர்ஹமுக்குக் கோடறி வாங்கிக்காட்டில் விறகு வெட்டிக்கொண்டுவந்து விற்பனைசெய்து ஜீவனம் செய்யும்" என்று கட்டளையிட்டதுடன் பதினைந்து நாட்களுக்குப் பிறகு தங்களிடம் வரவேண்டும் என்றும் கூறினார்கள். அவர் அவ்வாறு 15 நாட்களுக்குப் பின் வந்தபோது அவரிடம் 10 திர்ஹம் மீதமிருந்தது. பிறகு அவர் அவைகளில் சிலவற்றிற்கு துணிகளையும் சிலவற்றிற்கு உணவுப் பொருள்களையும் வாங்கினர். அதுபொழுது நாயகம் (ஸல்.) அவர்கள் அவரை நோக்கி, "கியாமத்து நாளில் தன்னுடைய முகத்தில் யாசகம் செய்த அடையாளத்துடன் வருவதைப் பார்க்கினும் கூலிவேலை செய்து ஜீவனம் செய்வதானது மேல்" என்பதாக உபதேசித்தார்கள்.

2. யாசகம் செய்வதற்குத் தகுதியில்லாத ஒருவர் அறபாவுடைய நாளன்று (துல்ஹஜ்ஜு மாதம் 9உ) அரபாவில் யாசகம் செய்துகொண்டிருப்பதாக அமீறுல் மூமினீன் ஹஜ்றத் அலீ (றலி.) அவர்கள் கேள்விப்பட்டு "புனிதமான இந்ததினத்தில், புனிதமான இந்த இடத்தில் நீர் (அல்லாஹு தஆலாவினிடம் உமக்கு

வேண்டியதைக் கேட்காமல்) பிறரிடமாகக் கேட்கின்றீர் என்று கூறி அவருக்குச் சவுக்கடி தண்டனை விதித்தார்கள்.

ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கலீபாவாக இருந்ததால் தண்டிக்க முடிந்தது. இவ்விதமான காரியம் செய்வதற்கு அரசாங்கபலம் வேண்டும். ஆதலின், அதனை நீங்கள் செய்ய வேண்டாம். ஏனெனில், நம்மிடம் இஸ்லாமியச் சட்டப்படி நடக்கும்படியான அரசாங்கமில்லை. ஆனல். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நமக்குக் காண்பித்தவழி முறையின்படி நாம் நடக்கமுடியும். அதற்கு அரசாங்க பலமும் வேண்டியதில்லை; அதனைச் செய்வது சிரமமுமில்லை.

ஆகவே, தர்மங்களைக் கொடுப்பதில் முதலாவதாக நெருங்கிய பந்துக்கள், இரண்டாவதாக அக்கம்பக்கத்துவீட்டுக்காரர்கள், மூன்றுவதாக மஹல்லாவிலுள்ளவர்கள்,நான்காவதாக தன்னுடையதொழில்செய்பவர்கள், ஐந்தாவதாக ஊரிலுள்ளவர்கள் என்று கவனித்து, இந்தவரிசைக் கிரமப்படி தர்மத்தை அடைய அருகதையுள்ள கூட்டத்தாருக்குக் கொடுப்பது மிகவும் சிறந்த முறையாகும். இவ்வாறு செய்வதில் புண்ணியமும் கண்ணியமும் மிகவும் உண்டு.

வர்த்தக யுக்தி

வியாபாரத்தை ஆரம்பிக்கும் அன்பர்கள் சில முக்கிய காரியங்களை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளவேண்டுமென, கராச்சி பிரபல வியாபாரியும் இந்தியா சட்டசபை அங்கத்தினருமான ஹாஜீ சேட் அப்துல்லா ஹாரூன் சாகிப் எழுதி இருக்கிறார். அவைகளின் சாராம்சம் வருமாறு:—

நேர்மை

வியாபாரம் செய்யக் கருதுபவர் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்ற விஷயத்தை மிகவும் பிரதானமாகக் கொள்ளவேண்டும். கொடுக்கல்வாங்கல் செய்வதில் மிகவும் உண்மையாக நடந்துகொள்ள வேண்டும். உண்மையே சொல்லவேண்டும். ஒருவருக்கு வாக்குறுதியளித்தால் அதனைக் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றுவதை முக்கியமாகக் கருதவேண்டும்.

நற்குணம்

வியாபாரம் செய்பவருக்கு மிகவும் முக்கியமாக இருக்கவேண்டிய இரண்டாவது அம்சம் அவர் மிகவும் நற்குணசாலியாக இருக்கவேண்டும். கடையில் சரக்கு வாங்கவருகிற எல்லோரிடமும் மிகவும் நல்லவிதமாக நடந்துகொள்ள வேண்டும். ஒருவர் ஒருமுறை சாமான் வாங்கினல் மறுபடி எப்பொழுதும் அதே கடையில் சாமான்வாங்கவரும் விதமாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு ஆசாமி ஒரு கடையில் பத்து சாமான்களைப் பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். இந்தப் பத்து சாமான்களும் தனக்குப் பிடிக்கவில்லை என்பதாகக் கூறி ஒரு சாமான்கூட வாங்காமல் அந்த ஆசாமி சென்றாலும் கடைக்காரர் அந்த ஆசாமியை சிரித்த முகத்துடன் சந்தோஷமாக அனுப்பிவைக்க வேண்டும். அவர் ஒரு சாமான்கூட வாங்காமல் போகிறரே என்பதற்காக அவரிடம் கடுகடுப்பாக நடந்துகொள்ளக்கூடாது. ஆசாமிகளிடம் சாமான்களைக் காண்பிப்பது தான் கடைக்காரர்களதுவேலை. அந்தச் சாமான்கள் பிடித்தமுள்ளவைகளாக இருப்பதும் அவைகளை விலைக்கு வாங்குவதும் ஆசாமிகளின் இஷ்டத்தைப் பொருத்த விஷயம். சாமான்களைக் காண்பித்தவுடனேயே ஆசாமிகள் ஏதேனும் ஒரு சாமானை விலைக்கு வாங்கிவிடவேண்டுமென்ற அவசியமில்லை. ஆசாமிகள் சாமான் வாங்கினலும் வாங்காவிட்டாலும் அவர்களுடன் நல்லவிதமாக நடந்துகொள்ளவேண்டும். ஆசாமிகளைத் தனது கடையிலேயே எப்பொழுதும் சாமான்கள் வாங்கும்படிச் செய்வதற்கு இதுதான் ஏற்றமுறை. இன்று ஒரு கடையில் பத்துச் சாமான்களைப் பார்த்துவிட்டு, ஒரு சாமானும் வாங்காமல் சந்தோஷமாகச் செல்லும் அதே ஆசாமி, நாளைக்கு அக்கடையில் நிரந்தர

மாகச் சாமான் வாங்குபவராக ஆகிவிடமுடியும். ஆதலின், எவ்விதத்திலும் அவருடன் ஒழுங்கில்லாமல் நடந்துகொண்டு அவரை அக்கடைக்கு வராமற் செய்துகொள்ளக் கூடாது.

உழைப்பு

மூன்ருவது முக்கிய விஷயம் கடைக்காரர் உழைப்பாளியாகவும் கஷ்டத்தைச் சகித்துக் கொள்பவராகவும் இருக்கவேண்டும். அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, கடையைத் திறந்து உட்காரவேண்டும். பகல்முழுவதும் வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும். சாமான் வாங்குபவரின் நடமாட்டம் கடைத்தெருவில் இருந்துகொண்டும், ஜனங்களது போக்குவரத்து நடந்துகொண்டும் இருக்கும்வரை கடையை அடைக்கக்கூடாது. மிட்டாய், வெற்றிலைபாக்கு, சிக்ரட், ஹோட்டல் முதலிய கடைகள் இரவு பன்னிரண்டு மணி வரையிலும் இருந்துகொண்டிருப்பதை நீங்கள் காணலாம். இவ்வாருன உழைப்பு, சிரமமெடுத்தல் ஆகியவைகள் எல்லாக் கடைகளுக்கும் ஒன்றுபோலில்லை. கடையின் தகுதிக்கும், அந்தஸ்திற்கும், ஆசாமிகளின் நிலைமைக்கும் தக்கவாறு வித்தியாசப்பட்டிருக்கும்.

வியாபாரக் காரியங்கள்

நான்காவதாக வியாபாரத்தை ஆரம்பிப்பதற்குமுன் நாம் செய்யப்போகும் வியாபாரத்தைப்பற்றி நன்கு ஆலோசித்துக்கொள்ள வேண்டும். எவ்விதமான சாமான்களை வாங்க வேண்டும்? இந்த ஊரில் எவ்விதமான வியாபாரம் செய்தால் நன்கு நடைபெறும்? என்ற விஷயங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்து கொள்ளவேண்டும். நாம் வாங்கப்போகும் சாமான்கள் எங்கெந்த இடங்களில் செய்யப்படுகின்றன? எங்கெங்கு விளைகின்றன? எங்கெந்த இடத்தில் குறைந்த விலைக்கு இவைகளை வாங்கமுடியும்? இவைகளைக் கடைத்தெருவில் என்ன விலைக்கு விற்கமுடியும்? கடைத்தெருவிலுள்ள இதரகடைகளில் இந்த வஸ்துவுக்கு என்னவிலை? இந்தப்பொருளை வாங்கும் ஆசாமிகள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் எத்தனை பேரிருக்கின்றனர்? என்பனபோன்ற எல்லா விஷயங்களையும் முற் கூட்டியே நன்ருக விசாரித்தறிந்துகொள்ள வேண்டும். அப்பால் லாப நஷ்டத்திற்குரிய திட்டங்களையும் இடம்பாடுகளையும் கவனித்துக்கொண்டு வியாபாரத்தை ஆரம்பிக்கவேண்டும.

லாபங்களும் அதற்குரியவைகளும்

ஐந்தாவதாக வியாபாரத்தை ஆரம்பித்தவுடனேயே அல்லது கடை திறந்தவுடனேயே லாபம் கிடைத்துவிடும், திரண்ட செல்வம் வந்துவிடும், நீண்டகாலமாக இதே தொழில் செய்துவரும் இதர சமூகத்திலுள்ள வியாபாரிகளின் அந்தஸ்திற்கு வந்துவிட முடியும் என்று நினைக்கக்கூடாது. ஆனல், மிகவும் கஷ்டப்பட்டு உழைத்ததற்குப் பிறகு தனது சமூகத்தினர், கூட்டத்தினர் ஆகியவர்களுடன் சுகமாக வாழ முடியும் என்று நினைப்பது குற்றமல்ல. இவ்வளவு கஷ்டப்பட்டு உழைப்பதுடன் சிக்கனமாகவுமிருந்துகொண்டால் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றமடைய முடியும்.

மூலதனம் போடும்முறை

ஆருவதாககடையைஆரம்பிக்கும்போதேவியாபாரி தம்மிடமிருக்கிற மூலதனத்தை எல்லாம் ஒரே அடியாக அதில் ஈடுபடுத்திவிடலாகாது. நாம் எத்தனை ரூபாய் மூலதனத்துடன் வியாபாரம் செய்யவேண்டுமென்று நினைக்கிருேமோ அந்த மூலதனத்தில் எட்டிலொருபாகம் அல்லது ஐந்திலொரு பாகத்தை முதலில் போடவேண்டும். பிறகு வியாபாரம் நடைபெறும் முறையையும், லாபம் கிடைக்கும் தன்மையையும் பார்த்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் பாக்கியுள்ள பணத்தையும் வியாபாரத்திலீடுபடுத்த வேண்டும்.

வியாபாரத்தின் முதல் வருஷம்

ஏழாவது காலேஜ்களிலும் ஸ்கூல்களிலும் பிள்ளைகள் கல்விகற்பதுபோல், நாம் வியாபாரம் கற்றுக்கொண்டிருக்கிருேம் என்பதாகவே வியாபாரம் ஆரம்பித்த முதலாவது அல்லது இரண்டாவது வருஷங்களில் கருதிக்கொண்டிருக்க வேண்டும். உண்மையான வியாபாரி தனது வாளுள் முழுவதிலும் தன்னை ஒரு மாணவனென்றே கருதிக்கொண்டிருப்பான். நான் வியாபாரத்தை ஆரம்பித்து 27-வருஷங்களாகிவிட்டன. இறைவன்கிருபையால் என்னுடைய சைன பீங்கான் வியாபாரம் மிகவும் விசாலமாக நடந்துவருகிறது. ஆனலும், நான் இன்றுங்கூட வியாபாரத்தில் என்னை ஒரு மாணவனுகவே கருதிக்கொண்டிருக்கிறேன். ஸ்கூல்களிலும் காலேஜ்களிலுமுள்ள திறமையான மாணவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் அறிந்துகொள்ள துடித்துக்கொண்டிருப்பதுபோல நானும் வியாபாரத்

துறையில் ஒவ்வொரு விஷயத்தையும் அறிந்து கொள்ளத் துடித்துக்கொண்டுதானிருக்கிறேன்.

கணக்கு வைத்தல்

எட்டாவது இதில் முஸ்லிம்கள் விசேஷமாகக் கவனம் செலுத்தவேண்டும். கணக்கு வைத்தல் மிக ஒழுங்காகவும், முறைப்படியும், பூர்த்தியாகவுமிருக்கவேண்டும். கடையில் எவ்வளவு பொருள்களிருக்கின்றன? இன்று எத்தனை ரூபாய் செலவாகி இருக்கிறது? எத்தனை ரூபாய் வந்திருக்கிறது? என்ற விஷயங்களைப்பற்றித் தினசரி நிதானித்துக்கொள்ள வேண்டும். ஆரம்பமாக வியாபாரம் செய்பவர்கள் பிரதிமாதந்தோறும் கணக்குப்பார்த்து எத்தனை ரூபாய்க்கு வியாபாரம் நடந்தது? அதில் எத்தனை ரூபாய் செலவாயிற்று? எத்தனை ரூபாய் மீதமிருக்கிறது? என்ற விஷயங்களைத் திட்டவட்டமாக உணர்ந்துகொள்வது அவசியமாகும்.

அக்கம்பக்கத்துக் கடைக்காரர்களுடன் பழகல்.

ஒன்பதாவது விஷயம் ஒவ்வொரு கடைக்காரரும் தமக்கு அக்கம்பக்கத்துக் கடைக்காரர்களிடம் நல்ல பழக்கத்தை யுண்டுபண்ணிக் கொள்ளவேண்டும். தன் சம்மந்தத்தை அவர்களுடன் அதிகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அவர்களிடமிருந்து பிரயோஜனகரமான விஷயங்களைத் தெரிந்துகொள்வதுடன் அவர்கள் மூலமாக அதிகம் நன்மையடையவும் முயலல்வேண்டும்.

கடன் கொடுக்கலாகாது

பத்தாவது விஷயம் ஜனங்களுக்குக் கடன் கொடுக்காமலிருப்பதற்கு இயன்றவரை முயலல் வேண்டும். தானும் கடனுக்குச் சரக்கு வாங்க விரும்பலாகாது; கடன் கொடுக்கவும் விரும்பலாகாது. தொழில்முறை நடக்கும் முகத்தான் சில சரக்குகள் நிலுவைக்குக் கிடைத்தாலும் அதனைக்குறித்த வாய்தாவில் சரியாகக் கொடுத்துவிட வேண்டும். இப்படிச் செய்வதால் கடையின் நாணயமும் செல்வாக்கும் அதிகரிக்கும்.

சரக்குகளின் மேன்மை

பதினொன்றாவது விஷயம் சரக்குகளின் அந்தஸ்து எவ்விதத்திலும் நிரந்தரமாக இருக்க வேண்டும். சில வியாபாரிகள் ஆரம்பத்தில் நேர்த்தியான சரக்குகளை வைத்திருக்கிறார்கள், பிறகு வியாபாரம் நடக்க வாரம்பித்து, சரக்குகளும் விற்பனையாகி, லாபமும் கிடைக்க வாரம்பித்தால் அப்புறம் அவர்கள் சரக்கின் நேர்த்தியைப்பற்றி அதிக கவனம் செலுத்துவதில்லை. இப்படி இருப்பது கடை நிரந்தரமாக நடப்பதற்குத் தீங்கு விளைவிக்கும். எனவே, எவ்விதத்திலும் நேர்த்தியான சரக்குகளை வைத்திருப்பது அவசியமாகும். அதிக லாபத்தை அடைய வேண்டும் என்ற பேராசையால் தொழில் முறை நிரந்தரமாக நடப்பதில் குறைவை யுண்டுபண்ணுவது நல்லதல்ல.

சிக்கனம்

பன்னிரண்டாவது விஷயம் ஒவ்வொரு வியாபாரிக்கும் ஏற்படும் செலவைப் பார்க்கினும் அவருடைய வரும்படி அதிகமாக இருக்கவேண்டியது அவசியமாகும். எனது அபிப்பிராயத்தில் முஸ்லிம் வியாபாரிகளும் கடைக்காரர்களும் தங்களது வரும்படியில் பாதியின் அளவுக்கே தங்கள் செலவை திட்டப்படுத்திக்கொள்ள வேண்டும். செலவை நிர்த்தாரணம் செய்துகொள்வது அதாவது இத்தனை ரூபாய்க்குமேல் செலவு செய்யக்கூடாது என்று கண்ட்ரோல் செய்து கொள்வது மிகவும் அவசியமாகும். பணம் சம்பாதிப்பது பெரிய காரியமல்ல; அதனைச்செலவு செய்வதும் நிர்வகிப்பதும்தான் பெரிய காரியமாகும். இதில்தான் மனிதனுடைய திறமையும் தகுதியும் வெளியாகும்.

கடைசி வார்த்தை

மேலே சொல்லப்பட்ட முறைகளை எப்பொழுதும் கவனத்தில் வைத்து அவைகளின்படி உறுதியாக நடந்துவரும் பக்ஷத்தில் வெற்றிக்கு இதனைப்பார்க்கினும் சிறந்த முறை வேறொன்றுமில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும்.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அன்பர்களாகிய நமது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா பாக்கியை மணியாடர் மூலம் அனுப்பிவைப்பார்களென எதிர்பார்க்கின்றோம். சிலோனுக்கு வி. பி. செய்வதுகொண்டு வீண் செலவு அதிகமாவதால் அன்பர்கள் கவனிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

சில படிப்பினைகள்

அடியிற் குறிப்பிடும் சில விஷயங்கள் பேனவின் வலிமையைக் காண்பிப்பதற்காக வரையப்படவுமில்லை, பத்திரிகையின் சில பத்திகளைக் கருப்பாக்க வேண்டுமென்பதற்காகவுமில்லை. இச்சம்பவங்களைக் கூறி நமது சமூகத்தினருக்கு அறிவுறுத்துவதற்காகவேயாகும். இம்முயற்சியால் நமது சமூகத்தினர் சிறிதேனும் பாடம் கற்றுக்கொள்வார்களாயின் அதுவே நமது முயற்சியின் பயனாகும்.

அறுபது வயதுள்ள ஆங்கிலமாதின் பரநலம்.

அறுபது வயதுள்ள ஒரு கிழவியின் கனிஷ்ட குமாரத்தி நோய்வாய்ப்பட்டு இங்கிலாந்திலுள்ள செண்ட் தாமஸ் ஆஸ்பத்திரியில் வைத்திய சிகிச்சைக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். ஆஸ்பத்திரியிலுள்ள வயித்தியர்கள் தங்களாலான சகல முயற்சிகளையும் செய்தனர். ஆயினும், அவள் தப்பவில்லை. இறுதியாக இறந்துபோயினள். அவளுடைய தாயாரான அறுபது வயதுக்கிழவி ஆஸ்பத்திரியை விட்டுச் செல்லும்போது கிளர்க்கின் மேஜைமீது ஒரு கவரை வைத்துவிட்டுச் சென்றாள். அதனை உடைத்துப் பார்த்தபோது ஆஸ்பத்திரியிலுள்ளவர்களின் அனுதாபத்திற்கு நன்றி செலுத்தி எழுதிய துண்டுக்கடிதமும், 300 பவுன் நோட்டுமிருந்தது. அம்மாது தன் குமாரத்தி மரணமடைந்ததையும் பொருட்படுத்தாது அவ்வாஸ்பத்திரியிலுள்ளவர்கள் செய்த நன்றியைப் பாராட்டிச் சென்றாள்.

இச்சம்பவத்திற்குப் பிறகு முஸ்லிம்களின் நிலைமையை இத்துடன் சீர்தூக்கிப்பாருங்கள். நாம் செய்வதென்ன வென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நமது ஜீவியத்திற்குரிய சகல காரியங்களையும் நமக்கு வசதியாகச் செய்துவரும் சிருஷ்டிக் கர்த்தாவாகிய இறைவன் நம்மைச் சோதிப்பான் வேண்டி எப்பொழுதேனும் ஒரு சோதனையை விடுவானாயின் அவன்நமக்களித்து வந்த சகல உபகாரங்களையும் நாம் மறந்துபோவதொருபுறமிருக்க, அவ்வல்லோனை ஏசவும் தலைப்பட்டு விடுகிறோம். இன்னும்கொஞ்சம் முன்னேவாருங்கள். நமது சமூகத்திற்காக விதம் விதமான கஷ்டநஷ்டங்களை அனுபவித்து நஞ் சமூகத்திற்காக ஊழியம் செய்யும் தொண்டர்கள் ஊழியர்கள் தலைவர்களிடமிருந்து ஏதேனும் ஒரு தவறு நிகழ்ந்துவிடுமாயின் அவர்களைப் பற்றி தகாத வார்த்தைகளையும் படர்மொழிகளையும் கூறுவதை நாம் கேள்விப்படுகிறோம். ஆகவே, ஒருபுறம் ஆங்கிலேயர்களின் நன்றியறிதலையும் மற்றொருபுறம் நம்மவரின் நன்றி மறத்தலையும் சீர்தூக்கிப் பார்த்து எந்த சமூகம் உயிர்வாழ்வதற்கருகதையுள்ளதாக இருக்கிறதென்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

பதினாயிரம் பவுன் நன்கொடை

இங்கிலாந்திலுள்ள நாவி லீக் (உத்தியோகப் பற்றல்லாத கடற்படைச் சங்கம்) தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக 50 ஆயிரம் பவுன் தேவை என்பதாக ஒரு விஞ்ஞாபனம் விடுத்தது. ஒரே ஒரு ஸ்திரீமாத்திரம் 10 ஆயிரம் பவுன் தருவதாக வாக்களித்தனள். டாக்டர் மூஞ்சே ராணுவப் பயிற்சிக்காக மூன்று லக்ஷம் ரூபாய் தேவை என்பதாக ஒரு வேண்டுகோள் விடுத்தார். இதில் ஒரு லக்ஷம் ரூபாயை ஒருவர் மாத்திரம் கொடுப்பதாக வாக்களித்தார். இவையெல்லாம் என்னத்திற்கு? இவ்விரு சமூகத்தாரும் உயிர்வாழும் சமூகத்தினராவர்; இவ்விரு சமூகத்தினரும் உயிர்வாழ விரும்புகின்றனர்; வருங்காலத்தில் தமது சமூகத்தினர் கௌரவமாக வாழவேண்டுமென்ற கவலையுள்ளவர்களாகவு மிருக்கின்றனர். இதனால்தான் தங்கள் சமூகநலனுக்காகப் பணத்தை வாரிக்கொடுக்கின்றனர். ஆயினும், முஸ்லிம்கள் ஏன் இப்படிச் செய்வதில்லை. இச்சமூகம் இறந்துபோன சமூகமாக இருக்கிறது. மரணத் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது. தன்னுடைய எதிர்காலத்தைப்பற்றி அச்சமூகத்திற்கு எவ்விதக் கவலையும் கிடையாது. அச்சமூகத்

தலைவர்களின் மூளையிலும் கூட இதனைப் பற்றிய கவனமில்லை. ஏன்? அவர்களுக்கு, தங்களுக்குள்ளாயுள்ள சண்டையை ஒழிப்பதற்குக் கூட நேரமில்லை. சிலருக்கு ராஜீய விஷயமான சண்டையை ஒழித்து இப்புறம் திரும்பக்கூட சாவகாசமில்லை. வேறு பலருக்கு மதசம்மந்தமான சண்டையை விட்டுவிலகிவரச் சாவகாசமில்லை. சுதந்திரம் கிடைத்தபின் சமூகப் புனருத்தாரண வேலையைச் செய்துகொள்ளலாம் என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் வேறுவிதமாகக் கூறுகின்றனர்.

விழித்த சமூகத்தின் முன்னேற்றம்

சென்ற வருஷத்து இறுதியில் டேராடூனிலுள்ள ராணுவக் கலாசாலையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பற்பல மாகாணங்களிலிருந்தும் மொத்தம் 14-மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களில் ஒரே ஒரு முஸ்லிம்தான் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அந்த முஸ்லிமும் கூட இஸ்லாமியக் கொள்கைகளை வெறுப்பவராக இருக்கக்கூடும். அதிலும் பஞ்சாப் மாகாணத்திலிருந்து நான்கு பேரும், எல்லைப்புற மாகாணத்திலிருந்து இரண்டு பேரும் ஆக ஆறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வறுவரும் ஹிந்துக்களே யாவர். இதற்குக்காரணமென்ன? ஹிந்து வாலிபர்களது உள்ளத்தில் ராணுவ உணர்ச்சி உண்டாகிவிட்டதால் அவ்வாலிபர்கள் இதற்குத் தயாராக இருக்கிறார்கள். அச்சமூகத்திலுள்ள செல்வாக்கு வாய்ந்த கனவான்கள் அவ்வாலிபர்களுக்குச் சகல விதத்திலும் உற்சாக மூட்டுகின்றனர். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு உதவிபுரிகின்றனர். இதனால் அவர்கள் முன்னேறி வந்து வெற்றிபெறுகின்றனர். இதற்கு நேர்மாறாக முஸ்லிம் வாலிபர்கள் தான்றோன்றிகளாகவும், சுகவாசிகளாகவும், வேடிக்கை பார்ப்பதில் வேட்கையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுள்ளத்திலிருந்த ராணுவ உணர்ச்சி முற்றிலும் இறந்துபோய்விட்டது. இவர்களது பெரியார்கள் இவர்களைப் பயிற்றுவிக்கும் விஷயத்தில் முற்றிலும் கவலையற்றவர்களாக இருக்கின்றனர். இவைகளுக்குத் தக்க அத்தாட்சியைக் காண விரும்புவீர்களாயின் நீங்கள் நகர்ப்புறங்களுக்கு வாருங்கள். காப்பிக்கடைகள், தேத்தண்ணீர்க் கடைகள், சினிமாக்கள், நாடக கொட்டகைகளுக்குச் சென்று பாருங்கள்; முஸ்லிம் வாலிபர்கள்தான் உங்களுக்கு எல்லா இடங்களிலும் காணப்படுவார்கள். ஹிந்துக்கள் ஒற்றுமையாகவும் ஒருமனப்பட்டும் வேலைசெய்வதானது அவர்களுடைய பலத்தை அவர்கள் பகைவர்களுங்கூட ஒப்புக்கொள்ளும்படிச் செய்துகொண்டிருக்கிறது. ஆங்கிலேயர்கள் அவர்களுக்கு உதவி செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர். இஸ்லாமிய சமஸ்தானங்களில் அவர்களது பிரசார ஊர்வலங்கள் வருகின்றன. எங்கு பார்த்தாலும் "ஓம்" என்ற கொடியே பறக்கின்றது. இதைப்பார்த்து அரசாங்கம் மௌனமாகி சும்மாயிருந்துவிடுகிறது. ஏன்? இப்பொழுது அந்தச் சமூகம் உயிருள்ள சமூகமாக இருக்கிறது என்பதும், அதனுடன் முட்டிக்கொள்வது தனக்குக்கெடுதி என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியும். இதற்கு நேர்மாறாக முஸ்லிம் சமூகம் பிளவுபட்டுப் பிரிந்திருப்பதும், விரோதமும் தவறான முறையில் செல்வதும் எல்லோரிடத்திலும் அச்சமூகத்திற்குக் கேவலத்தை யுண்டுபண்ணிக்கொண்டிருக்கிறது. இதனால் மிகமிகப் பலஹீனமான சமூகம்கூட முஸ்லிம் சமூகத்தின் கண்ணியத்தையும் மரியாதையையும் தாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், முஸ்லிம் சமூகத்திற்கு உணர்ச்சியில்லாமலில்லை, என்றாலும் அவ்வுணர்ச்சி கிளம்பியவுடன் அடங்கிவிடுகிறது.

ஆகாய விமானப் போட்டி

சமீபகாலத்தில் இந்திய ராஜப்பிரதிநிதியானவர் ஆகாயவிமானப் போட்டிப் பந்தயம் விட்டார். இப்பந்தயத்தில் கலந்துகொண்டவர்கள் எல்லோரும் முஸ்லிம் அல்லாதார்களேயாவர். இப்பந்தயத்தில் முதல்தரமான வெற்றியடைந்தவர் லெப்டினன்ட் மிஸ்ரீசந்த் என்ற பெயருள்ளவராவார். இவருக்கு பட்யாலா மகாராஜா பண உதவிசெய்கிறார். இப்போட்டிப் பந்தயத்தில் முஸ்லிம்களில் ஒருவர்கூட இல்லாததேன்? என்ற கேள்விக்கு மேலே சொன்னவைகளே பதிலாகும். முஸ்லிம் வாலிபர்களில் இப்பொழுது இஸ்லாமிய உணர்ச்சி இல்லை; அவர்களது அபிப்பிராயமும் முன்னைப்போல் அவ்வளவு கூர்மையாகவும் உயர்ந்ததாகவுமில்லை. ஆதலின், இந்த ஆகாயவிமானப் போட்டியில் நாமும் கலந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமே அவர்களில் உண்டாகவில்லை. அவ்வாறு ஒருவரிருவருக்கு உணர்ச்சியுண்டானாலும் அவர் ஒரு விதவையின் புதல்வராகவோ, ஏழைப் பெற்

ஞோர்களின் புத்திரனுகவோ தானிருப்பார். இவருக்கு உதவிசெய்ய பட்டியாலா மகாராஜா போன்ற முஸ்லிம் மகாராஜா எவரும் முன்வர மாட்டார். முஸ்லிம் நவாப்களும், தலைவர்களும், ஜாகிர்தார்களும், விவாக வைபவங்களிலும், விருந்துகளிலும், சுகமான மோட்டார் வாகனங்களிலும், வீடுகட்டுவதிலும் வேண்டியமட்டும் பணத்தை ஜலம்போல் அள்ளி இறைப்பார்கள். ஆனால், இவ்விதமான காரியத்திற்கு ஒரு தம்பிடிகூடச் செலவுசெய்யத் தயாராக இல்லை. இதற்குக் காரணமென்ன? அவர்கள் சகலசுக பாக்கியங்களும் தங்களுக்குக் கிடைத்துவிட்டதால் சமூகத்தின் முன்னேற்றம் அல்லது நிர்மாணக் காரியம் மற்றவர்கள்மீது எற்பட்டிருக்கும் என்று கருதிக்கொண்டிருக்கின்றனர். சமூகம் அழிந்துபோன பின்னரும்கூட அவர்கள் தங்களுடைய செல்வத்தின்காரணமாக கௌரவமாக வாழமுடியும் என்று கருதுகிறார்கள். இதனுல்தான் அவர்கள் தங்கள்சமூகம் உயிர்வாழ்வதைப்பற்றிச் சிந்திப்பதே இல்லை.

முன்னேறவேண்டும், தலைதூக்கவேண்டும் என்ற உணர்ச்சியுள்ள வாலிபர்கள் முஸ்லிம் சமூகத்தில் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை நாமறிவோம். ஆனால், அவர்களது ஏழ்மையும், வறுமையும் லெப்டினன்ட் மிஸ்ரிசங்கைப்போல் தங்களது திறமையைக் காண்பிக்க விடாமற் றடுத்துக்கொண்டிருக்கின்றன. நஞ் சமூகத்திலுள்ள ஒவ்வொருவருடையவும் உள்ளத்திலும் உணர்ச்சியுண்டாகி, செல்வமுள்ள ஒவ்வொருவரும் தம்முடைய ஏழைச் சகோதரர்களுக்கு எற்படும் கண்ணியம் தம்முடைய கண்ணியமென்று கருதும் காலத்தில்தான் ஏழை வாலிபர்களுக்குக் கைகொடுத்து உதவி புரிய முடியும். பணக்காரர் ஒவ்வொருவரும் தனது அண்டையிலுள்ள ஏழைக் குழந்தைகளைத் தமது குழந்தைகளாகக் கருதவேண்டும். இந்த உணர்ச்சி உயிருள்ள சமூகத்தினரிடம்தானிருக்கிறது; இறந்துபோன சமூகத்தில் இல்லை. முஸ்லிம்களில் இவ்வித உணர்ச்சி இருக்கிறதா என்று தேடுவது வீண் வேலையாகும்.

ஆகாகானுக்கு தங்க ஜூப்ளி கொண்டாடப்பட்டபோது அவருடைய சிஷ்யர்கள் அவருடைய எடையளவு தங்கத்தை நிறுத்து, அதனை அவரிடமே கொடுத்துவிட்டார்கள். அந்தப் பணத்தை சமூகத்தின் நன்மைக்காகச் செலவு செய்யவேண்டும் என்பதற்காக ஒரு டிரஸ்டி ஏற்படுத்தி அதனிடம் அதனை அவர் ஒப்புவித்துவிட்டார். ஆகாகானுடைய சமூகத்தினர் இவ்வளவு பெரிய தியாகத்தை ஏன் செய்தனர் என்பதைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்திருக்கமாட்டீர்கள். ஆகாகானின் சிஷ்யர்களுக்கு அவர்மீது அன்பும் பற்றுமிருப்பதால் அவர்கள் தங்களது தியாகத்தின் மூலமாக ஆகாகானுடைய திருப்தியையும் தங்களது மறுமையின் முக்தியையும் அடைய விரும்புகின்றனர்.

இந்தப் பணத்தை ஆகாகான் தனது சொந்தச் செலவிற்கு வைத்துக்கொள்ளாமல் தனது சமூகத்தினருக்கு ஏன் கொடுத்தார்? அவருடைய சமூகத்தினருக்கு ஏற்படும் கண்ணியமும், அவர்கள் நல்ல ஸ்திதியிலிருப்பதும் தம்முடைய கண்ணியமாக அவர் கருதியதாலே தான். நாம் இப்பொழுது கூறிய இவ்வுதாரணம் அழிந்துபோகக்கூடிய ஒரு மனிதனுக்கு, அழிந்துபோகக்கூடிய அவருடைய சிஷ்யர்கள் செய்த கண்ணியமும் மரியாதையுமாகும். வாருங்கள்! அழிவற்றவனுக்கும், அவனுடைய அடியார்களுக்கு மிடையிலுள்ள சம்மந்தத்தைக் கவனிப்போம். அவ்வல்லோனின் வாக்குறுதிகள் உண்மையானவைகள், அவனுடைய சன்மார்க்கத்தில் நீங்கள் செலவு செய்பவைகளுக்கு இரண்டு, மூன்று, நான்கு மடங்கு அதிகமாகத் தருவதாக அவன் அறிக்கை செய்திருக்கிறான். இன்னும் "விசுவாசங் கொண்டவர்கள் அல்லாஹ்வின்மீது நேசம்வைப்பதில் அதிகம் கடப்புள்ளவர்களாக இருக்கிறார்கள்" என்பதாகவும் திருமறையில் கூறி இருக்கிறான். ஆனால், இதைக் காரியத்தில் காண்பிப்பதற்கான உதாரணம் நம்மிடம் இருப்பதாகக் காணேம். ஆகவே, நாம் இந்த ஆயத்தின்படி மூமின்களின் ஜாப்தாவில் சேர்ந்திருக்கிறோமா அல்லது அந்த ஆயத்திற்கு வேறு அருத்தமுளதோ? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆகாகானின் சிஷ்யர்கள் மிகவும் அதிகமாக இருப்பதாக வைத்துக்கொண்டாலும் இந்தியாவிலுள்ள முஸ்லிம் ஜனத்தொகையில் பத்திலொரு பாகத்திற்கு அதிகமிருக்கமாட்டார்கள். இந்த ஈவுப்படி இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அல்லாஹுதஆலாவுக்காக ஏககாலத்தில் 35-லக்ஷம் ரூபாய் நிதிசேர்க்கமுடியுமென புத்தியுள்ள எவரேனும் சொல்லமுடியுமா? அவ்வாறு நிதி திரட்ட ஒருபோதும் முடியவே முடியாது. ஆகாகானுடைய சிஷ்யர்களுக்கு ஆகாகான்பா

விருந்துவரும் அன்பில் பத்திலொருபாகம்கூட அல்லாஹு தஆலாவின்பால் நமக்கு இல்லை என்பதே இதற்குக் காரணமாகும். அன்பினுல் தான் உண்மையான தியாகத்தைக் காண்பிக்க முடியும். அன்பு இல்லாதவிடத்தில் தியாகமு மிருக்கமாட்டாது.

வாருங்கள்! மற்றொரு உதாரணத்தைக் கவனிப்போம். முஸ்லிம்களுக்குள் நடைபெறும் விவாகக்காரியங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதில் மிகவும் ஏராளமான ஸ்ரீதனம் கொடுக்கப்படுகிறது. முஸ்லிம்கள் தங்களது விவாககாரியங்களில் செலவுசெய்யும் பணத்தில் பத்திலொருபாகத்தை இஸ்லாத்திற்காகச் செலவு செய்வார்களாயின் அவர்களது தரித்திரம் ஒரு வருஷத்தில் தூரமாகிவிடும் என்பது நிச்சயம். ஆனுல், அப்படி நடைபெறுவதே இல்லை. நமது இருதயத்தில் நமது சந்ததியினர்பாலும், பந்துக்கள்பாலும் எவ்வளவு பிரியமும் வாஞ்சையுமிருக்கிறதோ அதில் பத்திலொரு பாகம்கூட நாயனிடம் நமக்குப் பிரீதியில்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

எண்ணற்ற முஸ்லிம்களினுள்ளத்தில் அல்லாஹு தஆலாவின்மீது உண்மையான பக்தி விசுவாசமில்லை. முஸ்லிம்களே! நீங்கள் உங்களை அல்லாஹு தஆலாவின் அடியார்கள் என்று சொல்லுகிறீர்களே. இதைப்பற்றி நன்கு சிந்தித்துப் பாருங்கள். ஒரு வேலைக்காரனுக்குத் தனது எஜமான்மீது எவ்விதப் பற்றுமில்லையென்றுல் அவ்வேலைக்காரன் தனது எஜமானுக்கு ஏதேனும் நன்மை செய்துவிடுவான் என்று எதிர்பார்க்க முடியுமா? அல்லது அவனுக்கு அவனுடைய எஜமானின் தயை இருக்குமா? என்பதைக் கவனியுங்கள். அவ்வாறு இருக்கமாட்டாது என்று நீங்கள் கூறும்பக்ஷத்தில் அல்லாஹு தஆலாவுக்கும் உங்கள்பால் எவ்வித தயையுமிருக்காது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அல்லாஹுதஆலாவிடம் பாவ மன்னிப்புத் தேடுங்கள். அவனது தர்பாரில் பணியுங்கள். "அல்லாஹ்வினிடம் தௌபாச் செய்யுங்கள். நிச்சயமாக அவன் தௌபாச் செய்பவர்களை நேசிக்கிறுன்."

(திருகுர்ஆன்)

நன்மையை ஏவித் தீயதை விலக்குதல்

நன்மையை நாடும் உபாத்தியாயரும், கெட்ட காரியத்தை விலக்கி நல்ல காரியத்தைச் செய்யும்படி ஏவும் தலைவரும் ஒருவருக்கு இல்லாமலும், நல்லவிதமான பயிற்சியளிக்கப்படாமலும் ஒருவர் இருப்பாராயின் அவர் அநேகம் விதமான ஒழுக்கஹீனமான வியாதிகளால் பீடிக்கப்பட்டே இருப்பார் என்பது திண்ணம். அப்படிப்பட்டவரைச் சீர்திருத்தம் செய்வதற்கு எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லையாயின், அவர் இவ்வுலகில் பிறந்ததன் முக்கிய நோக்கத்தை அறியாதவராகவே மரணமடைய வேண்டிய தேற்படும்.

ஆனுல், ஒருவர் பிறவியிலேயே சீதேவிபாகப் பிறந்து நல்லவிதமான பயிற்சியும் பெற்று, அன்புள்ள உபதேசியையும் பெற்றிருப்பாராயின் அவர் இத்தகைய தீமைகளைவிட்டுப் பெரும் அளவிற்குப் பாதுகாக்கப்பட்டவராகவே இருப்பார்; அவரது இவ்வுலக ஜீவியமும் வெற்றியுள்ளதாகவே இருக்கும். இதே நிலைமைதான் ஒவ்வொரு சமூகத்திற்குமிருந்து வருகிறது. ஒரு சமூகத்தில் தீமைகளை விலக்குவதற்குத் துணிவுள்ள ஜனங்களுண்டாகி எவ்விதப் பயத்தையும் தடையையும் லக்ஷியம் செய்யாமல் தீமையை விலக்கி நன்மையை ஏவுவார்களாயின், இன்னமும் அச் சமூகத்திலுள்ள பொல்லாதவர்களின் பொல்லாங்குகள் பொங்கி வராமல் அமுத்துவார்களாயின் அச்சமூகம் மிகவும் முன்னேற்ற மடைந்து சீர்திருத்த முள்ளதாக இருக்கும். இப்படிப்பட்ட ஜனங்கள் ஒரு சமூகத்தில் குறைவாக இருந்து, அச்சமூகத்தில் தீயோர் அதிகரித்து விடுவார்களாயின் அச்சமூகம் நாளடைவில் பலஹீனமடைந்து இறுதியில் அழிந்தொழிந்துபோம்.

தனக்கு நிகரில்லை என்று ஒரு காலத்தில் அவ்வளவு முன்னேற்ற மடைந்திருந்த யூதசமூகம் எவ்வாறு சீரழிந்து ஒழிந்தது என்பதாக

றஸூலே கரீம் (ஸல்.) அவர்களிடம் ஒருவர் விசாரித்ததற்கு, "மற்றொருவர் செய்யும் தீமையை விலக்கவும் நல்லகாரியத்தைச்செய்யும் படி ஏவவும் கூடியவர் அச்சமூகத்தில் இல்லை, இதன் காரணமாக தீமை செய்வதில் ஜனங்களுக்குத் துணிச்சலுண்டானதுடன், தீமை செய்வதிலிருந்த வெறுப்பு அவர்களில் நாளடைவில் குறைந்துவிட்டதால், தீமை என்ற விஷம் அச்சமூகத்தின் ஸ்தூலத்தில் கலந்துவிட்டது. இறுதியாக அந்தச் சமூகம் அழிந்தொழிந்தது" என்பதாகப் பதில் கூறினர்கள்.

ஆகவே, எவ்விதமான தீமையையும் செய்ய வேண்டாமென்று விலக்குவதற்காக இஸ்லாம் மதம் நன்மையை ஏவித் தீயதை விலக்குவதற்கான கட்டளையை விதித்துள்ளது. அதாவது, ஒருவர் தீமையான காரியத்தில் ஈடுபட்டிரும்பதாகக் கண்டால் அக்காரியத்தைச் செய்ய வேண்டாமென்று அவரை விலக்குவது ஒவ்வொரு முஸ்லிமின்மீதும் (பர்லே கிபாயா) கடமையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலும், அவ்வாறு விலக்குபவர் அந்த ஜனங்கள் பால் அபிமானமும், நல்லெண்ணமுமுள்ளவராக இருக்கிறார் என்று அவர் உணரத்தக்கவிதமாக அவருக்கு ஹிதோபதேசம் செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. அதிலும் தீமையைவிட்டு ஜனங்களை விலக்குவதுமட்டும் போதாது, நன்மையான காரியத்தைச் செய்யும்படி ஜனங்களை ஏவவும் செய்யவேண்டும் என்று திருகுர்ஆன் கட்டளையிட்டிருக்கிறது. திறமையான வைத்தியர் நோயாளிக்குத் தக்கவாறு பேதிக்குக் கொடுத்து அப்பால் தக்க ஔஷதமும் கொடுத்து நோயைப் போக்கடித்து ஸ்தூல சுகத்தையும் உண்டாக்குவதுபோல திருகுர்ஆன் சமூகத்தின் ஸ்தூலத்திலுள்ள ஒழுக்க வியாதிகளைப் போக்கடித்துச் சுகத்தையும் பலத்தையும் அளித்து முன்னேற்ற மடைவதற்காக ஔஷதத்தையும் கூறி இருக்கிறது.

ஆனால், முஸ்லிம்களின் தற்போதைய சமூகத்தாரிலனேகர் திர்குர்ஆனின் இந்த ஆயத்தின்படி எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. நமது சமூகத்தில் பொதுஜன அபிப்பிராயம் என்ற உணர்ச்சி கிஞ்சித்தும் கிடையாது. நம்மவரிற் சிலர் குடித்துவிட்டு போதையடைந்து வாயில் வந்தபடியெல்லாம் திட்டிக்கொண்டும், கூச்சலிட்டுக்கொண்டும் பாதி இரவுவரை ஜனங்களுக்கு நித்திரையபங்கமுண்டாக்கிக்கொண்டு மிருந்தாலும்கூட நம்மவரில் எவரும் அதனைத் தடுத்து நிறுத்தவோ, உபதேசம் செய்து சீர்திருத்தும் கடமையைச் செய்யவோ முன்வருவதில்லை. ஒருவர் தனது அண்டை வீட்டுக்காரரை அவமானப்படுத்தினால் அவருக்குப் புத்திமதி கூறி அவ்வாறு செய்ய வேண்டாமென்று கூற எவருக்கும் தைரியம் வருவதில்லை. ஒரு வாலிபர் தனது மூதாதையர் தேடிவைத்த சொத்துக்களைத் தனது துர்க்கிருத்தியங்களால் அழித்தால் அதனைப்பற்றி எவ்விதச் சிந்தனையும் எவரும் எடுத்துக் கொள்வதில்லை. இதன் பலனாக முஸ்லிம் சமூகம் விநாசத்தின்பால் மிக விரைவாகச் சென்றுகொண்டிருக்கிறது. மிகவும் பிரயோஜனமுள்ள திருகுர்ஆனின் இவ்விதியைக் கடைப்பிடிக்காமலிருப்பதற்குப் பல காரணங்களுள.

முதலாவது அலக்ஷியபுத்தி. ஒரு பெரிய குடும்பத்தின் சம்ரக்ஷணை முழுவதற்கும் ஜவாப்தாரியாகவுள்ள ஒருவர், தவறான வழியிற் சென்று நமக்கு முன்னிலையிலேயே நாசமடைந்து கொண்டிருந்தாலும் அதனை நாம் மிகவும் அலக்ஷியமாகவே கருதிப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவருக்கும் நமக்கும் என்ன சம்மந்தம், அவர் கெட்டுப்போவதால் நமக்கு ஏதேனும் நஷ்டம் வந்துவிடுகிறதா? என்று கருதிச் சும்மா இருந்து வருகிறோம்.

இரண்டாவது சுயநலம். அநேக ஜனங்கள் நல்ல காரியத்தைச் செய்யும்படி பிரபுக்களை தூண்டுவதற்குப் பதிலாக தீமையான காரியத்தைச் செய்யும்படியே தூண்டுகின்றனர். இத்தீமையான காரியங்களைச் செய்வதற்கான முறைகளையும் கற்றுக்கொடுக்கின்றனர். இவ்விதக் காரியங்களால் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் சீரழிந்துவிட்டனர்.

மூன்றாவது பொறாமை. சில ஜனங்கள் ஆடம்பரமான வாழ்க்கையை நடத்துவதன் மூலம் கெட்டுப் போவதைப் பார்க்கச் சில ஜனங்களுக்குச் சந்தோஷ முண்டாகிறது. சில ஜனங்கள் தங்களிலுள்ள பொறாமையின் காரணமாக, முன்னேற்ற மடைந்துவரும் தனது சகோதரனின் சந்ததியினரைத் தீய காரியங்களில் ஈடுபடுத்தி அவர்கள் கெட்டுப்போவதை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

நான்காவது கோழைத்தனம். "நன்மையை ஏவித் தீயதை விலக்கவேண்டும்" என்ற இக்

கடமையைச் சில ஜனங்கள் உணர்ந்து அதனை நிறைவேற்ற வேண்டுமென்றும் எண்ணுகின்றனர். ஆனல், தக்க சமயத்தில் அவர்களுக்குத் தைரியம்வருவதில்லை. ஆனல், அவர்கள் மனத்திற்குள்ளாகவே நினைத்து நினைத்து வருந்துகின்றனர். இப்படிப்பட்டவர்கள் சங்கைவான்களான ஸஹாபிகளின் வரலாற்றினைப் படித்துணர்ந்தால் இக்கோழைத்தனம் அவர்களை விட்டு நீங்கும்.

ஐந்தாவது சமய சந்தர்ப்பம் பார்த்தல். தவறுகச்செய்யும் இந்தக்காரியத்தைத் தடுத்தால் அவர் நம்மீது அனுவசியமாக விரோதங்கொள்வார். இதனல் நமது செல்வாக்கிற்கு ஹானி ஏற்பட்டுவிடும் என்று நினைத்துப் பிறர் செய்யும் தீய காரியத்தை விலக்காமல் சிலர் வாழாவிருந்துவிடுகின்றனர். இதுவும் ஒருவகைக் கோழைத்தனமேயாகும்.

ஆருவது முஸ்லிம்களுள்ளத்தில் தீமையின் பாலிருந்த வெறுப்பு குன்றிவிட்டது. லஞ்சம் கொடுத்தல், கோள்சொல்லல், லஞ்சம் வாங்குதல், மதுபானமருந்தல், வியபிசாரம் செய்தல், பொய்யுரைத்தல் முதலிய காரியங்களைச் செய்பவர்பணக்காரராகமட்டும்இருப்பாராயின் அவரை சகலகாரியங்களிலும் முதன்மைப்படுத்தித் தக்க மரியாதை செய்துவிடுகின்றனர். நல்லோர்களைப் பார்க்கிலும் இத்தகையோருக்கு அதிகம் செல்வாக்கையும் கொடுக்கின்றனர். முற்காலத்திலிருந்த முஸ்லிம்கள் தீமை என்பதை மனத்தில் நினைத்தாலும்கூட நடுக்கம் கொண்டுவிடுவார்கள். அவர்கள் பாபத்தைத் தங்கள் பகையனெனக் கருதி இருந்தனர். இவ்வித எண்ணம் இப்பொழுது அகன்றுவிட்டது. நம்முடைய ஒழுக்கச் சிறப்பு இப்பொழுது மிகப் பலஹீன மாகிவிட்டது. ஆகவே, அவர்களுக்குத் தீமையின்பால் வெறுப்பில்லாததால் அவைகளை அகற்ற வேண்டிய அவசியத்தை அவர்கள் மதிக்கமில்லை.

ஏழாவது மார்க்கக் கல்வி இல்லாததால் முஸ்லிம்கள் பாபத்தையும் தீமையையும் உணர்வதில்லை. தொழுதல், நோன்புவைத்தல் ஆகிய இரண்டு காரியங்களை மட்டிலும் செய்வதே போதுமானது; இவ்விரண்டுமட்டிலும் தான் மிகப்பெரிய புண்ணியமென்று கருதுகின்றனர். இவைகளைத்தவிர பொதுஜன நன்மையான காரியங்களைச் செய்வதற்கு அவ்வளவாக முக்கியத்தைக்கொடுப்பதில்லை. ஆகவேதொழுகையும் நோன்பும் எல்லாப்பாவங்களுக்கும் பரிகாரம் என்றுகருதி இருக்கின்றனர். சம்பாத்தியத்தில் தொழில் முறை சம்மந்தமாகத் திருட்டுத்தனம் செய்தல், நகைகள் செய்யும்போது அதில் சுளயமாடுதல், உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குதல் இவ்வாறு பலவிதமாகச்செய்யும் தீய காரியங்களெல்லாம் குற்றமென்பதாக அவர்கள் கருதுவதே இல்லை. இவைகளெல்லாம் பாபமான காரியங்கள் என்பதை அவர்கள் அறியாதது தான் இதற்குக் காரணம். இன்னும் இவை போன்ற அநேகம் காரணங்கள் நன்மையை ஏவித் தீயதைவிலக்கும் கடமையைச் செய்ய விடாமற்றடுத்துக் கொண்டிருக்கின்றன. முற்காலத்திலுள்ளவர்கள் அமீர் என்றும், பிரபு என்றும், அரசர் என்றும், மந்திரி என்றும் பிரதானி என்றும் பாராமல் சத்தியத்தைக் கூறுவதில் எவருடைய தயவையும் தாட்சண்யத்தையும் பாராதிருந்ததால், முன்னேற்றமடைந்தவர்களாகவும் தலைநிமிர்ந்தவர்களாகவு மிருந்தார்கள். இக்காலத்திலுள்ளவர்களிடம் இத்தன்மைகளில்லாததாலேயே நாம் பின்னடைய வேண்டிய தேற்பட்டிருக்கிறது. இன்றைய முஸ்லிம்கள் நன்மையை ஏவித் தீயதை விலக்கும் கடமையைத் தங்களது முக்கிய நோக்கமாகக் கொண்டு வேலைசெய்தால்தான் நம்மிலுள்ள ஒழுக்க மற்ற வியாதியை அகற்றி, நமக்குள்ள கௌரவத்தையும் வலிமையையும் நிலைநிறுத்திக் கொள்ளமுடியும்.

இக்காரியத்தை திருகுர்ஆன் காண்பித்த வழிமுறைப்படி செய்யவேண்டும். பொதுஜனங்கள் நன்மையையும் தீமையையும் உணரும்படிச்செய்வதுடன்பொதுஜனங்களும் தங்களது நன்மைக்காகவே சொல்வதாகக் கருதவும்வேண்டும். உலமாக்கள் மஸ்ஜிதில் வஃஅஜ் நஸீஹத்துச் செய்வதுடன் நிற்காமல் தனிப்பட்டவர்களைக் கண்டு பேசவும்வேண்டும். அவர்களது பெரும்பாலான நேரம் இவ்வுபதேசத்திலேயே கழியும்படி பொறுப்புள்ளவர்கள் செய்வதுடன், அவர்களது ஜீவனத்திற்குத் தக்க ஏற்பாட்டையும் செய்தால் இக்காரியம் செவ்வனே நடைபெறும் என்று நினைக்கிறேன்.

ஆகவே, இக்காலை நம் முஸ்லிம் நேயர்கள் மேலே கூறப்பெற்ற சிறந்த முறையில் நன்மையை ஏவி கெடுதியை விலக்க முற்படுவார்களாக.

முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன?

(அல்லாமா அமீர்ஷக்கீப் அர்ஸலான்)

(சென்ற மாத 168-ம் பக்கத் தொடர்ச்சி)

மதம் தேசம் ஆகியவைகளுக்குத் துரோகமும் பகைவர்களுடன் உறவும்.

ரீப் முஸ்லிம்களுக்கு உதவி செய்யாமலிருந்தது மட்டுமில்லை, ரீப் தலைவர் காஜீ முஹம்மதுப்னு அப்துல் கரீமை எதிர்த்துப் போர்செய்வதற்கும் அநேகம் பேர் முன் வந்தனர். பிரஞ்சுக்காரர்களையும் ஸ்பானியர்களையும் சந்தோஷப்படுத்துவதற்காகத் தங்கள் முஸ்லிம் சகோதரர்களுக்கும், சுயதேசத்தினருக்கும் துரோகம் செய்தனர். ஆயினும், அதன் பலனை இப்பொழுது அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். இதுபோல ஷாம் தேசத்தில் நிகழ்ந்த நமது தேசிய போராட்டத்திலும் துரோகம் செய்பவர்கள் அநேகரிருந்தனர். இதர இஸ்லாமிய தேசங்களிலும் அநேகம் பேர் துரோகம் செய்திருக்கிறார்கள். இந்தத் துரோகிகளை நோக்கி, நீங்கள் அந்நியருக்கு ஏன் ஊழியம் செய்கிறீர்கள்; உங்களது இந்தச் செய்கை உங்கள் மதம், சமூகம், கண்ணியம் ஆகியவைகளுக்கு நீங்கள் துரோகம் செய்ததாகாதோ? என்று வினவினால், "நாங்கள் என்ன செய்வது? அந்நியர்கள் எங்களை அப்படிச் செய்யும்படி நிர்ப்பந்திக்கிறார்கள்; அவ்வாறு நாங்கள் செய்யாவிடில் எங்களை அவர்கள் வதை செய்வார்கள்" என்று கூறுகிறார்கள். ஆனால், அல்லாஹு சுப்ஹானஹு வ தஆலா தனது திருமறையில் "நீங்கள் அவர்களுக்குப் பயப்படுகிறீர்களா? நீங்கள் (உண்மை) விசுவாசிகளாக இருந்தால் நீங்கள் பயப்படுவதற்கு அல்லாஹ் மிகவும் உரிமையுள்ளவன்" என்று கூறி இருப்பதை அவர்கள் கவனிக்கவில்லைபோலும். வேறொரு இடத்தில், "ஆகவே நீங்கள் அவர்களுக்குப் பயப்படவேண்டாம். நீங்கள் உண்மை விசுவாசிகளாக இருந்தால் என்னையே பயப்படுங்கள்" என்றும் கூறியுள்ளான். ஆகவே, இவ்விதமான வீண் சாக்குப்போக்குகளின் மூலம் எவரும் தம்மைக் குற்றவாளியல்லவென்று ருஜூப்பிக்க முடியாது.

முஸ்லிம்களுக்குள் பிளவை யுண்டாக்க வேண்டுமென்று அந்நியர்கள் விரும்புகிறார்கள் என்பதிலும், அநேகம் நல்ல முஸ்லிம்களை அந்நியர்கள் பற்பல விதமான துரோகச் செய்கைகளுக்குக் கருவியாக உபயோகித்துக்கொள்ளவும் முயன்றார்கள் என்பதிலும் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. ஆனால், அவர்கள் அப்படிச் செய்ய இணங்காது மிகவும் தெளிவாக மறுத்துக் கூறிவிட்டார்கள். இவர்கள் இப்படி மறுத்துக்கூறியதால் இவர்களது தலையில் வானம் இடிந்துவிழவுமில்லை; இவர்களுக்குக் கஷ்டம் வந்துவிடவுமில்லை. ஆரம்பத்தில் இவ்விதமான துரோகிகள் கிடைத்ததால்தான் அந்நியர்களுக்கு இஸ்லாமிய நாட்டில் கால் வைக்க முடிந்தது. இதில் அனுபவம் பெற்றதால்தான் அவர்கள் இவ்விதமான துரோகச் செய்கையை முஸ்லிம்களிடம் தூண்டுவதற்கும் தைரியமுண்டாயிற்று.

மானமும் கண்ணியமும் மரித்தன.

உலகில் மரணம் இரண்டுவகையாக இருக்கின்றன. ஒன்றாவது வேறொரு காரியத்தை நிலைநிறுத்துவதற்காக மரிப்பது. இதனைப்பற்றி திருகுர்ஆனிலும் பாராட்டிக் கூறப்பட்டிருக்கிறது. இதனால்தான் பிரஞ்சுக்காரரும், ஜெர்மனியரும், பிரிட்டிஷாரும், இதரரும் தங்கள் தேசத்திற்காக, தங்கள் தேசம் கௌரவமாக இருப்பதற்காகத் தங்களது இன்னுயிரையும் தியாகம் செய்கின்றனர். இரண்டாவது ஒரு முஸ்லிம் அந்நிய அரசாங்கத்திற்கு ஊழியம் செய்து யுத்தத்தில் மரிப்பது. அதாவது, தன்னுடைய எஜமானனுடைய பகைவனை அந்நியனை ஜெயிப்பதற்காகத் தனது உயிரைத் தியாகம் செய்வது எவ்வாறெனில், ஆப்பிரிக்காவைச்சேர்ந்த ஒருவன், பிரஞ்சுக்காரர்கள் ஜெர்

மனியரை ஜெயிப்பதற்காகத் தனது அருமையான உயிரைத் தியாகம் செய்தல். இதுபோல இந்தியர் தாத்தாரியர் போன்றவர், பிரிட்டிஷார் ரஷ்யர் போன்றவர்களுக்காகத் தங்களது உயிரைத் தியாகம் செய்தல்.

இவர்கள் இவ்வாறு தியாகம்செய்து வெற்றியை வாங்கிக் கொடுப்பதானது அவ்வரசாங்கங்களுக்குத் தங்கள் மீதிருக்கிற ஆதிக்கத்தை இன்னும் அதிகமாகப் பலப்படுத்திக்கொள்வதாகவும், தங்களது உரிமைகளை அதிகமாகப் பறிகொடுப்பதாகவும் இருக்கிறது. மகாயுத்தத்திற்குப் பிறகு பிரஞ்சுக்காரர்களுக்கு அதிகம் துணிச்சலேற்பட்டுவிட்டது. ஆகவே, அவர்கள் பர்பரி வகுப்பினரை (அல்ஜீரியா—டுனிஸ், மொரோக்கோ முதலிய ஆப்பிரிக்க நாடுகளிலுள்ள அறபி முஸ்லிம்களில் ஒரு வகுப்பினர்)க் கிறிஸ்துவர்களாக்கிவிட வேண்டும் என்று அதிகப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். இவ்விதமாக முஸ்லிம்கள் பிறருக்கு உழைத்துத் தங்களது கண்ணியத்திற்கும் மானத்திற்கும் மரணத்தை யுண்டுபண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயம் பாமர ஜனங்களிடம் மட்டிலுமில்லாமல் பெரிய மனிதர்கள் எனப்படுபவர்களிலும் இருந்துவருகிறது. உதாரணமாக, மொரோக்கோவிலுள்ள தலைவரான 'அல்முக்ரீ' தமது சுதேச முஸ்லிம்களான பர்பரியர்களைக் கிறிஸ்துவர்களாக்கும் விஷயத்தில், பிரஞ்சுக்காரர்களும்கூடச் செய்யமுடியாத அத்துணை அபார முயற்சிகள் எடுத்துக்கொண்டார். சில முஸ்லிம்கள் இறைவனிடம் "நாயனே! எங்களையும் பர்பரியரையும் பிரிக்க வேண்டாமென்றுபிரார்த்தனைசெய்ததற்காக மொரோக்கோவிலுள்ள பெஜ் மாகாண கவர்னரான அல்பகுதாதீ என்பவர் சவுக்கடி தண்டனைவிதித்தார். இம்மாதிரி பெரிய பதவிகளிலிருப்பவர்களுங்கூட தங்களது சுயநலத்திற்காக மார்க்கத்தை விற்பனை செய்துவிடுகிறார்கள். மொரோக்கோவிலுள்ள பர்பரி வகுப்பினரை இஸ்லாத்தைவிட்டு மாற்றிக் கிறிஸ்துவர்களாக்குவதில் இவர்கள் கிறிஸ்துவப் பாதிரிகளுக்கும் பிரசாரகர்களுக்கும் உதவி புரிந்துவருகின்றனர். இவர்கள் இவ்வாறு செய்துகொண்டிருப்பதுடன் வெளிப்பார்வைக்கு பெரிய ஸூபிகளைப்போல் வேஷம் போட்டு மக்களை ஏமாற்றுகின்றனர். இவ்வித நிலைமையில் இறைவனது றஹ்மத்—கிருபை இவர்களுக்குக் கிடைக்குமா என்பதை நீங்களே கூறுருங்கள்.

இவ்விதமான காரியம் மொரோக்கோவில் மாத்திரம் நடைபெறவில்லை, எங்களது ஷாம் தேசத்திலும்கூட நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது. ஆனால், அங்கு நடைபெறுவது போல் மத துரோகம் அதிகமில்லாமல் தேச துரோகம் அதிகம் நடைபெறுகிறது. சுருங்கக்கூறுமிடத்து, மார்க்கத்திற்கும் தேசத்திற்கும் நஷ்டம் விளைந்தாலும் சரி அவர்கள் அதனை லக்ஷியஞ்செய்யாமல் அந்நியருடைய சகல விருப்பங்களையும் நிறைவேற்றுவதில் முனைந்திருக்கிறார்கள்.

"இப்படிச் செய்பவர்கள் இஸ்லாமிய உலகில் மிகச் சிலரேயாவர், பெரும்பாலர் இப்படிச் செய்வதில்லையாகையால் எல்லா முஸ்லிம்களுக்கும் ஏன் கஷ்டம் வரவேண்டும்" என்று சிலர் நினைக்கக்கூடும். அல்லாஹுதஆலாவின் றஹ்மத்தென்னும் கருணையானது குறிப்பிட்ட ஜனங்களுக்குமட்டிலுமே வரும். ஆனால், அவனது லஃனத்து எனும் கோபமுண்டாகி விபத்து வருமாயின் அது நல்லவர் பொல்லாதவர் என்ற பாகுபாடில்லாமல் யாவருக்குமே வருகிறது. ஆதலின், குற்றஞ் செய்பவர் சிலராக இருந்தாலும் அதனை மற்றவர் தடுத்து நிறுத்தவேண்டும். இல்லையேல் எல்லோருக்கும்தான் கஷ்டம். ஒருவர்செய்யும் தீங்கை மற்றவர் கண்டித்து வெறுப்பாராயின் குற்றம்செய்யும் சிலருக்கு அக்குற்றச் செய்கைகளைச் செய்ய மனம் துணியாது. இவர்கள் உத்தியோகப் பதவி வகிப்பதால் அந்நியர்கள் இவர்களை இப்படிச் செய்யும்படி கூறினாலும் அப்படிச் செய்ய இஷ்டப்பட மாட்டார்கள். அவ்வந்நியர்கள் இவர்களை வற்புறுத்தினால் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்துவிடலாம். இவர்களுக்குப்பதிலாக வரும் இதர உத்தியோகஸ்தர்களும் இவ்விதமே ராஜிநாமாச் செய்ய முன்வரும்பக்ஷத்தில் அவ்வந்நியர்கள் தங்களது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வார்கள். ஆனால், தற்போதைய நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. எனவே, பிரஞ்சுக்காரர்கள் முஸ்லிம்களின் உதவியைக்கொண்டே முஸ்லிம்களை நாசஞ்செய்து வருகிறார்கள். அதுவும் போதாதென்று இக்குற்றச் செய்கையைக் குறித்து "இதனைச் செய்வதில் எங்களுக்குச் சம்மந்தமில்லை; இதனைச் செய்பவர்கள் எல்லோரும் உங்களது சகோதரர்களே யாவர்" என்றும் கூறுகின்றனர். இஸ்லாமிய நாடுகளையும், அவர்களது பொருள்களையும் கைப்பற்ற

அல்லாஹு தஆலா எந்த அந்நியருக்கும் சக்தி யளிக்கவில்லை; முஸ்லிம்கள் தங்களது துரோகச் செய்கையினாலேயே தங்கள் நாட்டைப் பிற ரிடம் ஒப்புவித்துவிட்டனர். ஆகவே, நாம் இவைகளைத் தடுக்காவிடில் நிச்சயமாகக் கேவ லத்தையும் அவமானத்தையும் அடைவோம். இப்படியடைவதில் முஸ்லிம்களுக்குப் பாடங் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பதும், நல்லோ ரையும் தீயோரையும் வேறுகப் பிரித்துக் காண் பிக்க வேண்டுமென்பதும் இறைவன் நோக்க மாகும்.

இதனைக் குறித்து சுல்தான் இப்னுஸுஊதும் கூட " முஸ்லிம்களிடம்தான் எனக்குப் பயம்; அந்நியர்களுக்கு நான் அஞ்சவில்லை " என்று கூறி இருக்கிறார். இப்பொழுது அந் நியர்கள்வசமிருக்கும் முஸ்லிம் நாடுகள் முழுவதும் முஸ்லிம்களாலேயே அந்நியர்வசம் சென் றனஎன்றுகூறமுடியாதென்றாலும், அவைகளில் முக்கால்பாகம் முஸ்லிம்களாலேயே அந்நியர் வசம்சென்றதுஎன்று தைரியமாகக்கூறமுடியும். அந்நியர்களுக்கு உதவி செய்யக்கூடிய முஸ்லிம் கள்ஏராளமாக இருக்கிறார்கள்; அவர்களாலேயே முஸ்லிம்களது தலைகள் துண்டிக்கப்படுகின்றன. இவ்வித நிலைமையில் அவர்களிடம் இஸ்லாம் எங்கே இருக்கமுடியும்? ஈமானும்கூட இருக்க முடியாது. தங்களுடைய சமூகத்திற்கும் தேசத்திற்கும் விரோதமாக அந்நிய அரசாங் கங்களின் காரியஸ்தராக இருந்து ஊழியம்செய் வதைத் தங்களது முக்கிய நோக்கமாகக்கொண் டுள்ள ஜனங்களுக்கு அல்லாஹ்வின் உதவி கிடைக்குமா? அவர்கள் கண்ணியமாக இருக்க முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

மார்க்க சமூக அபிமானமுள்ள ஒரு முஸ்லிம் இந்த ஜனங்களைப் பார்த்து நீங்கள் இப்படிச் செய்யலாமா என்று கண்டித்தால், அதற்கவர் கள் நமக்கு யுத்தம்செய்யச் சக்தி இல்லை; அந் நியரின் அநியாய அக்கிரமத்தைவிட்டுக் காப் பாற்றிக்கொள்ளவும் நம்மால் முடியாது " என்றே பதில்கூறுவர். இவர்கள் இப்படிக் கூறும் விஷயம் ஒருவகையில் உண்மையென்று வைத்துக்கொள்ளலாம். இவர்கள் வாளேந்தி யுத்தம்செய்ய முடியாதென்றால் பேனவினலா வது எழுதலாமல்லவா? அதற்கும் முடியா தென்றால் பிரசங்கத்திலேனும் கூறலாம். அதற் கும் முடியாதென்றால் மனத்திற்குள்ளேனும் வெறுக்கலாம். ஆனல் இந்தச் சுயநலமிகள் இவைகளில் எதையும் செய்வதில்லை. இவர்கள் செய்ததெல்லாம் அந்நியர்களுக்காகத் தங்க ளது சமூகத்தாரின் நன்மைக்கு விரோதமாக துப்பறியும் வேலையைத்தான் செய்தார்கள். முஸ்லிம்களது உரிமைகளை விற்பனைசெய்து அவைகளின் கிரயத்தொகையைக்கொண்டு உண்டு உடுத்தி சுகவாழ்வை நடத்திவருகின்ற னர். இவர்களுக்கு மானமோ, வெட்கமோ எது வுங் கிடையாது.

உலகமெங்குமுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒன்றுபோலில்லை. உதாரணமாக, அப்கானிய ரில் அந்நியருக்கு இம்மாதிரி ஊழியம்செய்பவர் ஒருவரும் அகப்படமாட்டார்கள். இவ்வித மாகவே வஹ்ஹாபியரும் பிறருக்கு ஊழியம் செய்யமாட்டார்கள். எகிப்தியரில் இது போழ்து ராஜீய விழிப்பேற்பட்டிருப்பதால் அந்நியரின் கட்டளையைப் பகிரங்கமாக ஏற் கக்கூடியவர் எவரும் தைரியமாக முன்வர மாட்டார். ஆனல், இதர தேசங்களிலோ இவ் விஷயமில்லை. இங்குள்ளவர்கள் பகிரங்கமாக இதரர்களுடன் சேர்ந்துகொள்கிறார்கள். இவ் வித நிலைமையில் அல்லாஹு தஆலா தனது வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? இறைவன் பரிசுத்த வான்; அவனுடைய வாக்குறுதி தற்காலமுள்ள முஸ்லிம்களுக்கு அதாவது தனதுசமூகத்திற்கு துரோகம்செய்து தங்கள் பகைவர்களுக்கு உண் மையாக உழைப்பவர்களுக்கா? என்று வினவு கின்றனன். மேலும், அல்லாஹு தஆலா ஸாலி ஹான அமலுடன் ஈமானை இணைத்திருக்கிரு தலின், அவர்களிடம் ஸாலிஹான அமல்க ளில்லாததால் ஈமானுமில்லை என்று தோன்று கிறது.

ஸலவாத்து ஓதுவதும், தருத் ஓதுவதுமட்டி லும் ஒருவரை முஸ்லிமாக்குவதற்குப் போது மானதென்றிருந்தால் இறைவன் தனது திரு மறையில் பல இடங்களிலும், " முஸ்லிம்காள்! யுத்தம் செய்யுங்கள், பொறுமையாயிருங்கள், உண்மையாளர்களாகுங்கள், கஷ்டத்தைச் சகித் துக்கொள்ளுங்கள், மூமினன சகோதரர்களுக்கு உதவிசெய்யுங்கள், நீதியாக நடந்துகொள்ளுங் கள், இரக்கம் வையுங்கள், நன்றி செய்யுங்கள் என்றெல்லாம் கூறி இருப்பது எதற்காக " என் பதை யோசித்துப் பாருங்கள்.

" உங்களது தந்தையர்களும், தனயர்களும், சகோதரர்களும், மனைவியர்களும், கூட்டத்தார் களும் நீங்கள் சம்பாதித்த முதல்களும், நஷ்ட மாகிவிடுமோவென்று நீங்கள் பயப்படுகிற வியா

பாரமும், நீங்கள் திருப்தியடைந்திருக்கிற வீடுகளும் அல்லாஹ்வையும், அவனது றஸூலையும், அவனுடைய பாதையில் ஜிஹாது செய்வதையும் பார்க்கினும் உங்களுக்கு அதிகப் பிரியமாக இருக்குமாயின் அல்லாஹ்வின் கட்டளைவரும் வரையில் காத்திருங்கள். மேலும், அல்லாஹ் பாஸிக்கான (மாறுசெய்கிற) கூட்டத்தாரை நேர்வழியிற் சேர்க்கமாட்டான்" என்று இறைவன் தனது திருமறையிற் கூறி இருப்பதை நினைத்துப்பாருங்கள்.

மற்றொரு உதாரணம்

இவ்விடத்தில் மற்றொரு உதாரணம் கூறுகிறேன். அதிலிருந்து முஸ்லிம்களின் ஈமானும், ஊக்கமும் நன்குவெளியாகும். இறைவன் காப்பாற்றவேண்டும். பர்பரி வகுப்பு முஸ்லிம்களை கிறிஸ்துவர்களாக்கும் முயற்சியில் பிரஞ்சுக்காரர்கள் வெற்றி யடைந்துவிட்டதாகவும், 80 லக்ஷம் ஜனத்தொகையுள்ள அவ்வகுப்பினருக்கு கோவில், குளம், அனாதைச்சாலை, பள்ளிக்கூடம் இவைகள் கட்டிக்கொடுப்பதற்காகப் பண உதவிசெய்யும்படி ரோமன் கத்தோலிக் போப் என்பவர் தமது வகுப்பினரிடம் விண்ணப்பம் செய்வதாகவும் வைத்துக்கொள்வோம். சில மாதங்களுக்குள் பல்கோடி ரூபாய்கள் சேர்ந்துவிடும் என்பதிற் சந்தேகமில்லை. இதுபோல புரோட்டஸ்டன்ட் கிறிஸ்துவர்களிடம் அவ்வகுப்பின் தலைவர் பணம்தரும்படி வேண்டுகோள் விடுப்பாராயின் அதிலும் சொற்பகால தவணைக்குள் இரண்டு மூன்றுமடங்கு அதிகமான தொகைவசூலாகிவிடும். ஆனால், முஸ்லிம்களிடம் "உங்கள் இப்பர்பரி வகுப்புச் சகோதரர்கள் கல்வியறிவில்லாக் குறையால் மதத்தை விட்டுமாறிவிடும் தருவாயிலிருக்கிறார்கள்; அவர்களுக்கு மத்ரஸா, மஸ்ஜிது, யத்தீம்கானாக்கள் கட்டிக்கொடுத்துதவப் பணமும், பிரசாரம் செய்ய ஆலிம்களையும் அனுப்புங்கள்" என்று வேண்டுகோள் விடுத்து பகீரதப் பிரயத்தனப்பட்டாலும் கிறிஸ்துவர்கள் செய்யும் பணஉதவியில் நூறில் ஒருபங்குகூட வசூலாகமாட்டாது என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். இவ்வித நிலைமையில் கிறிஸ்துவர்களுக்கு மார்க்கபக்தி இருக்கிறதா அல்லது முஸ்லிம்களுக்கா என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

முஸ்லிம்கள் மத துவேஷிகளாம்

கிறிஸ்துவர்கள் மதவைராக்கியம் கொண்டவர்கள் என்பது உலகம் பிரசித்தமாக இருக்க, கிறிஸ்துவ நூலாசிரியர்கள், பத்திரிகாசிரியர்கள், கீழ்நாட்டிலுள்ள அவர்களது சிஷ்யர்கள் முதலியோர் மற்றவர்களை மதவைராக்கியமும், துவேஷமும் கொண்டவர்கள் என்று கூறுவதில் கொஞ்சமும் வெட்கமடைவதில்லை. ஆகவே, இக்கிறிஸ்துவர்கள் என்னையும், அல்மினார் ஆசிரியர் மார்ஹூம் அவர்களையும், முஸ்லிம் வாலிப சங்கத்துத் தலைவர் அப்துல்ஹமீது பேக் ஸயீது அவர்களையும், பிறரையும் மதவைராக்கியமும் துவேஷமும் கொண்டவர்கள் என்று கூறுகிறார்கள். நாங்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதரவு புரிந்து முஸ்லிம்களைத்தட்டி எழுப்புகிறோம் என்ற குற்றத்திற்காக எங்கள்மீது கிறிஸ்துவர்கள் பழிசுமத்துவதுமட்டுமில்லாமல், முஸ்லிம்கள் என்று தங்களைக்கூறிக்கொண்டு தங்களுக்கு மதத்துடன் எவ்விதச் சம்மந்தமுமில்லாத நிலைமையில், மதத்தைப்பற்றி எங்களுக்கு அக்கரை இல்லை என்று சொல்லிக்கொள்பவர்களிடமும் நாங்கள் மத துவேஷிகளாகவும் வைராக்கியர்களாகவும் இருந்துவருகிறோம். ஆகவே, பிரஞ்சுக்காரர்கள் பர்பரி வகுப்பு முஸ்லிம்களைக் கிறிஸ்துவர்களாக்கும் முயற்சியையும் பிரயத்தனத்தையும் கேள்விப்பட்டுங்கூடக் கண்ணை மூடிக்கொண்டிருந்துவிட வேண்டும். அல்லது ஹாலண்டு பார்லிமெண்டிலுள்ள ஒரு அங்கத்தினர் "ஜாவாவில் இருப்பவர் முஸ்லிமாகவோ அல்லது கிறிஸ்துவராகவோ இருப்பதைப்பற்றி எனக்கு அக்கரை இல்லை; மதமாற்ற விஷயம் அவர்களது சொந்த விஷயம்; அது இருதயத்துடன் சம்மந்தப்பட்டது" என்று கூறி ஜாவாவில் டச்சுக்காரர்கள் 10 லக்ஷம் முஸ்லிம்களைக் கிறிஸ்துவர்களாக்கியதைப்பற்றி பார்லிமெண்டில் கூறவேண்டும். இப்படிச் செய்தால் அவரை ஐரோப்பா கற்றவர், அறிவாளி முன்னேற்றமடைந்தவர் என்று கூறுவதுடன் அங்கு அவர் கியாதியும் பெற்று விளங்குவார். இவரைத்தான் கிறிஸ்துவர்கள் மத துவேஷமில்லாதவர் என்றுங் கூறுவர். ஆனால், முஸ்லிம்களைக் கிறிஸ்துவர்களாக்குவதற்காக குவியல் குவியலாகக் கிறிஸ்துவர்கள் பணத்தைச் செலவுசெய்து அவர்களைப் பயங்காட்டுவதற்காக ஆகாய விமானம், துப்பாக்கி, பீரங்கி, மெஷின்கன், டாங்கி ஆகியவைகளையும் உபயோகித்து அவர்களைத் தங்கள் மதக்கடமையைச் செய்யவிடாமற் தடுத்தாலும் அவர்கள் மதவைராக்கியமுள்ளவர்களல்லவாம்; அவர்கள் முன்னேற்றமடைந்தவர்களாம்; அறி

வாளிகளாம்; இஸ்லாத்தைத் தோற்கடிப்பதற்காகச் சகலவிதமானபிரசாரத்தையும்செய்யலாமாம். ஆனல், முஸ்லிம்கள் தங்கள் சகோதரர்கள் மதம்மாறிவிடாமல் அவர்களைப் பாதுகாத்தால் அவர்கள் மதத்துவேஷிகளாகவும், மதவைராக்கியம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்று தூற்றப்படுகின்றனர்.

ஐரோப்பாவின் மதப் பிரசாரத்திற்கு மேற்கண்டவாறு பல சாக்ஷியங்களு மிருப்பதுடன் அது தன்னை மத துவேஷ மற்றது என்று சொல்லிக் கொள்கிறது. அத்துடன் பிரஞ்சு கவர்ன்மெண்ட் பர்பரி முஸ்லிம்களைக் கிறிஸ்துவர்களாக்க முயற்சிசெய்கிறது. டச்சுகவர்ன்மெண்ட் ஜாவாவில் கிறிஸ்துவப் பிரசாரகர்களுக்கு ஆதரவு புரிந்துவருகிறது. பெல்ஜிய கவர்ன்மெண்ட் காங்கோவில் முஸ்லிம்களைக் கிறிஸ்துவராக்கும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருக்கிறது. பிரிட்டிஷ்கவர்ன்மெண்ட் உகாந்தா, தாருஸ்ஸலாம், சூடான் ஆகிய தேசங்களில் இஸ்லாமியப் பிரசாரத்திற்குத் தடையுண்டாக்கி இருக்கிறது. இவ்வாறெல்லாம் கணக்கற்ற உதாரணங்களிருந்தும் மேனாட்டு நாகரீகம் கொண்டவர்கள் என்று தங்களை நினைத்துக் கொண்டுள்ள சில போலி முஸ்லிம்கள், இதுவரை இவ்விஷயங்களை உணராது "ஐரோப்பா மதத்தை முற்றிலும் ஒதுக்கித் தள்ளிவிட்டதால்தான் முன்னேற்றமடைந்தது. ஆதலின், நாம் இஸ்லாத்தைப் புறம்பே தள்ளாதவரை நாம் முன்னேற்றமடையவே முடியாது" என்பதாகக் கூறியும் பிரசாரம் புரிந்தும் வருகின்றனர்.

துருக்கியிலும் இவ்விதமான பிரசாரம் செய்யப்பட்டதால், இவர்களது மாயவலையில் அநேகம்பேர் சிக்கி இஸ்லாத்தை அலக்ஷியமாகக் கருதவாரம்பித்தனர். துருக்கியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்கள் எகிப்து, ஷாம், இராக், ஈரான் ஆகிய தேசங்களிலும் இவ்விதமான பிரசாரத்தைச் செய்துவருகிறார்கள். அந்தோ! இந்தப் பொய்யர்களின் வாசகத்தை மெய்யென்று நம்பும் சாமான்ய முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் இருந்துகொண்டுதானிருக்கின்றனர். (தொடரும்)

பருவத்தே பயிர்செய்

(இஸ்லாத்தின் விரோதிகள் முஸ்லிம்களுக்குவிரோதமாகச் செய்யும் சூழ்ச்சிகளை அறிவிக்கும்படியான ஒரு ராஜீய வியாசம்)

ஒரு காரியத்தை உரியகாலத்தில் செய்யாவிடில் அதனை எவ்வளவு திறமையாகச் செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு திறமையாக செய்து முடிப்பது சிரமமாகிவிடுகிறது. பசிதாகம் அதிகமாக இருக்கும்போது சாப்பாடு ஜலம் கிடைத்து விடுவதாலும், மழை, பனி, கோடை ஆகிய காலத்தில், காலத்திற்குத்தக்க உணவு கிடைத்துவிட்டாலும் மனிதருக்குப் பசிதாகம் தீருவது மட்டுமில்லாமல் மனத்திற்கும் ஒருவிதச் சந்தோஷமும் திருப்தியும் உண்டாகிறது. ஆனல் இதற்கு நேர்மாறாக, தாகமில்லாதபோது ஜலம் அருந்தினலும், பசி இல்லாதபோது உணவருந்தினலும், உஷ்ணகாலத்தில் சாப்பிடவேண்டிய குளிர்ச்சிதரும்படியான உணவை மாரிகாலத்தில் அல்லது பனிகாலத்திலும், பனிகாலத்தில் சாப்பிடவேண்டிய உஷ்ணமான உணவைக் கோடைகாலத்திலும் சாப்பிடுவோமாயினும் நமக்குப் பலவிதமான நோய்களும் கஷ்டங்களு முண்டாகின்றன. எனவே, இறைவன் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காலத்தை நிர்ணயித்துளானதலின், அக்காலம் தவறி அதனைச் செய்தால் பலவிதமான தொந்தரைக் குள்ளாக வேண்டியிருக்கிறது. அத்துடன் அக்காரியம் ஒழுங்காகவும் சிரமமாகவும் நடைபெறுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் தான் வேண்டாத அல்லது விரும்பாத காரியத்தைச் செய்யும்படி மனிதன் நிர்ப்பந்திக்கப்பட்டு விடுகிறான். ஆனல், நிர்ப்பந்திக்கப்பட்டுச் செய்த இந்தக் காரியமே பின்னர் அவனுக்கு அளவில்லாத கஷ்டங்களைக் கொடுப்பதாக அமைந்து

விடுகிறது. ஒரு காரியத்தைக் குறிப்பிட்ட காலத்தில் செய்யும்போது எவ்வளவு சுலபமாக அக்காரியம் நிகழ்ந்துவிடுகின்றதோ அதனைப் பார்க்கினும் எத்தனையோ மடங்கு அதிகமான கஷ்டமாக அந்தக் காரியம் அகாலவேளையில் செய்யும்போது ஏற்பட்டு விடுகிறது.

இது சம்மந்தமாக முஸ்லிம்களாகிய நம்மிடம் எவ்வளவு குறைகளிருக்கின்றனவோ அவ்வளவு குறைகள் இதர சமூகத்தாரிடம் இல்லை என்று துணிந்துகூறலாம். நமது சமூகம் குறித்தகாலத்தில் எந்த வேலையையும் செய்ய முன்வருவதே இல்லை. இது நமது சமூகத்திற்கு வழக்கமாகவே ஆகிவிட்டது. இது சென்றகாலத்தில்தான் நமது கஷ்டத்திற்குக் காரணமாக இருந்தது என்றில்லாமல் நிகழ் காலத்திலும்கூட அது நமக்கு அநேகம் கஷ்டங்களை உண்டாக்கக் கூடியதாக இருக்கிறது. இப்பொழுது நாம் அஜாக்கிரதையாக இருப்பதனுல் ஏற்படும் தீயபலனை, நாமும் நமது பிற்காலத்தைய சந்ததிகளும் மிகவும் அதிகமாக அனுபவிக்க வேண்டியதிருக்குமென அஞ்சுகிறோம்.

உதாரணமாக, இந்தியாவில் மொகலாயரின் ஆட்சி முற்றுப்பெற்று அந்நிய அரசாங்கத்தின் ஆட்சி ஓங்கியபோது, ஆளும் சமூகத்தாருக்கும் ஆளப்படும் சமூகத்தாருக்கு மிடையிலிருக்கும் வேற்றுமையையும் அந்நியத்துவத்தையும் குறைப்பதற்காக சில அபிமானிகள் முன் வந்து முஸ்லிம்கள் ஆளப்படுபவர்களாக இருப்பதை உணர்ந்து, அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளும்படிச் செய்யவேண்டுமென்றும், அச் சமூகத்தார் தங்களுக்குக் கீழ்ப்படிந்துவிட்டார்களாதலின் தங்களுக்குத் துரோகம் செய்யமாட்டார்கள் என்று அக்காலத்தைய அரசாங்கம் நம்பும்படிச் செய்யவேண்டுமென்றும் விரும்பினர். இதற்குச் காரணமென்னவெனில், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களைத் தமது எதிரிகளாகக் கருதியது. ஒரு தேசத்தை அல்லது சமூகத்தை ஒருவர் ஜெயித்துவிட்டால் ஜெயிக்கப்பட்டவர்களது சக்தியை அடியுடன் ஒழித்துவிடவேண்டும் என்ற உணர்ச்சி ஜெயித்தவர்களுக்குண்டாகுவதியற்கை. இதன்படி இந்தியமுஸ்லிம்கள் பிரிட்டிஷாரின் இவ்வுணர்ச்சிக்கு இலக்காயினர். இவ்வித நிலைமையில், முஸ்லிம்களுக்கு வர இருக்கிற தீங்குகளில் பலவற்றைக் குறைத்து முஸ்லிம்களைக் காப்பாற்றுவதற்காக, ஆட்சிபுரிபவர்களது நோக்கம் என்ன வென்பதைத் தெரிந்துகொள்ளவும், அவர்களிடம் நமது கருத்தைத் தெளிவாக அறிவித்துக் கொள்ளவும் வசதியாக இருக்கும் பொருட்டு ஆளும் ஜாதியினரின் பாஷையை முஸ்லிம்கள் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் இதனுல் தப்பருத்தங்கள் நிவர்த்தியாகுவதற்கிடமுண்டென்றும் ஆலோசனை கூறினுர்கள். அல்லாமலும், ஆங்கில பாஷையில் இருக்கும் பிரயோஜனகரமானகல்வி, கலைகளையும் தெரிந்து கொள்ளவும் ஹேதுவாக இருக்குமென நம்பினர். ஆனுல் முஸ்லிம்களுக்கு ஏற்பட இருக்கிற கஷ்டத்திற்கு இது தகுந்த நிவாரணமாகுமா அல்லவா என்பதைப்பற்றி இங்கு விவாதிக்க வேண்டியதில்லை. எவ்வாருயினும் சமூக அபிமானம் கொண்டவர்களிற் பலர் இதனைச் சிறந்த பரிகாரமாகக்கருதினராதலின், நீண்டகாலம் இதைப்பற்றிய விவாதம் நிகழ்ந்தது. இறுதியாக முஸ்லிம் சமூகம் தங்களது வியாதிக்கு இதுவும் ஒரு மருந்தென ஒப்புக்கொண்டது. என்றாலும், காலந்தவறிவிட்டதால் ஆதியில் அப்பெரியார்கள் உத்தேசித்த பலன் கைகூடுவதற்கில்லை. ஏனெனில், இந்தியாவிலுள்ள இதர சமூகத்தினர் நம்மைப் பார்க்கினும் வெகு காலத்திற்கு முன்பே இத்துறையி லிடுபட்டதால் அவர்கள் வெகுதூரத்திற்கு முந்திவிட்டார்கள். இப்பொழுது படித்த முஸ்லிம்களுக்கு வேலைவாங்கிக் கொடுப்பதற்காக உத்தியோகப் பிரசினை வகுப்புவாரியாக ஏற்படுத்த வேண்டும் என்ற கிளர்ச்சி நடைபெற்றுவருகிறது. முஸ்லிம் சமூகத்தின் கவனம் இதுபோழ்து உத்தியோகத்துறையிலேயே இருந்து வருகிறது. இப்பொழுது இவர்களுக்கு இவ் விஷயத்தில் தலைமை வகித்து உழைத்து வருவதாகக் கூறிக்கொள்பவர்கள் முஸ்லிம் சமூகத்திற்காக உழைத்துப் பல கஷ்டநஷ்டங்களை அனுபவிக்கவோ அல்லது தியாகங்களைச்செய்யவோ தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. சமூக நலனைப்பார்க்கினும் சொந்த நலனே அவர்களிடம் வெகு முக்கியமாக இருக்கிறது. முஸ்லிம்களின் உரிமை பாதிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு விஷயம் அவர்கள் கையிலகப்பட்டுக்கொண்டதால், அதனைக் காரணமாகக் கூறித்தங்களது சொந்தநலனை அடைந்து வருகின்றனர். இவர்களது இப்போக்கினுல் சமூகத்திற்கு எவ்வித விசேஷ நலனுமுண்டாகிவிடவில்லை. இப்பொழுது நம் சமூகத்திற்குக் கிடைக்கக் கூடிய இதர சவுகரியங்களையும்கூடத்

தவர விட்டுவிடுவோர்கள் போலிருக்கிறது. சர்க்கார் உத்தியோகம் குறிப்பிட்ட ஒரு அளவு வரைதான் கிடைக்குமேயன்றி படித்தவர்களனைவருக்கும் தவறாமல் உத்தியோகம் கிடைப்பதற்கில்லை. ஆதலின், வகுப்புவாரி விகிதாசாரப்படி உத்தியோகப் பதவியை அடையும் பிரசினையை மட்டிலும் முக்கியமாகக் கருதாமலும், இன்னும் இதரசமூகத்தார் நமது உரிமைகளை அபகரித்துக்கொண்டனர் என்று அவர்கள் மீது குணதோஷங் கூறிநீண்ட விவாதங்கள் செய்யாமலும், வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலிய துறைகளில் காலா காலத்தில் ஈடுபட்டு அவைகளையேனும் ஒழுங்காகச் செய்ய முற்படல் வேண்டும். இதர சமூகத்தார் வியாபாரத்தைக் கைப்பற்றிவருகின்றனர்; கைத்தொழில் முதலிய வழிகளும் நமக்கு அடைபட்டுக்கொண்டே வருகின்றன. ஆதலின், உத்தியோகப் பதவியிலேயே முழு கவனத்தையும் செலுத்தி இதர துறைகளில் இருக்கிற அற்ப சொற்ப சந்தர்ப்பத்தையும் இழந்து விடலாகாது என்பதை எச்சரிக்கை செய்கிறோம். கொஞ்சகாலத்திற்குப் பின் இத்துறைகளிலும் முஸ்லிம்களுக்கு இடங் கிடைக்கவில்லையானல் அப்புறம் அநேகம் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதேற்படும். இதற்கெல்லாம் காரணம் தக்க சமயத்தில் செய்ய வேண்டியதை நாம் செய்யாமலிருந்து விடுவதேயாகும். பின்னர் கவலைப்படுவது தான் இதனாலேற்படும் பயனாகுமேயன்றி சென்ற காரியம் மறுபடியும் வந்து சேருவதில்லை.

ஆடவர்களுக்குக் கல்விப் பயிற்சி யளிக்கும் விஷயத்தில் நமதுநிலைமை யாதாம் என்பதைப் பற்றிச் சுருக்கமாக மேலே சொல்லப்பட்டுவிட்டது. இனி பெண் கல்வியைப்பற்றிக் கவனிப்போம். பெண் கல்வியிலும் நமது அசட்டை குறையாமலிருந்து வருகிறது. குறித்த காலத்தில் நாம் இத்துறையில் கவனம் செலுத்தவில்லை. இனி பொருளாதார நிலைமையைப் பற்றிக் கவனிப்போம். முஸ்லிம்கள் தரித்திரவான்கள் என்பது இதுபொழுது பழமொழியைப்போல் யாவருக்கும் தெரிந்ததொரு விஷயமாகும். நமது சமூகம் தக்க காலத்தில் காரியத்தைச் செய்து கொள்ள வேண்டுமென்பதை இன்னமும் உணரவில்லை. சென்ற காலம் சென்றே விட்டது; கொஞ்சம் எஞ்சி இருப்பதும் சென்றுகொண்டே இருக்கிறது. இத்துறையில் நமது சமூகம் - சமூகம் என்ற முறையில் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. நாம் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறோம். நமது தூக்கத்தில் நாம் பிரண்டு படுக்கவும் கூட நமக்குச் சிந்தனையில்லாதிருந்து வருகிறது. கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள நமது சொத்துக்களும் பொருள்களும் அந்நியர்வசம் நித்தம் நித்தம்சென்று கொண்டே இருக்கின்றன. நமது நிலச்சுவான்தார்களின் ஒவ்வொரு ரோமமும் கூட வட்டியினல் கட்டப்பட்டிருக்கிறது. நமது செலவுகள் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஒழுங்கில்லாமலும் சிக்கனமில்லாமலும் செய்யப்பட்டு வருகின்றன. நமது சுப அசுப காரியங்களில் பணத்தை நாம் அளவுக்கு மீறிச் செலவு செய்கின்றோம். இதனைப்பற்றிச் சாவதானமாகச் சிந்திப்பதற்குக் கூட நாம் இசைவதில்லை.

சில வருஷங்களுக்கு முன் நடந்த ஒத்துழையாமை, சட்ட மறுப்பு ஆகிய இயக்கங்கள் சரியானவைகளா? தப்பானவைகளா? என்பதைப் பற்றி நாம் கவனிக்க வேண்டாம். அதற்கு இது சமயமுமன்று. ஆனல், அவ்வியக்கத்தின் திரைமறைவில் நடந்ததென்ன வென்பதைச் சற்று கவனிப்போம். இவ்வியக்கத்தின் பலனாக இந்தியாவிலுள்ள பலவகுப்பினரும்ஒன்று சேர்ந்து கொண்டனர். ஒவ்வொருவரும் தமது சமூகத்தைச் சீர்திருத்தி ஒழுங்கு செய்ய வேண்டுமென்பதை உணர்ந்து கொண்டனர். சில சமூகத்தார் தேசீய கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தி இருக்கிறார்கள். இன்னும் தங்களால் செய்யப்பட்ட சாமான்களை விற்பதற்கு மார்க்கட்டுகளைச் சம்பாதித்துக்கொண்டனர். வேலையில்லாமலிருந்த பல்லாயிரம் பேருக்கு வேலைஏற்பட்டிருக்கிறது. முஸ்லிம்கள் தங்கள் கைத்தொழிலை அபிவிருத்தி செய்து நல்ல மார்க்கட்டைக் கைப்பற்றிக் கொள்ள தக்கசமயம் வாய்த்திருந்தது. ஆனல், முஸ்லிம்கள் அவ் அரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள். இதனல், சிற்சில விஷயத்தில் முஸ்லிம்களுக்கிருந்த உன்னத நிலைமையும் கூடத் தவறிப் போய்விட்டது.

ஆகவே, புதிய புதிய கைத்தொழில்களைச் செய்தல், அவைகளுக்கு மார்க்கட்டுகளை உற்பத்தி செய்தல், கூட்டுறவு முறையில் தொழில் நடத்துதல் முதலியவைகளும் கூட இப்பொழுது கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்களாகும். இவைகளில் நாம் கவனம் செலுத்தாமலும், நமது படித்த வாலிபர்கள் இவைகளில்

சிரத்தை கொள்ளாமலும், நமது தலைவர்கள் தக்க வழியைக் காண்பிக்காமலும் இருந்தால் நமது சமூகத்தின் கதி யாதாகுமென்பதை நினைக்கும்போது மயிர் கூச்செரிகின்றது. ஆகவே, முஸ்லிம்கள் "பருவத்தே பயிர்செய்" என்ற பழமொழிக்கேற்ப தக்க காலத்தில் உரிய காரியத்தைச் செய்ய முன் வருவார்களாக.

இப்போதேனும் விழித்தலாகாதா ?

(தென்காசி மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலிவரைவது)

(சென்ற மார்ச்சுமீ 96-ம் பக்கத் தொடர்)

சோதரீர் !

சென்ற மார்ச்சுமாத 'ஹிபாஜத்' இதழில் கிறிஸ்தவ ஸ்கூல்களின் அந்தரங்க நோக்கம் யாதென்பதை சிறிது வரைந்திருந்தனம். இப்பொழுதும் அதுசம்பந்தமாக சில முக்கிய விஷயங்களை வரைய வேண்டியதிருப்பதால் நேயர்கள் முந்திய வியாசத்தை அன்புடன் வாசித்ததைப்போலவே இதையும் வாசித்து உண்மையைப் பின்பற்றும்படி அன்புடன் கோருகின்றனம்.

யான் சென்ற வியாசத்தில் நுங்களின் சிறுமிகளைக் கிறிஸ்தவ ஸ்கூல்களுக்கு படிக்க அனுப்புவதால் அவர்களின் மதப்பக்தி எடுபட்டு விடுகிறதென்று வரைந்தவுடன் நுங்களில் பலருக்கு வருத்தமேற்பட்டிருக்கலாம். ஆனால், யான் உண்மையை வரையும்போது நுங்களின் வருத்தத்திற்கும், இழிச்சொற்களுக்கும் ஒருபோதும் அஞ்சேன். மேலும், நமது இஸ்லாத்திலேயே பிறந்து வளர்ந்து கிறிஸ்தவமதப் பக்தர்களாகுவதை சஹிக்கமுடியாதவனாய் அல்லாஹ்வுக்காக இதை வரையலானேன். மேலும், நுங்களில் பலருக்கு கீழ்க்கண்டவாறு ஓர் சந்தேகம் எழலாம். அதாவது :—"நமது முஸ்லிம்களில் பெண்களுக்கென்று சரியான ஸ்கூல்கள் இல்லாததினால், நமது சிறுமிகளை கிறிஸ்தவ பெண் பாடசாலைகளுக்கு அனுப்பி அங்கு படித்துத் தேறியபின் இஸ்லாத்தின் போதனைகளையும், தத்துவங்களையும் அவர்களுக்கு எடுத்து புகட்டி, அவர்களை நல்ல முறையில் பழக்கிவிடலாம்" என்பதே.

சகோதரப் பெரியார்களே !

கீழ்காணும் விஷயங்களை நன்கு கவனித்துப் படித்துப் பார்ப்பீர்களாயின் மேற்கண்ட சந்தேகத்திற்குத் தக்க சமாதானத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். உதாரணமாக, யாதொரு அட்சரங்களுமில்லாத ஒரு வெள்ளைத் தாழில் சில எழுத்துகளை மையினால் நாம் வரைந்து விட்டதாக வைத்துக்கொள்வோம். இதன்பின் நமக்கு மற்றொரு யோஜனையுண்டாகி அத்தாழில் முன் எழுதிய எழுத்துகளின் மேலே மீண்டும் எழுதிவிடுகின்றோம். ஆனால், நாம் இதன்பின் அவ்வெழுத்துகளை எத்துணை தூரம் கவனித்து வாசிக்க முயன்றாலும் நமக்குச் சிரமமும் கஷ்டமும் ஏற்படுகிறதேயல்லாது நமது நோக்கம் பூர்த்தியாவதற்கில்லை. இவ்விஷயத்தை எந்த சொற்ப அறிவுள்ளவரும் மறுக்கமாட்டாரென்பது திண்ணம். இஃதேபோல் சிறுமிகளின் ஹிருதயமானது வெள்ளைத் தாழைபோன்று அவ்வளவு மாசு மருவு அற்று தெளிவானதாக இருக்கிறது. இக்காலத்தில் நாம் இவர்களுக்குப் போதிப்பதை இவர்கள் மனப்பாடமாக்கி ஹிருதயத்தில் நன்கு பதியவைத்து விடுகின்றனர். இதன்பின் நாம், முன் போதித்து அவர்கள் மனப்பாடமாக்கியிருப்பதற்கு மாற்றமாக அச்சிறுமிகளுக்கு மீண்டும் போதித்தால், அவர்களுக்கு இரண்டாவதான விஷயத்தில் அத்துணை ஊக்கமும், உத்சாகமும் இருப்பதில்லை. இஃதேபோல் கிறிஸ்தவ ஸ்கூல்களில் நம் சிறுமிகளுக்கு கிறிஸ்தவமதப் போதனைகள் அவர்களின் ஹிருதயங்களில் நன்கு பசுமரத் தாணிபோன்று பதிந்து

விட்டபின் நீங்கள் எவ்வளவு கஷ்டத்துடன் இஸ்லாத்தைப்பற்றியும் இதன் தத்துவம் போதனைகள் முதலியவற்றைப் பற்றியும் போதித்தாலும் அதில் அவர்களுக்குப் பூரண பக்தி யுண்டாகுவதில்லை. ஏனெனின், அச் சிறுமிகளின் யோஜனை, பிரீதி, ஊக்கம், உற்சாகம் முதலியவைகளெல்லாம் ஸ்கூல் உபாத்தியாயினிகளின் போதனை, வெளிப்பகட்டான நடையுடை பாவனை முதலியவற்றிலேயே மையலாகி விடுகிறது.

உதாஹரணமாக, திருட்டுத்தொழிலில் ஈடுபட்டு அதிலேயே ஆனந்தங்கொண்டு அலைந்த ஒருவனுக்கு நீங்கள் எத்துணை உபதேசம் புரிந்தாலும் அவ்வுபதேசத்தை அவன் பூர்ண மன திருப்தியுடன் ஒப்புக்கொள்ள மாட்டான். ஆனால், நீங்கள் அவனுக்கு உபதேசம் புரியும் போழ்து அவனுடைய ஹிருதயமானது, நீங்கள் எப்பொழுது அவனைவிட்டு அகலுவீர்கள்; அவன் தனது பழைய திருட்டுத்தொழிலில் ஈடுபடலாம் என்றே சிந்தித்துக்கொண்டிருக்கும். இன்னும், தாழ்ந்த கேவலமான பிராணியுடன் சேர்ந்து நரகலைப் புசித்துக்கொண்டிருந்த கன்றுக்குட்டியைப் பிடித்து அவ்வசுத்தப் பிராணியைவிட்டுப் பிறித்து வீட்டில் கட்டிவைத்திருந்தாலும், எப்பொழுது நீங்கள் கட்டை அவிழ்த்து விடுவீர்களோ அது பொழுது மீண்டும் தனது பழய கூட்டாளியான அசுத்தப்பிராணியுடன் சேர்ந்து நரகலைப் புசிக்கலாம் என்றே எண்ணிக்கொண்டிருக்கும். ஏனென்றால், அதன் மனம் ஒரு விஷயத்தில் பூரண விருப்பம் கொண்டதாகிவிட்டபின் அவ்வாசையைவிடுவதென்பது அதற்கு மஹா கஷ்டமாகத் தோன்றும். தனது ஆசைக்கு எதிராக எத்துணைக் கஷ்டம் வந்தாலும் அவையடங்கலையும் ஏற்றுக்கொண்டேனும் தனது ஆசையைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற மனே உறுதியே ஏற்படும். நன்கு ஆழ்ந்து கவனிப்போர்கட்கு இவ்விஷயம் விளங்காமற் போகாதென்பது திண்ணம். (மேற் வரைந்த இரு உதாரணங்களும் விஷய விளக்கத்திற்காக வரைந்தனம். தப்பாருத்தம் கொள்ளற்க.) மேலும்,

இது சம்பந்தமாக சமீபத்தில் நடந்த ஓர் சம்பவத்தை நுங்களின் பார்வைக்காக இவண் வரைகின்றனம். அதாவது :—திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கிராமங்களில் பல கிறிஸ்தவ மாதர்கள் சென்று, முஸ்லிம் மாதர்களுக்கு தமிழ் படித்துக் கொடுப்பதாக பறைசாற்றிக் கொண்டு, சிலர்களை கிறிஸ்தவமத பக்தர்களாகச் செய்துவிட்டார்கள். அத்ாவது, இருவகையான பாடப் புத்தகங்களை அம்மாதர்களிடம் கொடுத்து "ஆண்பிள்ளைகள் நுங்களிடம் நீங்கள் படிக்கும் பாடப் புத்தகங்களைக் கேட்டால் பொதுவான விஷயங்களடங்கிய புத்தகத்தையே காண்பிக்கவேண்டும்" என்று கூறிவிட்டு, மற்றொரு புத்தகத்திலுள்ள கிறிஸ்தவ மதப் போதனைகளையே முக்கியமாகப் படித்து கொடுத்துவந்தார்கள். இடையிடையே தலைமைக் கிறிஸ்தவ மிஷினிலிருந்து பல ஆங்கில மாதர்கள் வந்து, படித்துக்கொண்டிருக்கும் முஸ்லிம் மாதர்களுக்கு பரிசுகளும் வழங்கி வந்தார்கள்.

இவ்வாறு நடந்துகொண்டிருக்கையில் ஓர் தினம் பிற ஊர்களிலிருந்து ஒருவர் அதிலொரு கிராமத்திற்குச் சென்றிருந்தபோழ்து அவரின் பந்துக்களில் ஒரு மாது தமிழ் படிப்பதாகக் கேள்விப்பட்டு அம்மாதிடம் சில வினக்களை வினவ, அம்மாது அதற்கு "எங்களின் பாவத்திற்காக கர்த்தராகிய இயேசு நாதர் சிலுவையி லறையப்பட்டு விட்டார்" என்று கூற, அவர் அம்மாது படிக்கும் புத்தகத்தைக் கொண்டுவரும்படிக் கூறி, அப்புத்தகங்களையும் பார்த்தவுடன் மனசஞ்சலங்கொண்டவராக ஆவேசத்துடன் வீட்டைவிட்டு வெளியில் வந்து 'அல்லாஹு அக்பர்' என்று மகாசப்தத்துடன் உறக்கக் கூவினர். இச்சப்தத்தைக் கேட்டு முஸ்லிம்களில் பலர் அவண் விரைந்து வந்து கூடிவிட்டனர். பின், இவர் நடந்த விஷயங்களை அங்குவந்திருந்த முஸ்லிம்களிடம் கூற, அவர்கள் யாவரும் மஹா கோபத்துடன் தத்தம் இல்லங்களுக்குச்சென்று ஆங்காங்கிருந்த இது சம்பந்தமான புத்தகங்களை எடுத்துவந்து நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டு, இனிமேல் முஸ்லிம்களின் இல்லங்களில் கிறிஸ்தவப் பெண்கள் நுழையக் கூடாதென்று கண்டிப்பாகத் தடுத்துவிட்டனர். ஆனால், ஒரு சில மார்க்கமறியா மாதர்கள் சிலபுத்தகங்களை மறைவாக வைத்துக்கொண்டு "யாங்கள் எவ் விஷயத்தைப் படித்தாலும் அதைப்பற்றி ஆண் பிள்ளைகளுக்குக் கவலையேன்?" என்று கூறினார்களாம்! இதன் பின் ஆங்கு கிறிஸ்தவர்கட்கும் முஸ்லிம்கட்கும் இன்றுவரை தர்க்கங்கள் ஏற்பட்டுக் கொண்டுதானிருந்துவருகிறதாகத் தெரிகிறது.

சகோதரர்களே! மேற்கண்ட விஷயங்களை போன்ற பல சம்பவங்கள் நம்கண்முன்நிகழ்ந்து கொண்டிருக்கிறதை நாம் கண்கூடாகக் கண்டும் கனவு காண்பதேபோல் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்து கிடக்கின்றோம். இவ்வாறே நாம் சிறிதுகாலம் மௌனமாக விருந்து விடுவோமாயின் நமது பிற்கால சந்ததிகளின் நிலைமை யாதாகு மென்பதை நன்கு சிந்தனைசெய்து பாருங்கள்! இப்பொழுதேனும் நுங்களின் சிறுமிகளை அவ்விஸ்கூல்களுக்கு அனுப்புவதால் உண்டாகும் கெடுதிகளை உணர்ந்துகொண்டீர்களல்லவா? நுங்களின் சிறுமிகளை கிறிஸ்தவர்களாக்க நீங்கள் அநுமதிக்கின்றீர்களா? அல்லது இஸ்லாமிய பக்தர்களாக்க உதவிபுரிகின்றீர்களா? இனி பார்க்கலாம். தற்சமயம் நம்மவர்களில் எத்தனையோ அறிவாளர்களும் பிரசங்கிகளும், சங்கங்களும் ஏராளமாக விருந்தும் இவ்விஷயத்தில் கவனஞ்செலுத்தாது வாளாவிருப்பதைப்பற்றி வருந்தாதிருக்க முடியவில்லை. ஆகவே, பொதுவாக முஸ்லிம் பெரியார்களும் குறிப்பாக முஸ்லிம் சங்கங்களும் மேற்கண்ட விஷயமாக அதிகக்கவனம்செலுத்தி ஆவனசெய்ய முன்வரும்படிவேண்டுகின்றனம்.

ஏ உண்மை முஸ்லிம்காள்! வீரியம் செறிந்த பால்ய சிங்கங்காள்!! நுங்கள் முன்னோர்கள் இஸ்லாத்தைக்காப்பாற்ற என்னென்ன தியாகங்கள் செய்துள்ளார்களென்பதை உற்றுணர்ந்து பார்க்கக் கூடாதா? தற்பொழுது நுங்களது ஈமானின் அறிய சக்திகள் எங்கு போயின? நுங்கள் எதிரிகள் செய்யும் கொடிய சதியான இச்சூழ்ச்சிகளைக் கண்டுமா உறங்குகின்றீர்கள்? போதும்! போதும்!! உறங்கிய காலங்களும் அஃதால் ஏற்பட்ட நஷ்டங்களும் போதும்!!! இன்றே எழுங்கள். சத்தியத் தொண்டாற்ற முன்வாருங்கள். ஒவ்வொரு நகர்களிலும் முஸ்லிம் பெண்பாடசாலைகளை ஏற்படுத்தி அதனை முன்னேற்றத்திற்குக் கொண்டுவாருங்கள். இஸ்லாத்தின் போதனைகளையும், தத்துவங்களையும் நல்ல முறையில் அவர்களுக்குப் போதியுங்கள், பிற்கால வாழ்க்கையின் உயிர் நாடியானது எவ்விதம் வாலிபர்களாய நுங்களின் கரங்களிலிருக்கிறதோ அஃதேபோன்று பிற்கால சந்ததிகளை நல்ல முறையில் பழக்கி மார்க்க சமூக தேசபக்தர்களாக்கும் பொறுப்பு சிறுமிகளாகிய அவர்களிடமிருக்கிறதென்பதை யுணர்ந்து ஆவனசெய்ய உடன் முன் வாருங்கள்.

அருமை முத்தகின்களே!

பாலர்களை வளர்க்க பொறுப்புள்ளவர்களே நாளை கியாமத் நாளில் இறைவனின் சன்னிதானத்தில் நிறுத்தப்பட்டு, அவர்களிடம் நுங்களின் குழந்தைகளை அல்லது, நுங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்களை எம்முறையில் வளர்த்தீர்கள்? எந்தெந்த கல்விகளை அவர்களுக்குப் போதித்தீர்கள்? என்பதைப்பற்றி கேட்கப்படும் விஷயங்களை நன்கு சிந்தனைசெய்து அதற்கு என்னபதில் கூறப்போகின்றீர்களென்பதை ஆராய்ந்துபாருங்கள் "இம்மானிலத்தில் ஜனனமாகும் ஒவ்வொரு குழந்தைகளும் இஸ்லாத்தின் மீதே பிறக்கின்றது; ஆயினும், அதன் பெற்றோர்கள், அப்பிள்ளைகளை யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ, மஜூஸிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்" என எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிப்போந்துள்ளதை சிறிது சிந்தனைசெய்து பார்க்கலாகாதா? பழக்க வழக்கங்களால் அப்பிள்ளைகளின் நோக்கமும், கொள்கைகளும் மாறுகிறதென்ற விஷயத்தை மேற்கண்ட நாயக வாக்கியத்தால் நன்கு தெரிந்துகொள்ளலாம். இஃதேபோல் நுங்களின் சிறுமிகளுக்கு கிறிஸ்தவர்களாய உபாத்தியாயினிகள் தங்களின் போதனைகளைக் கற்றுக்கொடுப்பதினால் சிறுமிகள் தங்களின் மதக்கொள்கையை விட்டுநழுவ ஹேதுவாகுமென்பதை யார்தான் மறுக்க வியலும்? நெருப்பு எரியும்போது அதன்பக்கல் நஞ்சிறுவர்களை விட்டுவிட்டு நாம் மௌனமாக இருந்து விடுவோமா? நெருப்பு சுடும் என்ற அறிவு அச்சிறுவர்களுக்கு இருந்தாலும் சரியே நாம் நன்கு கவனத்துடன் அந்நெருப்பின் அருகில் கூட போகா வண்ணம் பார்த்துக்கொள்கிறோம். இஃதேபோல் ஆத்மீக முன்னேற்றத்தையும், என்றுமழியா சுகபோக இன்பங்களையும் தடுத்து, என்றும் சாஸ்வதமான அக்கினியில் தள்ளும் அப்போதனைகளைப் படிப்பதற்கு சிறுமிகளை விட்டுவிட்டு நாம் மௌனமாக விருப்பது முறையாகுமா? ஆதலின், அன்பர்களே ஆவன செய்ய இன்றே எழுங்கள், நன்றே யுழையுங்கள், இதனால் கருணாநிதியான தயாபரனின் இன்னருளைப் பெற்றுய்யுங்கள். வஸ்ஸலாம்.

யவ்முந்நபி விழா கொண்டாட்டம்

நபிகள் திலகம் பெருமானார் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் திரு ஜனனம் புரிந்துள்ள மாண்புமிக்க புண்ணியதினம் உலகமெங்கும் தக்க முறையில் கொண்டாடப்பட்டதுடன் நம் தென்னாடு, சிலோன், ரெங்கூன், மலாயா, பினாங், சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் அழகான முறையில் கொண்டாடப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு கொண்டாடப்பட்ட முழு விபரங்களையும் நமது நண்பர்கள் வரைந்து பிரசுரத்திற்காக அனுப்பியிருக்கின்றார்கள். ஆனால் நமது மாசிகையில் அம்முழு விபரங்களையும் பிரசுரிக்க இடந் தராதாகையால் அதிலுள்ள சாராம்ஸத்தை மட்டில் வரைய முன் வந்தனம்.

கூடலூர் O. T.

2-6-36 செவ்வாய் மாலை (புதன் இரவு) இவ்வூர் ஜும்மா மஸ்ஜிதுக்கெதிரில் "எம்பெருமான் நபிகள் நாயகம்" (ஸல்.) அவர்களின் ஜனனதின வைபவம் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் மௌல்வி S. K. முகம்மது ஷர்புத்தீன்சாஹிப் (வஜீர்) அவர்களாலும், சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பிரசாரகர் மௌல்விமுகம்மது இஸ்மாயீல்சாஹிப் அவர்களாலும் நபிகள் நாயகம் (ஸல்.)அவர்களின் திரு ஜனனத்தை குறித்தும், அம்மகான் இஸ்லாம் மார்க்கத்தை உலகின்கண் எவ்வாறு பரப்பினார்கள் என்பதை குறித்தும், அதிவிமரிசையாக சொற்பொழிவாற்றப் பெற்றது. அக்கூட்டத்திற்கு கூடலூர் கஜானா டெபுடி கலெக்டர் ஜனாப் H. J. செய்யிது அப்துற் றஹ்மான்கான் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். மறுநாள் இரவு 9-மணிக்கு தென் ஆற்காடு ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீமான் T. B. கிருஷ்ணசாமி முதலியார், M.A., B.L., அவர்கள் அக்கிராசனத்தின்கீழ், சென்னை பிரபல அட்வகேட்டும் சட்டசபை மெம்பருமான ஆலிஜனாப் பஷீர் அஹ்மத் சயீத் சாஹிப், M. A., B. L., திருநபி ஜனனதின வைபவத்தைப்பற்றி வெகு விமரிசையாய் சொற்பொழிவாற்றினார்கள். தலைவரின் முடிவுரைக்குப்பின், சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் தயாரிக்கப்பட்டுள்ள" பெருமானின் பிரசாரம்" என்னும் ஸீரத் பிரசங்க நூற்கள் ஏராளமாக வினியோகிக்கப்பட்டு ஜனாப் மு. செ. முகம்மது செய்கு நெய்னா மரைக்காயரால் வந்தனோபசாரம் கூற பேஷ் இமாம் அவர்களால் துஆஓதப்பட்டு, இரவு 2-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது. இவ்வைபவங்களுக்கு 1000 இந்து முஸ்லிம் சகோதரர்கள் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

கூத்தானல்லூர்

இவ்வூர் பெஸ்ட்டிவல் ஸொசைட்டியாரின் நன்முயற்சியால் லக்ஷ்மாங்குடி பாலத்தருகாமையில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் காலை 8-மணிக்கெல்லாம் ஏராளமான ஹிந்து, முஸ்லிம், ஆதித்திராவிட சகோதரர்கள் வந்து குழுமிவிட்டார்கள். சரியாய் மணி 8-25-க்கு ஷியூர் சன்மார்க்கத் தொண்டர் சபையார் அழகிய அராபிய உடைகள் அணிந்து கீதங்கள் பாடிக்கொண்டு அம்மகாநாட்டில் வந்து சேர்ந்துக்கொண்டனர். பின் காலை 9-மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மன்னார்குடி பிரபல மிராஸ்தார் ஸ்ரீமான் K. S. சந்தானகிருஷ்ண முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. தலைவர் அவர்களுக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டபின் தலைவரவர்கள் முன்னுரையாக ஆங்கிலத்தில் நிகழ்த்திய சில அழகிய விஷயங்களை, மன்னார்குடி ஸ்ரீமான் V. S. விஸ்வநாதய்யர் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார். பின்னர் திருவாரூர் ஸ்ரீமான் T. S. தியாகராஜ ஞானியார் "நபிகள் நாயகமும் மணத்தூய்மையும்" என்பதைபற்றி ஆராய்ச்சி நிறைந்த விஷயமாக சுமார் 30 நிமிடம் பேசினார்.

பிறகு ஜனாப் மௌல்வீ முகம்மது மியான் ஸாஹிப் அவர்கள் "இஸ்லாம் போதிப்பதென்ன" என்னும் விஷயத்தை விரிவாக விளக்கிக் காட்டினார்கள். ஜனாப் நா. முகம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்கள் "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பண்பியலும் நமது கடைமைகளும்" என்னும் விஷயத்தை எம்மத சாகையினரும் எளிதில் உணரும்படியாய் சுமார்

2-மணிநேரம் பேசினார்கள். சடையன் அப்துற்றஹ்மான் "உண்மை இஸ்லாத்தின் உயரிய நோக்கங்கள்" என்னும் விஷயமாய் சிறிதுநேரம் பேசி தலைவர் முதல் பிரசங்கி வரை அங்கு வீற்றிருந்த ஹிந்து முஸ்லிம் ஆதித்திராவிட நண்பர்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்ட பின் "பெருமானின் பிரசாரம்" என்னும் ஸீரத் பிரசங்க நூற்கள் வினியோகிக்கப்பட்டு மகாநாடு வெகு சிறப்பாக முடிவுற்றது.

நாகூர் தர்கா ஷரீப்

இவ்வூர் தர்காஷரீபில், தர்கா ஷேர்ஹோல்டர்களாகிய வா.க. முகம்மது கவ்துசாஹிப், சு. அபுல்காஸிம் சாஹிப், சு.அபுல்ஹசன் ஹக்கானி சாஹிப், மா. சி. தம்பிஹசன் சாஹிப் ஆகியவர்களது முயற்சியால், ரபீஉல் அவ்வல்மீ 12-ம் தேதி புதன்கிழமை இரவு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஜனன தினத்தை முன்னிட்டு மவுலிதுசபைஒன்றுகூட்டப்பட்டது. அச்சபைக்கு இந்து, முஸ்லிம் சகோதரர்களில், 1000 பேர்கள் வரை அழைக்கப்பட்டிருந்தனர். அன்றிரவு நாயகம் (ஸல்.) அவர்கள் திருநாமத்தால் மவுலிதுஷரீப் ஓதப்பெற்று ஜாதிமத பேதமின்றி எல்லோருக்கும் ஷீர்னியும், மேற்கண்ட நால்வர்களால் அச்சிடப்பெற்ற "திரு நபிஜனன ஸ்தோத்திர விளக்கம்" என்னும் பிரசுரமும் வினியோகிக்கப்பெற்று இரவு மணி 1-க்கு சபை இனிதுமுடிவுபெற்றது.

லால்பேட்டை

9-6-36 புதன்கிழமை இரவு 9-30 மணிக்கு "ஹிலாலே அஹ்மர்" சங்கத்தினரால் நிர்மாணிக்கப்பட்டிருந்த அலங்காப் பூம்பந்தலில் "மத்ரஸா மன்பவுல் அன்வார்" சத்ரே முதர்ரிஸ், மௌலானா மௌல்வி S. M. R அப்துர்ரஹ்மான் சாஹிபவர்களின்தலைமையில், இறுதி நபியின் அவதாரத் திருநாள் மஹாநாடு கூடிற்று. ஜனாப் தா. முகம்மதலி ஆலிம் சாஹிபவர்கள் கிருஅத் ஓதினார்கள். தலைவர் அவர்கள் முன்னுரைக்குப்பின் மௌல்வி M. அப்துல்மஜீது சாஹிப், "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பிரசாரகர் மௌல்வி A. P. முகம்மது இஸ்மாயீல் (கலாமி) மௌல்வி K. G. அப்துஸ்ஸலாம் சாஹிப் மௌல்வி பாஜில் N. அப்துஸ்ஸலாம் சாஹிப் மௌல்வி M. S. ஜெய்னுல் ஆபிதீன் சாஹிப் மௌல்வி R. அப்துல் ஜப்பார் சாஹிப் மௌல்வி E. காதிர் முஹையத்தீன் சாஹிப் ஆகியவர்களால் உலகாக்ஷகரின் ஸீரத் பிரசங்கம் 2-30 மணிவரையில் நிகழ்வுற்றது. அன்னோர்களால் போதிக்கப்பட்ட உருக்கமான அரிய பிரசங்கத்தால் ஆங்கு விஜயந்தந்த 3000 ஹிந்து முஸ்லிம் ஆண்பெண் பாலர்கள் மிக ஊக்கத்துடன் அமைதியாகயிருந்து செவி ஏற்றுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். தலைவர் முடிவுரைக்குப்பின் "பெருமானின் பிரசாரம்" "நற்குணநபி" என்னும் அரும் ஸீரத்பிரசங்க நூல்களில் ஆயிரக்கணக்கான பிரதிகள் சபையோருக்கு வினியோகம் செய்யப்பட்டு சிற்றுண்டிக்குப்பின்கூட்டம் இனிது கலைந்தது.

வடகரை

இவ்வூர் அன்வாருல் இஸ்லாம் சங்க ஆதரவில் சற்குண தயாள சத்திய திரு நபி ஜயந்தி விழா மகோன்னத மகோற்சவ கொண்டாட்டம் 2-6-36 இரவு 9-30க்குமஸ்ஜிதிற்கெதிரே நிறுவப்பெற்றுள்ள புஷ்பலங்கார மன்றத்தில் மௌல்வி A.முகம்மது அபூபக்கர்சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் ஆரம்பமாயிற்று. ஜனாப்களான மௌல்வி அப்துல் அஜீஜ்சாஹிப் முதலியோர் பெருமானார் (ஸல்.) அவர்களின் அரும் குண விசேஷங்களை தக்கமுறையில் விளக்கிக் காண்பித்தபின் இரவு 2-30-க்கு சபையின் நடவடிக்கைகள் முற்றுபெற்றது.

பின் 3-6-36 பிற்பகல் 3 மணிக்கு ஜாமிஆ மஸ்ஜிதிற் கெதிரில் நிறுவப்பெற்றிருந்த அலங்காரப் பந்தலில் ஸ்ரீமான் ஸீ. மருதவாணம் பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. ஏராளமான ஹிந்து முஸ்லிம் சகோதரர்கள் விஜயஞ்செய்திருந்தார்கள். தலைவர் முகவுரைக்குப் பின் ஜனாப்களான மௌல்வி முகம்மது அபூபக்கர் சாஹிப், மௌல்வி அப்துல் அஜீஜ் சாஹிப், மௌல்வி நா. அப்துல் வஹாப்சாஹிப், மௌல்விஅபுல்ஹஸன்சாஹிப் ஷாதுலீ, முகம்மது ஹுசைன் சாஹிப், மௌலவி சையத் முகம்மது சாஹிப், மௌவி முகம்மது ஹுசைன் சாஹிப் ஆகியோர்கள் நபிகள் பெருமானார்(ஸல்.) அவர்களதுவாழ்க்கைசரிதை ஹிதோபதேசம் ஆகியவைகளை சாங்கோபாங்கமாய் எடுத்துக் கூறினார்கள். பின்னர் தலைவர் முடிவுரைகூற "ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஸீரத்பிரசங்க நூல் "பெருமானின் பிரசாரம்" நூற்றுக்கணக்கில் வினியோகிக்கப்பெற்று சபையின் நடவடிக்கைகள் முற்றுபெற்றது.

கிள்ளான்

இவ்வூர் இந்திய முஸ்லிம் மாஸ்க் கமிட்டியார் தீர்மானித்திருந்தபடி ரபீஉல் அவ்வல்புரை 11 வரை வியாபாரிகள் முறையே மௌலிதுஷரீப் ஓதிமுடித்து 12-ம் இரவை சிறப்பாக கொண்டாடவும், மறுநாள் பகலில் பிரசங்கம் நிகழ்த்தவும் முன்னேற்பாடு செய்வதற்காக கனம் நாட்டாண்மை ஹாஜி கு. இ. முகம்மது அலீ அவர்கள் தலைமையில் ஒரு வரவேற்புகமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டு தமிழ், இங்கிலீஷ், மலாய் பாஷையில் துண்டுநோட்டீஸ்கள் வழங்கப்பட்டிருந்தன.

புரை 12-ம் இரவுவைபவம் மாலை 5-30மணிக்கு மௌலிதுஷரீப் ஆரம்பிக்கப்பட்டு முடிவு பெற்றவுடன் இரவு 9-30 மணிக்கு ஸீப்காஜீ ரூஜா ஹாஜீ உஸ்மான் J. P, துங்குமுகம்மது, ஷெய்குல் இஸ்லாம் ஸ்டியாடி ரூஜா, துங்கு பாடார், துங்குஷாபாண்டார் முதலிய மலாய் சகோதரர்கள் விஜயஞ் செய்தார்கள். அது பொழுது ஷெய்குல் இஸ்லாம் துங்கு முகம்மது அவர்களால் துஆ ஓதப்பெற்று அங்கு விஜயஞ் செய்திருந்த ஹிந்து முஸ்லிம் கிறிஸ்தவர்கள் முதலிய யாவருக்கும் சாப்பாடு கொடுக்கப் பெற்று இரவு 12-மணிக்கு கூட்டம் கலைந்தது.

மறுநாள் காலை 10-மணிக்கு பள்ளிக்குமுன் பிரசங்கத்திற்காகவே அலங்கரிக்கப்பட்டுள்ள பந்தலில் மகாஜனங்கள்வந்து கூடிவிட்டனர். சரியாய் 10-30 மணிக்கு ஸீப்காஜீ, ஷெய்குல் இஸ்லாம் இவர்கள் அங்குவர, வரவேற்புகமிட்டியாரால் வரவேற்கப்பெற்று கனம் ஸீப்காஜீ அவர்கள் தலைமையின்கீழ் பிரசங்கம் ஆரம்பமாயிற்று. தலைவர் முகவுரையில் வரவேற்புகமிட்டியார் செய்த சேவையைப் பாராட்டி இவ்வாறே ஒவ்வொருவருடங்களிலும் கொண்டாட்டங்கள் நடைபெற வேண்டுமெனக் கூறி ஷெய்குல் இஸ்லாம் அவர்களைப் பிரசங்கம் புரியுமாறு கேட்டுக்கொண்டார்கள். அவர்கள், நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சரித்திரவரலாறுகளை மலாய்பாஷையில் சுமார் ½ மணிநேரம் வரை எடுத்துக் கூறினார்கள். பின்னர் பேஷ் இமாம் மௌல்வி முஹம்மது தாஹிர் சாஹிப் அவர்கள் ½ மணிநேரம் அறபியில் அழகிய சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் பகல் 12-மணிக்கு கூட்டம் கலைந்தது.

மாலை 5 மணிக்கு லேபர் ஆபீஸ் ஸ்ரீமான் T. P. சுந்திரம் அவர்கள் விஜயம்செய்ய, வரவேற்பு கமிட்டியாரால் வரவேற்கப்பட்டு அக்கிராசனப்பீடத்திலமர்ந்து தாம் ஹிந்துவாக இருந்தும் புண்ணியம் பொருந்திய இச்சபைக்குத் தம்மை தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு வந்தனங் கூறினார். பின்னர் ஜனாப் மௌல்வி முஹம்மது தாஹிர் சாஹிப் அவர்கள் தமிழிலும், ஜனாப் அ. முகம்மது இப்ருஹிம் அவர்கள் ஆங்கிலத்திலும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சரித்திரவரலாறுகளை அழகிய முறையில் எடுத்துக் கூறினார்கள். பிறகு ஜனாப் கோ. அ. பகீர் முகம்மது சாஹிப் அவர்கள் வந்தனம் கூறுகையில், பட்டி ஸீரத்கமிட்டியாரின் நன் முயற்சியால் 7, 8 வருஷங்களாக உலகம் முழுதிலும் இவ்விதமான கொண்டாட்ட சபைகள் நடைபெற்று வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமென்றும், அவ்வாறே இவ்வூரிலும் ஏற்பாடுசெய்ய தாம் பலவருடங்களாக முயற்சித்தும் பல சந்தர்ப்பங்களால் தடைபட்டுக் கொண்டே வந்து இவ்வாண்டில் கனம் நாட்டாமை ஹாஜீ கு. இ. முகம்மது அலீ அவர்கள் தலைமையில் தன்னுடைய முயற்சி வெற்றிகாமாய் முடிந்ததற்காக அல்லாஹ்வை புகழ்வதுடன் அக்கமிட்டியார்கட்கும் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும், ஏற்கனவே மீட்டிங்கில் தீர்மானித்தபடி நாயகம் (ஸல்.) அவர்களது சரிதையை நான்கு பாஷைகளிலும் அச்சிட்டு வெளியாக்க காலம் போதாதாகையால் தமிழ் பாஷையில்மட்டும் அச்சிட்டு வெளியாக்கியிருப்பதாகவும் கூறியவுடன் மக்ரிப் தொழுகைக்காக கூட்டம் கலைந்தது.

N. B. யவ்முந் நபி விழாக் கொண்டாட்ட விஷயமாய் இன்னும் அநேக நிருபங்கள் பிரசுரத்திற்காக வந்திருக்கின்றன. வரிசைக் கிரமமாக நாம் பிரசுரித்து வருவதில் இடம் பெறும் வரை பிரிசுரித்து விட்டு பாக்கியை நிறுத்திக் கொண்டோம். இதற்காக அன்பர்கள் மனவருத்தமுறாது மன்னித்தருள்வார்களாக.

208349

சந்தா நேயர்கட்கு!

அன்பீர் !

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1935-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும், புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பிவைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும், சென்ற வருஷத்திற்கு ஏற்கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள் நிகழும் 1936-ம் ஆண்டுக்குரிய சந்தா ரூபாயை முன்பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனாப் மு. முகம்மதுஷரீப் சாஹிப் அவர்கள்,

(208, ஸிலிங்கி ரோட்) இடமும்

பினங், மலாக்கா & மலாய் நாட்டு வாசிகள்

ஜனாப் **K. A.** பகீர் முகம்மது சாஹிப்,

(P. O. Box No. 60, கிள்ளான்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குதெருவு, கொழும்பு) இடமும்

தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுககொள்ளுமாறு கோருகிறோம்.

ஆங்கில அரிய நூல்கள்

மீரட், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ முஹம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்திக்கீ அவர்கள் அறபியிற் றேர்ந்த பண்டிதராக இருப்பதுமல்லாமல் ஆங்கிலக் கல்வியிலும் உயர்தரப் பட்டப் பரீக்ஷையிற்றேர்ந்த மேதாவி என்பதும், ஜப்பான், ஆஸ்டிரேலியா, தென் ஆப்பிரிக்கா, மலாயா முதலிய தூரதேசங்கள் சென்று மார்க்கோபன்யாசம் புரிந்து வருவதும், இவர்களது அரிய உபன்யாசங்களைக் கேட்ட நூற்றுக் கணக்கான மேதாவிகள் இஸ்லாத்திற் சேர்ந்து வருவதும் உலகப் பிரசித்தம். மௌலானா அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளையும் தத்துவங்களையும் பற்றி ஆங்கிலத்தில் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். இந்நூற்கள், ஆங்கிலங் கற்றவர்களுக்கு தக்க பிரயோஜனம் அளிப்பதாக இருப்பதால், அன்பர்கள் இவைகளை வாங்கிப் படித்துப் பிரயோஜனம் அடைவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

புத்தகங்களின் விபரம்.

		Rs.	A.
1.	First Teachings of Islam (Shafi)	1	4
2.	The Elementary Teachings of Islam	0	12
3.	A New Muslim World in Making	0	8
4.	The Universal Teacher	0	4
5.	Religious & Scientific Progress of the World ...	0	6
6.	Spiritual Culture in Islam	0	6
7.	A Shavian meets a Theologian	0	4
8.	Deeni Omoomi (Urdu)	0	2

கிடைக்குமிடம் :—

மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulvi

Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 7

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 8

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 ஜமாதுல் அவ்வல்மீ 1936ஷு ஆகஸ்டுமீ

1. அல்குர்ஆன் ... 225, 2. அல்ஹதீது ... 227
3. இஸ்லாம் உலக மதம் ... 229
4. வஹ்தத்துல் உஜூத். அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே ... 231
5. நாயகம் (ஸல்) அவர்களது திருமணங்கள் ... 234
6. முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன? 238
7. நாம் முன்னேறுவ தெங்ஙனம்? ... 242
8. ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களின் ஜீவகாருண்யம் 246
9. காதியானி மிர்ஜாவின் வழிகெட்ட கொள்கையைப்பற்றிய விளக்கம் ... 247
10. பாலஸ்தீனத்தில் அடக்குமுறை ... 250
11. இஸ்லாமியப் பிரசாரம் ... 253
12. கிணறு வெட்ட பூதம் வெளிப்பட்டது ... 256
13. காதியானி இயக்கமும் அதனை எதிர்க்கும் மார்க்கமும் ... 259
14. மதமும் ராஜீயமும் ... 261
15. சுகாதாரம்—மலச்சிக்கல் ... 263

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	”	4	0	0
தனிப் பிரதி ...	”	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்வலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1355 ஜமாதுல் அவ்வல் மீ 1936 ௵ ஆகஸ்டு மீ	இதழ் 8

அல் குர்ஆன்

அல்லாஹ்தஆலாவை வணங்கப்படுமிடத்தில் அவனது திருநாமம் கூறப்படுவதை விலக்குபவன் யார்? இன்னும் அதன் மகிமைக்கு பங்கம் விளைவிப்பவனும், அதனைக் கெடுத்து விடுவதற்கு முயற்சிப்பவனும் யார்? அன்னோர் பயந்தவர்களாக பள்ளியினுள் பிரவேசிப்பார்கள். அவர்களுக்கு உலகிலும் தாழ்மை யேற்படும், மறுமையிலும் கடிசான வேதனை உண்டு.

(திரு குர்ஆன்)

இஸ்லாத்தின் ஆரம்பத்தில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும் சஹாபாக்களும் கஃபத்துல்லா ஷரீபில் தொழுகை நிறைவேற்றுவதையும் பாங்கு சொல்லுவதையும் விட்டு மக்கா வாசிகளான காபிர்கள், தடுத்துக்கொண்டிருந்தார்கள். இந்நிலைமையில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தனிமையில் தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பம் கண்டு அவர்கள்மீது பலவாறான தாக்குதல் புரிவார்கள். ஒருநாள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போது சில துஷ்டர்கள் முன்வந்து அவர்களது குரவளையை நெறித்தார்கள். ஆனால் யாதொரு கெடுதலும் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு ஏற்படாது அல்லாஹ் தஆலா காப்பாற்றிக்கொண்டான். நம்பெருமானார் (ஸல்.) அவர்கள் சதாவும் அல்லாஹ் தஆலாவை தியானித்துக்கொண்டிருந்ததற்காகவும், கஃபதுல்லா ஷரீபில் அவ்வல்லோனை வணங்க முற்பட்டதற்காகவும் அந்த காபிர்கள் அவர்களுக்கு இவ்வாறான தொந்திரைகளெல்லாம் கொடுக்க முற்பட்டனர். சத்தியத்தூதர் (ஸல்) செல்லும் பாதைகளிலெல்லாம் முற்கள் பரத்தப்பட்டன; வீடுகளுக்கு மேலாவிருந்து கற்கள் எறியப்பட்டன; நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தொழுகை நிறைவேற்றிக்கொண்டிருப்பதைக் கண்ட சில துஷ்டர்கள் விரைவிற் சென்று ஒட்டகை சாணத்தில் ஒரு கூடை எடுத்துவந்து சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் 'சஜ்தா'விற்குச் செல்லுங்கால் அதனை தங்கள்மீது வைத்துவிட்டனர். இஸ்லாத்தின் சத்துருக்கள் சுமார் 10-வருட காலம்வரை நபிகள் பெருமானார்

(ஸல்.), உத்தம சஹாபாக்கள் முதலியவர்களுடன் இவ்வாருகவே நடந்து வந்தார்கள். சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் இவ்வாருன பற்பல கஷ்டசங்கடங்களையும் சகித்துக்கொண்டு கஃபத்துல்லாஹ்வின் மகிமைக்கு ஹானி ஏற்படாது பார்த்துவந்தார்கள். வரவர குப்பார்களின் அநீதி அதிக்கிரமம் மிகைத்துக் கொண்டு வரவே நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் சில சஹாபிகளை 'ஹபஷா' வின் பக்கல் சென்றுவிடுமாறு கட்டளையிட்டார்கள். அதன்பின் தாங்களே அம்மக்கமாநகரைவிட்டு மதீனு ஷரீபுக்குச் சென்ருர்கள்.

ஹிஜ்ரீ ஏழாவதாண்டில் நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் 'உமரா'வை நிறைவேற்றுவதற்காக மக்கமாநகர் செல்ல நாடியபொழுது மக்கா வாசிகள் அதனை தடுத்துவிட்டார்கள். கடைசியாக அல்லாஹ் தஆலாவின் உதவி கொண்டு மக்காநகர் பெருமானுர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கைவசமானபின் குப்பார்கள் பயத்தின்மேலீட்டால் அதைவிட்டு வெளியில் நானுபாகங்களிலும் செல்ல ஆரம்பித்தார்கள். முஸ்லிம்கள் முழுநிம்மதியோடு மக்காவினுட் பிரவேசிக்க முற்பட்டனர். நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் "பைத்துல்லாஹ்வைச் சுற்றி வந்தபின் உட்கதவைத் திறக்குமாறு கட்டளையிட்டார்கள். சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அதனுட் பிரவேசித்தபோது மலக்குகளின் உருவங்களும் விக்கிரகங்களும் அங்கு ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். இதுவன்றி ஹஜ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் கையில் அம்புவைத்து நிற்பதுபோன்ற படமொன்றும் தயாரித்து வைக்கப்பட்டிருந்தது. இதனை நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பார்த்துவிட்டு அல்லாஹ் தஆலா காபிர்களை ஹலாக்காக்கி விடுவானுக; ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் பக்கல் ஷிர்க்கை சம்மந்தப்படுத்துவதைத் தவிழ்ந்துகொண்டார்களில்லை.'' இப்ருஹீம் எஹூதியாகவோ, நஸரானியாகவோ இருக்கவில்லை. ஆனுல் உண்மை முஸ்லிமாகவிருந்தார்'' என்னும் திருவாக்கியத்தை ஓதி அங்கிருந்த விக்கிரகங்களை உடைப்பதற்கும் உருவங்களை அழித்தொழிப்பதற்கும் அனுமதியளித்தார்கள். இதற்கேற்ப சில தினங்களில் அப்புண்ணிய பரிசுத்த ஸ்தலம் அக்கெடுதிகளைவிட்டும் தூய்மையுடையதாகி விட்டது.

பைத்துல்முகத்தஸ்

குர்ஆன்ஷரீபில் 'பைத்துல்முகத்தஸ்' சம்மந்தமாய் சயிக்கனையாகக் கூறப்பட்டிருக்கிறது. 'புக்தநஸர்' என்பான் 'பைத்துல்முக்த்தஸ்' மீன் படையெடுத்தபோது அதனை தீக்கிரையாக்கினுன். அங்குள்ள 'பனூஇஸ்ராயீல்' வர்க்கத்தாரைப் பிடித்து அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவு மாக்கிக்கொண்டான். அநேக காலம்வரை இப்புண்ணியஸ்தலமும் பாழடைந்து கிடந்தது. ஹஸ்ரத் 'உஸைர்' (அலை.) அவர்களுக்கு அதன் பக்கல் செல்ல வேண்டிய சந்தர்ப்பமேற்பட்டபோது ஹஸ்ரத் அவர்கள் மிக்கவருந்தியவர்களாய், யாஅல்லாஹ்! பாழடைந்து போயிருக்கும்படியான இந்த தூய்மைபொருந்திய "பைத்துல் முகத்தஸ்" மறுபடியும் பிரக்யாதிபெற்று விளங்குமா? வெனக் கூறினுர்கள். கடைசியாக இந்த வணக்கஸ்தலமும் அல்லாஹ் தஆலாவை வணங்குபவர்களின் கைக்குவந்துவிட்டது. எந்த வகுப்பார் அல்லாஹ் தஆலாவின் கட்டளைக்கு மாறுசெய்கின்ருர்களோ அவ்வகுப்பாரில் அல்லாஹ்தஆலா ஒரு மாறுதலை உண்டுபண்ணி அவர்கட்கு உணர்ச்சி ஏற்படும்படி செய்கிறுன்.

இக்காலை சில மஸ்ஜிதுகள் 'முத்துவல்லி' என்று சொல்லப்படும் தலைமைக்காரர்களின் அதிகாரத்திலிருந்து வருகிறது. அன்னேர், பள்ளிக்கு வக்பு செய்யப்பட்டுள்ள சொத்துக்களின் வரும்படியை அப்படியே விழுங்கிவிடுகின்ருர்கள். சில பள்ளிகள் சில அஞ்சுமன்களின் பிரசிடெண்டு அல்லது செக்ரிடரிகளின் ஆதிக்கத்திலிருந்து வருகிறது. அவர்கள் இந்த அதிகாரம் வாணுள் முழுதிலும் தங்களுக்குரியதென்று எண்ணிக்கொண்டு நாடியதைச் செய்ய முற்படுகின்றனர். ஆகவே, நம் முஸ்லிம் நேயர்கள் தங்கள் முழு பிரயாசையையும் செலுத்தி இதுவிஷயமாக கவனம் செலுத்துவார்களாயின் காரியாதிகள் அழகியமுறையில் நடைபெற்றுவரும். சட்டசபை முதலிய ஸ்தலஸ்தாபனங்களுக்கு மூன்று அல்லது ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை தலைவரைத் தெரிந்தெடுக்கும் வழக்கம் இருப்பதுபோல மஸ்ஜிதின் பரிபாலனத்திற்காகவும் தேர்தல் நடைபெறுமாயின் நிருவாகமுறைகள் தக்கமுனறயில் நடைபெறும். ஆகவே, நம் முஸ்லிம் நேயர்கள் மஸ்ஜிதின் நிருவாக விஷயத்தில் தக்க கவனம் செலுத்தி ஆவன செய்ய முற்படுவார்களாக.

முஸ்லிம்கள் மார்க்க அனுஷ்டானங்களாய தொழுகை நோன்பு முதலிய இக்காரியங்களை தக்க விதமாக நிறைவேற்றுவார்களாயின் மஸ்ஜிதின் பரிபாலன விஷயமும் செவ்வனே நடைபெறு தற்கு ஹேதுவேற்பட்டுவிடும். ஆகவே, எவர் அல்லாஹ்வின் பற்றுக்கொண்டு சாலிஹான அமல் செய்துகொண்டிருக்கின்றாரோ அவர் தான் மஸ்ஜிதின் நிருவாகத்தைத் தக்கமுறையில் நடத்திக்கொண்டு வருவாரென்பது திண்ணம்.

அல்ஹதீது

முஸ்லிம்காள்! முந்திய கூட்டத்தினரில் காணப்பட்ட பொறாமை, காமகாரம் என்னும் வியாதி உங்களிலும் பரவ ஆரம்பித்திருக்கிறது. இவை அழித்தொழித்துப் போடக்கூடியவைகளாகும். இவை சன்மார்க்கத்தை அழிக்கக் கூடியதாகும். என் உயிர் எவனுடைய கைவசம் இருக்கிறதோ அவன்மீது பிரமாணமாக, உங்களில் ஈமான் ஏற்படும்வரை சுவனபதியடைய மாட்டீர்கள். நீங்கள் ஒருவரோடொருவர் அன்பு கொள்ளாதவரை ஈமானுடையவர்களாக மாட்டீர்கள். ஆகவே, உங்களுக்கிடையே 'முஹப்பத்'—பிரீதி அன்பு ஏற்படுவதற்கான ஒரு வழியைக் காண்பிக்கின்றேன். அஃதாவது உங்களுக்கிடையே 'ஸலாம்' சொல்வதை அதிகமாக்கிக்கொள்வதாகும். என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந் தருளியிருக்கிறார்கள்.

சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள், சஹாபாக்களின் தூய்மை பொருந்திய அக்காலத்திலேயே பொறாமை காமகாரம் தோன்றப் பெறுவதாய் அறிவித்திருக்கிறார்கள். அக்காலம் உண்மை முஸ்லிம்கள் உயிர்வாழும் காலமாக விருந்தது. இஸ்லாத்தின் உண்மை ஆத்மாக்கள் அவர்களது பிண்டங்களில் மிளிர்ந்து கொண்டிருந்தது. தூய்மை பொருந்திய அக்காலமே பொறாமையைவிட்டு தப்பவில்லையென்றால், கெடுதிகளும் பித்னாக்களும் நிறம்பியுள்ள இக்காலத்தைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இக்காலே தெரியாத மடையர்களென்ன! தெரிந்த மக்களும்கூட பொறாமை காமகாரம் என்னும் தீயில் அகப்பட்டு உண்மை சன்மார்க்கத்தை சம்ஹாரஞ் செய்து வருகின்றனர். ஈமானென்னும் அதினுட்ப இரத்தினத்தை இவைகள் அழித்து நாசமாக்கக்கூடிய தென்பதை யாரும் நோட்டமிட்டுப் பார்ப்பதில்லை. இது விஷயத்தைத்தான் மேலே கூறப்பட்டுள்ள ஹதீதில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இதுகாலை முஸ்லிம்கள் பொறாமை காமகாரம் கொள்வதில் தங்களுக்கு நிகர் யாருமில்லையென சிறந்து விளங்குகின்றார்கள். முஸ்லிம்களிலுள்ள அநேக தலைவர்களும் அநேக சீமான்களும் தங்கள் சீமான்தனம், தலைமைத்தனம் இவைகள்மீது மமதை கொண்டு இருப்பதால் இவைகளை ஆண்டவனென கருதியிருக்கின்றார்களாதலின் அன்னாருக்கு அல்லாஹ் ரஸூலுடைய உபதேசங்கள் எங்கிருந்து பிரயோசனம் கொடுக்கப்போகிறது. ஏழைகளோ தங்கள் வறுமையின்மேலீட்டால் பொறாமை காமகாரம் என்னும் கயிற்றால் கட்டுண்டுபோயிருக்கின்றனர். இவ்விரண்டு வகுப்பார்களையும் நாம் அப்படியே விட்டுவிட்டு, தாங்கள் அல்லாஹ்வுக்கு அதிகம் பயப்படுபவர்கள், குர்ஆன் ஹதீதுப்படி நடப்பவர்கள் என்று கூறிக்கொள்பவர்களை கவனிப்போமாகில் அன்னாரில்தான் இத் துர்க்குணங்கள் மிதமிஞ்சி காணப்பட்டு வருகிறது. இது காலத்தின் துர்அதிர்ஷ்ட வசமும் முஸ்லிம்களின் க்ஷீண திசைக்குக் காரணமுமாகவிருக்கிறது. அல்லாஹ்தஆலா இத் துர்குணங்களைவிட்டு முஸ்லிம் நேயர்களைக் காப்பாற்றுவானாக.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் முஸ்லிம்களை நோக்கி, "முஸ்லிம்காள்! சென்றுபோனவர்க்கத்தாரில் காணப்பட்டுள்ள வியாதிகளான பொறாமை காமகாரம் உங்களில் பரவிக்கொண்டு வருகின்றது. அத்துர்ச் செய்கையானது அன்னாரை பலவாறான வேதனையிலாக்கி வைத்தது. பொறாமை கொள்வதென்னும் இவ்வியாதி ஈமானின் ஆணிவேறையே ஆட்டிவைத்து விடுகிறது. இதரர்களுக்கேற்

படும் சங்கை மரியாதை கெளரதை இவைக ளைக்கண்டு மனம் சகியாது அவர்களுக்கு மரியா தைக் குறைவு தாழ்மை ஏற்படுவதற்கு முயற் சிப்பதும் பொருமை கொள்வதின் வகையைச் சேர்ந்ததாகும்'' எனக் கூறி, மானிடர்கள் பொருமை காமகாரம் கொள்வது ஆகிய துர்க் குணங்களை அகற்றி ஒருவரோடொருவர் ஒற் றுமையாக வாழ்வார்களாயின் அதுபொழுது தான் அன்னேரில் பிரீதி என்னும் முஹப்பத்து அதிகரித்துக்கொண்டு வந்து எல்லோரையும் ஈமானுடையவர்களாக திகழச் செய்யும். ஏகத் துவக் கொள்கை, நாயகம் (ஸல்.) அவர்களது நபித்துவத்தை ஒப்புக்கொள்ளல் ஆகியவைகள் ஈமானுடைய அங்கங்களாக விருந்தபோதினும் பிரீதி அன்னியில் அல்லாஹ்வை அறியவுமுடி யாது; ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களைப் பின் பற்றுவதென்பதும் முடியாது. ஆகவே, ஈமான் ஏற்படுவது முஹப்பது - பிரீதி ஏற்பட்டிருப்ப தின்மீது சம்பந்தமுடையதாக விருப்பதால் மக்களிடையே முஹப்பத் - பிரீதி ஏற்படுவதற் கான வழியைக் காண்பித்து உங்களுக்கிடையே 'ஸலாம்' சொல்லிக்கொள்வதை அதிகமாக்கிக் கொள்ளுங்கள்; அதனல் பலவாருன நேசங்க ளேற்பட்டு பிரீதி அதிகரிக்கும். பிரீதி என்னும் தண்ணீர் ஊற்றி வளர்ப்பது கொண்டு ஈமா னென்னும் விருக்ஷம் உற்பத்தியாகி தக்க முறையில் செழித்தோங்கும். அதன் பயனை சுவனபதி யடைவதற்கான சம்மந்தமேற்பட்டு விடும்யென நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தக்க முறையில் விளக்கிக் காண்பித்திருக்கின் ருர்கள்.

மிகுதமாக தெண்டித்து வணங்குவது சுன்னத் துக்கு மாற்றமாகும்

ஒரு மனிதன் ஒருநாளன்று நபிகள்பெருமா ஞர் (ஸல்.) அவர்கள் சமுகம் வந்து அல்லாஹ் வுடைய ரஸூலே! யான் இரவு பகல் முழுவதி லும் அல்லாஹ்த ஆலாவை வணங்குகிறேன். ஒவ்வொரு நேரத்திலும் தெண்டித்து வணங் குவதிலும் நப்ஸை பழக்குவதிலும் காலம் கழித்து வருகிறேன் எனக் கூறினர். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள், உம்முடைய ஜீவனத் திற்குள்ள வழியாதாகுமென வினவினர்கள். அதற்கு அவர், எனக்கு ஓர் சோதரிருக்கின்ருர். அவர் காலைமுதல் கஷ்டப்பட்டு கூலி வேலை செய்கிருர். அதன்மூலம் எனது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்கிறேன் என அறிவித் தார். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள், 'உமது சோதிரர் உம்மைவிட மேலானவராகும்' என அறிவித்து, யான் தொழுகையையும் நிறை வேற்றுகிறேன், தூங்கவும் செய்கிறேன். நோன் பும் நோற்கின்றேன். நோன்பை விட்டும்விடு கிறேன். பெண்களை விவாகமும் செய்துகோள் கிறேன். எவர் என் நடத்தைக்கு மாற்றஞ் செய் கின்ருரோ அவர் என்னில் நின்றுமுள்ளவரல்ல, என அறிவித்தார்கள்.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலீ (றஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், இஸ்லாம் ஒரு தகுதியான மார்க்கமாக விருப்பதால் அது ஆத்மாபிவிர்த்தியைக் கற்பித்துக் கொடுப்ப துடன் உலக முன்னேற்றத்திற்கும் பொறுப் பேற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, மனிதன் மூலையில் உட்கார்ந்து தன் சுமையை இதரர்மீது போட்டுவிட வேண்டாமென்று அறிவித்து அல்லாஹ்வின் சட்டதிட்டங்களை முன்னல் வைத்துக்கொண்டு அதிக அபிவிருத்தியடையும் படியும் எவன் கைகால்களை வைத்துக்கொண்டு முடம்போல் உட்கார்ந்து தமது சுமையை இத ரர்மீது போட்டு வைத்திருக்கின்ருனே அவன் ரஸூல் (ஸல்.) அவர்களது நடத்தைக்கு மாற் றஞ்செய்தவனுகுமென்றும் கூறியிருக்கிருர்கள்.

அல்லாஹ் தஆலாவை அறிந்துகொள்வதற் கான மார்க்கங்களைத் தேடுவது பெருமானுர் (ஸல்.) அவர்களை துயர்வதில் மிக மிக மேலான தாகும். சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களைப் பார்க்கினும் அல்லாஹ் தஆலாவை அறிந்தவர் கிடையாது. அப்பெருமானுர் (ஸல்.) அவர்களே காலக்ஷேபத்திற்காக வியாபாரஞ் செய்வதைத் தெரிந்துகொண்டும் பெண்டிர்களுடன் கூடி யிருப்பதை அனுஷ்டித்துவந்தும் இருக்கும் போது சன்னியாசம் புகுவதை எவ்வாறு அனு மதிப்பார்கள். எவன் சக்தியிருக்கும்போது கஷ்டமெடுத்து வேலைசெய்யாது தன்னுடைய சுமையை இதரர்மீது போடுகிருனே அவன் தக்கவிதவாக அல்லாஹ் தஆலாவை அறிந்தவ னுகமாட்டான், என ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதி (ரலி.) அவர்கள் கூறியிருக்கிருர்கள்.



இஸ்லாம் உலக மதம்

உலகின்கண் பற்பல மதங்கள் இருந்து வந்தன, இருந்தும் வருகின்றன. அவைகளில் ஆண்டவனால் அருளப் பெற்ற மதம் எது என்று பகுத்தறிய அநேக வழிகளுள. சன்மார்க்கம் மானிட கோடிகளுக்கு பொதுவானதாகவும் ஜாதிவித்தியாசம், நிறவேற்றுமை இவைகளைப் பொருட்படுத்தாமல் எல்லோரையும் ஆதரிக்கத்தக்கதாகவுமிருக்க வேண்டும். சட்டதிட்டங்கள் எளியோர் முதல் வலியவர் ஈராகவுள்ள யாவரும் எளிதில் அனுஷ்டிக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறான அம்ஸம் பொருந்திய மதம் இஸ்லாம் ஒன்றேயாகும். இதனாலேயே மானிடகோடிகள் இதன் பக்கல் ஈசலைப்போல் சாய்ந்துவருகின்றனர். இச்சன்மார்க்கம் உற்பத்தியான அன்று முதல் இன்றுவரை பக்தகோடிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இவ்வாறு சிறப்புற்றுவரும் இஸ்லாத்தின்மீது புழுக்கங்கொண்ட கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இல்லாததும் பொல்லாததுமான அநேக அபவாதங்களை சுமத்தி வந்தனர். ஆனால் காலக்கிரமத்தில் கிறிஸ்தவ உலகமே இஸ்லாத்தின் உன்னதக் கொள்கைகளை நன்குணர்ந்து அதன் மஹாத்மியத்தைத் தெரிந்துகொண்டதால் அநேகர் இஸ்லாத்தின் வட்டத்தில் சேர்ந்துகொண்டனர்.

தற்காலை இந்தியாவில் நிகழ்ந்துவரும் காரியாதிகளை கவனியுங்கள்! தீண்டாதார் எனப்படுவோர் பெயரளவில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களென மதிக்கப்பட்டு வந்தும் அவர்களை ஜாதிஹிந்துக்கள் கோயில் குளங்களில் அனுமதிப்பதில்லை. நாய்களுக்கு நடக்க உரிமையுள்ள ரஸ்தாக்களிலும்கூட இவர்களுக்கு நடக்க உரிமை கிடையாது. இவ்வாறு சிறுமைப்பட்ட ஆதித்திராவிடர்கள், சமத்துவம், சகோதரத்துவம் அளிக்கத்தக்க மதத்தைத் தேடி ஆராய்ச்சி செய்து இஸ்லாம்தான் இதற்கு ஏற்ற மதம் என்னும் முடிவுக்கு வந்து அதில் சேர்ந்து மானிடருக்கு உரித்தான சகல சுதந்தரங்களையும் அனுபவித்து வருகின்றனர்; பரிசுத்த தேவாலயங்களான மஸ்ஜிதுகளில் புகுந்து நேமநிஷ்டை செய்து வருகின்றனர்.

இதுமட்டுமன்று. கல்வியறிவில் தேர்ச்சி பெற்ற ஆங்கிலேயர், ராஜபுத்திரர், ஜாதிஹிந்துக்கள் முதலானவர்கள் தாங்களாகவே இஸ்லாத்தில்சேர்ந்து மற்றவர்களையும் இஸ்லாத்தில் சேரும்படி பிரசாரமும் செய்துவருகின்றனர். மலையாளப் பிரதேசத்தில் வதியும் இலக்ஷக்கணக்கான ஈழுவர்களின் தலைவரான ஜனப் பி. கே. கோபாலன் இஸ்லாத்தைத் தழுவி தங்கள் வகுப்பினருக்கும், மற்றும் 25-லக்ஷம் மக்கட்கும் பிரசாரம் செய்து வருகிறார். இதுபோன்றே தீயவகுப்புத் தலைவர்களிலநேகர் இஸ்லாத்தைத் தழுவியும் இஸ்லாமியப் பிரசாரம் செய்தும் வருகின்றனர்.

ராஜபுத்திர வகுப்பு தலைவர்களில் 82-பேர் இஸ்லாத்தில் சேர்ந்து 25-லக்ஷ ராஜ புத்திரர்களையும் இஸ்லாத்தில் சேர்க்க முயற்சித்து வருகின்றனர்.

காந்திஜியின் மூத்த குமாரரான ஹீராலால் காந்தி தானே ஆராய்ச்சி செய்து பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவினார். அதனைப்பார்த்து ஒரு ஆங்கிலேயரும், ஓர் ஜப்பானியரும் முஸ்லிமாயினர். ஹீராலால் காந்தி அவர்களுக்கு ஷேக் அப்துல்லாஹ் காந்தி என்ற நாமமிட்டு அழைக்கப்பட்டு வருகிறது. அவர் தமது குடும்பத்தினரையும் குறிப்பாய் தமது பிதா காந்திஜீயையும் மற்ற ஹிந்துக்களையும் இஸ்லாத்தில் சேர்க்க முயற்சித்து வருகிறார்.

இவர் இஸ்லாத்தைத் தழுவியதானது இந்தியாவிலும், ஐரோப்பா, ஆப்ரிக்கா, அரேபியா, ஜப்பான் முதலிய தூர தேசங்களிலும் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியுளது. ஆதலின் எல்லோரும் இது விஷயத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர். விஷயம் இவ்வாறிருக்க, ஹிந்துக்களின் பத்திரிகைகளில் சில, அவர் குடியர், வெறியர், உதவாக்கரைப் பிள்ளை என அவரை குறைவுபடுத்தி எழுதிற்று. ஒருசமயம் அவரிடம் சில துற்பழக்கம் இருந்திருப்பினும் அதனை இஸ்லாம் சீர்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லை. என்றாலும் இஸ்லாத்தின்மீது அவர்களுக்குள்ள மனப்புழுக்கம் இவ்வாறு எழுதத்தூண்டிற்று என்பது நிச்சயம்.

இது ஓர் ஆச்சரியமன்று. இச்சென்னையினின்று வெளிவரும் ஓர் காதியானிப் பத்திரிகையும் இதுவிஷயத்தில் தாறுமாறாய் எழுதத் துணிந்து, ஹிந்துப் பத்திரிகைகள் பிரசுரிக்காத அநேக விஷயங்களை அதில் கொணர்ந்து புகுத்தி வெகு விபரீதப்போக்கில் முன்னுக்குப் பின் முரணாகவும் விபரீதத் தலையங்கமிட்டும் பிரசுரித்திருந்தது. அதிலும் காந்திஜீ, ஷேக்அப்துல்லாஹ் காந்தி அவர்கள்மீது இதுபொழுது சுமத்தியுள்ள குற்றங் குறைகளையெல்லாம் அப்பத்திரிகை ஆதரிப்பதுபோன்று அதில்குட்டி மகுடங்களுமிடப்பட்டிருந்தது. அக்குற்றச்சாட்டுகளை அந்த காதியானிப் பத்திரிகை எவ்வளவு தெளிவாகவும் துலக்கமாகவும் பிரசுரித்திருந்ததோ அதைபோன்று எந்த ஹிந்துக்களின் பத்திரிகையிலும் பிரசுரமாகவில்லை. இதனால் ஜனாப் ஷேக் அப்துல்லாஹ் காந்தி இஸ்லாம் மதத்தைத் தழுவியது அப்பத்திரிகைக்குப் பிடிக்காமலிருப்பதால் அதை வெறுக்கிறதென்று யூகிக்கவேண்டியதாக இருக்கிறது. இப்பத்திரிகை முன்னொருசமயம், தாழ்ந்த வகுப்பினர் இஸ்லாத்தில் சேர்ந்துவிடுவதுகொண்டு இஸ்லாத்திற்கு என்ன மகிமை ஏற்பட்டுவிடப்போகிறது என்றும், உலகிலுள்ள அநேகர் இஸ்லாத்தில் வந்துவிடுவது கொண்டு இஸ்லாத்தில் இடமில்லாது நெருக்கமேற்பட்டுவிடும் என்றும், இதரர்கள் இஸ்லாத்தில் சேருவதை ஆதரிக்காது பலவாறாக எழுதிவந்தது.

ஆனால் ஊதியம்பெறும் காங்கிரஸ் ஹிந்துக்களிடம் நல்பேர் வாங்குவான் வேண்டியே, ஷேக் அப்துல்லா காந்தி இஸ்லாத்தைத் தழுவியதையும், இன்னும் தாழ்ந்த வகுப்பு ஹிந்துகள் இஸ்லாம் மதத்தைத் தழுவி வருவதையும் ஏளனம் செய்ய துணிவு கொண்டிருக்கிறதென்பதை நேயர்கள் உணர்வார்களாக.

எவ்விதமும் முயற்சித்து ஷேக் அப்துல்லா காந்தி அவர்களை ஹிந்துமதத்தில் சேர்த்துவிடவேண்டும் என்னும் நோக்கத்துடன் பண்டிட் ஜனார்தனதாஸ் என்பவர் 3-நாள்வரை பம்பாயில் அப்துல்லா காந்தி அவர்களுடன் தர்க்கித்து கடைசியாய் இஸ்லாம்தான் சத்தியசன்மார்க்கம் என்பதை நன்குணர்ந்து முஸ்லிமானார். இவர் முஸ்லிமான விபரம் தெரிந்தவுடன் இவருடைய மேன்பார்வையில் இருந்துவந்த 1200-ஆதிதிராவிடர்களும் உடனே இஸ்லாத்தைத் தழுவினர். ஜனார்தனதாஸ் அவர்கள் ஜாதி ஹிந்துக்கள் மத்தியில் இஸ்லாமியப் பிரசாரம் செய்துவருகின்றார்.

இதுபோன்றே ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஜப்பான், சைன முதலிய நாடுகளிலும் இஸ்லாத்தின் ஜோதி அதிகரித்து வருகிறது. ஈதெல்லாம் முஸ்லிம்கள் செய்துவரும் தீவிரப் பிரசாரத்தின் பயனு? அன்று அன்று. முஸ்லிம்கள் "இஷா அதே இஸ்லாம்" இஸ்லாமியப் பிரசாரவேலையை எந்த அளவுக்குச் செய்யவேண்டுமோ அதில் கிஞ்சித்தும் கவனம்செலுத்தாமல் வாளாவிருந்து வருகின்றனர். பரிசுத்த இஸ்லாத்தின்பால் பொதிந்துகிடக்கும் தெய்வீக சக்தியானது இம்மாதிரி பிரதிபலித்து வருகிறது.

புத்திக்கும், யுக்திக்கும் பொருத்தமான இஸ்லாத்தின் சட்ட திட்டங்களும் அனுஷ்டா பூர்வமான அதின் நடவடிக்கைகளும் உலகமக்களேயே தன்பக்கல் ஈர்த்துவருகிறது. எனவே, உலக முழுவதிலுமுள்ளவர்கள் ஒரே மதத்தை அனுஷ்டிப்பதற்கும் இஸ்லாம்தான் மிக மிகப்பொருத்தமான மதமாகும். ஆகவே, மக்கள் இந்த உண்மையை நன்காலோசித்து சிந்தனைசெய்து மானிட முக்திக்கு ஏற்ற சன்மார்க்கம் யாதென்பதைக் கண்டுபிடித்து அதனை அடைய முயற்சிக்க வேண்டியதுஒவ்வொருவர்மீது மேற்பட்ட கடமையாகுமென்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

வஹ்தத்துல் உஜூத். அல்லது உள்ளமைப் பொருள் ஒன்றே

(சென்ற மார்ச்சுமீ 195-ம் பக்கத் தொடர்)

கீழே அடித்து விழுந்து மூர்ச்சையாகிக் கிடக்கும், கைஸு வென்னும் மஜ்னூன் வெகு நேரம் சென்று மயக்கம் தெளிந்தெழுந்த ஒரு சந்தர்ப்பத்தில், சுய உணர்வென்னும் சூரியக் கிரணங்கள் திடும்பிரவேசமாய், அவரின் ஹிருதயத்தைக் கவர்ந்தன. பயித்தியகார 'கைஸு', விற்கு தமது பழைய நிலைமைகள் யாவும், ஞாபகத்திற்கு வந்து குவிந்தன. யாம் யார்? எமது லக்ஷியம் யாது? எமது காதலி எங்கிருக்கின்றுள்? யாம் எங்கு வந்து கிடக்கின்றேம்? அட அடா இது வென்ன துன்பம்! இக் கானகத்தின் நடுவே நாம் எதற்காக வந்திருக்க வேண்டும்? இங்கு எவ்வாறு வந்தோம்? இது யார் செய்த கொடுமை? என்றெல்லாம் நொடிப் பொழுதிற்குள் நினைத்து சஞ்சலித்துக் கொண்டிருக்கிருர் 'கைஸு' வென்னும் பயித்தியக்காரர்.

ஞானேதயம் பெற்ற 'கைஸ்' சிந்தித்துக் கொண்டிருக்கும், அவ்வொரு நொடிப்பொழுதிலாவது, அவரைக் கவர்ந்து நின்ற காதற் கருமேகம் கலைந்துபோனதென்று கருதுகின்றீர்கள்? இல்லை, இல்லை. அது, கட்கட, கட கடவென்று இடித்து அவரின் அடிவயிற்றைத் தாக்கிக்கொண்டும், மின்மினு, மினுமினுவென்று மின்னி அவரின், மனதைக் கீரிப் பிளந்துகொண்டு மிருந்தது. மேலும் 'கைஸு', வின் இரத்தக் கடலான தாமரைக் காயிலே குவிந்து காலூன்றி அக்கடல் நீரை நன்ருய்க் குடித்தெழுந்த அக்காதற் காளமேகம், எப்பொழுதும் பொழிந்து கொட்டிக்கொண்டு தானிருக்கும். இல்லையென்ருல் அவரின் இரு விழிகளின் கீழே தோன்றியோடும் ஆறுகள் அவ்வளவு பெருக்கைக் கொண்டிருக்க முடியாதல்லவா!

நாட்டினிலுரையும் நாயகி 'லைலா'வை நேசித்த நாம், காட்டில் இனிக்கிடப்பது சரியன்று வென்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டார் மஜ்னூன். உதறி எழுந்தார்; ஊரைநோக்கி அதிவேகமாய் செல்லவாரம்பித்தார். அப்பப்பா! கைஸுவின் கனவேகத்தை யாரால் கணிக்க முடியும்? இமைப் பொழுதிற்

குள் இமயகிரியை தாண்டிவிடுவார் போலிருக்கிறது வேகம். இவ்வாறு வேகமாய் அவர் இப்பால் செல்ல செல்ல, சுய உணர்வின் சுடர் அவரை விட்டகன்று அப்பால் மறைந்து துரிதமாய்ப் போய்க்கொண்டிருந்தது என்றுலும் அச்சுடர் முழுவதும் மங்கிமறைந்து போய்விடவில்லை. எனவே, அக் 'கைஸை' வென்னும் பெரியாரை இப்பொழுது காதற் கடலிலே முங்கி ஆழ்ந்துபோனவரென்றே, அல்லது உணர்வென்னும் மிதப்பின்மீது அமர்ந்து அக்கடலில் மிதப்பவரென்றே, சொல்லுவதற்கில்லை. இவ்விரு நிலைமைகளுக் கிடையே 'மஜ்னூன்' தள்ளாடி தத்தளித்துக்கொண்டு வரும் அத்தருணம், மேய்ந்து கொண்டிருக்கும் சில மரைகள், அவர் கண்ணுக்கு தென்பட்டன. அட, அடா, அப்பொழுது அவர் பட்ட பாட்டை என் கேட்கின்றீர்கள்! அவரால் நிற்கவும் முடியவில்லை. நடந்து செல்லவும் மனமில்லை. அங்கு மேய்ந்து கொண்டிருப்பவை, ஒரு நொடியிலே மரைகளாய் அவர் கண்ணிர்க்குத் தெரிகின்றன? மறுநொடியிற் மரைகள் மறைந்து பூங்கொடி 'லைலா' வின் பிரசன்னமாய் தோற்றுகிறது. 'லைலா,வை காணும் போது மரைகள், மறைந்து மடிகின்றன. மரைகள் தென்படும் போழ்து லைலா மறைகின்றுள்.

கபடமற்ற 'கைஸ்' தமது காதற் கடலின் ஆழத்தில் மூழ்கும்பொழுது அவரின் அகக் கண், நெற்றிக் கண்ணை மிகைத்து விடுகிறது. மூழ்கிப்போன அவர் மேலே வந்து உணர் வென்னும் தெப்பத்தைப்பற்றிப் பிடிக்கும் போது, அவரின் வெற்றிக்கண் நிலவி, அகக் கண், அடக்கப் பெருகிறது. இதனுல்தான் மஜ்னூன் என்பாருக்கு அங்கு மேய்ந்து கொண்டிருப்பவை, ஒரு வேளையில் 'லைலா' வாகவும் மறுவேளை, மரையாகவும் தென்படலாயின ஏனென்றுல் அவரின் அகத்தில் 'லைலா' விற்கன்றி வேறு யாருக்கும் இடமில்லை; அவரின் மனது எப்பொழுதும் அவளையே நினைத்து சிந்தித்துக் கொண்டிருப்பதாகுமென்பதை முன்னமேயே நீங்கள் அறிந்து வந்திருக்கிறீர்கள். நேரிலுள்ள பொருள்களை நமக்கெடுத்து காட்டுவதுதான் நெற்றிக் கண்களின் நிரந்தர வேலை என்பதை எல்லோரும் அறிந்திருக்கின்றனர். 'கைஸை'வின் காதற் கதையிலே கவனிக்கவேண்டிய பகுதிகள் அனேகமுள்ளன வென்றுலும், இப்பொழுது நமக்கு மிக மிக வேண்டியதும் நாம் எடுத்துக்கொண்ட 'வஹ்தத்துல்உஜூத்' என்பதை நன்கு விளக்கி காட்டக் கூடியதுமான முக்கிய பாகம், இப் பகுதியேயாம். எனவே, இங்கேயாம் குறித்த விஷயங்கள் யாவையும் பன்முறை படித்தேனும் நன்றுய் நினைவிற் பதியவைத்துக் கொண்டீர்களென்றுல் மேலே செல்லுங்கள். கதைக்கு காலுண்டா வென்று சிலர் கழறுவதுண்டு. ஆனுல் இவர்கள் அவர் கூறிய கவிகளை கேட்டதில்லை போலும். அக்கவிகள், இவரின் கதையை நன்கு விளக்கி காட்டுகின்றன. வேண்டுமானுல் இன்னும் கொஞ்சம் மேலே போய் பாருங்கள்.

மாறி மாறித்தோற்றும் 'லைலா' வின் பிரசன்னத்திற்கும் மரைகள் தாமென்னும் எண்ணத்திற்கும் மத்தியில் மாட்டிக்கொண்டு விழிக்கின்றுர் கைஸ். உண்மையிலேயே அங்கவர் தடுமாற்றங் கொண்டுவிட்டார். காலடி எடுத்து வைக்கவும்கூட நினைவில்லாமற் நின்று கலங்கினுர். பிறகு நன்றுய் கண்ணைக்கொண்டு ஊன்றி கவனித்துப் பார்த்தார். மேய்ந்துகொண்டிருப்பவை மரைகள்தாம், என்னும் முடிவிற்கு வந்துவிட்டார். இனி அங்கு நிற்பாரா 'கைஸ்'. 'லைலா' அல்லவா அவரின் லட்சியம். நாட்டை நோக்கி நடக்க வாரம்பித்தார். கூட்டமாய் மேய்ந்துகொண்டிருந்த மரைகள் கருத்து, அகன்ற தங்கள் விழிகளைக்கொண்டு தம்மை கூர்ந்து பார்த்து கலைவதைக்கண்ட கைஸை வென்னும் மஜ்னூன், உண்மையாகவே ஏமார்ந்து போய்விட்டார். அவர் என்ன செய்வார் பாவம். ஒருபுறம் அங்கு 'லைலா' அவரின் மனதை கொள்ளைகொண்டு விட்டாள்; மறுபுறம் இங்கு மரைகள், தங்கள் நீண்ட கழுத்தோடுங் கூடிய உயர்ந்த சிரங்களையும் குஞ்சம்போன்ற குறுகிய வால்களையும் ஆட்டி நடந்து, மெல்லிய கால்களால் கெல்லிக் கெல்லி கலைந்தோடும் காட்சி கண்ணை பறிக்கின்றது. களங்கமற்ற இக்காதலருக்கு தோன்றிய சந்தேகத்தால் திகைத்துப் போனுர். இச்சந்தேகத் திகைப்பின் விளைவால் அவர் அம்மரைகளை நோக்கி வினவிய ஒரு அரபிக் கவியின் சாரம் இதுவே:—ஒகே! கானின் மரைகாள்! அல்லாஹ்வின்மீது ஆணையாக, நீங்கள் எமக்கு உண்மையை உரைத்துவிட வேண்டும். என்ன! எமது (காதலியாம்) லைலாவேன்னும் நங்கை உங்கள் இனத்தில் உதித்தவளா? அல்லது லைலா, மனிதவர்க்கத்தை சார்ந்தவளா? மஜ்னூன் இப்பொழுது, 'லைலா' வென்பாள் மரைகளை சார்ந்தவள்தானு? அல்லது மனித இனத்

தில் பிறந்தவளா, என்னும் ஒருவகை சந்தேக மயக்கத்தில் இருக்கின்ருர் என்ருலும், மரை யினம் வேறு, மனிதவர்க்கம் வேறு என்றுண ரும் தெளிவோடு திகழ்கிருர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சரி, வாருங்கள் இவரின் கதையில் இன்னும் சற்று மேலே செல்லு வோம்.

இவ்வாற்ருன அனேகமனேக மலைகள் போன்ற கொடிய நிலைமைகளையும் துன்பங்களை யும் அதிவேகமாய்க் கடந்து சென்றுவந்த மஜ் னூன், மதங்கொண்ட யானைபோல் ஊரினுட் புகுந்தார். வெகுகாலமாய் காணுமற்போயிருந்த 'கைஸ்' அன்று கதர் ஆடை கட்டி இருந்தா ரென்று கருதிவிடாதீர்கள். அவரின் மெல்லிய மேனியிற் படிந்து மேடிட்டிருக்கும் புழுதியின் மேல் முளைத்தெழும்பிய புற்பூண்டுகள் தாம் அவரின் ஆடை. கிடங்கான அவரின் கண் களை கிணறென மதிக்கலாம்; இவரின் இமை களே, ஏத்தங்கள். அவைகளால் இறைத் தோட்டப்பெரும் கண்ணீர் தாரைகளென்னும் ஓடைகள் வழியாகச் சென்று, அன்னரின் மேனியிலுள்ள பூண்டுகளுக்குப் பாய்ந்து கொண்டிருப்பதாய்ப் பகரலாம் என்ருல், அவ ரைக் காண்பதே ஒரு காட்சியாயிருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ. அவர் தமது ஊரி லுள்ள பிரஜைகள் யாவருக்குமே, பொதுவாய் ஒரு அபூர்வ காட்சியளித்தார். எனவே அவ ரின் ஊர் பிரவேசப் பவனியிலே ஏகமான திரள் காணப்பட்டது. அய்யோ! பாபம், பரி தாபம். பாபம் பாபமென்பர் பலர், 'கைஸு' வின் கோர காட்சியைக் கண்டு கண்கலங்குவர் சிலர், காதல் என்ருல் இவரின் காதலே காத லென்று போற்றுவர் ஒரு சிலர், 'கைஸு' வைப்போல் நாம் கண்டதுமில்லை, கேட்டது மில்லை இதுவென்ன காமாட்டிக்காதல் என்று தூற்றுவர் வேறு சிலர்.

பல்வேறு பாமர மக்களும் பக்தகோடிகளும் புடைசூழ சென்றுகொண்டிருக்கும் 'கைஸ்' கடைத்தெருவில் கண்ட காட்சி யாது? கருநிற முடைத்தாய நாய் ஒன்று கூட்டத்தின் நடுவே சிக்குண்டு, காள், காள் என்று கதறுவதைத் தான், அங்கவர் கண்ணுற்ருர். கலங்கிய கண் களையுடைய 'கைஸ்' கருநிறமுடைய அந் நாயை கட்டிப் பிடித்தணைத்தார். முத்தி முகர்ந் தார். இக்கண்ருவி காட்சியை காணும் எவர் தாம் வியப்படையாதிருப்பர். எனவே, அக்குழு வினர், குலுங்க குலுங்கச் சிரித்தனர். ஆனல், மதிமயங்கிய மஜ்னூன் எனப்படுவார் இப்பொ ழுது முன்போல் தமது உணர்ச்சியின் உச்ச ஸ்தானத்தை விளக்காமல் சும்மா இருந்து விட்டாரென்ரு நினைக்கின்றீர்கள்; இல்லை, இல்லை. அன்னளின் (லைலாவின்) அன்பிற் காக கருநிற முடைய ஒவ்வொரு பொருளையும் நான் நேசிக்கின்றேன். எனவே, அன்னளின் அன்பின் விளைவினலேயே, கருத்த நாய்களைக் கூட நேசிக்கவுற்றேன். என்னும் ஒரு கவி யைக்கொண்டு, சிறித்துக்கொண்டிருந்த அத் தனை பேர்கள் கண்களிலிருந்தும் இரத்தக் கண் ணீர் சொட்டுமாறு செய்துவிட்டார், அப்பயித் தியகார 'கைஸ்'. என்னே! அப்பயித்தியத் தின் கூறு இருந்தவாறு!!

நேயர்காள்! நமது கதாநாயகர், 'கைஸு', வின் கவிகள் இவ்வளவுதான் என்று நினைத்து விடாதீர்கள். இன்னும் அனேக கவிகள் உண்டு. உண்மையில் அவைகள் ஒவ்வொன்றும் இவ் வாற்ருன ஒப்பற்ற கற்பனைகளைக் காட்டக் கூடியதாகவே அமைந்திருக்கின்றன. அக்கவிகள் யாவையும் இங்கு பொறிப்பது அசாத்தியமாகு மென்பதைக் கருதி விடுத்தோம்.

இதுவரை நாம் எழுதிவந்த கதையில் நீங் கள் நன்கு கவனித்தறிய வேண்டியது யாதென் ருல், 'கைஸ்', என்னும் காதலர் தமது கரு மமே கண்ணுயினர், என்பதேயாம். இதனல் அவர் லாப நஷ்டத்தை மறந்தார்; ஊன் உரக்கமென்ன, உடைகளையும்கூட இழந்தார். உண்மைக்கும் உலகப் போக்கிற்கும் மாருய் நடக்கலுற்ருர்; நங்கை 'லைலா' விற்காக ஒரு வேளையில் நாயை கட்டிப் பிடித்திழுத்தார்; மறு வேளை மரைகளை 'லைலா'வென்று மதித்தார். மதியற்ற மஜ்னூன் என்றும் இன்று வரை பட்டம் பெற்ருர்; என்ருலும் "மஜ்னூனெ பனீ ஆமிர்" என்னும் 'கைஸ்' தமது லட்சி யத்தில் லயித்துப் போனதினலேயே இத் துணை எதார்த்த விரோதங்களுக்கும், ஏளனச் சின்னங்களுக்கும் இலக்காயினர் என்பதைக் கருதிப் பார்க்கும்பொழுது கல்மனமும் கரைந்துவிடுகிறது. அவரது உணர்ச்சி அடைந் திருந்த உச்சஸ்தானத்தை அண்ணுர்ந்து பார்ப் பவர்களினது சிரம், அடித்து விழுந்து அங்கு பணியக் கூடியதாயிருப்பதில் யாருக்கு, என்ன சந்தேகம்! எனவே மஜ்னூன் எல்லாராலும் மன்னிப்பளிக்கப் பெறுகிருர், என்பதென்ன அல்லாஹ்வின் நல்லருளிர்க்கும் ஆளானுர் என் பதை இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்குமுந்

தினவரும், ஹிஜ்ரி முன்னூற்றைம்பத்திமூன்ரும் ஆண்டிலே 'வபாத்தாகி' (இறந்து) அடக்கம் பெற்றவரும், ஆழ்ந்த அறிவையும், கடந்த கல்வியையும் தாங்கியவரும், அவ்லியாக்களின் சங்கத்திலே அங்கம் பெற்ற பெரியாருமான ஹஸ்ரத் "அபுல்ஹுசைன் பந்தாரெ" 'ஷீருஸீ' (ரஹ்.) அவர்கள் கூறிச் சென்றிருக்கின்றனர், என்ருல் விண்ணின்கீழ் மண்ணுள்ளவரை 'கைஸு' வென்னும் 'மஜ்னூன்' (ரஹ்.) அவர்களின் மகிமைக்குரிய கீர்த்திப் பிரதாபம் மறைந்துபோவதாயில்லை. இது ஒரு பக்கல் இருக்கட்டும்,

மஜ்னூன் 'ரஹ்மதுல்லாஹி அலைஹி' அவர்கள் 'இஷ்கு' (காதல்) என்பதன் கடைசி எல்லையை அடைந்திருந்தமையால், அன்னூரின் உணர்ச்சிக்கும், அவருக்கும் பேரும் கீர்த்தியும் கிடைத்துவிட்டது உண்மை. அப் பெரியாரின் உணர்ச்சி, நமது உள்ளத்தையும் கொள்ளை கொள்ளக் கூடியதாயிருக்கின்றது என்ருலும், அவ் வுணர்ச்சியின் எழுச்சியால், அன்னூரில் ஒன்றின்பின் ஒன்ருய்த் தோன்றி உலவிக் கொண்டிருந்த-உண்மையற்ற-ஊசலாட்டங்களையும், எதார்த்த விநோத நிலைமைகளையும் எவராலும் மறைத்துவிட முடியாது. இன்னிலைமையில், அவரின் நினைவு, நிலைமை யாவும் எதார்த்தமான உண்மைகள்தாம், என்று சிலர் இயம்புவார்களெனில் அவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள். அவ்வறிவிலிகளைப்பற்றி யாமொன்றும் அறைய விரும்பிலேம். நீங்களே ஒரு முடிவிற்கு வந்து சேருங்கள். அது தொலையட்டும் துன்பம். இனி நாம் இரங்கிய பாட்டையிலே நடந்துசெல்லுவோம் வாருங்கள்!

(தொடரும்.)

நாயகம் (ஸல்.) அவர்களது திருமணங்கள்

இஸ்லாத்தின்பால் விரோதிகள் செய்யும் பல்வேறு ஆக்ஷேபணைகளில் நாயகம் (ஸல்.) அவர்கள் பலதார மணம் செய்ததும் ஒன்ருகும். "நாயகம் (ஸல்.) அவர்கள் பலதாரங்களை மணந்ததால் இஸ்லாம் மதம் பலதார மணத்தை ஆதரிக்கிறது" என்று பொதுவாக அவர்கள் ஆக்ஷேபணை செய்வதுடன் மட்டும் நில்லாமல் நாயகம் (ஸல்.) அவர்களது மா, தூய வாழ்க்கையில் மாசு ஏற்பட வேண்டும் என்றும் அவ்விரோதிகள் விரும்புகின்றனர். ஆதலின், நாயகம் (ஸல்.) அவர்கள் பலதார மணம் புரிந்துகொண்ட விஷயங்களைப்பற்றி இங்கு சிறிது விவரிப்போம்.

உம்முல்முமினீன் ஹஜ்றத் கதீஜத்துத் தாஹிரா (றலி.) அவர்கள்

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் 25 வயது வரை மிகவும் பரிசுத்தமான ஏகாந்த வாழ்க்கையை நடத்திவிட்டு அப்பால் தங்களைப்பார்க்கினும் 15 வயது மூத்தவரும், இரண்டு கணவர்களுக்கு ஒருவருக்குப் பின் ஒருவராக வாழ்க்கைப்பட்டு மக்களைப் பெற்றவருமான ஹஜ்ரத் கதீஜா தாஹிரா (றலி.) அவர்களை விவாகம் செய்துகொண்டார்கள். இவ்விவாகம் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு முதலாவது விவாகமாக இருப்பதுமல்லாமல், பெண் வீட்டாரே முதலாவதாக இவ்விவாகத்திற்குத் தூது அனுப்பி நாயகம் (ஸல்.) அவர்களை வலியக் கேட்டுக் கொண்டதுமாகும்.

உம்முல்முமினீன் ஹஜ்றத் ஸௌதா பின்து ஜம்ஆ (றலி.) அவர்கள்

நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களுடைய முதல் மனைவியவர்களுடன் 25 வருஷ காலம் ஏகபத்தினி விரதத்துடன் இல்லறம் எனும் நல்லறம் நடத்தியபின் முதல் மனைவியார் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்கள். பின்னர் குழந்தைகளையும் வீட்டுக் காரியங்களையும் கவனித்துக்கொள்ளத்தக்க துணைவியின் அவசியமிருந்ததால் ஹஜ்றத் கௌலாபின்து ஹக்கீம் (றலி.) என்ற மாதரசியின் சிபார்சின்பேரிலும் முயற்சியின்பேரிலும் ஹஜ்றத் ஸௌதா (றலி.) அவர்களை விவாகம் செய்துகொண்டார்கள். இவ்வம்மையார் விதவையாக இருந்தார். இவர்

பூர்வீக முஸ்லிம்களில் ஒருவர். இவ்வம்மையாரும் நாயகம் (ஸல்.) அவர்களை மணந்து கொள்ளும்போது அதிக வயதடைந்தவராக இருந்தார்.

உம்முல்மூமினீன் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி.) அவர்கள்

நாயகம் (ஸல்.) அவர்கள் மூன்றுவதாக ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி.) அவர்களை மணந்தார்கள். இவரது மணத்தைப்பற்றி இறைவன் முற்கூட்டியே நாயகம் (ஸல்.) அவர்களுக்கு நற்செய்தியனுப்பி இருந்தான். 'ஜுபைறுப்னு முத்இம்' என்பவரின் புதல்வருக்கு ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி.) அவர்களை மணம் செய்விப்பதாக நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனால், இவரை மணந்துகொள்வதால் தமது வீட்டில் இஸ்லாம் புகுந்துவிடும் என்றஞ்சி இம்மணத்தை வேண்டாம் என்று மறுத்துவிட்டனர். என்றாலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி.) அவர்களை மூன்றுவதாக விவாகம் செய்து கொண்டார்கள். இவ்விவாகம் திருமக்காவில் நடைபெற்றது. ஆனாலும், மதீனாவிற்கு வந்த பிறகுதான் குடும்ப வாழ்க்கை நடத்தப்பட்டது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கைத் துணை நல்லார்களில் இவர் ஒருவர்தான் கன்னி யழியாத ஸ்திரீ.

உம்முல்மூமினீன் ஹஜ்றத் ஹப்ஸா (றலி.) அவர்கள்

இவ்வம்மையார் இரண்டாவது கலீபா ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களது புதல்வியாவார். மக்கத்துக் குறைஷியருக்கும் முஸ்லிம்களுக்கும் பத்று என்ற ஸ்தலத்தில் நிகழ்ந்த மார்க்க யுத்தத்தில் இவரது கணவர் முஸ்லிம்கள் சார்பாக யுத்தம் செய்து ஷஹீதாகி விட்டார். தமது புதல்வி விதவையாக இருப்பதைப்பற்றி ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் வருத்தமடைந்தார்களாதலின், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களது தியாகத்தையும் உண்மையையும் பாராட்டுவதற்கறிகுறியாக அவ்வம்மையாரை மணந்துகொண்டார்கள்.

உம்முல்மூமினீன் ஹஜ்றத் ஜைனப் (றலி.) அவர்கள்

இவ்வம்மையாரின் கணவர் உஹதுச் சண்டையில் முஸ்லிம்கள் சார்பாக இஸ்லாத்தைக் காக்கும்பொருட்டு யுத்தம் புரிந்து ஷஹீதாகி விட்டார். ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவரை மணந்து கொண்டார்கள். ஆனாலும், இத்திருமணத்திற்குப் பின் இவ்வம்மையார் சில மாதங்கள்தாம் ஜீவித்திருந்தார். இவர் ஏழைகள்பால் இரக்கமுற்றவராதலால் இவருக்கு "உம்முல் மஸாக்கீன்" என்று சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

உம்முல்மூமினீன் ஹஜ்றத் உம்முஸல்மா (றலி.) அவர்கள்

இவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது பால்குடி சகோதரரான அப்துல்லாஹ் (றலி.) அவர்களுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தார். இவர் உஹதுச் சண்டையில் காயமடைந்து பின்னர் வபாத்தாகி விட்டதால், இவ்வம்மையார் விதவையானார். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவரை மணந்துகொண்டார்கள். இவ்வம்மையார் தமது கணவர் ஹஜ்றத் அப்துல்லாஹ் (றலி.) அவர்களுடன் அபிசீனியாவுக்கும், மதீனா முனவ்வராவுக்கும் ஹிஜ்றத்துச் செய்தவர்.

உம்முல்மூமினீன் ஹஜ்றத் ஜைனப் பின்துஜஹஷ் (றலி.) அவர்கள்

இவ்வம்மையார் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது பூப்பி (அத்தை)யின் புதல்வியாவர். நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது குடும்பத்தில் பிறந்த தங்கள் மைத்துனியான இவ்வம்மையாரை தங்களிடமிருந்து விடுதலையடைந்தவரும், தமது புதல்வர் என்று பிறரால் அழைக்கப்பட்டவருமான ஹஜ்றத் ஜைத் (றலி.) அவர்களுக்கு விவாகம் செய்வித்தார்கள். பிறகு, இவ்விருவருக்கு மிடையில் ஒற்றுமை ஏற்படாததால் விவாக விலக்குச் செய்யப்பட்டது. பிறகு அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வம்மையாரை மணந்துகொண்டார்கள்.

உம்முல்மூமினீன் ஹஜ்றத் ஜுவைரிய்யா (றலி.) அவர்கள்

இவ்வம்மையார் பனீமுஸ்தலக் என்னும் கோத்திரத்துத் தலைவரின் புதல்வியாவர். 'மிர்ஸீஉ' என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தில் இவரது கணவர் கொல்லப்பட்டதும் இவர் கைதியானார். பிறகு, இவ்வம்மையார் காஸித்துப்னு கைஸ் (றலி.) என்பவருடைய பாகத்தில் கொடுக்கப்பட்டார். இப்பெரியார்

9 ('ஔக்கியா' தங்கம் கொடுத்தால் விடுதலை செய்வதாக வாக்களித்ததன்பேரில் இவ்வம்மையார் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் வந்து விஷயத்தை அறிவித்துப் பணஉதவி தேடினார். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் அவருக்குப் பணஉதவி செய்து விடுதலை செய்ததுடன் அவ்வம்மையாரை திருமணமும் செய்து கொண்டார்கள்.

உம்முல்முமினீன் ஹஜ்றத் உம்முஹபீபா (றலி.) அவர்கள்

இவ்வம்மையார், அபூஜஹ்லுக்குப் பிறகு குறைஷிக் காபிர்களுக்குத் தலைமைவகித்து நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை எதிர்த்துப் பல முறை யுத்தம்செய்த அபூஸுப்யானுடைய புதல்வி. இவரது தந்தை இஸ்லாத்திற்குப் பெரும் விரோதியாக இருந்தும் இவர் ஆரம்பக் காலத்திலேயே இஸ்லாத்தைத் தழுவி அபிசினியா தேசத்திற்குத் தமது கணவருடன் ஹிஜ்றத்துச் செய்தார். இவரது கணவர் அங்கு சென்றபின் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிப் பிரிந்துபோய் விட்டதால் இவ்வம்மையார் மட்டிலும் இஸ்லாத்தில் உறுதியாக இருந்தார். இச்செய்தி நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் தெரிய வந்தவுடன் அத்தேசத்து அரசரான நஜ்ஜாஷியைத் தமது பிரதிநிதியாக நியமித்து நாயகம் (ஸல்.) அவர்கள் இவரை மணந்து கொண்டார்கள். ஆகவே, ஹிஜ்ரீ 7-வது வருஷத்தில் இவ்வம்மையார் அபிசினியாவிலிருந்து மதீனமாநகருக்கு வந்தார்.

உம்முல்முமினீன் ஹஜ்றத் மைமூனா (றலி.) அவர்கள்

இவ்வம்மையார் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சிறிய தந்தையான ஹஜ்றத் அப்பாஸ் (றலி.) அவர்களது வாழ்க்கைத் துணைவியின் சகோதரியாவார். இவர் இதற்குமுன் மஸ்ஊதுப்னுஅம்று என்பவருக்கு வாழ்க்கைப்பட்டுவிவாக விலக்குச் செய்யப்பட்டவர். பிறகு 'உமைறுத் தக்பி' என்பவரை மணந்து விதவையானவர். ஹஜ்றத் அப்பாஸ் (றலி.) அவர்களது தூண்டுதலின்பேரில் நாயகம் ஸல்.) அவர்கள் இவ்வம்மையை விவாகம் செய்து கொண்டார்கள்.

உம்முல்முமினீன் ஹஜ்றத் ஸபிய்யா (றலி.) அவர்கள்

இவ்வம்மையார் ஹஜ்றத் ஹாரூன் அலைஹிவஸ்ஸலாமவர்களது சந்ததியில் பிறந்தவர். இவரது தந்தை பனூநளீர் என்ற யூதக் கூட்டத்தாரின் தலைவராவர். இவரது மாதா பனூகுறைலா என்ற யூதக் கூட்டத்துத் தலைவரின் புதல்வி. கைபரில் நடந்த சண்டையில் இவரது கணவரும், சகோதரரும், தந்தையும் இறந்ததுடன் இவரும் கைதியாக வந்தார். பின்னர் நாயகம் (ஸல்.) அவர்கள் இவரை மணந்து கொண்டார்கள்.

இத் திருமணங்களால் ஏற்பட்ட நன்மைகள்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் 25-வது வயதின் வாலிபப் பருவத்தில் தங்களைப் பார்க்கினும் 15 வருஷத்திற்கு மூத்தவரும் விதவையும், இதர கணவர்களுக்கு மக்களைப் பெற்றவருமான ஒருவரை மணந்து 25 வருஷ காலம் ஏகபத்தினி விரதத்தை அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள். அதற்கப்புறமும் ஒரு விதவையை மணந்து 5 வருஷ காலம் வரை ஏகபத்தினி விரதத்திலேயே இருந்திருக்கிறார்கள்.

இதற்குப் பிறகு அரபிக் கோத்திரங்கள் பலவற்றுடனும் நாயகம் (ஸல்.) அவர்கள் யுத்தம் செய்யவேண்டியதிருந்தது. குறைஷியர்கள் யுத்தம் செய்யத் தொடங்கியது மட்டுமில்லாமல் இதர அறபிக் கோத்திரங்களையும் தூண்டிவிட்டனர். இவர்களைத் தவிர யூதர்களும்கூட முஸ்லிம்களை வேரறுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தனர். ஆதலின், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இக்கோத்திரங்களின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கான திட்டங்களைச் செய்யவேண்டியதிருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மதீனாவிற்கு வந்தபிறகு செய்த விவாகங்களில் ஹஜ்றத் ஜைனப் உம்முல்மஸாக்கீன் (றலி.), உம்முஸல்மா (றலி.) ஆகிய இவரும் இஸ்லாத்திற்காக உண்மையாய் உழைத்துத் தங்கள் உயிர்களை மார்க்க யுத்தத்தில் தியாகம் செய்த ஸஹாபிகளின் விதவைகளாவார்கள். தவிரவும் இம்மாதரசிகளும் உண்மைத் தியாகிகளாகவும், இஸ்லாத்திற்கு அருந் தொண்டாற்றியவர்களாகவுமிருந்தார்கள். ஹஜ்றத் உம்முஸல்மா (றலி.) அவர்கள் நம் பிராட்டிமார்களில் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி.) அவர்களுக்கு அடுத்தபடியாக மார்க்க விஷயங்களையும் நுட்பங்களையும் அதிகம் அறிந்தவர்களாக இருந்தார்கள். ஆதலின், அவர்கள்பால் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்து, ஆதரிக்

கும்பொருட்டு அவர்களை மணந்துகொண்டார்கள்.

உம்முல்மூமினீன் ஹஜ்ரத் ஹப்ஸா (றலி.) அவர்களது கணவரும் பத்றுச் சண்டையில் இஸ்லாத்திற்காகத் தமது உயிரைத் தியாகம் செய்தவர். ஹஜ்ரத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் இஸ்லாத்திற்காக எத்துணை தியாகங்களைச் செய்தார்கள் என்பது உலகறிந்த விஷயம். ஆதலால், ஹஜ்ரத் உமர் (றலி.) அவர்களது புதல்விக்கு ஏற்பட்ட இத்துக்கத்தில் அனுதாபம் காட்டி அவர்களுக்கு ஆறுதலளிப்பதற்காகவும், அக்குடும்பத்தைத் தங்களது குடும்பத்துடன் நெருங்கிய பந்தப்படுத்துவதற்காகவும் நாயகம் (ஸல்.) அவர்கள் அவ்வம்மையாரை விவாகம் செய்துகொண்டார்கள்.

ஹஜ்ரத் உம்மு ஹபீபா (றலி), மைமூனு (றலி.) ஆகிய இருவருடைய திருமணங்கள் அறபிய சமூகத்திலுள்ள யுத்தங்களை நிறுத்தி அவர்களை இஸ்லாத்திற் சேர்ப்பதற்குப் பேராதரவாக இருந்தன. ஹஜ்ரத் உம்முஹபீபா (றலி.) அவர்கள் அபூஸுப்யானின் புதல்வியாவார். இவர் அபூஜஹ்லுக்குப்பின் குறைஷியரின் தலைவராக இருந்து பலமுறை யுத்தம் புரிந்தவர். ஆதலின், இம்மாதை விவாகம்செய்து சம்மந்தப்படுத்திக்கொள்வதன்மூலம் இந்த யுத்தங்களை நிறுத்தவேண்டும் என்ற நோக்கத்தின் பேரில் அபிசீனியாவில் அவ்வம்மையார் இருக்கும்போதே மிகவும் அவசரமாக திருமணம் செய்துகொண்டார்கள். அன்றியும் இவ்விருவரும் நாயகம் (ஸல்.) அவர்களது ஆதரவுக்கும் உதவிக்கும் தகுதியானவர்களாகவும் இருந்தனர்.

உம்முல்மூமினீன் ஹஜ்ரத் ஜுவைரிய்யா (றலி.), ஹஜ்ரத் ஸபிய்யா (றலி.) ஆகிய இருவரும் நாயகம் (ஸல்.) அவர்களது பகைவர்களின் தலைவர்களது புதல்விகளாவார்கள். பகைவர்கள் தோல்வியுற்றபின் அவர்களைக் கேவலப்படுத்துவதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் விரும்பமாட்டார்களாதலின் அவர்களுக்குரிய கௌரவத்தை அளித்துவந்தார்கள். ஹஜ்ரத் ஜுவைரிய்யா (றலி.) அவர்களை நாயகம் (ஸல்.) அவர்கள் விவாகம் செய்தவுடன் அந்தக் கபீலாவிலுள்ள இதர ஸ்திரீகளுக்கெல்லாம் முஸ்லிம்கள் விடுதலை யளித்துள்ளார்கள். இவ்வம்மையாரின் தந்தையும், சகோதரரும் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இப்பால் அந்தக் கபீலா முழுவதுமே இஸ்லாத்தைத் தழுவி விட்டது.

எனவே, நாயகம் (ஸல்.) அவர்கள் செய்த திருமணங்களில் கன்னிப் பெண்ணாக இருந்தவர் ஹஜ்ரத் ஆயிஷா ஸித்தீக்கா ஒருவர்தான். அவரும் நாயகம் (ஸல்.) அவர்கள் 50 வயதைக் கடந்த பின்னரே "உம்முல்மூமினீன்" என்ற பேரைப் பெற்றூர். அக்காலத்தில் சாதாரணமாக ஏனைய ஜனங்கள் வாலிபப் பருவத்தைக் கடந்து வயோதிகப் பருவத்திற்கு வரும் சமயமாகும். ஆதலின், நாயகம் (ஸல்.) அவர்கள் ஸ்திரீகளின்மீது காமங்கொண்டு பல மனைவியரை மணப்பதென்றால் அவர்களது வாலிப காலத்தில் அவர்கள் நினைத்த குடும்பத்தில் நினைத்த கன்னிகைகளைக் கலியாணம் செய்துகொள்ளச் சந்தர்ப்பமும் வசதியுமிருந்தது. அன்றியும் நாயகம் (ஸல்.) அவர்கள் திரு மக்காவில் இஸ்லாம் மதத்தைப் பிரசாரம் செய்துகொண்டிருந்த காலத்தில் அக்குறைஷியர்கள் தாங்களாகவே முன்வந்து பெண்ணையும் பொன்னையும் தருவதாகக் கூறியும் அதனை நாயகம் (ஸல்.) அவர்கள் மறுத்துவிட்டதையும் நாம் கவனிக்கவேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கைத் துணைவியர்கள் மூலமாக இஸ்லாம் மத சம்பந்தமான அநேகம் பிரச்சினைகளைப்பற்றி ஆயிரக்கணக்கான ஹதீதுகள் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. அநேகம் சஹாபிகள் மத சம்பந்தமாகத் தங்களுக்கேற்படும் அநேகம் சந்தேகங்களை இவ்வம்மையார்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறூர்கள். ஆதலின், இத்தியாதி விஷயங்களைச் சிந்தித்துப் பார்க்குமிடத்து நாயகம் (ஸல்.) அவர்களது திருமணங்கள் அறபி நாட்டிலுள்ள யுத்தங்களை ஒழித்து, அறபிக் கோத்திரங்களுக்கிடையில் நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும், இஷாஅத்தே இஸ்லாத்திற்காகவுமென்று நன்கு புலப்படுகின்றது. எனவே, இஸ்லாமிய விரோதிகள் நாயகம் (ஸல்.) அவர்களது திருமணங்களைப்பற்றிக் கூறும் ஆக்ஷேபனைகள் தவறானவைகள் என்பதும், குரோத எண்ணத்தால் கூறப்படுபவைகள் என்பதும் இச்சிறிய வியாசத்திலிருந்து நன்கு தெரியவரும் என்பதை நேயர்களுக்கு அறிவித்துக் கொள்கிறூம்.

முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன?

(அல்லாமா அமீர் ஷக்கீப் அர்ஸலான்)

(சென்ற மாத 216-ம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம்களது வீழ்ச்சிக்கு அநேகம் காரணங்களிருந்தபோதினும் அவைகளிற் சில கீழே குறிப்பிடப்படுகின்றன :—

அறியாமை

முஸ்லிம்களது வீழ்ச்சிக்குக் முதற்காரணம் அறியாமையாகும். 'சிர்க்கா' என்னும் காடிக்கும், சாராயத்திற்குமிடையில்கூட வித்தியாசத்தை உணர்ந்துகொள்ள முடியாதபடி அவ்வளவு அறியாமையிலிருக்கிற பாமர ஜனங்கள் சகலவிதமான வீணை காரியங்களையும் ஒப்புக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றனர் என்பதிலும், தங்களிடம் தர்க்கம் பேசுபவர்களுக்கு பதில் சொல்லச் சக்தியில்லாமலிருப்பதன்காரணமாக அங்கியர்களின் ஏமாற்றத்தில் சிக்கிக்கொள்கிறார்கள் என்பதிலும் இஞ்சிற்றும் சந்தேகமில்லை.

சோற்பப்படிப்பு

தவிரவும், சில முஸ்லிம்களிடம் சொற்பப் படிப்பு இருப்பதும் மற்றொரு காரணமாகும். இது அறியாமையைப் பார்க்கினும் மகா கெட்டது. ஏனெனில், பாமர ஜனங்களைத் திருத்தி நேரான வழியிற் கொண்டுவருவதற்குத் தகுந்த திறமையும் சமர்த்துமுள்ள ஒரு ஆலிம் முன்வந்து, அவரது ஹிதோபதேசத்தைப் பொதுஜனங்களும் ஒப்புக்கொள்ள வாரம்பித்து விடுவார்களாயின், தங்களுக்குச் சொற்ப படிப்புத்தானிருக்கிறது என்பதையும்கூட அறியாத அரைப் படிப்புக்காரர்கள் தங்களது தர்க்க வாதத்திற்குமுன் எவருடைய சொல்லையும் ஒப்புக்கொள்வதில்லை. அரை வைத்தியம் உயிருக்கு ஆபத்து, அரைமுல்லா ஈமானுக்கு ஆபத்து என்ற பழமொழி இவர்கள் விஷயத்தில் பொருத்தமாக இருக்கிறது.

ஒழுக்கவழுக்கு

முஸ்லிம்களது ஒழுக்கம் வழுக்கடைந்ததும் அவர்களது வீழ்ச்சிக்கு மற்றொரு காரணமாகும். திரு குர்ஆன் நமக்குப் போதித்ததும், நமது முன்னோர்கள் உயர்பதவிகளை யடையக் காரணமாக இருந்ததுமாய நல்லொழுக்கங்களை நாம் முற்றிலும் கைவிட்டு விட்டோம். ஒரு சமூகத்தை விழுப்பம்செய்து முன்னேற்றமடையச்செய்வதில் கல்வி கலை ஆகியவைகளைப் பார்க்கினும் சிறந்த நல்லொழுக்கங்கள் அதிகம் பிரயோஜனகரமானவை என்பது எவருக்கும் மறைந்த விஷயமன்று. "ஒரு சமூகத்தில் நல்லொழுக்கம் இருக்கும்வரை அந்தச் சமூகம் உயிருள்ள சமூகமாக இருக்கமுடியும். அச்சமூகத்தில் ஒழுக்கம் வழுக்கடைந்துவிடுமாயின் அந்த சமூகம் தானாக வீழ்ந்துவிடும் என்று பிரபல வித்துவானொருவர் கூறி இருப்பது முற்றிலும் உண்மையேயாகும்.

படித்தவர்களும் அரசர்களுமின்மை

முஸ்லிம்களது வீழ்ச்சிக்கு அவர்களிலுள்ள படித்தவர்களும், அரசர்களும் பலஹீனமாக இருப்பதும் ஒரு முக்கிய காரணமாகும். பிரஜைகள் தங்களுக்கு ஊழியம் செய்வதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், அவர்களைத் தங்கள் இஷ்டப்படி எப்படி வேண்டுமாயினும் நடத்துவதற்குத் தங்களுக்கு உரிமை இருக்கிறதென்றும் அரசர்கள் கருதிக்கொண்டிருக்கின்றனர். இந்த எண்ணம் அவர்களது மூளையில் வெகு தூரத்திற்கு ஆழமாகப் பதிந்துவிட்டது. இவ்வரசர்களது செய்கையைச் சீர்திருத்தி அவர்களை நேரான வழிக்குக் கொண்டுவர ஒருவர் முயற்சிப்பாராயின் எவ்விதத் தயக்கமுமின்றி அவரைக் கொலைசெய்து விடுவதற்கு அவர்கள் அஞ்சுவதே இல்லை

இந்த அநியாயக்கார அரசர்களுக்குச் சில படித்தவர்களும் உடந்தையாக இருப்பது மிகவும் விசனகரமானதாகும். உண்மையாளர்கள், சத்தியவான்கள் ஆகியவர்களைக் கலகக்காரர்கள் என்று கூறி, அவர்களைக் கொன்றுவிடும்படி ஆலோசனை கூறுகின்றனர். அரசர்களுக்கு நேரான வழியைக் காண்பிப்பது அறிஞர்களது கடமை என்பதாக இஸ்லாம் மதம் கட்டளையிட்டிருக்கிறது. முற்காலத்திலிருந்த இஸ்லாமிய அரசாங்கங்களில் அறிஞர்கள் இக்காலத்திலுள்ள பார்லிமெண்ட் சபைகள் செய்யும் காரியத்தைச் செய்துகொண்டிருந்தனர். இவ்விதமான ஜனங்கள் முஸ்லிம்களில் இருந்துகொண்டிருந்த காலம்வரை முஸ்லிம் அரசர்களும் கலீபாக்களும் பகிரங்கமாக அக்கிரமஞ் செய்யத் துணியவில்லை. இக்காலத்தில் அம்மாதிரியான ஜனங்கள் மிகக் குறைந்துவிட்டனராதலின், தவறான முறைகளும் கெடுதல்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. முஸ்லிம்கள் பின்னடைந்து கொண்டும், விரோதிகள் முன்னேற்றமடைந்துகொண்டு மிருக்கின்றனர்.

கோழைத்தனமும் பயங்கொள்ளித்தனமும்.

முஸ்லிம்களில் பயங்கொள்ளித்தனமும் கோழைத்தனமும் இருப்பது முஸ்லிம்களது வீழ்ச்சிக்கு மற்றொரு முக்கிய காரணமாகும். முஸ்லிம்கள் உலகிலுள்ள எல்லா தேசத்தவர்களைப் பார்க்கினும் சிறந்த வீரப் பராக்கிரமமுள்ளவர்களென்று கியாதி பெற்றிருந்தனர். மரணத்தை அவர்கள் திரணமாக மதித்தனர். ஒரு முஸ்லிம் தன்னந்தனியே பத்துப்பேரை எதிர்த்து ஜெயித்துக்கொண்டிருந்தனர். சிலசமயங்களில் நூறு பேர்களையும்கூட எதிர்த்திருக்கிறார்கள். ஆனால், இற்றை நாளில் மரணம் என்ற பெயரைக் கேட்பதற்கும்கூட நடுங்குகின்றனர். இஸ்லாம் இருக்கும்போது அத்துடன் இருதயத்தில் பயமும் ஒன்று சேர்ந்திருக்கமுடியாது என்பது உண்மையேயாகும். அதிலும், ஆச்சரியமென்னவெனில், முஸ்லிம்களைப் பகைத்து அக்கிரமம்செய்யும் விரோதிகளுக்கு மரணத்தைப்பற்றி அத்துணை பயமில்லை. விரோதிகள் தங்கள் சமூகத்திற்காகவும் தேசத்திற்காகவும் மரணத்துடன் எவ்விதமாக விளையாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இதன்பலனை அவர்கள் என்னென்ன விதமான வெற்றிகளை அடைகின்றனர் என்பதையும் முஸ்லிம்கள் கண்ணால் பார்த்துக்கொண்டு வெட்கமடைவதுமில்லை, பாடங் கற்றுக்கொள்வதுமில்லை. “நீங்கள் விரோதிகளைப் பின்றொடர்ந்து செல்வதில் சோம்பலாயிருக்காதீர்கள். உங்களுக்கு கஷ்டமேற்பட்டிருக்கிறதென்றால் அவர்களுக்கும் உங்களைப்போல் கஷ்டமேற்பட்டிருக்கிறது. ஆனால், அவர்கள் அல்லாஹ்வினிடம் ஆதரவு வைக்காததை நீங்கள் ஆதரவு வைத்திருக்கிறீர்கள்” என்று இறைவன் திரு குர்ஆனில் கூறி இருப்பதையும் முஸ்லிம்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

பயங்கொள்ளித்தன்மையுடன் நம்பிக்கையை இழந்துவிடுவதும் முஸ்லிம் பொது ஜனங்களிடம் மிகவும் அதிகமாகப் பரவி இருக்கிறது. எனவே, முஸ்லிம்கள் பரங்கியரைப்பார்க்கினும் மிகவும் கீழ்த்தரமாக இருப்பதாகவும், அவர்களுடன் யுத்தம்செய்து வெற்றிக்கொள்ள முடியாதென்றும், அவர்களுடன் யுத்தம் செய்வதால் நஷ்டமடைவதைத் தவிர வேறு நன்மை எதையும் அடையமுடியாதென்றும் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இவ்விதமான பயங்கொள்ளித்தனத்தின் காரணமாகப் பரங்கியர்களுக்கு முஸ்லிம்களிடம் பல வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. பழைய காலத்து வழக்கம் முற்றிலும் மாறி சில பரங்கியர் எண்ணத் தொலையாத முஸ்லிம்களை இந்நாளில் ஜெயித்துக்கொண்டிருக்கிறார்கள். பயங்கொள்ளிகள், கோழைத்தனத்தை புத்திசாலித்தனம் என்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது புத்திசாலித்தனமுமன்று; விவேகமான காரியமுமன்று; இது அற்பர்களின் ஆயுதமாகும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

ஒரு காலத்தில் 20 முஸ்லிம்கள் பார்ஸிலோனாவிலிருந்து பிரான்சின் தென்பகுதியாகிய பராக்ஸிலூமாவுக்கு வந்து, மலைப் பிரதேசத்தைக் கைப்பற்றி ஒரு கோட்டையையுங் கட்டிக்கொண்டு அங்கிருந்து வந்தனர். பிறகு, நாளடைவில் அவர்களது எண்ணிக்கை ஒரு நூறுவரையில் பெருகியபின் சட்டப்படியுள்ள ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தி பிரான்சின் தெற்குப் பிரதேசத்துடன் இத்தாலியின் வடபாகத்தையும் கைப்பற்றிக்கொண்டனர். அங்கு முஸ்லிம்கள் ஒரு நூறு பேர்கள்தானிருந்தனர். ஆயினும், அக்கம்பக்கத்து அரசாங்கங்களெல்லாம் அவர்களுடன் சிநேகம் பாராட்டிக்கொண்டும் உறவுகொண்டாடிக்கொண்டு மிருந்தன.

ஆல்ப்ஸ் மலையின் சிகரமும், பிரான்சு, இத்தாலி ஆகிய தேசங்களிலுள்ள மலைப்பிரதேசத்திற்குச் செல்லும் ராஜபாட்டைகளும் இவர்கள் கைவசமிருந்தன. அவ்வழியாகச் செல்லும் வியாபார தாவளத்தினர் அனைவரும் இவர்களுக்கு வரி கொடுத்துக்கொண்டிருந்தனர். இச்சிறிய முஸ்லிம் கூட்டத்தினர் வரவர அபிவிருத்தியடைந்து மத்திய ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்ஜர்லாந்தின் ஏரியையும்கூடக் கைப்பற்றிக்கொண்டனர். இவ்வண்ணம் 95 வருஷ காலம் அவர்கள் ஆட்சிபுரிந்து ஐரோப்பிய அரசாங்கங்களெல்லாம் ஒன்றுகூடி ஏகமாகச் சேர்ந்து எதிர்த்தபோது பலகாலம்வரை அவைகளை எதிர்த்து யுத்தம்செய்து கம்பீரமாக அழிந்தனர். அதுசமயம் ஐரோப்பா முழுவதையும் எதிர்த்து நின்ற அறபியர் எண்ணிக்கையில் 1500-க்கு அதிகமில்லை.

சில அறியா மாக்களின் சந்தேகங்கள்.

நீங்கள் கூறுவனவனைத்தும் மெய்யேயாகும். ஆனால், அது எக்காலத்தில்? ஐரோப்பியரிடம் யுத்தத்திற்கு வேண்டிய நவீன கருவிகள், துப்பாக்கிகள், பீரங்கிகள், டாங்கிகள், ஆகாயவிமானங்கள் முதலியன இல்லாத காலத்தில்தான் அவைகள் நிகழ்ந்தன; இப்பொழுதோவெனில், நவீன சயன்ஸின் முன்னேற்றம் இவ்வபிப்பிராயங்களனைத்தையும் முற்றிலும் மாற்றிவிட்டன என்று சில அறியாமாக்கள் கூறுகின்றனர். இவ்வாறு கூறுவது அறியாமையும் மூடத்தன்மையுமாகும். அக்காலத்திலும் முஸ்லிம்களது பகைவர்கள் கொஞ்சங் கருவிகளும் வசதிகளும் மாத்திரமுள்ளவர்களாக இருக்கவில்லை. சரித்திரப் புத்தகங்களைப் புரட்டிப்பார்த்தால் பூர்வ காலத்திலும்கூட யுத்தத்திற்கென விசேஷ கருவிகள் இருந்தனவென்பதும், இக்காலத்தில் மெஷின் பீரங்கிகள் முதலியவைகள் செய்யும் வேலையை அவைகள் அக்காலத்தில் செய்துகொண்டிருந்தன என்பதும் தெரியவரும். தவிரவும், இந்த ஆயுதங்களும், கருவிகளும், தளவாடங்களும் மனதைரியத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்கவிடமாட்டா. மனதைரியமும் ஊக்கமும்தான் இவைகளை உண்டுபண்ணுகின்றன. இவைகள் கோழையராகவும் ஊக்கமில்லாதவராகவும் இருப்பவரிடம் இருந்தால் இவைகள் எவ்விதப் பிரயோஜனமும் செய்யமாட்டா; இவைகளுக்கும் கற்களுக்குமிடையில் எவ்வித வித்தியாசமுமில்லை.

இவைகள் கிரியாம்சையில் வெற்றிபெற வேண்டுமாயின் தற்காலமுள்ள நவீனக் கல்விகள் மிகவும் அவசியமாகும். இக்காலை முஸ்லிம்களிடம் இவைகளில்லாததால், பரங்கியர்களை எதிர்க்க அசக்தர்களாக இருக்கிறார்கள் என்று சிலர் கூறமுடியும். முஸ்லிம்களிடம் துணிவும், விவேகமும் இருப்பின் புதிய கலைகளும், நவீனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டவைகளும் அவர்களுக்கு அருமையல்ல. ஜப்பான் தேசத்தார் 1886-ம் வருஷம் வரையில் கீழ் நாட்டினரைப்போல் பிற்போக்கடைந்திருந்தனர். ஆனால், அவர்கள் ஐரோப்பியர்களைப் பின்பற்றி அவர்களைப்போல முன்னேற்றமடைய விரும்பி அவர்களது கலைகளையும் தொழில்களையும் கற்று 50 வருஷ காலத்திற்குள் ஐரோப்பியருக்குச் சமமாகி விட்டனர். முஸ்லிம்கள் பலவான்களாகி அவர்களுடன் தோள்சேர்த்து நிற்க விரும்புவார்களாயின் அவர்களுக்கும் இந்த வழி திறந்துதானிருக்கிறது. இதற்காக அவர்கள் மதத்தை விட்டுவிட வேண்டுமென்பதோ மத ஆசாரங்களைக் கைகழுவிவிட வேண்டுமென்பதோ அவசியமில்லை. ஜப்பானியர் இவ்வளவு முன்னேற்றமடைந்தும் அவர்கள் தங்களது ஆசாரங்களையோ மதத்தையோ விட்டுவிடவில்லை.

மேலும், முஸ்லிம்கள் நவீன ஆயுதங்களையும் தளவாடங்களையும் சேர்த்துக்கொள்ள விரும்பி, அவைகள் அவர்களுக்குக் கிடைக்காமற் போன காலமுமில்லை. முஸ்லிம்களுக்கு இருக்கிற குறை எல்லாம் உறுதியின்மையும் ஊக்கமின்மையுமேயாகும். இவர்களிடம் உறுதியும் ஊக்கமும் உண்டாகிவிடுமாயின் எல்லாத் தள்வாடங்களும் சகல கருவிகளும் இவர்களுக்கும் கிடைத்துவிடும் என்பதிற் சந்தேகமில்லை. முஸ்லிம்கள் தளவாடங்களைச் சேர்க்க இன்றைக்கு விரும்பினாலும் அடுத்த தினத்திலேயே அவர்களுக்கு எல்லாத் தளவாடங்களும் கிடைத்துவிடுமென்பது உண்மையில்லையா? ஆனால், ஆயுதங்களை வாங்குவதற்குப் பணம்கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. முஸ்லிம்கள் பணங் கொடுக்கவும் தயாராக இல்லை; ஜப்பானியரைப்போல் நடந்துகொள்ள விரும்பவுமில்லை. பணச் செலவில்லாமல் ஆயுதம் வாங்கிக்கொள்ளவும், ஆயுதங்களில்லாமல் வெற்றியடையவுமே முஸ்லிம்கள் விரும்புகின்றனர். இப்படி ஆசைப்படுவது முட்டாள்தனமேயாகும்.

இவ்வித நிலைமையில் ஆயுதமில்லாத கணக்கற்ற முஸ்லிம்கள் ஆயுதமுள்ள சில பரங்கியர்களை எதிர்க்க முடியாமல் தோல்வியடைந்து பின்வாங்குகின்றனர். இதன் பலனாக முஸ்லிம்கள் பரங்கியரின் பெயரைக்கேட்ட மாத்திரத்தில் நடுங்குகின்றனர். சில இடங்களில் முஸ்லிம்கள் பரங்கியரிடம் சரண்புகுந்து,

"நீங்கள் பலஹீனமடைந்து விடாதீர்கள். இன்னும் கவலை கொள்ளவும் செய்யாதீர்கள். நீங்கள் மூமின்களாக இருப்பின் (மற்றவர்களைப் பார்க்கினும்) நீங்கள்தான் உயர்ந்தவர்களாயிருப்பீர்கள். உங்களுக்கு நஷ்டமேற்பட்டிருக்கிறதென்றால், உங்கள் பகைவர்களுக்கும்தான் நஷ்டமேற்பட்டிருக்கிறது. மேலும், நாம் காலத்தை இவ்விதமாக ஜனங்களிடம் மாற்றிக்கொண்டே இருக்கிறோம்" என்ற தெய்வத் திருமறையின் கட்டளையையும் மறந்து விடுகிறார்கள்.

நீங்கள் செல்வத்தைப் பகைவர்களுக்காகச் சேர்த்து வைக்காதீர்கள். ஏனெனில், பகைவர்கள் உங்களை ஜெயித்தால் உங்களது ஜீவியத்தையும் உங்களது செல்வத்தையும் அவர்கள் பிடுங்கிக் கொள்வார்கள். நீங்கள் சேகரித்து வைக்கிற உங்கள் பணம் உங்களுக்கு எவ்விதப் பிரயோஜனத்திற்கும் உதவாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். "உலகில் செல்வம் குறைந்தவர்களுக்கு மகிமையுமில்லை. மகிமை குறைந்தவர்களுக்குச் செல்வமுமில்லை" என்பதாக ஒரு புலவர் கூறி இருப்பதுபோல் மகிமையைக் குறைத்துக் கொண்டு செல்வத்தைச் சேமித்து வைப்பதில் பிரயோஜனமில்லை. முஸ்லிம்கள் செல்வத்தையும் ஜீவியத்தையும் நியாயமில்லாத முறையில் காப்பாற்ற முயலுகின்றனர். ஆதலின், அவ்விரண்டையும் அவர்கள் இழந்து விடுகின்றனர்.

இப்பொழுது முஸ்லிம்களது நிலைமை அன்று எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய ஹதீது ஷரீபுக்கு ஒத்ததாக இருக்கிறது. அந்த ஹதீது வருமாறு:—

"பசித்த மனிதர்கள் சாப்பாட்டின்மீது பாய்ந்து விழுவதுபோல உங்கள்மீது பிற சமூகத்தார் விழும்காலம் ஒருசமயம் வரும்" என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறினார்கள். அதற்கு ஜனங்கள் "அக்காலத்தில் நமது ஜனத்தொகை குறைவாக இருக்குமா?" என்று நாயகம் (ஸல்.) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "அன்று, நீங்கள் அதிகமிருப்பீர்கள். ஆனால், உங்களது நிலைமை பிரவாகத்திற்குமேலிருக்கும்படியான புல்லைப்போலிருக்கும்" என்று கூறினார்கள். அதற்கு ஜனங்கள் "இம்மாதிரி ஏன் ஏற்படும்?" என்று நாயகம் (ஸல்.) அவர்களை வினவினர். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "உங்களில் "வஹன்" உண்டாகி விடும் என்று கூறினார்கள். "வஹன்" என்பது என்னவென்பதாகக் கேட்டதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "பணத்தின்மீ தாசையேற்படுவதும் மரணத்தின்மீது பயமேற்படுவதுமாகும்" என்று கூறினார்கள் என்பதே.

எனவே, இவ்விரு காரியங்களும்தான் முஸ்லிம்களது வீழ்ச்சிக்கு மூலகாரணங்களாகும். ஆகவே, முஸ்லிம்கள் மரணத்திற்கு அஞ்சுவதால் பகைவர்களை எதிர்ப்பதில்லை. பணத்தாசையின் மிகுதியால் அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதாகுபவர்களுக்குப் பணவுதவி செய்வதில்லை. இப்பொழுது முஸ்லிம்களது எண்ணிக்கை குறைவாக இல்லை. ஆனால், அவர்களில் ஜௌஹர் (ரத்தினம்) எதுவுமில்லாவிடில் எண்ணிக்கை அதிகமாக இருப்பதில் பிரயோஜனமென்ன? எவர் உலகத்தை அதிகம் நேசிக்கிறாரோ அவர் அதன் இன்பங்களையும் பிரயோஜனங்களையும் அடைய முடிவதே இல்லை என்பதும், உயிர்வாழ்வதின்மீது அளவிற் கதிகமான பற்றுள்ளவர் தன்னைத்தானே கஷ்டங்களுக்குட்படுத்திக் கொள்கிறார் என்பதும் உலகறிந்த விஷயங்களாகும். இதனால்தான் "ஜீவியத்தையும், செல்வத்தையும், உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் அல்லாஹ்வின் கட்டளைக்கு முன் அற்பமாக மதிக்கவேண்டும்" என்னும் நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது என்றும், பொறுமையும் உறுதியும் வேண்டுமென்றும் திருகுர்ஆன் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறது. எனவே, முஸ்லிம்கள் உண்மையான முஸ்லிம்களாக இருக்கவேண்டுமென்று இறைவன் விரும்புகிறான். உண்மையான முஸ்லிமாக இல்லாதிருக்கும்போது திரு குர்ஆனில் இறைவன் கூறியுள்ள வாக்குறுதிகளை அவன் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது.

(தொடரும்.)

நாம் முன்னேறுவ தெங்ஙனம் ?

[சித்தயங்கோட்டை மௌல்வி S.N. ஹுஸைன் முஹம்மது ஸாஹிப் (பாக்கவி) வரைவது.]

இவ்வவனி தோன்றிய நாள்தொட்டு ஒவ்வொரு மக்கள், ஒவ்வொரு காலத்தினர், ஒவ்வொரு தேசத்தினர் யாவரும் தத்தம் முன்னேற்றத்தை விரும்பாமலில்லை. அம்முன்னேற்றத்திற்குரிய சாதனங்களைச் செய்து பார்க்காதவருமில்லை. தங்கள் முன்னேற்றத்திற்கு நம் மக்களில் ஒரு சிலர் மதாநுஷ்டானத்தைக் கையாண்டு வந்தனர். ஒரு சிலர் பொருளாதாரத்தைத் துணையாகக் கொண்டனர். ஒரு சிலர் தொழிலபிவிருத்தியைக் காரணமாகக் கண்டனர். வேறு சிலர் நாஸ்திகமே சிறந்த தெனச் செப்பி வந்தனர். மற்றுமொரு சிலர் சமூகாபிவிருத்தி, சமூக ஒற்றுமை இவைகளே சாலச் சிறந்ததென சாற்றிவந்தனர். சாற்றியும் வருகின்றனர்.

இறுதியாய் ஈங்கு எது சரி ? எது சரியல்ல? என்ற வாதத்திற்கீடுபட யான் தயாரில்லை எனினும் நமது நோக்கம் நாம் முன்னேற்றமடைவதற்குரிய சாதனங்கள், துறைகள் யாவை ? என்பதேயாகும். முன்னேற்றமென்பது ஒவ்வொருவரிலும் அமைபப்பெற்ற உணர்வும் உணர்ச்சியுமேயாகும் என்பது யாவரும் அறிந்த நிதரிசனமாகும்.

மதாநுஷ்டானம், தெய்வபக்தி, பொருளாபிவிருத்தி, தொழில், கலை, நாகரீகம், முதலிய சகல வழிகளிலும் ஈடுபட்டு கடந்துசென்றாலொழிய நாம் நமது லக்ஷியம் என்ற முன்னேற்றத்தை அடைதல் முடியாது.

இதுவன்றி ஒவ்வொரு வர்க்கத்தினரும் தத்தம் அறிவிற்கெட்டியவாறு மேற்கூறிய யோக்கியதாம்சங்களில் ஒரு சிலர் ஒன்றையும், மற்றுமொரு சிலர் வேறொன்றையும், தத்தம் நோக்கிற்கிணங்க கையாண்டு வருவதில் தங்கள் லக்ஷிய நிலையை அடைவாரென்பது அரிதினும் அரிது.

அன்பீர் ! அகில மவதரித்த நாள்தொட்டு இப்பிரபஞ்சத்தில் தோன்றியும் மறைந்தும் எண்ணற்ற மதங்கள் காணக் கிடக்கின்றன. அவைகளில் புராதனமாய் காணக் கிடக்கும் மதங்கள் இந்துமதம், புத்தமதம், கிறிஸ்துமதம் இம்மூன்றுமேயாகும். சரித்திரங்களில் ஹிந்துமதம் கோடிக்கணக்கான வயதையுடையதாயும், புத்தமதம் 40 நூற்றாண்டையுடையதாயும், கிறிஸ்துமதம் ஈராயிர வாண்டுகளையுடைய ஆயுளுள்ளதாயும் கூறப்பட்டுள்ளன. பெரிய வேதங்களும் பெரிய ஆயுளுமுள்ள மதங்கள் இம்மூன்றுமே யென்பது பிரத்தியட்சம். ஆயினும் அச்சமயங்களின் சமயவாதிகள் தங்கள் சமயாநுஷ்டானத்தினால் முன்னேற்றமடைந்தனரென்பதற்கு தக்க சான்று சரித்திர வாயிலாய்க் காட்ட வியலாதென்பதே எமது துணிபு. இதற்குமாறாய் மக்கள் அகில உலக முழுவதும் அந்தகாரவிருளில் ஆழ்ந்து நாஸ்திகம், மதமின்மை, அராஜரீகம், மதுவருந்தல், களவு, சூது, வியபிசாரம், கொலை, கொள்ளை, சிசுஹத்தி முதலிய அனுச்சார துர்க்கிரிகைகளில் மீடுற்று காட்டுமிராண்டியர்களாகவே வசித்து வந்துள்ளாரென்பதாக உலக சரித்திரங்களில் காணக் கிடக்கிறது. நாகரீக வளர்ச்சி, சீர்திருத்தத் துறைகளில் மக்களை நடாத்திக் காட்டுவதில் மேற்கூறிய மதங்களில் ஏதேனுமொன்று மற்றொன்றைவிட உயர்ந்த அந்தஸ்து வாய்ந்துளதாகவும் தென்படவில்லை.

சன்மார்க்க சீலரீர் ! 13 நூற்றாண்டிற்குமுன் தென்மேற் காசியாவின் கண் (அரேபியாவில்) ஒரு ஞானிபானு அவதரித்து, தனது ஒளியை அரேபியா மட்டுமின்றி சர்வ பூவிற்கும் பரத்தினது. அவ்வொளியை பயன்படுத்தியவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்; க்ஷீணித்திருந்தவர்கள் உயர்நிலை உடையராயினர். அநாகரீகர், நாகரீகராயினர்; அஞ்ஞானிகள் மெய்ஞ்ஞான ஜோதியடைந்தனர். தெய்வ மின்னதெனத் தெரியாத அவிசுவாசமுள்ளவர் விசுவாசிகளாயினர்.

விக்ரஹாராதனையை வேரோடுப் பிடுங்கி சத்தியக் கடவுளின் பக்கம் தஞ்சம் புகுந்தனர்.

சமத்துவம், சகோதரத்துவமில்லாது கோரத் தொழில் புரிந்த மக்கள் ஈகை பரோபகாரம், எல்லோரும் ஒன்றென அபேத கொள்கையி லீடுபட்ட மக்களாயினர். பஞ்சமா பாதகத் தொழில்களைக் களைந்தனர். ஆன்ம ஞானோப தேசங்களை விழைந்தனர். என்னே! எம்பெரு மகராம் ஞான சூரியோதயத்தின் மகிமை! எம் மதங்களும், எத்தலைவர்களும், எச் சீர்திருத்த வாதிகளும் தொன்றுதொட்டு ஆற்றி வராத தென்ன? கனவிலும் நினையாத அருஞ் சேவை களைத் தமது வாழ்க்கையின் மூன்றிலொரு பாக (இருபத்தி மூன்று ஆண்டில்) வயதில் ஆற்றி சேவைகளை சாதித்த இறுதித் தூதர் அவரே.

சோதரீர்! மதாராய்ச்சியின் கருத்து நம் கருத்திலில்லாததால் நந் தலையங்கத்தை நோக்குவோம். முன்னேற்றமென்பதைத் தத் தமக்கு வேண்டிய சொந்த முன்னேற்றம். தன் சமூக முன்னேற்றம். நம் தேச முன்னேற் றம் எனப் பலவகையாய்ப் பிரிக்கலாம். முன் னேற்ற வாதியெனப்படுவோன் இவைகளில் ஒன்றை விட்டுவிடும் பக்ஷத்தில் முன்னேற்ற வாதியெனச் சாற்றுவது பொருந்தாதென்றே யான் கூற முன் வருகிறேன்.

கல்வி, கைத்தொழில், அரசியல் ஞானம், தெய்வ வழிபாடு, ஆத்மீகம், ஐஸ்வரியம் வர்த் தகம் இவைகள் போன்றவை ஒவ்வொரு மக் கட்கும் இன்றியமையாத முன்னேற்ற வழியா கும். இவைகளில் ஒரு நூறு மக்களையெண்ணி எடுத்தால் 100-க்கு ஐந்து பேர் கலை, நாகரீகம் போன்ற துறைகளில் முன்னேறிய பேர் வழி நம்மிலில்லையென்பது தெற்றென விளங்கும். தொழிலில்லாது கைக்கட்டிக் கொண்டிருக்கவும், யாசித்துக்காலங் கடத்தவும், மடங்கள் சத்தி ரங்கள் இவைகளில் கஞ்சா, குடி, சூது போன்ற துர்க்கிரிகைகளில் வீணே பொழுது போக்கும் சோம்பேறிகள் அரைபாகமிருக்கலா மென யூகிக்கலாம். இவ்வித நிலையில் அன் னியராதிக்கம் அகலவேண்டும்; சுயேச்சை நாட்டவேண்டும்; தேசம் முன்னேற வேண்டு மெனக் கருதல் சேற்றிற் குளித்தற்கொப்பா கும். விவேகம் வெற்றியுறுமா? அல்லது அவி வேகம் வெற்றியுறுமா? முயற்சிப் பயனளிக் குமா? இன்றேல் சோம்பல் சுகந்தருமா?

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மையாக்கும்"

என்ற திருக்குறளுடையார் பாவை சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றனம்.

அன்பர்காள்! மேனாட்டு சோதரர்களையோ, வேறு நம் மிந்திய மக்களாகிய இதர சமூகத் தினரையோ சீர்தூக்கிப் பாருங்கள். மேனாட் டினர்களின் சரித்திரங்களைப் பார்க்கப் புகின் அருந்த ஆகாரமற்று, கட்ட ஆடையற்று ஒரு காலத்திலிருந்திருக்கின்றனர். இன்று நாம் கட் டிக்கொள்ளும் உயர்ந்த ஆடைகள் அவர்களை எதிர்பார்த்து வாங்கி கட்டவேண்டியிருக் கிறது. நம் தேசத்தினரிடம் அடைக்கலம் புகுந்து வர்த்தகஞ் செய்ய நம் நாடு வந்தனர். இஞ்ஞான்று வர்த்தகம் தொழில் ஆட்சி இவைகளெல்லாவற்றிலும் உயர்தர யோசனை, அந்தஸ்து, அடக்கியாளும் தன்மை பெற்றிருக் கின்றனர். 19, 20-ம் நூற்றாண்டு காலச் சக் கரத்தில் இவ்வித சுழலுக்குள் சுற்றி வந்திருக் கின்றனர்.

இவர்களை தற்கால மக்கள் பயந்தடங்கி வாழ வேண்டியதாயிற்று. இந்த அந்தஸ்துக்கு கொணர்ந்தவை அவர்கள்பால் மிளிர்ந்து கிடக் கும் ஒற்றுமை, கைத்தொழிலபிவிருத்தி, அர சியல் ஞானம், சமூகாபிவிருத்தி போன்றவை களேயாகும். இனி முன்னேற்றத்திற்குரிய சாதனங்களாகிய அங்கங்களைப்பற்றி எம்பெரு மான் (முஹம்மது ஸல்.) அவர்களின் பேரு ரையை நோக்குங்கள்:—உயர்ந்தவர்கள் நற் குணமுள்ளவரேயாவர். தெய்வ பயமுள்ளவர் களே மக்களில் சாலச்சிறந்தோராவர். ஆண்ட வன்மீது விசுவாசமுள்ளவர்கள் பொய்யுரைக்க மாட்டார்கள். மேற்படி விசுவாசிகள் பிறரை வசைமொழி செப்பவோ, கடவுளின் சாபம் கூறவோமாட்டார்கள். இகவுலகில் மக்கட்குக் கருணை காட்டுங்கள்; பரமனின் கடாக்ஷமடை வீர்கள். கலை கற்றல் ஆண், பெண் இருவர் பாலும் கட்டாயம் கடமையாகும். தொழில் செய்பவனே ஆண்டவனின் தோழனாவான். நீதிவழுவாது தொழிலீட்டுங்கள். பிறரிடம் யாசித்தல் இழிவாகும். உங்கள் பந்துக்களை, அண்டைவீட்டினரை அணைத்துக்காப்பாற்றுங் கள். மரம் மக்கட்குப் பயனளிக்குமாறு நீங்களும் மரமா (பேருபகாரியா) யிருங்கள். இவ்வரிய போதனைகளை எவ்வித அமுத வாக்கியங்க ளென நீங்களே யுணர்ந்து பாருங்கள். மேற் கூறிய போதனைகளைத் தனித்தனியே ஈங்கெடுத் தாராய்வோம். வருதிர், விழுமின்.

கலை

குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையால்
கல்வியழகே யழகு. (நாலடியார்)

கலை கற்பதே தத்தம் முன்னேற்றத்திற்கின்றியமையாதது என, உணர்ந்து ஒவ்வொரு சமூகமும், அரசாங்கங்களும் கலாஞானம் வளர்தற்காக வேண்டி தக்க பிரயத்தனங்களும், நிதிகளும் சேர்த்து தங்கள் தங்கள் சமூக முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருமிற்றை நாளில், நம்மில் புத்துணர்ச்சி யெழாது தூங்கிக்கொண்டிருத்தல் நம் சமூக துரதிர்ஷ்டமேயாகும். ஆரம்பக்கல்வியோ வெகு குறைவாக இருக்கிறது. உயர்தரக் கல்வியோவெனில் சொல்லத்தரமன்று. கலாவல்லுனர்களை வசைமொழி கூறுதற்கு நம்மில் பலருளர். இதுவே நம்முன்னேற்றமென்றால் நாம் அடைவது ஜெயமா? இன்றேல் அபஜெயமா? நீங்களே யூகியுங்கள். தேசிய ஞானம், அரசியல் ஞானம், மதானுஷ்ட ஞானம், ஆன்மஞானம் என்பனபோன்ற ஞானங்கள் நம்மில் எங்கிலே அடைந்துள்ளன என்று சிந்தித்துப்பார்த்தால் ஒருவித ஞானமுமே நம்மிலில்லையெனக் கூறுவதல்லாமல் வேறில்லை. இலௌகிக முன்னேற்றத்திற்கு தேசியம், அரசியல் ஞானமின்றியமையாததாகும். மதாஞானம், ஆன்ம ஞானம் வைதீகத்திற்கு உயிர்நாடியாயிருக்கிறது. இப்படி ஒரு வித ஞானமுமில்லாதிருந்தால் வைதீகமோ இலௌகிகமோ இரண்டுமில்லையென்பது நன்கு புலனாகும். இருவிதக்கலைகளுமில்லாதவன் மானுஷீகத்தன்மையுள்ளவனா? அல்லது அமானுஷீகமுள்ள மிருகமா? உணருங்கள்.

எனது அபிப்பிராயமும் வேண்டுகோளும்.

ஆருயிர் அறிஞர்காள்!

எம்பெருமகர், உலக மத போதகர் (முஹம்மது ஸல்.) அவர்கள் யாரிடத்திலும் கலாஞானம் கற்றவர்களாக இல்லாதிருந்தார்களெனினும், அன்னார் அறிவொளியைப்பற்றி ஈங்கு ஓர்வோம். அவர்கள் ஆசிரியரிடம் ஸ்கூலிலோ காலேஜிலோ சென்று கலை பயிலவில்லை. அவ்விதக் காலத்தில் எம்பெருமகர் கொண்டுள்ள ஆசிரியர்கள், "மண், விண், கதிர், மதி, சமுத்திரம், ஜீவன், தாவரம், தாது" போன்றவைகளேயாகும். இஃதல்லாது கடவுளின் தூதர் (ஜிப்ரீல்) அநேக அறிவுகளை அவ்வக்காலத்திற்கேற்றவாறு நம்பெருமகருக்கு புகட்டி வந்துளார். இயற்கையறிவு, தத்துவஞானம், பூகோளம், வான சாஸ்திரம், விஞ்ஞானம் போன்ற எல்லா அறிவுகளும் அவர்களில் மிளிர்ந்து கிடந்தன. இற்றைநாள் விஞ்ஞானிகள் ஆராய்ந்து கூறும் விஞ்ஞானம்யாவும் 13-வது நூற்றாண்டிற்கு முன்னமேயே கூறிவிட்டார்களென்றால் அவர்கள் அறிவின் மான்புதானென்னே!

நம் கல்லூரிகள், கருங்கல், சுண்ணாம்பு, சிமிட்டி போன்றவைகளால் கட்டப்பட்டகோட்டைகளாக விருக்கின்றன. பெருமானவர்களின் கல்லூரிகளோவெனில், தேவாலயம், ஒவ்வொரு இல்லம், வீதி, ரோடு, திண்ணை, மலை, காடு போன்ற சாதாரண இடங்களாகவே யிருந்தன. பணச்செலவு பண்ணிப் படிக்கக் கஷ்டப்படும் மக்கள் படிப்பதற்கு நங்கால ஸ்கூல்களோ, காலேஜ்களோ, பெருமான் நபி (ஸல்.) அவர்கள் காலத்திய கலாசாலைகளைப்போல் பயன்றருமா? அறியுங்கள். உத்தம நபி (ஸல்.) அவர்கள் காலத்தில் ஒவ்வொருவர்களும் சிஷ்யர்களாகவும் ஆசிரியர்களாகவுமிருந்தனர். இங்ஙனமிருந்தால் கல்வி அபரிமிதமாய் வளர்ந்தோங்குமா? அல்லது குறைந்துகொண்டே போகுமா? அவர்கள் காலத்தினர் முற்போக்கடைந்தவரா? நாம் முன்னேறுவமா?

பெருந்தகையாளர்காள்!

நம் சமூக முன்னேற்றத்திற்கென ஆரம்ப பாடசாலைகள் மிக மிகக் குறைவாயிருக்கிறது. சகண்ட்ரி பாடசாலை, ஹைஸ்கூல், காலேஜ், யூனிவர்ஸிடி போன்ற உயர்தர கலாஸ்தாபனங்கள் நம் மாகாணத்தில் காண்பதரிதா யிருக்கிறது. ஒரு ஜில்லாவிற்கேனும் ஒரு முஸ்லிம் ஹைஸ்கூல் இருக்கிறதாவெனப் பார்க்கப் புகின் அதுவும் குறைவே. இப்படியிருந்தால் முன்னேறுவதெப்படி? நாம் வாசிக்கும் பாடசாலைகளில் இஸ்லாமிய கலை, நாகரீகம், இஸ்லாமிய சரித்திரங்கள், உத்தமசீலர் (நபி, ஸல்.) அவர்களின் வாழ்க்கைச் சரிதைபோன்ற கிரந்தங்களை கற்று கொடுப்பதுமில்லை, கற்றுகொள்வதுமில்லை. அரசாங்கத்தினர் ஆதரவளித்திருந்தாலும் அதை விரும்பி முயற்சிசெய்யாது விட்டு விடுகின்றோம். நஞ்சிறார்கள் இதரசமூகத்தினரின் பழக்கவழக்கம் கலாஞானமிவைகளில் ஈடுபட்டு சத்தியமதமே யின்னதெனத் தெரியாது நாஸ்திக வாதம் பேச வாரம்பிக்கின்றனர். இவ்

விதக் குறையை முன்னேற்றத் தடையென்று சொல்லாமலிருக்க முடியவில்லை யென்பதை குறிப்பிடுகின்றேன்.

பொதுநிதிகள் திரட்டியும், அரசாங்கத்தினர் சகாய உதவியினாலும் ஒவ்வொரு நாடு நகரென்ன? குக்கிராமங்களிலும் எலிமெண்டரி பாடசாலைகளையும் வேறு உயர்தர பாடசாலைகளையும் ஏற்படுத்தியும் நவீனமுறையில் சிறார் முன்னேறுந் தோரணையில் கலைபயிற்றுவித்து மதம், ஆசாரம், உயர்குணம், இஸ்லாமிய மதக்கோட்பாடு, இஸ்லாமிய சரித்திர வரலாறு போன்ற கலைகளையும் அப்பாடசாலைகளில் அங்கீகாரஞ் செய்து நம்சமூக முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டுமென்பதே யான் வேண்டிய வேண்டுகோளும் அபிப்பிராயமுமாகும்.

தொழில்

இப்பிரபஞ்ச வாழ்க்கையில் நம்மவர் ஆற்றி வருஞ் சேவைகளில் தொழிலுமொன்றாகுமென்பது ஒவ்வொருவருக்கும் இயற்கையறிவாகும்.

கலாபிவிருத்திபோன்றே தொழிலாபிவிருத்தியில் ஒவ்வொரு சமூகமும் அல்லும்பகலும் ஓயாது அரும்பாடுபட்டு வருகின்றன. வர்த்தகம், மில், கைத்தொழில், விவசாயம், கப்பல் தொழில், ரயில்வே, மருந்துச்சாலைத் தொழில், ஆயுதச்சாலைத்தொழில்போன்ற சர்வ தொழிலிலும் மேனாட்டினர் முன்னேறி வருவதனாலேயே சர்வசுதந்திரம்பூண்ட ஜெயசீலர்களாய்த் திகழ்கின்றனர். இதைக் கண்ணுற்ற நம்மிந்திய மக்களிலும் ஏனையோர் தக்கதோர் முறை தொழிலுணர்ச்சி பூண்டவர்களாய் சர்வதுறைகளிலும் முன்னேறிச் செல்கின்றனர். இவ்விதச் சகோதரர்களைப் பார்த்தேனும் புத்துணர்ச்சிகொள்ளுவீர்களாக. இவ்வித குறைவிற்கு நம் சத்திய போதகர் நபி (ஸல்.) அவர்களின் ஜீவியசரிதை, உத்தம சிஷ்யர்கள் (ஸஹாபாக்கள் றலி) அவர்களின் வாழ்க்கைச் சரிதைகளையும் பெருமானின் சட்டதிட்டப் பிரமாணங்களையும் நம் சமூகம் கல்லாமலும் கற்றும் ஒழுகி வாராததுமே முதற்காரணமென ஈண்டும் குறிப்பிடுகிறேன். பெருமகர் (நபிகள் ஸல்.) அவர்களை முன்மாதிரியாய் கொண்ட காரணத்திலேயே அவர்களின் நண்பர்கள் கலை, இஸ்லாமிய நாகரீகம், தொழில் வர்த்தகம்போன்ற சர்வதுறைகளிலும் முன்னேறினர். அவர்கள் ஏழுமையாயிருந்தனர். ஜனக்கணிதத்தில் மிகவும் குறைவாகவிருந்தனர், ஏழைகளாகவும், வறிஞர்களாகவு மிருந்து வரும் இப்பெரியார் (ஸஹாபாக்)களை, அவர்களின் விரோதிகள் (குப்பார்கள்) "நம்மிடம் அவர் (ஸஹாபாக்)கள் எதிர்ப்பது மட்கலம், கல்லிடம் போராடுவதற் கொப்பாகு"மென்று ஏளனஞ்செய்து வந்தனர். காலஞ் செல்லச் செல்ல அவ்விரோதிகள் அன்னவர்கள்பால் சரண்புகுந்தனர். இதுவென்ன? ஸிரியா, பாலஸ்தீன், இராக், ஈரான், எமன், நஜத் போன்ற நாடுகள் யாவும் அப்பெரியார்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டன. இவ்வித அபரிமிதமான வெற்றிகளுக்குக் காரணம் அவர்களிடமுள்ள ஆயுதபலமும் ஆள்பலமுமா? அல்லது நபிகள் கோமான் (ஸல்.) அவர்களின் போதனைகளைச் சிரமேற்கொண்டு வழுவாது நடந்துவந்த கிரியாம்சையின் பிரதிப் பிரயோஜனமா? நீங்களே அறியுங்கள்!

அப்பெரியார்கள் (ஸஹாபாக்கள்) எவ்வித முன்னேற்றத் துறைகளிலு மீடுபடாது வெறுமனே கைகட்டிக்கொண்டு இருந்திருப்பின் 1300 வருஷத்தியச் சரிதைகளில் போற்றப்பட்டு சரித்திரங்களுக்காக அருகதையாவார்களா? அப்பெரியார்களை நாம் மட்டுமென்ன? நாகரீகம், சீர்திருத்த வாதிகளெனப்படும் மேனாட்டினரும் போற்றிப் புகழ்வதுடனில்லாது நாகரீகம், கல்வி, தொழில், விஞ்ஞானம், தேசியம், அரசியல் ஐக்கியம்போன்ற சகல துறைகளிலும் தங்களுக்கு மட்டில்லாது சர்வ உலகத்தினருக்கும் வழிகாட்டும் சத்தியபோதகர்களென அந்நாகரீகவாதிகளே கூறிவருகின்றனர். ஆகவே, இனியேனும் முற்போக்குக்குரிய வழிகளைக் கைபிடிப்பீர்களென நம்புகிறேன். நமதுநபிகள் பெருமான் (ஸல்) அவர்களின் அரும்போதனைகளில் சிலவற்றை ஈண்டுமாராய்வோம். பிறரிடம் யாசித்துண்ணுமல் தன் குடும்பத்தைப் பரிபாலிப்பான் வேண்டியும், தன் அண்டை வீட்டுமக்களைக்கவனித்து காப்பாற்றும் பொருட்டும் பொருளீட்டுபவன் பூரணமதிக்கொத்த அழகிய முகத்தோடு தன் ஆண்டவனை மறுவுலகில் பேட்டிக்காண்பான். (நபிநாயக வாக்கியம்). பிறரை மோசஞ் செய்யாத உண்மை வர்த்தகன், உண்மையான மெய்யடியார்களோடும், ஆண்டவன் வழியில் உயிரை அற்பஞ் செய்த உயிர்தியாகி (ஷஹீத்)களோடும் மறுஉலகில் எழுப்பப்படுவான் (நபிநாயகவாக்கியம்).

பொருளையே சம்பாதித்துக்கொண்டிருக்கும் ஒருவரைப்பார்த்து ஸஹாபாக்கள்யாவரும் இம்

மனிதர் தனது முயற்சிகளை ஆண்டவன் வழியிற் செலவழித்தால் நல்ல ஜெயசீலராகலாம் எனக்கூறிக்கொண்டிருந்தனர். அதைக்கேட்ட ரஸூல் (ஸல்) அவர்கள் "நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? ஒரு மனிதர் தன் மாதா, பிதா, மனைவி மக்களை காப்பாற்றும் பொருட்டுச் சம்பாதிப்பினும் ஆண்டவனுக்குச் செய்ய வேண்டிய தவங்களில் அவன் முயற்சி எண்ணப்படு" மென தன் சிஷ்யர் (ரலி) அவர்களுக்கு மறுமொழி கூறினார்கள்.

பொருளீட்டலில்லாது கைகட்டிக்கொண்டு பிறரிடம் யாசித்து சாப்பிடும் தவமூர்த்தியைப் பார்க்கினும் பொருளீட்டும் சாமர்த்தியனும் பிறருக்கு உபகாரியுமான மனத்தினரே சிரேஷ்டர்களாவர். (நாயக வாக்கியம்)

சிந்தனையாளிர்! செப்புதலெளிது; செய்தலரிது என்பது யாவரும் கூறிவருங் கூற்றேயாகும். ஆகையால் நாம் நம் நடைமுறையில் காட்ட வேண்டியது அத்தியாவசியமாகும். நம்மிஸ்லாமிய மதபோதனைகளை நழுவவிடுவதே நம்க்ஷீண திசைக்குரியகாரண மென்பது சொல்லாமலே தெரியவரும். இதோடு நில்லாது ஐக்கியம், சமத்துவம், தவம், முயற்சி போன்ற முன்னேற்றங்களை ஈண்டும் ஆராயப்புகுவோம். இன்ஷா அல்லாஹ்.

(தொடரும்)

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஜீவகாருண்யம்.

(தென்காசி. மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலிவரைவது.)

முற்கால மன்னர்கள் தம்நாட்டின் நிலைமையைத்தாமே நேரில் தெரிந்து கொள்ளும் பொருட்டு இராக்காலங்களில் மாறு வேஷத்துடன் வெளிக்கிளம்பி, நாடெங்கும் சுற்றிவருவது வழக்கம். எந்தக்குடும்பம் கஷ்டப்பட்டாலும் அவர்களுக்குத்தக்க உதவி செய்வதை அவர்கள் தங்கள் கடமையாகக் கொண்டிருந்தார்கள்.

உதாரணமாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப்பின் இரண்டாவது கலீபாவாக (அரசராக) இருந்த ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களும் 'ஸைத்,' என்ற ஒரு இஸ்லாமிய பக்தரும் ஓர் இரவு மதீனாநகருக்கருகிலுள்ள "ஜும்ரயேவாக்" என்ற இடத்தருகிற்சென்று கொண்டிருக்கையில் ஒரு குடிசையில் சிறிய வெளிச்சம் தென்பட்டது. அது "யாதாயிருக்கலாம், பார்த்துவருவோம்" என்று பேசிக்கொண்டே இருவரும் அக்குடிசைக்குச் சென்றனர்.

அது ஒரு மிகவும் ஏழையின் குடிசை. அதில் ஒரு மாதும் பல குழந்தைகளும் பிழைப்புக்கு வழியின்றி அன்ன ஆகார மின்றி குற்றுயிராயிருந்தார்கள். அங்குள்ள குழந்தைகள் பசியால் துடிக்கின்றன. இன்னும் சில தினங்களில் உயிர்துறந்துவிடும் போலிருக்கின்றன. ஒரு மூலையில், ஒரு அடுப்பு எரிந்து கொண்டிருக்கிறது. அதன்மேல் ஒரு பாத்திரத்தில் நிரம்ப ஜலம் கொதிக்கிறது.

அங்கிருந்த மாதைப்பார்த்து ஹஜ்ரத் அவர்கள், "ஏன் இக் குழந்தைகள் அழுகின்றன? அப்பாத்திரத்தில் எதற்காக ஜலம்வைத்துக் காய்ச்சப்படுகிறது?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஸ்திரீ "எங்களுக்கு அன்ன ஆகாரம் கிடையாது. நானும் இக்குழந்தைகளும் பசிப்பிணியால் வாடுகின்றோம். எங்களுக்கு உதவி செய்பவர் இவ்வுலகில் யாருமே கிடையாது. இக்குழந்தைகளின் கவனத்தை வேறுவழியில் திருப்ப இந்த ஜலத்தைக் கொதிக்கவைத்துக் கொண்டிருக்கிறேன்" எனக்கூறினள்.

நள்ளிரவு! எங்கும் ஒரே இருள் சூழ்ந்திருந்தது. மதீனா நகருக்கும் அக்குடிசை இருக்குமிடத்துக்குமோ, வெகுதூரம். ஒழுங்கான பாதைகிடையாது. குடிசையில் கண்டதுக்க சம்பவம் ஹஜ்ரத் அவர்களின் இதயத்தைப் பிளந்தது.

ஹஜ்ரத் அவர்கள் தங்கள் சகாவுடன் மதீனா நகரின் பைத்துல்மால் (பொதுநிதி) அறைக்கு விரைந்து சென்று, அங்குள்ள யாவருக்கும், தெரியாமல், மாவு மூட்டைகளிருக்குமிடம்

சென்றார்கள். ஒரு பெரிய மூட்டையை 'ஸைத்' அவர்களுக்குக்காட்டி அதைத்தன் முதுகின்மீது ஏற்றிவைக்கும்படி செய்தனர். 'ஸைத்' அம்மூட்டையைத் தான் சுமப்பதகா எவ்வளவோ கூறியும் அரசர் கேட்கவில்லை. என்னே மன்னவரின் கருணை !

முள்ளும் கல்லும் நிறைந்த பாதையை, சுமையுடன் இருட்டில் கடந்து குடிசையில் நுழைந்தனர் இருவரும். உடனே, வேந்தர் சிரம பரிகாரம் செய்து கொள்வதற்குப் பதிலாகத் தான் அடுப்படியிற் சென்று ரொட்டியை சுட ஆரம்பித்தார். அச்சமயம் அடுப்பும் அணைந்துவிட மறுபடி அரசர் அடுப்பு ஊதவும் நேரிட்டது! கண்களிலோ, நீர் பெருகுகின்றது. தாடிவழியாக புகைகிளம்புகிறது. ஆயினும் மன்னவரின் மனவுறுதி வேறு விதமாயிருந்தது! முடிவில், பெரிதும் சிரமத்துடன் ரொட்டி சுட்டு முடித்தனர். 'ஸைத்' தடுத்துச்சொல்ல இயலாதவராகி விட்டார். குடிசையிலுள்ளவர்களோ, உபகாரம் செய்பவரை வரவேற்று வாழ்த்துகிறார்கள். அவர்கள் இத்துணைக் கஷ்டம் எடுத்துக்கொள்ளும் அப்பரோபகார புருஷரை இன்னாரென்று அறிந்து கொள்ளவில்லை போலும்!

இக்குழந்தைகள் வயிறார ஆகாரம் தின்று புதிதாக வந்த இருவருடனும் கூடிக்குலாவின. அம்மாதும், பெரியாரை வாழ்த்தினள். ஹஜ்ரத் அவர்களும் விடை பெற்றுக்கொண்டு பொழுது புலருமுன் மதீனாநகர் திரும்பினர். முஸ்லிம்காள் !

ஜீவகாருண்யம், கருணை என்றால் இவ்வாறல்லவோ இருக்க வேண்டும். பெருமைக்காகச் செய்யும் தருமம் தருமமல்ல. உபகாரம், உண்மையில் வேண்டிய இடத்தில் செய்யவேண்டும். ஏழைமக்களை உங்கள் சகோதரர்களாகப்பாவியுங்கள். ஹஜ்ரத்உமர் (ரலி) அவர்கள் அனுஷ்டித்துக்காட்டிய வழியைப் பின்பற்றுங்கள். அவர்கள் பெரிய மன்னராகவிருந்தும் அவர்கள் செய்த தொழிலை நன்கு கவனியுங்கள். இறைவன் நம்மவர்கட்கு உத்தம பக்தர்களைப்பின்பற்றியொழுக நல்லருள் பாலிப்பானாக. ஆமீன் வஸ்ஸலாம்.

காதியானி மிர்ஜாவின் வழிகெட்ட கொள்கையைப்பற்றிய விளக்கம்

(மௌலானா மஹ்மூதுல் ஹஸன்சாகிப்)

இவ்வியாசகர்த்தா தம்முடைய இக்கட்டுரையில் மிர்ஜாகுலாம் அஹ்மது ஆரம்பத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உலகத்தாருக்குக் கருணையாக இருந்தார்கள் என்பதையும், இறுதி நபி யென்பதையும் ஒப்புக்கொண்டிருந்ததுடன், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின்னர் எவ்விதமான நபி தோன்றுவதாக நம்பினாலும் அந்த நம்பிக்கை மதப் புரட்டும் மதத்தைவிட்டு விலகுவதுமாகிய கொள்கையாகும் என்று நம்பினர் என்பதையும் பின்னர் அவர் தம்முடைய இக்கொள்கையை மாற்றிக்கொண்டு தன்னை நபியென்று தாவாச் செய்த விபரத்தையும் விளக்கியிருக்கிறார். இவ்விதழில் முதன் முற்பகுதி பிரசுரிக்கப்படுகிறது. (ப-ர்.)

சுத்த சத்திய இஸ்லாம் மதத்திற்கு அநேகம் ஆபத்துகள் வந்தன. ஆயினும், அவைகள் சத்தியத்திற்கு முன் நிற்க முடியவில்லை. மேலும், ஷைத்தானிய கூட்டம் பிரவாகம் போன்ற சக்தியுடன் இஸ்லாத்தை எதிர்த்தும் அக்கூட்டம் இனி என்றென்றுமே தலையெடுக்கா வண்ணம் அடிபட் டொழிந்தது. கணக்கில்லாததும் வரையரையில்லாததுமான இந்த ஆபத்துகளில் பொய்யர்களாலும், தஜ்ஜால்களாலும் உண்டான ஆபத்துகள் தான் மிகவும் தீங்கிழைப்பனவாக இருந்தன. இந்த ஜனங்கள் பற்பல தோரணையிலும் ரூபத்திலும் தங்களது கொள்கைகளைப் பிரசாரம் செய்தனர். சிலர் ஏழைகளையும் அனாதைகளையும் ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு பிரசாரத்தி லிறங்கினர்.

சிலர் சீர்திருத்தம் என்ற பெயரைக் கூறிக் கொண்டு வந்தனர். தங்களது மன அவாவுக்கு அடிமைப்பட்டவர்களும், இப்லீசின் சந்ததியினருமான இவர்கள் பல முறைகளால் அறிவிலா மாக்களிடம் தங்களது வழிகேடான கொள்கையைப் பிரசாரம் செய்தனர். மேலும், இந்த மதங்களெல்லா வற்றையும் வயிறு வளர்த்தல், கௌரவ வேட்கை, பேராசை ஆகியவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கருவிகளாக ஏற்படுத்தி இருந்ததால் இவைகள் நீண்டகாலம் நிலைநிற்கவில்லை. நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஜீவிய காலத்தில் சுயநலமும் பேராசையும் கொண்ட 'முஸைலமத்துல் கத்தாப்' என்பவன் முஸ்லிம்கள் பெருகி, முன்னேறி வருவதைப் பார்த்து அவனுக்கு நாவில் ஜலம் ஊறிற்று. சாமான்ய ஜனங்களது ஜோபியை யடிப்பதற்கும், அவர்களது பொருள்களைக் கொள்ளை கொள்வதற்கும் ஏற்ற மார்க்கம் நபியாகுவதுதான் என்று அவன் கருதி தனக்கு நபிப் பதவி கிடைத்திருப்பதாகப் பொய் தாவாச் செய்ததுடன் இதனைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு ஒரு கடிதமும் எழுதினன். அக்கடிதம் வருமாறு:—

அல்லாஹ்வின் றஸூல் முஸைலமா அல்லாஹ்வின் றஸூல் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எழுதிய கடிதம். அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி. நான் நபிப்பதவியிலும் றஸூலாக இருப்பதிலும் தங்களுக்குப் பங்காளியாக இருக்கிறேன். தங்களது குறைஷிக் குலத்தாரின் போக்கு மிகவும் கவலையளிக்கக்கூடியதாக இருக்கிறது. அவர்கள் அறப்தேசம் முழுவதையும் கவர்ந்து கொள்பவர்களாகஇருப்பதுடன் அதன்எல்லையையும்கடந்து விடுகிறார்கள். ஆகவே நான் நபிப்பதவியில் தங்களுக்குப்பங்காளியாக்கப்பட்டிருப்பதால் பாதி ராஜ்யத்தை எனக்குக் கொடுத்து விடவேண்டும்".

இந்தக் கடிதத்திற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு மறுமொழி கொடுத்தார்கள்:—

"அல்லாஹ்வின் றஸூல் முஹம்மது (ஸல்) அவர்கள்), பொய்யன் முஸைலமாவுக்கு அனுப்பிய கடிதம். நேர் வழியைப் பின் பற்றுகிறவர்களுக்கு ஸலாம் உண்டாவதாக. ராஜ்யம் அல்லாஹு தஆலாவுக்குச் சொந்தமானதாக விருப்பதால் அவன் இஷ்டப்பட்டவருக்கு அதனை கொடுக்கிறான் என்பதையும், கடைசி முடிவு பயபக்தியுள்ளவர்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதையும் உணர்ந்து கொள்".

இந்தப் பொய்யன் தனது எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் பிரசாரம் செய்து ஆயிரக்கணக்கான ஜனங்களைத் தனது ஷைத்தானிய வட்டத்தினுள் சேர்த்துக் கொண்டான். கடைசியாக ஸித்தீக் அக்பர் (றலி) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில் இஸ்லாமிய சைனியங்களை எதிர்த்து யுத்தமும் செய்தான். அவனது சைனியங்களிலுள்ள போர் வீரர்கள் எண்ணிக்கையில் முஸ்லிம் முஜாஹிதுகளைப் பார்க்கினும் அதிகமாக இருந்தனர். ஹஜ்றத் வஹ்ஷீ (றலி) அவர்களது அம்புக்குக் குரியாகி நரகத்தை யடைந்தான். ஹஜ்றத் வஹ்ஷீ (றலி) அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவுவதற்கு முன்னர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சிறிய தந்தையான ஹஜ்ரத் ஹம்ஜா (றலி) அவர்களை உஹதுச்சண்டையின் போழ்து ஷஹீதாக்கினர். ஆகவே, பொய்யன் முஸைலமாவை எதிர்க்க முஸ்லிம்கள் கிளம்பியபோது முற்கூறப்பட்ட ஹஜ்றத் வஹ்ஷி (றலி) அவர்களும் கூடச்சென்று ஹஜ்றத் ஹம்ஜா (றலி) அவர்களைத் தாக்கிய அதே ஆயுதத்தால் பொய்யன் முஸைலமாவையும் சமயம் பார்த்துத் தாக்கினர். அதற்குப் பிறகு வேறொரு அன்ஸாரியும் பொய்யன் முஸைலமாவை வாளாயுதத்தால் தாக்கினர்.

இவ்விஷயத்தைக் குறித்து ஹஜ்றத் வஹ்ஷி (றலி) அவர்கள் "நான் இஸ்லாத்தைத் தழுவியபின்..............அதே ஆயுதத்தைக் கொண்டு பொய்யன் முஸைலமாவை வேலை தீர்த்தேன்? என்றுகூறி இருக்கிறார். ஹஜ்றத் ஹம்ஜா (றலி) அவர்களை ஷஹீதாக்கிய குற்றம் தன்னிலிருந்து நிகழ்ந்ததற்காக ஹஜ்றத் வஹ்ஷீ (றலி) அவர்களது இருதயத்தில் துக்கமும் வருத்தமும் இருந்து கொண்டிருந்தது. ஆனல், பொய்யன் முஸைலமாவை மரணத்தின் பாதாளத்தில் இறக்கியபோது "இந்தப் பொய்யனை நான் கொன்ற இச் செய்கையை இறைவன் என்னுடைய அந்தபாவத்திற்குப் பரிகாரமாக ஆக்குவானக" என்று கூறினர்.

"ஹஜ்ரத் அபுல்பஷர் ஆதம் (அலை) அவர்கள் முதல் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் வரை அநேகம் நபிமார்களும் றஸூல்மார்களும் அனுப்பப்பட்டனர். அந்த நபிமார்களெல்லோரும் ஒரே ஒரு செங்கல் மாத்திரம் வைக்கப்படாமல் பூர்த்தியாகி இருக்கி ஒரு மாளிகையைப்

போலிருக்கிறார்கள். நானும் வந்தேன்; அந்தச் செங்கல்லும் வைக்கப்பட்டு விட்டது; அந்த மாளிகையின் கட்டிடமும் பூர்த்தியாகி விட்டது." என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்பதாக ஸஹீஹான ஹதீதில் வந்திருக்கிறது. "இன்றையதினம் உங்களுக்கு உங்களது மார்க்கத்தைப் பூர்த்தி செய்தேன்; இன்னும் எனது அருட்கொடையை நான் நிறப்பமாக்கினேன்; உங்களுக்கு இஸ்லாமை சன்மார்க்கமாகப் பொருத்திக் கொண்டேன்" என்பதாக பரிசுத்த இறைவனும் திருகுர் ஆனில் கூறியுள்ளான். மார்க்கம் பூர்த்தியாகி அருட்கொடையும் நிறப்பமாகி விட்ட பின்னர் புதியமதத்திற்கும் புதிய நபிக்கும் அவசியம் எங்கே இருக்கிறது? குர் ஆன்ஷரீபிலுள்ள சில ஆயத்துகள் வேறு சில ஆயத்துகளுக்கு வியாக்யானமாக இருக்கின்றன. அவைகளில் சிலவற்றை நான் ஈண்டு எடுத்தெழுதுகிறேன். அவைகளிலிருந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களில் கடைசியானவராக இருக்கிறார்கள் என்பது வெளியாகும். எல்லா உலகங்களையும் பரிபாலிப்பவனான அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் தகும்.

எல்லா உலகங்களையும் பரிபாலிப்பவன் இருக்கும்போது நமக்கு எந்த மரமோ, கல்லோ, தெய்வமாகுவதற்குத் தேவையில்லை.

மக்காமு அல்லமாவைக்குறித்து இறைவன் "உலகத்தாருக்கு நேர் வழி காட்டி" என்பதாகக்கூறி இருக்கிறான். இந்தச்சிறப்பான தலைநகரிருக்கும்போது நமக்கு வேறு தலை நகரிருக்க வேண்டிய தேவையில்லை.

"இது உலகத்தாரனைவருக்கும் உபதேசமாக இருக்கிறது." என்று திரு குர் ஆனைப் பற்றிக்கூறப்பட்டிருக்கிறது. இந்தப்பரிபூரணமான வேதம் இருக்கும்போது வேறு வேதம் இருக்க வேண்டிய அவசியமில்லை.

நபித்துவம் முடிவடைந்து விட்டதாக மிர்ஸா குலாம் கூறியிருப்பது.

"எனக்குப் பின்னர் எத்தகைய நபியும் வரமாட்டார்" என்பதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பன்முறை கூறியிருக்கிறார்கள். "எனக்குப்பின் எத்தகைய நபியுமில்லை" என்ற ஹதீது நிஜமானது என்ற விஷயத்தில் எவரும் ஆக்ஷேபனை செய்ய முடியாதபடி அவ்வளவு பிரபல்யமாக இருக்கிறது. ஒவ்வொரு பதமும் "கதஇ" யாக (உறுதியானதாக - நிஜமானதாக - சந்தேகத்திற்கு இடமில்லாததாக) இருக்கிற திருகுர் ஆனானது "எனினும், அவர் அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களில் கடைசியானவராகவும் இருக்கிறார்" என்ற ஆயத்தின் மூலமாக இவ்விஷயத்தை ஊர்ஜிதம் செய்திருக்கிறது. ஆகவே, நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொண்டு நபித்துவம் முற்றுப்பெற்று விட்டது என்பதே சத்தியமாகும். இஸ்லாமிய கொள்கையில் சம்மந்தப்பட்டுள்ள எல்லா விஷயங்களையும், நான் ஒப்புக்கொள்கிறேன்; சுன்னத்துவ ஜமா அத்துக்காரர்களின் கொள்கையை அங்கீகரிக்கிறேன்; குர் ஆன் ஹதீது ஆகியவைகளின்படி ருஜூவாகி இருக்கிற இதர எல்லாவிஷயங்களையும் அங்கீகரிக்கிறேன்; ஸெய்யிதுனா வ மௌலானா முஹம்மதுர் றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபித்துவத்தை அல்லது ரிஸாலத்தை தாவாச் செய்கிற எவரையும் நான் பொய்யர் என்பதாகவும் காபிர் என்பதாகவும் கருதுகிறேன்; வஹியும் ரிஸாலத்தும் ஹஜ்றத் ஆதம் ஸபியுல்லா அவர்களிலிருந்து ஆரம்பமாகி ஹஜ்றத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களிடம் முற்றுப் பெற்று விட்டது, என்பது எனது உறுதியான நம்பிக்கை; இதர சுன்னத்து வஜமா அத்துக்காரர்களுக்கு இவ்விஷயங்களில் இருக்கிற அபிப்பிராயமே எனக்கும் இருந்து வருகிறது; இப்பொழுது நான் அடியிற்கண்ட விஷயங்களை முஸ்லிம்களுக்கு முன்னிலையில் அல்லாஹ்வின் வீட்டில் (டில்லி ஜாமிஉ மஸ்ஜிதில்) பகிரங்கமாகக்கூறுகிறேன்; ஜனுப் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களது நபித்துவத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்; "கத்த முன்னுபுவ்வத்"தை ஒப்புக்கொள்ளாதவர் மார்க்க மற்றவர் என்றும், இஸ்லாத்தின் வட்டத்திற்குப் புறம்பானவர் என்றும் நான் கருதுகிறேன்.

1891-ம் வருஷம் அக்டோபர்மீ 21 தேதி டில்லி ஜாமிஆ மஸ்ஜிதில் நடை பெற்ற கூட்டத்தில் மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானி சமர்ப்பித்த எழுத்து மூலமான ஸ்டேட்மெண்ட் "தப்லிகேரிஸாலத்" என்னும் புத்தகத்தின் 2-வது வால்யூம் 44-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது வருமாறு: குர்ஆன் ஹதீதுக்கு மாறாக இருக்கிற சகலமும் பொய்யென்பதாகவும், இஸ்லாத்திற்குப் புறம்பானதாகவும் நான் உணர்கின்றேன். அப்படியிருக்க நான் முஸ்லிம்களில் ஒருவனாக இருந்து கொண்

டிருக்கும்போது நான் எவ்விதம் நபித்துவத்தை தாவாச் செய்ய முடியும். என்று கூறியிருக்கிறார்.

நேயர்காள் !

மிர்ஜாயிகள் குலாம் அஹ்மது காதியானியின் புத்தகங்களை குர்ஆன் ஹதீது ஆகியவைப்பார்க்கினும் அதிகமாகக் கௌரவிக்கின்றனர். குலாம் அஹ்மதுவின் நூல்களிலிருந்து நாம் மேலே எடுத்தெழுதியிருப்பவைகளை அவர்கள் படித்துப் பார்த்து மிர்ஜாசாகிப் காபிராக இருந்தாரா அல்லது முஸ்லிமாக இருந்தாரா என்ற விஷயத்தைத் தாங்களாகவே முடிவு செய்து கொள்வார்களாக. மிர்ஜாயிகளே ! தக்வாவின் வழியைக் கடைப் பிடியுங்கள். இல்லையேல் கியாமத்து நாளில் நீங்கள் கைசேதமடைவீர்கள்.

(தொடரும்)

பாலஸ்தீனத்தில் அடக்கு முறை

பாலஸ்தீனில் ஸர் ஆர்தர் வாச்சூபின் நிர்வாகத் திறமையின்மையால் இந்தியாவிலுள்ள விவேகிகளுக்கு துக்கம் கோபம் ஆகிய உணர்ச்சிகளுண்டாகி இருக்கின்றன. பாலஸ்தீனில் ஏற்பட்டுள்ள நிலைமையானது பிரிட்டிஷ் மந்திரிச் சபை மிகவும் சீக்கிரமாக ஏதேனும் ஒரு நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தையும், நிராயுத பாணிகளான நகர வாசிகளுக்கு விரோதமாக நேர்மையற்ற முறையில் பலத்தை உபயோகிப்பதானது இஸ்லாமிய உலகில் பரபரப்பையும் உண்டாக்கி வைத்திருக்கிறது.

பாலஸ்தீனி லேற்பட்டுள்ள உள்நாட்டுக் கலகத்தின் குற்றம் ஸர். ஆர்தர் வாச்சூபின் நிர்வாகத்தின் பேரிலேயே இருக்கிற தென்பது நமது அபிப்பிராயம். ஸர் ஆர்தர் வாச்சூபின் நிர்வாகமானது இஸ்லாமிய உலகில் கிரேட் பிரிட்டனுக்கு விரோதமான உணர்ச்சியை உண்டாக்கி இருக்கிறது. மேற்பார்வை அதிகாரத்தை அநியாயமான தோரணையில் ஸர் ஆர்தர் உபயோகித் திருப்பதற்கு சார்பு நாடுகளிலும்கூட உதாரணம் கிடைக்க மாட்டாது. பிரிட்டிஷ் மந்திரிகள் தனிப்பட்ட முறையிலும், பிரிட்டிஷ் மந்திரிச் சபை கூட்டு முறையிலும் அளித்துள்ள எல்லா வாக்குறுதிகளையும் அவர் அஞ்சாமல் மீறிவிட்டார்.

பாலஸ்தீன் பிரசினையைப்பற்றி மிக விரிவாக ஆராயவேண்டும் என்று நினைக்கிறோம். இப்படி ஆராய்வதற்கு இஸ்லாமிய உணர்ச்சி மாத்திரம் காரணமில்லை. பலவந்தமாக ஆட்சி புரிவதை நமது எல்லைக்குள் நாம் வரவிடுவதா அல்லது வெளியிலிருக்கும்போதே அதனை எதிர்பதா என்பதுதான் நம்முன்னிருக்கும் பிரசினை. பலவந்தமாக ஆட்சிபுரியும் தன்மையானது மற்றொரு ஆசிய நாட்டைத் தனக்கு வேட்டைப் பிரயாணியாக்கிக் கொள்ள இந்தியா அனுமதித்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியமா? சென்ற 1920 ம் வருஷத்தில் விரும்பத்தகாத அரசியல் திட்டத்தை எதிர்த்து இந்தியா போராடியதுபோல் மற்றொரு முறை நடத்த வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

எதேச்சாதிகாரம்

அந்நிய அரசாங்கம் தனக்குக் கீழுள்ள பிரஜைகளின்மீது பலத்தையும் நிர்ப்பந்தத்தையும் பிரயோகிப்பதற்கு எதேச்சாதிகாரம் என்று பெயர். அதில் கபடச் செய்கைகளுக்கும், நேர்மையின்மைக்கும் எவ்வித வரையறை கிடையாது. சக்தியையும் பலத்தையும் நம்பி உண்டாகின்ற இந்த எதேச்சாதிகாரத்தை நாம் எதிர்க்கவேண்டும். இந்த அடக்குமுறை இதரர்கள் உயிர் வாழ்தல், சுதந்திரம் ஆகியவைகளைக் கொள்ளை யிடும்படியான எதேச்சாதிகாரம் உலக சமாதானத்திற்கு ஆபத்தானதாக இருக்கின்றன. ஆதலின், நாம் அதனை வெறுக்கும் விஷயத்தில் நியாயக்கக்ஷியிலேயே இருக்கிறோம்.

பாலஸ்தீன் பிரசிகினையானது நம்மைப்பாதிக்காது என்றும், இது இஸ்லாமிய உலகத்தை அல்லது முஸ்லிம்களை மாத்திரம் பொறுத்த

பிரசினை என்ற முறையில் இதனை நினைக்க வேண்டாமென்றும் நாம் இந்தியத்தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். கிலாபத் இயக்க காலத்தில் தலைவர்கள் இந்தியா முழுவதையும் இதில் பங்கெடுத்துக்கொள்ளும்படிச் செய்த அழைப்பின் உணர்ச்சியை நாம் மறுபடியும் உயிர்ப்பிக்க விரும்புகிறோம். இந்தியாவின் கிளர்ச்சியும் அனுதாபமும் இந்தியாவையும், இதர ஆசியா நாட்டையும் அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். இந்தியாவானது பலஹீனமாகவுள்ள ஆசியா நாடுகள் விஷயத்தில் தனக்குள்ள நல்லெண்ணத்தை எப்பொழுதும் காண்பித்துக் கொண்டேவந்திருக்கிறது. இவ்விஷயத்தில் எப்பொழுதும் தவறியதே இல்லை. இந்தியாவில் வசித்துக்கொண்டிருக்கும் லக்ஷக்கணக்கான ஆசியா ஜனங்கள் இப்பொழுதும் இந்தியாவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் அவர்களைக்கைவிட்டு நம்பிக்கை யிழக்கும்படிச் செய்யலாகாது.

இனி, நமது நிலைமையைக் தெளிவுபடுத்துகிறோம். இப்பொழுதிருக்கும் நிலைமை எவ்வளவு அபாயகரமான தென்பதைப்பற்றி நாம் உணரவே இல்லை. பிரிட்டனுடையவும் யூதர்களுடையவும் முயற்சிகள் சமூகம், மதம் என்ற தோரணையில் உண்டுபண்ணியது அந்த பழைய வேற்றுமையேயாகும் என்பது முன்னிருக்கிறது. பாலஸ்தீனத்தை உள்நாட்டுச்சண்டை என்ற நரகத்தில் இது கொண்டுபோய்த்தள்ளிவிடும். ஆனல், பாலஸ்தீனம், ஷாம், எகிப்து ஆகியவைகள் சுயேச்சையாக இருப்பது இந்தியாவின் சுயேச்சையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஒரு நோக்கத்தை நம்முன் வைத்துக்கொண்டு நாம் சமீப கீழ்தேசங்களில் வாழும் ஜனங்களுடன் கூட்டுத்திட்டம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தியத்தலைவர்களை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

நாம், ஸர் ஆர்தருடைய நிர்வாக முறை குற்றமானது என்பதாகக் கூறி இருக்கிறோம். ஆதலின், இப்பொழுது நாம் இக்குற்றத்தை ருஜூப்படுத்துவதற்காக ஜனத்தொகை விகிதாசாரத்தைச்சமர்ப்பிக்கின்றோம்.

பால் போர் அறிக்கை.

சென்ற 1917-ம் வருஷத்தில் பால்போர்பிரபு அடியிற்கண்ட அறிக்கையைப் படித்தார் :—

"பாலஸ்தீனத்தில் யூதர்களின் தாயகமேற்படுத்துவதை அரசர் பெருமானின் அரசாங்கம் ஆதரிக்கும் தோரணையில் பார்க்கிறது. இந்நோக்கம் நிறைவேறுவதற்கான வசதிகளையுண்டாக்குவதில் தனது சிறந்த முயற்சிகளையெல்லாம் அமலில் கொண்டு வரும். ஆனல், இவ்விதம் செய்வதால் பாலஸ்தீனிலுள்ள யூதர்களல்லாத சமுதத்தினரின் சிவில் உரிமைகளிலும், மத உரிமைகளிலும் எவ்விதத்திலும் தலையிடக்கூடியதும், இதர தேசங்களில் யூதர்களுக்குக் கிடைத்துள்ள பாத்தியதைகளும், அந்தஸ்துக்களும் இவர்களைப் பாதிக்கும்படியானது மான எந்தக் காரியத்தையும் அமலில் கொண்டுவரப் படமாட்டாது என்பதைத் தெளிவாக அவர்கள் (யூதரல்லாதார்) உணர்ந்துக் கொள்ள வேண்டும்".

பாலஸ்தீனில் வாழும் அறபியரின் சிவில் உரிமைகளிலும் மத உரிமைகளிலும் தலையிடப்படமாட்டாது என்பதை கிரேட் பிரிட்டன் இவ்வறிக்கையில் தெளிவாக உறுதி மொழி கூறி இருக்கிறது. யூதர்கள் பாலஸ்தீனில் குடியேறுவதற்கு அனுமதி கொடுக்கப் படும் என்பது மட்டிலும்தான் இந்த அறிக்கையால் விளங்குகிறது. பாலஸ்தீனத்தை யூதர் நாடாக ஆக்குவது இந்த அறிக்கையின் கருத்து என்பதாகப் பொருள் கொள்ள முடியாது.

இனி சர்வ தேச சங்கம் மேல்பார்வை அரசாங்கங்களுக்கு அளித்துள்ள அதிகாரங்களைப் பற்றிக் கவனிப்போம். மேற்பார்வை அரசாங்கங்களை மூவகை அந்தஸ்துள்ள அரசாங்கமாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் நாம் விவாதிப்பது முதலாவது அந்தஸ்திலுள்ள அரசாங்கத்தைப்பற்றியதே யாகும்.

பிரசிடேண்ட் வில்ஸனின் 14 நிபந்தனைகள்.

சென்ற 1918ஆு ஜனவரிமீ 8-தேதி பிரசிடேன்ட் வில்ஸன் தன்னுடைய 14 நிபந்தனைகளை அறிக்கை செய்தார். இவைகளின் 5-வது நிபந்தனை வருமாறு :—

"அரசாங்க தாவாவுடன் உரிமை கிடைக்க வேண்டியவர்களுக்கு சம்மந்தப்பட்ட ஜனங்களின் நன்மை அவசியமான முறையில் சமமாகக்கவனிக்கப்படும்."

அதிலுள்ள 12-வது நிபந்தனை வருமாறு:—

"பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழில் ஜனங்களின் சுயேச்சையான முன்னேற்றத்திற்கு

உறுதியானதும் தெளிவானதுமான சந்தர்ப்பம் அளிக்கப்படும்''.

இஃதிவ்வாறிருக்க, சரித்திர சம்மந்தமான சிலருஜுக்களைச் சமர்ப்பிக்கின்றேன். சர்வதேச சங்கத்தின் 22-வது பிரிவில் "அந்த தேசங்களின் சுபிக்ஷத்தாலும் முன்னேற்றத்தாலும் நாகரீகத்திற்கு பரிசுத்தமான ஒரு நம்பிக்கை உண்டாகின்றது. இந்த நம்பிக்கையை அமல் நடத்துவதற்குரிய ஜாமின் இந்த கவினன்டில் (மேல்பார்வையில்) சேர்த்து விடப்படும்''. என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே, சரித்திரப்பூர்வமான இம் மேற்கோள்களிலிருந்து சமீப கிழ்தேசங்களின் சுயேச்சை உறுதியாக—தெளிவாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது என்பது வெளிப்படை. இன்னும், அங்குள்ள மேற்பார்வை யரசாங்கங்கள் நிர்வாகிகள் என்ற முறையில் குறிப்பிட்ட ஒரு காலம்வரை காரியத்தைச் செய்து கொண்டிருக்கவேண்டும். ஸர் ஆர்தர் வாச்சூபுக்கு இவ்வுண்மைகள் நன்கு தெரியும் என்பது நமதபிப்பிராயம். நம்முடைய இவ்வபிப்பிராயம் சரியாக இருக்குமாயின், அவர் தமது அதிகார எல்லையை விட்டுக்கொடுக்காமலிருக்கவேண்டியது அவருடைய கடமையாகும். அவர் இவ்வதிகார எல்லையை விட்டுக் கடந்திருப்பாராயின் கிரேட் பிரிட்டனின் நற்கீர்த்திக்கு கறையுண்டாகுவதற்குப் பூரணமான பொறுப்பு அவர்மீதில் மட்டிலுமே ஏற்படுகிறது.

வேறு சில ஆதாரங்கள்

இந்த இடத்தில் நாம் சரித்திரப் பூர்வமான திட்டத்தைச் சமர்ப்பிக்கின்றோம். இத்திட்டத்தின் மூலமாகத்தான் கிரேட் பிரிட்டனுக்கு பாலஸ்தீனத்தின்மீது மேற்பார்வை அதிகாரம் கிடைத்தது. 1920-ம் வருஷத்தில் துருக்கி அரசாங்கத்திற் குட்பட்ட நாடுகள் கிரேட் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கு மிடையில் ஸான்ரிமோ என்ற இடத்தில் பங்கு போட்டுக் கொள்ளப்பட்டன. இப்படி பங்கு போட்டுக் கொண்டது இரகசிய சம்பாஷணையின் மூலம் நிகழ்ந்தது. பிரசிடென்ட் வில்ஸன் சமீப கீழ் தேசங்களுக்கு கிங்கிரைன் கமிஷனை அனுப்பினார். சுயேச்சையுள்ள ஷாம் பாலஸ்தீன் ஐக்கிய அரசாங்கம் ஏற்படுவதற்குச்சாதகமாக அறபியர்களது அபிப்பிராயமிருந்தது என்பது இக்கமிஷனின் ரிப்போட்டிலிருந்து தெரிய வருகிறது. இன்னும், பலஸ்தீனத்தை யூதர்களது நாடாக ஆக்கவேண்டும் என பிரிட்டன் கையாண்டுவரும் யூதமனப்பான்மையை அறபியர்கள் பலமாக எதிர்க்கிறார்கள் என்பதும் அதிலிருந்து தெரியவருகிறது. சுயேச்சை கிடைக்கவில்லையாயின் ஐக்கிய அரசியலமைப்பை ஆதரிப்பதாகவும் அறபியர்கள் கூறி இருந்தனர்.'' இந்த ரிப்போர்ட்டை அவர்கள் முதுகுப்புறம்பே போட்டு விட்டார்கள். ஒரு இரகசிய உடன் படிக்கையின் மூலம் பிரிட்டனும் பிரான்சும் சமீப கீழ்ப்பிரதேசங்களைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டன. அங்குள்ள ஜனங்களின் விருப்பங்கள் அடியுடன் புறக்கணிக்கப்பட்டன. அறபியர்களது சுயேச்சை இயக்கம் அக்கிரமமாக நசுக்கப்பட்டது.

லாசேன் மகாநாடு

1923-ல் லாசேன் மகாநாடு நடைபெற்றபோது ஐரோப்பிய அரசாங்கங்கள் பலஸ்தீன், ஷாம், எகிப்து, சூடான், ஸைப்பிரஸ், இராக் ஆகியவைகளிலுள்ள துருக்கியின் உரிமைகளைப்பலவந்தமாக அடக்கி விட்டன. பலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வழியில் இடையூறாக இருந்த கடைசிமுள்ளையும் அகற்றி விட்டு பிரிட்டிஷ் ஹைகமிஷனர் யூதப்பணத்தின் உதவியால் பலஸ்தீனத்தில் யூத அரசாங்கம் ஏற்படுத்துவதற்கான அஸ்திவாரக்கல்லை நாட்ட முன்வந்தார். அறபியரின் நிலங்களைக் கிரயத்திற்கு வாங்கியதானது தேசத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை யுண்டாக்கி விட்டது. யூதர்கள் பெருவாரியாகக்குடியேறியதால் யூதஜனத்தொகை அபாயகரமான முறையில் பெருகிற்று. 1926-ம் வருஷத்திலிருந்த ஜனத்தொகையையும் 1931-லிருந்த ஜனத்தொகையையும் கீழே குறிப்பிடுகிறோம்.

	1926	1931
முஸ்லிம்கள்	6050000	6769000
யூதர்கள்	40000	175000

அறபியருக்குப் பன்முறை உறுதி மொழி கூறியுங்கூட பால்போர் அறிக்கையானது பலஸ்தீனத்தை யூத நாடாக ஆக்குவதற்கு முகமூடிபோன்ற முறையாக இருந்த தென்பது வெளிப்படை.

வெள்ளைக் கடுதாசி

யூத ஏஜன்ஸிக்கும் பிரிட்டிஷ் ஹை கமிஷனருக்கு மிடையில் நடைபெற்ற இரகசிய உடன்

படிக்கையை ஆதரிக்கும் சக்தியானது 1929-ல் அறபியர்களுக்கு பதில் சொல்லிற்று. பொருளாதார முறையில் இரு சக்திகளேயும் (யூதர் அறபியர்) நாசம் செய்துகொண்டிருந்தது. நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்த அமைதியின்மையை ஹைகமிஷனரால் போக்க முடியாமல், அறபியர்களின் கலகத்தை ஆயுதந் தாங்கிய சக்தியால் அடக்கினர். பிறகு, 1930-ல் சர்வதேச சங்கம் வற்புறுத்திய தன் பேரில் வெள்ளைக் கடுதாசி என்ற முறையில் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிக்கையைப் பிரசுரித்து அதில் தனது கொள்கையை வெளியிட்டது.

"யூதர்கள் குடியேறுவதானது அறபியர்களது வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணமாக எச்சமயத்தில் அமைந்தாலும், யூதர்களது வேலையில்லாத் திண்டாட்டம் அறருயருக்குக் கிடைக்கும் கூலியைப் பாதித்தாலும் யூதர்களைக் குடியேற்றுவது நிறுத்தப்பட்டுவிடும். கூடிய சீக்கிரத்தில் பலஸ்தீனத்தில் ஜனப் பிரதிகளுக்குக் கட்டுப்பட்ட அரசாங்கம் ஏற்படுத்தப்படும்" என்று வாக்குறுதியளிக்கப்பட்டது.

மேலே நாம் சமர்ப்பித்துள்ள ஆதாரங்கள், ஹைகமிஷனரின்மீது நாம் சுமத்தியுள்ள குற்றம் நியாயமானதுதான் என்பதை ருஜூப்பிக்கப்போதுமானவை என்று நினைக்கிறோம். இங்கிலாந்தின் ஜீவியம் யூத உலகத்தின் பாலுள்ள அன்புடன் இணைக்கப்பட்டு, கிறிஸ்துவர்களுக்கு மாறு செய்வதை அவர்கள் (யூதர்கள்) உண்மையாகவே வெறுப்பவர்களாகி விட்டால் தங்களது அரசாங்கத்திற்குள் அவர்களுக்கு பிரிட்டிஷார் தாயகம் ஏற்படுத்தாம விருப்பது ஏன்? என்று வினவுகின்றோம். யூதர்களது குடியேற்றத்தை நிறுத்தாவிடில் கிரேட் பிரிட்டன் தனது உத்தியோகஸ்தர்களது செய்கைகளுக்கு மிகவும் அதிகமான கிரயம் கொடுக்க வேண்டிய தேற்படும் என்பதையும், எதேச்சாதிகாரம் செலுத்துவதற்குரிய காலம் விரல் விட்டெண்ணக் கூடிய அளவிலேயே இருக்கிறது என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம். இங்கிலாந்து இக்காலத்திலுள்ள எல்லா அரசாங்கங்களிலும் அதிகவலிமை பொருந்தியது. அபிசினியாவினுள்ள குற்றமற்ற நிராயுதபாணிகளான ஜனங்களின்மீது மனிதத்தன்மையற்ற முறையில் செய்யப்பட்ட தாக்கை அது ஆக்ஷேபித்திருக்கிறது. இப்பொழுது எதேச்சாதிகார முறையின் மாணம் ரத்தப்பழியுடன் முடியுமா அல்லது அமைதியாகவும் மௌனமாகவும் முடியுமா என்பது மட்டிலும் இப்பொழுது உலகுக்குப் பதில் சொல்லவேண்டியதாக இருக்கிறது. இதற்கு எதிர்காலம் பதில் சொல்லும்.

"நியூ ஆர்டர்"

இஸ்லாமியப் பிரசாரம்.

இது போழ்து ஐரோப்பா, இந்தியா, ஆப்பிரிக்கா முதலியபலநாடுகளிலும் இஸ்லாம் மிகவிரைவாகப் பரவிக்கொண்டிருக்கிறது. முஸ்லிம் அல்லாத வர்க்கத்தாரில் ஒரு பெருங் கூட்டத்தினரோ அல்லது பிரபலஸ்தரோ இஸ்லாத்தைத் தழுவின செய்தி தினசரி பத்திரிகைகளில் பிரசுரமாகிக் கொண்டிருப்பது ஒன்றே இதற்குப்போதிய அத்தாட்சியாகும். இஸ்லாம் நாளுக்கு நாள் பெருகி வருவது சந்தோஷமளிப்பதாகவும் ஆச்சரிய மூட்டுவதாகவுமிருக்கிறது. முஸ்லிம் அல்லாதார் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவினதும் அவர்மறுவுலக முக்திக்கான மார்க்கத்தை அடைந்து விடுவதைக் கண்டு முஸ்லிம்கள் தங்களது உண்மையானதும் அந்தரங்க சுத்தியானதுமான அபிமான உணர்ச்சியால் சந்தோஷமடைகின்றனர். ஆதலின், தற்போதை இஸ்லாமிய அபிவிருத்தியானது முஸ்லிம்களுக்குச் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையுமுண்டாக்குவதாக இருக்கிறது. இஸ்லாத்தினுடைய இவ்வெற்றியானது எவ்வித முயற்சியும், பிரசாரப் பிரயத்தனமுமின்றி ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் இது ஆச்சரியகரமாகவுமிருக்கிறது. இஸ்லாம் தனது வெற்றிக்காகப் பிரசாரகர்களின் முயற்சியின்பாலும், முஜாஜிது

களின் உழைப்பின் பாலும் அதிகம் தேவை யுள்ளதாக இல்லை. அது தனக்குள்ளாகவே அனேகம் சத்தியங்களையும் உண்மைகளையும் வைத்துக்கொண்டிருக்கிறது. ஆதலின், அது தானகவே பிறரை வசீகரித்துக் கொள்ளும். அதிலிருக்கும் பிரகாசத்தைக் காணும் எவரும் அதற்முன் தங்களது சிரசைத்தாழ்த்தாமலிருக் க முடியாது. ஆதலின், இப்பொழுது செய்ய வேண்டிய முக்கிய வேலை என்ன வென்றால், இஸ்லாத்தின் சத்திய வழியில் கிடக்கும் முட்களையும் கற்களையும் அகற்றி விட்டு அதற்குரிய வழியைச் சுத்தப் படுத்துவதேயாகும். அதாவது அதனுடைய சத்திய அழைப்பை ஜனங்களது செவிகளுக்கெட்டச் செய்வதே யாகும். பிறகு, இருதயங்களுக்குட் செல்லும் வேலையை அது தானகவே கவனித்துக் கொள்ளும். இது போழ்து உலகம் முழுவதிலும் இஸ்லாத்தின்பால் ஒரு நல்ல உணர்ச்சி பாவி இருக்கிறது. தற்போதைய வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் இவ்வுணர்ச்சியை உண்டாக்கி இருக்கின்றன வென்று தோன்றுகிறது. ஐரோப்பாவானது பிரகிருதி சம்மந்தமான தனது முன்னேற்றத்தில் விரைந்து சென்று கொண்டிருந்தாலும் அது ஆத்மார்த்த அல்லல்களிலும் மன வமைதியின்மையிலும் அதிகம் பீடிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஆகவே, ஆத்மசாந்தியையும், இவ்வுலகத்தைய கஷ்ட நிவாரணத்தையும் அளிக்க வல்லமதம் இஸ்லாத்தைத்தவிர்த்து வேறொன்றிருப்பதாகக் கண்ணுக்குப் புலப்படவில்லை.

இந்தியாவிலும் சத்திய மதத்தைத் தேடுவதில் இரவும் பகலும் முயற்சி செய்து கொண்டிருக்கிற படித்த வர்க்கத்தாரில் ஒரு கூட்டத்தினரைத் தவிர்த்து, கோடிக்கணக்கான ஜனத்தொகையுள்ள தீண்டாதார்கள் ஹிந்து மதத்தில் தங்களுக்குள்ள நெருக்கடியைச் சகித்துக் கொள்ள முடியாமல் தங்களுக்கு மனித உரிமையையும் உண்மையான சமத்துவத்தையும் அளிக்கவல்ல மதத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று இவ்வுலகில் இஸ்லாத்தைத் தவிர்த்து வேறெந்த மதமும் அவர்களது தாக விடாயைத்தணித்து, அவர்களது கோரிக்கைகளைப்பூர்த்தி செய்வதாக இல்லை. ஆதலின், முஸ்லிம்கள் இச்சந்தர்ப்பத்தைத்தவற விடாமல், உலகிலுள்ள ஒவ்வொரு மூலையிலும் இஸ்லாத்திய சத்திய அழைப்பைஜனங்கள் உணர்ந்து கொள்ளும்படிச் செய்வது அவசியமாகும்.

இஸ்லாம் மதச்சட்டப்படி ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாமியப் பிரசாரம் செய்யக்கடமைப் பட்டிருக்கின்றனர். திரு குர் ஆனிலும் ஹதீது ஷரீபிலும் இக்கடமையைப்பற்றிய கட்டளைகள் பலவிருக்கின்றன. இஸ்லாம் மதம் ஒன்றில்தான் அதனுடைய புதல்வர்கள் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற கட்டளை கண்டிப்பாக விதிக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள இதர மதங்கள் குறிப்பட்ட ஒரு தேசத்தினருக்கோ, நாட்டினருக்கோ, வகுப்பாருக்கோ, ஜாதியினருக்கோ மட்டிலும் சொந்தமாக இருப்பதால் அவைகளில் இதுபோன்ற கட்டளை எதுவுமில்லை என்பது உண்மையே யாகும். இதனால்தான் இஸ்லாம், தேசம், ஜாதி, வகுப்பு என்ற அபிமானத்தின் தளைகளை விட்டு அகன்று மனிதாபிமானம், உலகாபிமானம் என்ற உணர்ச்சியின் துவஜத்தைத் தாங்கி நின்று கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் சகோதர உணர்ச்சியினுள் வந்து விடுவதற்காகவும், ஒரு பெருங் குடும்பத்தைப் போல் அமைதி சமாதானம் ஆகியவைகளுடன் கூடிய சிறந்த வாழ்க்கை முறையை நடத்துவதற்காகவும் உலகத்திலுள்ள ஒவ்வொரு சமூகத்தாரிடமும் இதன் அழைப்பை அறிவித்து விட வேண்டுமென்று தனது பக்தர்களுக்கு இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது.

"நல்ல காரியத்தை ஏவித் தீய காரியத்தை விலக்கிக்கொண்டிக்கும்படியான ஒரு கூட்டம் உங்களில் இருந்து கொண்டிருக்க வேண்டும்".

"தங்களுடைய ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காகவும் மார்க்கத்தில் அறிவைத் தேடிக் கொள்வதற்காகவும் அவர்களில் ஒரு கூட்டம் இருக்க வேண்டாமா?".

என்று திருகுர் ஆன் பல கட்டளைகளை நமக்கு விதித்திருப்பதுடன் நில்லாது "நன்மையை ஏவித் தீயதை விலக்குவதற்காகவே நீங்கள் சிறந்த உம்மத்துகளாக அனுப்பப்பட்டிருக்கிறீர்கள்" என்று கூறி இருக்கிறது.

திருகுர் ஆன், ஹதீது ஷரீபு ஆகியவைகளில் இவ்விதமான கட்டளைகளிலிருந்து கொண்டிருக்கும் போது முஸ்லிம்கள் இக்கடமையை உண்மையாகவே உணரவேண்டிய அளவிற்கு உணராமல் இருந்து விட்டது மிகவும் ஆச்சரியமேயாகும். 'குலபாயே ராஷிதீன்'கள் கலீபாவாக இருந்த காலத்தில் அவர்களும் ஏனைய முஸ்லிம்களும் தப்லீகே இஸ்லாம் விஷயத்தில் எத்துணை உணர்ச்சி ததும்பியவர்களாகவும்,

உலகத்திலுள்ள ஒவ்வொரு மூலைகளிலும் இஸ்லாமிய அழைப்பை அறிவிப்பதற்கு எவ்வளவு தீவிரமாகவும் இருந்தார்கள் என்ற விஷயம் சரித்திரங்களிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது. ஆனால், இடைக் காலத்திலிருந்த முஸ்லிம் அரசர்களும் பொது ஜனங்களும் இப்புனித கடமையை நிறைவேற்றுவதில் அத்துணை கவனம் செலுத்த வில்லை; அடியுடன் இக்கடமையை மறந்து விட்டனர் என்று சொல்லுவது மிகையாகாது. இவர்கள் சகலதேசத்தினரிடமும் பிரசாரகர்களை அனுப்பி இஸ்லாத்தின் அழைப்பை முறைப்படி தெரிவித்துக் கொண்டிருந்தால் இன்றைய உலகத்தின் நிலைமையே வேறுவிதமாக இருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இக்கடமையைச் செய்யத்தவரிய தோஷத்தின் பயனுகவே இன்றைக்கு முஸ்லிம் அல்லாதார் இஸ்லாத்தின் மீது பழிசுமத்தியும், இஸ்லாம் வாளாயுதத்தால் பரத்தப்பட்டதென்றும், கூறி இஸ்லாத்தின்பால் துவேஷமும் வெறுப்பும் கொண்டு, இடைகாலத்திலுள்ள முஸ்லிம் அரசர்களைத் திட்டியும் ஏசியும், மதத்துவேஷி என்று இழித்துக் கூறியும் வருகின்றனர்.

அக்காலத்தில் கட்டுப்பாடான இஸ்லாமியப் பிரசாரம் நடை பெறவில்லையானாலும் உண்மையும் தெய்வ பக்தியுமுள்ள உலமாக்களும், ஸூபிகளும் தனிப்பட்ட முறையிலும் சொந்த ஹோதாவிலும் தங்களாலியன்றவரை இக்கடமையைச் செய்து வந்ததற்கு இறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். இவர்களது முயற்சியால் விளைந்த பயன் சுல்த்தான்கள் அரசர்கள் காலத்தில் நிகழ்ந்த பயன்களைப் பார்க்கினும் அதிகம் பிரயோஜனகரமாகவு மிருக்கிறது. இஸ்லாமியப் பிரசாரம் மிகவும் அவசியமாகவுள்ள இக்காலத்திலும் கூட முஸ்லிம் அரசர்கள் இவ்விஷயத்தை மறந்திருந்த போதிலும், முஸ்லிம் பொது ஜனங்கள் இதில் அசிரத்தை கொண்டிருந்த போதிலும் ஆங்காங்கு அத்தி பூத்தாற்போல் சிலசங்கங்கள் தோன்றி ஓரளவு கண்ணீர் துடைத்து கொண்டு தானிருக்கின்றன. ஆனல், இவைகளின் உண்மையான நோக்கங்களையும் விருப்பங்களையும் நாம் அலசிப் பார்ப்போமாயின் இவைகளில் சில கீர்த்திக்காகவும், பெயருக்காகவும், தலைமைப் பதவிக்காகவும் உழைத்து வருகின்றன என்ற உண்மை வெளிப் படுவதற்கு நாம் வருந்தாமலிருக்க முடிய வில்லை. அந்தரங்க சுத்தியுடனும், அல்லாஹ்விற்காகவும், தனது கடமையை நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்ச்சியுடனும் இத்துறையில் ஈடுபட்டுள்ள சங்கங்களிலும் பெரும்பான்மையானவைகளின் முயற்சி திருவினையாகாமல் இருந்து வருகிறது. இவைகள் இத்துறையில் தோல்வியுற்றனவென்று கூறுவதும் கூட பொருத்தமேயாகும். இதற்குப் பலகாரணங்களிருக்கின்றன. அவைகளைப் பற்றி இங்கு விரிவாக விவாதிப்பதற்குப் பதிலாக இவைகள் வெற்றியுருவதற்கான மார்க்கத்தைத் தேடுவதே உசிதமாகும். இவைகளை ஆங்காங்குள்ள தலைவர்களும் அறிஞர்களும் ஆராய்தல அவசியமாகும். இந்த இடத்தில் இரண்டு விஷயங்களைப் பற்றி மட்டிலும் சுருக்கமாகக் கூறவிரும்புகிறேம். சிலசங்கங்களில், பிரசாரவேலை பார்த்துவருகிற ஊழியர்களிடம் உண்மையான பிரசார உணர்ச்சி இருக்கவேண்டிய அளவிற்கு இல்லை. அவர்களிற் சிலர் இஸ்லாத்தின் திருவுபதேசங்களை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். அறிவில்லாக்குறைவால் அவர்களது பிரசாரவேலை தப்பிதே இஸ்லாமுக்குப் புறம்பானதாகவே இருக்கிறது என்று சொல்லலாம். இவர்களது ஜீவியமும் வாழ்க்கை முறையும் இஸ்லாத்தின் போதனைகளுக்கு முன் மாதிரியாகவும், இஸ்லாத்தின் சிறந்த நல்லொழுக்கங்களைப் பின்பற்றுபவைகளாகவும் இருப்பின் இவர்களது நல்லொழுக்கம் முஸ்லிம் அல்லாதாரின் இருதயங்களில் வாளாயுதங்களாலும் பீரங்கிகளாலும் செய்ய முடியாத காரியங்களைச் செய்து விடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மேலும், இச்சங்கங்களிற் பல தங்களது இப்பிரசாரத்தை விவாத முறையிலும் தர்க்கத்திலுமே செய்து வருகின்றன. தர்க்க வாதத்தின் மூலம் ஒரு காபிர் கூட இஸ்லாத்தைத் தழுவியதில்லை. தர்க்க வாதம் செய்வதானது சத்தியப் பிரசாரத்திற்கு உபயோகமற்ற ஆயுதமாக இருந்து வருகிறது. இதனல் ஜனங்களது இருதயத்தில் போட்டியுணர்ச்சியும் சத்தியந்தவறுகையுமே உண்டாகின்றது. திருகுர்ஆனில், பிரசாரம் செய்வதற்கான சகல முறைகளும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரசாரம் செய்த முன் மாதிரியும் நமக்கு இருந்து வருகிறது. இஸ்லாமியப் பிரசாரம் செய்வதற்கு எத்தகைய யுக்தியைப் பின்பற்றவேண்டும் என்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஜீவிய சரித்திரத்தில் சுலப

மாகத் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, இம் முக்கிய கடமையை நிறைவேற்ற விரும்பும் கனவான்கள் திருகுர் ஆன் ஹதீது ஆகியவை களைத் தங்களுக்கு வழிகாட்டியாக அமைத்துக் கொண்டு, மேலே கூறப்பட்ட இரண்டு காரியங் களையும் கவனித்து இத்தொண்டையாற்று வார்களாயின், இவர்களது முயற்சி திருவினை யாகுமென்பதிற் சந்தேகமில்லை.

கிணறு வெட்ட பூதம் வெளிப்பட்டது.

காந்திஜீயின் ஜேஷ்ட புதல்வர் மிஸ்டர் ஹீரா லால் காந்தி, இஸ்லாம் மதத்தைத் தழுவி யதுபற்றி சென்ற மாத இதழில் நாம் எழுதி யுள்ளோம். இவர் இஸ்லாம் மதத்தைத் தழுவிய சம்பவத்திற்கு ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அதிக முக்கியாம்சத்தைக் கொடுத்துக்கொண் டிருக்கின்றனர். முஸ்லிம்கள் தங்களுக்கு மிக வும் பெரிய செல்வம் வந்ததுபோல் இவரது இஸ்லாம் மதப் பிரவேசத்தால் சந்தோஷமடை கின்றனர். ஹிந்துக்கள் இச்சம்பவத்தால் அதிக கோபமடைந்து அவரைக் கேவலப்படுத்தவும் தூஷிக்கவும்கூட முன்வந்து விட்டனர். இச்சம யம், சிற்சில விஷயங்களைக் கவனிக்குமிடத்து இஸ்லாத்தைத் தழுவுவதில் அதிக முக்கியாம்ச முள்ள கௌமுஸ்லிம்கள் ஏராளமாக இருக்கின்ற னர். இப்படிப் பெரிய பெரிய மனிதர்கள் ஏராள மாகத் தினசரி இஸ்லாத்தைத் தழுவியும் அத னைப் பார்த்து முஸ்லிம்கள் எவ்விதமான மகிழ்ச்சியும் கொள்வதில்லை. அப்படி இருந்தும் ஜனுப் அப்துல்லா காந்தி இஸ்லாத்தைத் தழுவிய தற்கு மாத்திரம் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இத்துணை முக்கியாம்சம் கொடுத்திருப்பதற்குக் காரணம் அவர் பிரபல ராஜிய தலைவர் ஒருவ ரின் புதல்வர் என்பதேயாகும். இஸ்லாத்தில் இயற்கையாகவே பல நன்மைகளிருக்கின்றன வாதலின், ஜனங்கள் அதன்மீது பிரேமைகொள் வது முற்றிலும் சரியேயாகும், இஸ்லாம் மதத் தில் மகத்துவமிருக்கிறதாதலின், ஜனங்கள் அதற்குமுன் பணிந்து சிரம் சாய்ப்பது இயற் கையேயாகும். ஆதலின், எவ்வளவு பெரிய மனி தர் இஸ்லாத்தைத் தழுவியபோதினும் அதற் காக நாம் விசேஷத்துவம் கொடுக்க எவ்விதக் காரணமுமில்லை. ஆதலின், மிஸ்டர் ஹீராலால் காந்தி இஸ்லாத்தைத் தழுவியதால் அவர் முக் திக்குரிய வழியை அடைந்துவிட்டார் என்ற முறையில் நாம் சந்தோஷப்பட வேண்டியது தான். ஆயினும், அளவுக்கு மீறிய பெரிய சம்பவ மாக நாம் அதனைக் கருதுவதற்கில்லை. ஆனால், அவர் இஸ்லாத்தைத் தழுவியதன் பயனாக விளைந்த காரியமானது இச்சம்பவத்திற்கு அதிக முக்கியாம்சத்தைக் கொடுத்திருக்கிறது. அத னைப்பற்றி மாத்திரம் ஈண்டு சிறிது கவனிப் போம்.

மிஸ்டர் ஹீராலால் காந்தி இஸ்லாத்தைத் தழுவி அப்துல்லா காந்தி என்று நாமம் சூட்டிக் கொண்ட சமாச்சாரம் காந்திஜீயின் பிரபல சிஷ்யரும் ஹீராலால் காந்தியின் ஆப்த நண்பரு மான பண்டிட் ஜனார்தனதாஸ் என்பவருள்ளத் திற் பேரிருள்போலிருந்தது. இச்சமாச்சாரத் தைக்கேட்டவுடனேயே அவர் காந்திஜீக்குக் கடி தம் எழுதித் தனது "அளவற்ற துக்கத்"தைத் தெரிவித்துக்கொண்டார். இவரது இத்துக்கம் இவரைச் சும்மா இருக்கவிடவில்லை. இறுதியாக காந்திஜீயின் அனுமதியின்பேரில் நீண்டகால மாகச் செய்துவந்த தமது ஹரிஜன ஊழியத்தை விட்டு ஜனுப் அப்துல்லா காந்தியை மறுபடியும் ஹிந்து மதத்திற் சேர்த்துவிடுவதற்காக பம் பாய் நகருக்குச் சென்றார். அங்குசென்று ஜனுப் அப்துல்லா காந்தியைப் பன்முறை கண்டு இஸ் லாம் மதத்தைப்பற்றிச் சம்பாஷணை செய்த தின்பயனாக ஹீராலால் காந்தி சுத்திசெய்யப் பட்டு ஹிந்து மதத்திற் சேருவதற்குப் பதிலாக பண்டிட் ஜனார்தனதாஸின் இருதயத்தை மூடிக் கொண்டிருந்த அஞ்ஞானம் என்ற திரை அகன்று இஸ்லாத்தின் மெஞ்ஞான ஜோதியால் அவரது உள்ளம்பிரகாசித்து விட்டது. ஆகவே, அவர் பகிரங்கமாக இஸ்லாத்தைத் தழுவிவிட் டார். இச்சம்பவமும் நமக்குப் புதுமையை அளிக்கவில்லை. ஏனெனில், இஸ்லாத்தின் சரித் திரப் புத்தகத்தில் இம்மாதிரியான நூற்றுக்

கணக்கான சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இஸ்லாத்தின் அழகும் வனப்பும் பார்வைக்குத் தெரியாமலிருந்தவரை ஜனங்கள் அதனை வேருடன் பிடுங்கி எறிந்துவிடவே முயற்சி செய்வதும், பிறகு, சத்தியம் தனது பிரகாசத்தைக் காண்பித்தவுடன் பெரும் பெரும் வம்பர்களுடைய சிரங்களும்கூட அதற்குப் பணிந்துவிடுவதும் சர்வசாதாரணமாகவே இருந்துவருகிறது. சில நிமிஷங்களுக்கு முன்புவரை இஸ்லாத்திற்குக் கொடும் பகைவராக இருந்தவர்கள் ஒரே ஒரு சத்தியத்தொனியின் பயனாகத் தங்களது மனத்தை மாற்றிக்கொண்டு இஸ்லாத்தின் ஞானதீபத்திற்கு விளக்குப் பூச்சிகளாகி அதில் மடிவதை உலகம் பலமுறை கண்டுகளித்திருக்கிறது.

ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்குமுன் இஸ்லாம் என்ற பெயரைக்கூடக் காதாரக் கேட்கச்சகியாத அவ்வளவு பெரும் பகைவராக இருந்தார்கள். இஸ்லாம் நாளுக்குநாள் வளர்பிறைச் சந்திரனைப்போல் பெருகி வருவதைக் கண்டு மனஞ்சகியாதவராகி இஸ்லாத்தைத் தழுவுபவர்களைப் பலவந்தமாக அடித்துத் தொந்தரை செய்து வதைத்தார். அவர் அப்படி வதை செய்தும் இஸ்லாத்தைத் தழுவிய எவரும் இஸ்லாத்தைவிட்டுத் திரும்பாதிருப்பதைக் கண்டு இஸ்லாத்தின் சத்தியத் தலைவரான திருநபி (ஸல்.) அவர்களையே வேலை தீர்த்துவிட வேண்டுமென்ற நோக்கத்தால் உடைவாளணிந்து இறுதிநபியின் இருப்பிடம் நோக்கிச் சென்றார். இதன்பயன் என்னவாயிற்று என்பதை நீங்கள் கவனித்துப் பாருங்கள்? அவரது செவிகளில் திருகுர்ஆனின் சங்கநாதம் நுழைந்தவுடன் அவரது இருதயம் நடுநடுங்கிற்று. அவரது நாவிலிருந்து பரிசுத்த திருகலிமாவின் ஓசை முழங்கிற்று. இஸ்லாத்தை அழிக்கச் சென்றவர் இஸ்லாத்திற்காகத் தன்னை அழிக்க முன்வந்தார்.

விஷயத்தையறிந்து கொண்டு செல்வதற்காக அபிசீனியாவிலிருந்துவந்த இருபது கிறிஸ்துவர்கள் திருகுர்ஆனின் திருவசனங்களிற் சிலவற்றைக் கேட்ட மாத்திரத்தில் தங்களுள்ளத்தை நபிகள் கோன் (ஸல்) அவர்களுக்கு அற்பணம் செய்து விடுகிறார்கள். அவர்களது நேத்திரங்களிலிருந்து அவர்களை அறியாமலே ஜலம் தாரைதாரையாக ஓடவாரம்பித்து விடுகிறது. உடனே, இஸ்லாம் மதத்தைத்தழுவி ஐக்கியமாகி விடுகிறார்கள். "நீங்கள் முஹம்மது (ஸல்) உடைய சாதுர்யமான பேச்சைக் கேட்டு உங்களது பூர்வீக மதத்தைத் துறந்து விடுகிறீர்களா? நீங்கள் மகாப் பெரிய மடையராக வன்றோ இருக்கிறீர்கள்" என்று இஸ்லாத்தின் விரோதிகள் அவ்விருபது புண்ணியவான்களையும் நோக்கிக் குத்திப் பேசுகிறார்கள். இவர்களது இந்த நொடிப் பேச்சுக்களை அவர்கள் லக்ஷியம் செய்யாமல் "நாங்கள் சச்சரவு செய்ய விரும்ப வில்லை; உங்களுக்கு உங்கள் மதம் எங்களுக்கு எங்கள் மதம் இருக்கட்டும்" என்று கூறி விடுகிறார்கள்.

அறபி தேசத்திலுள்ள பிரபல வித்துவானை "துபைலுப்னு அம்று" என்பவர் மக்காபுரிக்கு விஜயஞ் செய்கிறார். அவரது விஜயத்தைக் கேள்விப்பட்ட குறைஷித்தலைவர்கள் அவரிடம் சென்று "ஜாக்கிரதை! முஹம்மது என்பவரிடம் நீங்கள் செல்லக்கூடாது. அவரிடம் சென்றால் உம்மை அவர் வசியம் செய்து விடுவார்" என்று கூறி அவருக்கு எச்சரிக்கை செய்கிறார்கள். தற்செயலாக அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது திருநாவிலிருந்து திருகுர்ஆனின் வசனங்களிற் சிலவற்றை ஹறம் ஷரீபில் செவியேற்கிறார். உடனே அவர் இஸ்லாத்தைத்தழுவி இஸ்லாத்தின் தாசராக மாறி விடுகிறார்.

இவை போன்ற சம்பவங்கள் இஸ்லாத்தின் சரித்திரத்தில் நூற்றுக்கணக்காக மலிக்கிடக்கின்றன. இவை அக்காலத்தில் மாத்திரம் நிகழவில்லை. இஸ்லாத்தின் காந்த சத்தியானது இவை போன்ற அநேகம் அற்புதங்களை எல்லாக்காலத்திலும் செய்து கொண்டே இருக்கிறது. ஆதலின், இன்று இஸ்லாத்தின் காந்த சக்தியானது பண்டிட் ஜனார்தனதாஸின் இருதயத்தைக் கொள்ளை கொண்டது ஆச்சரியமான சம்பவ மன்று. என்றாலும், இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் மற்றொன்றுளது.

இஸ்லாமும் குப்றும் பிரகாசத்தையும் இருளையும் போலிருக்கின்றன. மனிதன் இருளுக்குள்ளிருக்கும்வரை அவனுக்கு பிரகாசத்தின் அருமை தெரியாது. ஆனால் அவன் பிரகாசத்தில் வந்த பிறகுதான் அவன் இதுவரை பெரும்பாக்கியத்தை அடையாமலிருந்ததாக உணருகிறான். இதுபோல, குப்றிலிருப்பவர்கள் இஸ்லாத்தில் இருக்கிற மன நிம்மதியையும் ஆத்ம சாந்தியையும் உணருவதில்லை. ஆனால், குப்றென்னும் இருளை விட்டு ஈமான்

இஸ்லா மென்னும் பிரகாசத்தில் வந்தவுடன் அவர்களுக்குக்கண் திறந்து விடுகின்றது. இதுவரை கழிந்த அவர்களது ஜீவியமானது இருளுக்குள்ளிலேயே கழிந்திருக்கிறது என்பதை உணருகிறார்கள். ஆனால், வாழையடி வாழையாக இஸ்லாத்திலேயே இருப்பவர்கள் அதாவது முஸ்லிம் பெற்றோர்களுக்குப் பிறந்து முஸ்லிமாகவே இருந்து வருபவர்கள் இதன் அருமையை நன்கு உணர்ந்து கொள்ளமுடியாது. ஆனால் தனது ஆராய்ச்சியின் பேரிலும், சத்திய மதத்தைக் கண்டுபிடிப்பதற்காகத் தேடி யலைந்த பின்னரும் இப்பெரும்பேறை அடைபவர்கள் இஸ்லாத்தைத் தழுவியவுடனேயே இருளிலிருந்து திடீரெனப் பிரகாசத்தினுள் வந்து விட்டதாக அல்லது அருவையான இடத்திலிருந்து வனப்பும், மனத்தைக் கவரத்தக்க அழகும் பொருந்திய நந்தவனத்தினுள் பிரவேசித்ததாக உணருகிறார்கள். இதனால்தான் பாம்பரை முஸ்லிம்களைப் பார்க்கினும் புதிய முஸ்லிம்களினுள்ளத்தில் இஸ்லாமியப் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி அதிகமாகத் ததும்பிக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஏனெனில், குப்று, ஷிர்க்கு ஆகிய அருவை அழுக்குகளைப் பற்றி அவர்களுக்கு நேர் முகமான அனுபவ அறிவு இருப்பதுடன், மனித வர்க்கம் அனைத்தின் பாலும் அவர்களுக்கு அபிமான உணர்ச்சியை இஸ்லாம் உற்பத்தி செய்துவிடுகிறது. ஆகவே, அவர்கள் குப்றெனும் களங்கத்தை விட்டு விடுதலையடைந்ததுபோல மனிதவர்க்கம் அனைத்துமே விடுதலை பெற வேண்டும் என்று இயற்கையாகவே விரும்புகிறார்கள்.

இவ்வியற்கைக்கேற்ப பண்டித ஜனார்தன தாஸின் இருதயத்தில் இஸ்லாத்தின் ஞான ஒளி தனது தண்கதிர்களைவீசியவுடன் தனது குடும்பத்தாரையும் இதர ஹிந்துக்களையும் இஸ்லாத்திற் சேர்ப்பதற்கான பிரசாரத்தைத் தொடங்கிவிட்டார். ஆகவே, மூன்று நாட்களுக்குள் அவரது குடும்பத்தாருட்பட 1200 ஹிந்துக்கள் இஸ்லாத்தைத் தழுவிவிட்டனர். இவர்களை இஸ்லாத்திற் சேர்ப்பதற்காக பெரும் பொக்கிஷத்தைக் காலிசெய்யவேண்டிய அவசியமோ வாளாயுதத்தை உபயோகிக்கவேண்டிய நிர்ப்பந்தமோ எற்படவில்லை. இஸ்லாத்தின் மகிமையையும் சிறப்பையும்பற்றி அவர் செய்த சொற்பொழிவொன்று மட்டிலுமே அவர்களது நேர்வழிக்கான பாதையைத் திறந்துவிட்டது. இஸ்லாம் வாள் வலிமையால் பரத்தப்பட்டதென்று கூறிவரும் இஸ்லாத்தின் விரோதிகள் இச்சம்பவத்தைப் பிரத்தியக்ஷமாகக் கண்ட பின்னரேனும் இஸ்லாத்தின்பால் பழி சுமத்துவதை விட்டொழிப்பார்களாக. இவ்வண்ணம் ஓரிடத்தில்மட்டும் நிகழவில்லை. உலகமெங்குமே இதுபோழ்து முஸ்லிமல்லாதார் கூட்டங்கூட்டமாக இஸ்லாத்தைத் தழுவும் செய்தி சமாச்சாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவைகளைக் கேட்டு முஸ்லிம்கள் ஆனந்தமடைவதியற்கை. ஆனாலும், முஸ்லிம்களுக்கு இதில் பெரும் சோதனை இருக்கிறது. அதில் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இஸ்லாத்திற்கேற்பட்டுவரும் இவ்வெற்றியைக்கண்டு அதன் விரோதிகள் புழுக்கங்கொள்வர். தங்களது நோக்கம் சித்தியடையாத இடத்தில் தங்களது எதிரிகளுக்குத் தீங்கு செய்ய முயலுவது இவ்வுலகம் தோன்றியதுமுதல் நடைபெற்றுவரும் வழக்கமாக இருந்து வருகிறது. இவ்வழக்கத்திற்கேற்ப இஸ்லாத்தின் விரோதிகள் முஸ்லிம்களுக்கு அநேகம் விதத்தில் தொந்திரைகளையும் கஷ்டங்களையும் விளைவித்து முஸ்லிம்களுக்குத் தீங்குசெய்வர். இதில் நம்மவர் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

அன்பர்கட்கு!

தற்சமயம் நமது ஆபீஸ் இருக்கும் போஸ்டாபீஸ் தெருவு 43-A. நெ. இலக்கமிட்ட இடத்திற்கு A - ஐ எடுத்துவிட்டு 43 நெ. என்று மட்டில் குறிப்பிட்டிருப்பதால் அன்பர்கள் 43 நெ. போஸ்டாபீஸ் தெரு என்றே குறிப்பிடும்படி கோருகிறோம்.

காதியானி இயக்கமும் அதனை எதிர்க்கும் மார்க்கமும்

(மௌலவி மஸ்ஊதுர் ரஹ்மான் சாஹிப் வரைவது)

காதியானி இயக்கம் முஸ்லிம்களுக்கும் இஸ்லாமிய ராஜீயத்திற்கும் சமூகத்திற்கும் மிகவும் அபாயகரமான இயக்கமாகும். இந்த இயக்கம், நூற்றுக்கணக்கான வருஷங்களாகக் கிறிஸ்தவ பாதிரிமார்கள் இஸ்லாத்திற்கு விரோதமாகச் செய்து முடிக்காத காரியங்களை நமது கண்ணின் முன்னிலையில் சில வருஷங்களுக்குள் செய்து முடித்துவிட்டது. காதியானி இயக்கம் இஸ்லாத்தின் உயிருக்கும் சமூகக் கட்டுப்பாட்டிற்கும் ஒற்றுமையாக இல்லை. அது தனிப்பட்ட முறையில் அரசாங்கத்தின் உதவியைப் பிரத்தியேகமாக அடைந்துகொண்டிருக்கிறது. அரசாங்க நிர்வாக விஷயத்தில் இக்கொள்கையுள்ள படித்தவர்கள் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டு ராஜீயமிஷனை பூரணபலத்துடன் நடத்திக்கொண்டிருக்கின்றனர். அல்லாமா ஸர் முஹம்மது இக்பால் கூறியதுபோல் இந்த இயக்கம் கலப்பற்ற சுத்தமான மத இயக்கமன்று. இதனுடைய கட்டிடம் ராஜீய அஸ்திவாரத்தின்மீது எழுப்பப்பட்டிருக்கிறது. இவ்வியக்கம் தானாக உண்டாகவில்லை. விசேஷமாக ஒரு சக்தியின் கண்ஜாடையின் பேரிலேயே இதனுடைய தோற்றம் வெளியிற்கிளம்பிற்று. காதியானி இயக்கத்தின் கர்த்தா மிகவும் சாதுர்யமாகத் தனது மதசம்மந்தத்தை மட்டிலும் வெளிக்குப் பிரகாசமாகக் காண்பித்தும், ராஜீய சம்மந்தத்தை இயன்றவரை சகல வழிகளிலும் மறைப்பதற்கு முயற்சி செய்தும் இருக்கிறார். இவ்விதச் சமர்த்தின் காரணமாக நமது சங்கைக்குரிய கண்ணியம் மிக்க உலமாக்கள் மதசம்மந்தமான ஆயுதங்களை அணிந்து அவர்களை எதிர்ப்பது இஸ்லாத்திற்குச் செய்யும் மிகமிகச் சிறந்த ஊழியம் என்பதாகக் கருதுகின்றனர். ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் விண்ணிலிருந்து இறங்கி வருதல், அவர்கள் ஜீவித்திருத்தல், மரணமடைதல், மஹ்தீ மஸீஹ், மஸீஹூத்தஜ்ஜால், மஸீஹூக்குரிய அம்சங்கள் முதலியவைகளைப்பற்றிய விவாதங்களிலிறங்குகின்றனர். இவ்வியக்கத்தாருக்கு ராஜீய சம்பந்தமான பலமிருப்பதால் இவ்விவாதங்களால்மாத்திரம் இவர்களை வெல்லமுடியாது. ஆதலால் தான் இவ்விவாதங்ளால் குறிப்பிடத்தக்க பயன் ஏற்படுவதில்லை. மேலும், இவ்விவாதங்களின் பலனாக பாமரஜனங்கள் சந்தேகங்களிலும் ஐயங்களிலும் அகப்பட்டுக்கொள்கின்றனர்.

காதியானி இயக்கம் என்பதென்ன? அதன் அஸ்திவாரங்கள் சரியா தப்பா? என்ற விஷயங்களைப்பற்றி நாம் இங்கு விவாதிக்க விரும்பவில்லை. சங்கைவான்களாகிய உலமாக்கள் காதியானியத்தை வேரறுப்பதற்காக இதுவரை செய்த முயற்சிகள் பயன்பெற்று அதுவேறற்றுப் போகாததற்குக் காரணமென்ன? இவ்வியக்கத்தின் உயிர்நாடியில் கை வைப்பதற்கான வழியென்னவென்பதைக் கூறுவதே நமது நோக்கமாகும். உலமாக்கள் செய்தமுயற்சிகளெல்லாம் அவர்களது உயிர்நாடியில் கை வைக்காமலிருப்பதனாலும், அவர்களது தாது எவ்வளவிருக்கிறதென்பதைக் கண்டுகொள்ளாதிருப்பதினாலும் அவர்களை எதிர்ப்பதற்காக உலமாக்கள் செய்த முயற்சிகளெல்லாம் உத்தேச பலனைத் தரவேயில்லை. இந்த இயக்கம் அதிசீக்கிரத்தில் செத்துப்போகவேண்டும் என்பது நமது கருத்தாகும். இல்லையேல், இவ்வியக்கத்தின் ஒட்டத்தில் முஸ்லிம்களது ஒற்றுமையும் இஸ்லாமிய உஸூல்களும் அடித்துக்கொண்டு போகப்பட்டுவிடும். இன்னும் அது மரித்துப்போவதற்குமுன் அநேகம் பேரை அடித்துப்போடும் என்பதும் நமது கருத்தாகும். அத்துடன் சங்கைவான்களாகிய உலமாக்கள் இவ்வியக்கத்தை எதிர்த்துச்செய்யும் முயற்சிகளும் அவ்வளவாகமுழுப் பயன்றருவதாக இல்லை என்பதும் நமதபிப்பிராயம். இந்த இயக்கத்தை ஒழிப்பதற்காகச் செய்யப்படவேண்டும் என்று நாம் கருதுகிற முறை

கள் ஒருக்கால் சங்கைவான்களான உலமாக்க ளிடம் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாதனவாக இருந்தாலும், அம்முறைகள்தான் காதியானி யத்திற்கு எதிரான பயன்படத்தக்க சரியான ஆயுதங்கள் என்பது நமது கருத்து. ஏனெ னில், இம்முறைகள் வெளிப்பகட்டானவை களுமன்று; சந்தோஷ ஆரவாரமானவைகள் போன்றதுமன்று. இது ஸ்திரமானதும் பல முள்ளதுமாகும். இவைகளைச் செய்வதற்கு உறுதியும், காரியசக்தியும், கல்வித்திறமையும் இருப்பது அவசியமாகும்.

காதியானியத்தைப் பரப்புவதற்கு அவர்கள் கையாளும் கருவிகள் யாவை? என்பதை முத லில் கவனிக்கவேண்டும். அப்பால் நாம் அதற்கு எதிரான வழிகளைத் தயார் செய்யவேண்டும். பாஷாணத்திற்குப் பரிகாரம் மாதுளம் பழ ஷர்ப்பத்தல்ல. திர்யாக் என்ற முறிவு பதார்த் தத்திலேயே இருக்கிறது. கெட்டுப்போன நரம் பைப் பார்த்துச் சரியாக வெட்டிவிடவேண்டும்.

1. காதியானி இயக்கம் மேலோங்குவதற்கு அவர்கள் அரசாங்கத்திடம் செல்வாக்குப் பெற்றிருப்பதும் ஒரு காரணமாகும். ஆங்கிலே யர்கள், ஆங்கிலோ-இந்தியக் கிறிஸ்துவர் ஆகிய வர்களை அரசாங்கம் எவ்விதமாக நேசிக்கின்ற தோ அவ்விதமாக இக்காதியானிகளையும் அர சாங்கம் நேசிக்கிறது. ஏனெனில், இந்த ஜமாஅத் தார்கள் அரசாங்கத்திற்குப் பேருபகாரம் செய் திருக்கிறார்கள். 'ஜிஹாது' போன்ற அபாயகர மான காரியத்தை இல்லையென்று மாற்றி சுதந் திரம் சுயேச்சை ஆகியவைகளுக்குரிய மார்க் கங்களனைத்தையும் அடைத்துப்போட்டார்கள். இப்பேருபகாரத்திற்குப் பதிலாக அரசாங்கம் காதியானிகளைப் பெருவாரியான அளவிற்கு வேலைக்கொடுத்துக் கொண்டு, அரசாங்க நிர்வா கத்தின் முக்கிய இடங்களில் நிறுத்திவைத் திருக்கிறது. இதன்பயனுக, உத்தியோகம் வாங் குவதற்காக ஏழையாகவும், இஸ்லாம் மதத்தைப் பற்றி அறியாதவர்களாகவுமுள்ள படித்த முஸ் லிம்கள் 'காதியானிய்யத்' என்ற உடையணிந்து உத்தியோகங்களை அடைவதில் வெற்றிபெறு கிறார்கள். இம்முறையில் இப்பொழுது இக்காரி யம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆதலின் காதியானி இயக்கத்தில் சேருகிற எவனும் கஷ்டமடையமாட்டான் என்பதும், உத்தியோ கம் கிடைக்காமல் திண்டாடமாட்டான் என்ப தும் பொது விதியே போலாகிவிட்டது. எனவே, காதியானி இயக்கம் பரவும் விஷயத் தில் உத்தியோகப் பதவிகளுக்கு நெருங்கிய சம்மந்த மிருக்கிறது. இதற்குப் பரிகாரம் செய்வதானது தந்திரத்தைக் கையாளுவதி லேயே ஏற்படக்கூடியதாக விருக்கிறது. எனவே, காதியானியத்தும் சுயேச்சையும் நெருப்பையும் ஜலத்தையும் போலிருப்பதால் முஸ்லிம்களது உள்ளத்தில் சுயேச்சை யுணர்ச் சியை வளரச் செய்ய வேண்டும்.

2. காதியானிகள் ஐரோப்பாவிலுள்ள ஒவ் வொரு மைதானிலும் காணப்படுகின்றனர். இதுவும் அவ்வியக்கம் பெருகுவதற்கு மற் றொரு காரணமாகும். இவர்கள் ஆங்கிலத்தில் திருகுர் ஆனை மொழி பெயர்த்துப் பிரசுரித்து ஐரோப்பா முழுவதிலும் பரவச் செய்திருக்கி றார்கள்; கிறிஸ்துவ மதத்தை மறுத்துப்பல மான ஒரு மாசிகையைப் பிரசுரித்து வருகிறார் கள்; பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் நடத் துகிறார்கள்; பிரசாரசபைகளை உலகமெங்கும் ஸ்தாபித்தார்கள்; திறமையான பிரசாரகர்களின் கூட்டத்தைத் தயார் செய்தனர்; மதசம்மந்த மான ஒவ்வொரு மைதானத்தையும் அவர்கள் கைப்பற்றிக்கொண்டனர் என்றுகூறுகின்றனர். இவ்வியக்கத்தில்சேருபவர்கள் இக்குழாத்தினர் ஐரோப்பாவில் செய்த காரியங்களையே முக்கிய மாகக்கவனிக்கின்றனர். ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் இன்னமும் உயிருடனிருக்கிறார்களா அல்லது மரணமடைந்து விட்டார்களா என்ற விஷயத்தை அவர்கள் அறியமாட்டார்களாத லின், காதியானிகள் ஆங்கிலத்தில் திருகுர்ஆனை மொழி பெயர்த்து இஸ்லாத்திற்கு ஏதோ மிகப்பெரிய ஊழியம் செய்திருக்கிறார்கள் என்றே நினைக்கின்றார்கள். ஆகவே, இஸ்லா மிய உலமாக்களும் இதே ஊழியத்தைத் தங்கள் கையில் வாங்கிக் கொள்ள வேண்டும். முன் னேறி வந்து இது போன்ற வெளிப்பகட்டான வேலையைச்செய்து அவர்களைத் தோற்கடிக்க வேண்டும். அசல் வேலை இப்பொழுதுதான் ஆரம்பமாகி இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ள வேண்டும். இதற்கு முந்தித் தவறிப் போனவைகளை நிவர்த்தி செய்து விட்டால் இஸ்லாமிய உலகத்தின் ஒத்துழைப்பும் கிடைக் கும். இதன் காரணமாக இஸ்லாமிய ராஜீய விஷயங்களுக்கும் பலமேற்படும். இப்படிச் செய்தால் பயங்கரமான இக்கூட்டம் மைதா னத்தை விட்டுப் புறங்காட்டி ஓடிவிடும். சங் கைவான்களான உலமாக்கள் இம்மாதிரியான

அரிய ஊழியங்களைச் செய்வார்களாயின் காதியானியத்து தானுக அழிந்து விடும் என்பது நிச்சயம்.

குறிப்பு :—இவ்வியாசக்கர்த்தா கூறியுள்ள ஆலோசனைகளை சங்கைவான்களான உலமாக்கள் இதற்கு முன்பே உணர்ந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். காதியானிகளைத் தனிச் சமூகமாகப் பிரித்து விடுவதால் முஸ்லிம்களின் வகுப்புவாரி உத்தியோகப் பதவிகளை அவர்கள் அடைய முடியாது என்பதையுணர்ந்து காதியானிகளைத் தனிச் சமூகமாகப் பிரித்துவிடவேண்டுமெனச் சட்டசபை மூலம் முயற்சி செய்திருக்கிறார்கள். ஆங்கில பாஷையில் திருகுர் ஆன் வியாக்யான உரை பல எழுதப்பட்டுமிருக்கின்றன. இப்பொழுதும் விரிவான வியாக்யானம் எழுதப்பட்டும் வருகிறது. ஆங்காங்கு பல சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் பிரசுரிக்கப்படுகின்றன. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய தூர நாடுகளில் பிரசார சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனல், இவைகளெல்லாம் கட்டுக்கோப்பாக இருந்து ஒரே முகமாக வேலை செய்து, தங்களது அரிய ஊழியங்களை உலகம் மெய்ப்பித்துக்காட்டிக்கொள்ளாதது ஒன்றுதான் இவர்களது குறை. இவர்கள் சன்மார்க்கத்திற்காகப் புண்ணியத்தை நாடி இவைகளைச் செய்வதால் இவைகளை உலகத்தார் மெய்ப்பித்துக் காண்பித்துக்கொள்வதில்லை. (பர்).

மதமும் ராஜீயமும்.

(அமீர் ஷக்கீப் அர்ஸலான்.)

முன்னேற்றமடைந்த தேசத்தினர் யாவரும் ராஜீயத்தை விட்டு மதத்தை முற்றிலும் தனியே பிரித்து விட்டனர்; அவர்கள் மதத்தை முற்றிலும் கைகழுவி விட்டனர்; அல்லது அது சம்மந்தமாக மிகவும் அசிரத்தையுடன் அல்லது சம்பிரதாயத்திற்காகக் காரியம் செய்து வருகின்றனர், என்று ஒரு அபிப்பிராயம் ஜனங்களிடை பலமாகப் பரவி இருக்கிறது. இவ்வபிப்பிராயம் பிரசங்கங்கள் மூலமாகவும் வியாசங்கள் மூலமாகவும் மிகவும் அதிகமாகப் பிரசாரம் செய்யப்படுவதால் கீழ்நாட்டினர் பொதுவாகவும், முஸ்லிம்கள் சிறப்பாகவும் இதனை மெய்யென்று நம்பி ராஜீயத்தை விட்டு மதத்தைப் பிரிக்காவிடில் உலக முன்னேற்றம் குதிரைக் கொம்பேயாகும் என்றும், ஐரோப்பாவின் தற்போதைய முன்னேற்றம் மதத்தைக்கைவிட்டதன் பலனேயாகு மென்றும் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களுடைய இவ்வெண்ணத்திற்கு மாறாக இஸ்லாத்தின் போதனைகளிலிருந்து கொண்டிருப்பதாய் இவர்கள் இஸ்லாம் மதத்தைப் பற்றிக் குறை கூறவும் தொடங்கி விட்டனர். இஸ்லாம் மதத்தில் தீனும் துன்யாவும் ஒன்றோடொன்றிணைக்கப் பட்டிருப்பதால்தான் முஸ்லிம்கள் க்ஷீணதசையடைந்து விட்டனர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் தங்கள் மார்க்கத்தைக் கடைப்பிடித் தொழுகும்வரை அவர்கள் ஒருபோதும் முன்னேற்றமடையவே முடியாது என்றும் பகிரங்கமமாகக் கூறுகின்றனர். இவ்வித எண்ணம் முற்றிலும் தவருகும். நாடு பிடிக்கும் ஆசையுள்ளவர்கள் தங்களது பிரசாரகர்கள் மூலம் தங்களது ராஜிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இது போழ்து முஸ்லிம்களிடம் மிகவும் தீவிரமாகப் பிரசாரம் புரிந்து வருகின்றனர். ஐரோப்பா இதற்கு முன் மதத்தை விட்டதுமில்லை; இப்பொழுதேனும் விட்டிருக்கவுமில்லை. ஐரோப்பாவிலுள்ள போல்ஷிவிக்கர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டுப்பார்த்தால் தற்போதைய ஐரோப்பிய அரசாங்கங்கள் மதத்தைப் பாதுகாத்து ஆதரிப்பதைத்தங்களது பரிசுத்த கடமையாகக் கருதுகின்றன வென்றும், கிறிஸ்தவப் பிரசாரங்களுக்கு அவைகள் கைகொடுத்து உதவி செய்கின்றன என்றுங் கூறுவது முற்றிலும் சரியேயாகும். எந்த மதத்தையும் பின் பற்

ரூத ஜனங்கள் ஐரோப்பாவில் நூற்றுக் கணக்காக இருக்கிறார்களென்பதுண்மையே. ஆனால், இவர்கள் பெரும்பாலும் பொதுவுடமைக்காரர்களுடன் சம்மந்தம் வைத்தே இருக்கிறார்கள். இவர்கள் எல்லா இடங்களிலும் சிறு பான்மையினராகவே இருக்கின்றனர். ஆகவே ஐரோப்பாவிலுள்ள மிகவும் பெரும்பான்மையான ஜனங்கள், முஸ்லிம்களாகிய நாம் இஸ்லாம் மதத்தைப்பின் பற்றி ஒழுகிவருவது போலவே கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றி வருகின்றனர். ஆனால், கிறிஸ்துவர்கள் தங்கள் மதத்தைப் பிரசாரம் செய்து நாடெங்கும் பரவச்செய்வதற்காக வருடந்தோறும் லக்ஷக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கின்றனர். ஆனால், முஸ்லிம்களாகிய நாம் அப்படி இல்லை. இஸ்லாத்தின் பாதையில் செலவு செய்வதற்காக உலகமெங்குமுள்ள முஸ்லிம்கள் எல்லோரும் ஒன்றுகூடினாலும் பதினாயிரம் பவுன்களைக்கூட ஒன்று திரட்டுவது மகாச் சிரமமாகிவிடும். இதுதான் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலுள்ள வித்தியாசம்.

எவ்வாறாயினும், ஐரோப்பா மதத்தைக்கை விட்டு விட்டது என்று கூறுவது முற்றிலும் தப்பாகும். இப்பொழுதும் ஐரோப்பா மதத்தைப்பூரணமாகப் பின்பற்றி அதனைப் பலமாக ஆதரித்து வருகிறது. ஆனால், ஐரோப்பா நிர்வாக முறையில் மதத்தை ராஜியத்தை விட்டு ஒதுக்கி வைத்திருக்கிறது. ஆகவே, மதமும் ராஜியமும் வெவ்வேறு என்று ஐரோப்பிய அரசாங்கம் கூறுமாயின் அதற்கு, மதத்தைக்கை கழுகிவிட்டதாக அர்த்தம் செய்யவே கூடாது. நிர்வாகத்தைத் திறமையாக நடத்துவதற்காக ஒவ்வொரு இலாக்காவையும் வெவ்வேறாகப் பிரித்து வைப்பது போல மதத்திற்கும் ஒரு தனி இலாக்காவை ஏற்படுத்தி இருக்கிறது என்பதுதான் கருத்தாகும். இந்த மத இலாக்கா போப்,பிஷப் முதலியவர்களிடம் பூரண அதிகாரத்துடன் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் மத விஷயங்களை அதிகம் தெரிந்தவர்களாகவும், மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகமாக மத ஊழியம் செய்யக் கூடியவர்களாகவுமிருக்கிறார்கள். நிர்வாக முறையில் மதத்தையும் ராஜியத்தையும் வெவ்வேறாகப் பிரிப்பதானது இஸ்லாம் மதத்தினுள்ளுங் காணப்படுகிறது. இஸ்லாத்தில் அரசாங்க மந்திரிப் பதவியும் ஷெய்குல் இஸ்லாம் பதவியும் ஒரே ஒரு உத்தியோகப் பதவி என்று எவரேனும் கூறமுடியுமா? இஸ்லாமிய அரசாங்கங்களில் பற்பல இலாக்காக்களுக்கும் மந்திரிச் சபைகள் இருந்துவருவதுபோல மத இலாகாவிற்கும் மந்திரிச் சபை இருந்துவந்தது. இம்மந்திரி சபையானது மதசம்மந்தமான எல்லாக் காரியங்களையும் கவனித்துவந்தது. இம்மந்திரிச் சபைகள் எல்லாம் அவ்வக்காலத்திய கலீபாவின் கட்டளைக்குட்பட்டிருந்து கொண்டிருந்தன. இதே நிலைமைதான் ஐரோப்பாவிலுமிருந்து வருகிறது. அங்கு மதத்திற்கெனத் தனி இலாக்கா ஒன்றிருக்கிறது. அவ்விலாக்கா மத சம்மந்தமான எல்லாக் காரியங்களையும் கவனித்து வருகின்றது. ஆயினும், அதுவும் அரசாங்கத்திற்குட்பட்டதேயாகும். இஸ்லாமிய கலீபாவானவர் இஸ்லாம் மதத்தை ஆதரிப்பவராக இருந்ததுபோல ஐரோப்பாவிலுள்ள அரசர்களும் மந்திரிகளும் கிறிஸ்தவ மதத்தை ஆதரிப்பவர்களாக இருந்துவருகின்றனர்.

சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியில் புரட்சி ஏற்பட்டபோது புரோட்டஸ்டன்ட் கிறிஸ்துவ மாதாகோவில் ஒரு காலம் வரை தனது தலைவரான ஜெர்மனி அரசர் திரும்பி வந்துவிடுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஜெர்மன் சக்கிரவர்த்தி நாட்டை விட்டுச்சென்று அதிக காலமாகிவிட்டதாலும், ஸர் ஹிட்லருக்குச் சர்வாதிகாரப் பதவி ஏற்பட்டு விட்டதாலும் அங்குள்ள நிர்வாக முறை முற்றிலும் புது மாதிரியில் திருத்தியமைக்கப்பட்டது. இவ்வாறு திருத்தி யமைத்ததால் அரசாங்கத்திற்கும் மாதா கோவிலுக்குமுள்ள சம்மந்தங்கள் முன்னிலும் அதிக ஆழமாக ஏற்பட்டு விட்டது. சென்ற சில மாதங்களாக அங்கு நடைபெறும் காரியங்களின் போக்கைக் கவனமாகப் பார்ப்பவர்களுக்கு மதத்தை அரசாங்கத்துடன் ஐக்கியப்படுத்திவிடுவதற்கான சட்ட திட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன என்பது தெரியவரும்.

சில காலத்திற்கு முன் பெர்லினிலுள்ள புரோட்டஸ்டன்ட் கிறிஸ்துவ மாதாகோவிலின் பிரதமத் தலைவர் செய்த பிரசங்கமொன்றில் பின் வருமாறு கூறி இருக்கிறார்:

“ஜெர்மனியிலுள்ள கிறிஸ்துவர்கள் உண்மையாகவே கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றி வருகின்றனர். அவர்கள் கிறிஸ்துவ உடையில் விக்கிரக ஆராதனைக்காரர்களா

கவோ அல்லது இனே வைப்பவர்களாகவோ இருக்கிருர்கள் என்று கூறுவது உண்மையல்ல. புரட்சி காலத்தின் இறுதியில் அடிப்படையான் சில மாறுதல்கள் செய்யவேண்டும் என்ற அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டன வென்பது மெய்யேயாகும். ஆனல், இவாஞ்சலிய மாதாகோவில் அரசாங்கத்துடன் முற்றிலும் ஐக்கியமாகி விட்டது. நமது அபிப்பிராயத்தில் தீனும் துன்யாவும் 'லௌகீகமும் வைதீகமும்' தனித்தனியே யுள்ள இரண்டு வெவ்வேறு காரியங்களல்ல; இரண்டும் ஒன்றேயாகும். ஆதலின், இவ்விரண்டும் ஒன்று சேருவதற்காகப் பிரத்தியேகமான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டிய அவசிய மெதுவுமில்லை. ஆனல், இரண்டும் ஒன்று சேர்ந்து வேலை செய்வதற்கான மார்க்கங்களை உண்டுபண்ணுவது அவசியமாகும்''.

"மதமும் ராஜீயமும் ஒன்று சேர்ந்திருப்பது தான்முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக்காரணம்; ஆதலின், மதத்தை ராஜியத்தை விட்டுப் பிரித்து விடவேண்டும்'' என்று கொஞ்சமும் அஞ்சாமல் கூக்குரலிட்டுக் கொண்டு பிரசாரம் செய்து வரும் அறிவிலிகள் இப்பிரசங்கத்தை நன்கு கவனித்துப் படிப்பார்களாக. இந்த ஜனங்கள் உண்மையில் மதத்தின்பால் நல்லெண்ண முள்ளவர்களன்று; கெட்டெண்ணங் கொண்டவர்களேயாவர். மேலும், மதத்திற்கு விரோதிகளுமாவர். இந்த விபரத்தை அந்த ஜனங்கள் கவனிப்பார்களா? அல்லது இவர்கள் இஸ்லாத்தைப்பற்றிக் குறை கூறுவதற்கு முன் அவர்கள் மதத்தை விட்டு விட்டு கல்வி அறிவு முன்னேற்றம், நாகரீகம் ஆகியவைகளில் எவ்வளவு தூரத்திற்கு முன்னேற்ற மடைந்திருக்கிருர்கள் என்பதை ருஜீப்பித்துக் காண்பிப்பார்களா?

சுகாதாரம்—மலச்சிக்கல்

மலச்சிக்கல் என்பது ஒவ்வொரு மனிதனும் ஸ்திரீயும் குழந்தையும் தமது வாழ்நாளில் ஒரு நாளாகிலும் அனுபவிக்கக்கூடிய ஒரு சாதாரணமானதும், கஷ்டத்தைக் கொடுக்கும்படியானதுமான ஓர் அவஸ்தை. மலச்சிக்கலின் காரணங்களைச் செவ்வையாய் அறிவதற்கு ஜீரணத்தின் முறையை நன்ருய் அறியவேண்டியதவசியம். நாம் உட்கொள்ளும் ஆகாரமானது முதல் முதல் வாயில் உமிழ்நீர்க் கோளங்களால் சுறக்கப்பட்ட உமிழ்நீர் என்னும் வஸ்துவுடன் கலந்து அங்கே கொஞ்சம் ஜீரணமாகிறது. ஆகாரத்தை நன்ருய் மெல்லவேண்டும். அதற்காக அல்லாஹ் தஆலா நமக்கு கூர்மையானதும், வலுவானதுமான பற்களை உற்பத்தி செய்திருக்கிருன். மெல்லுவது ஜீரணத்தைச் சுலபமாக்கி அதற்கு உதவி செய்வதுடன் மலச் சிக்கலையும் தவிர்க்கிறது. பிறகு, ஆகாரம் இரைப்பைக்குட் சென்று,அங்கே மூலாக்கினி நீருடன்கலந்து ஜீரணமாகிறது. ஆகாரம் இரைப்பையைத் தாண்டி குடலுக்குள் புகுந்து, அங்கு கல்லீரலிலிருந்து வரும் பித்தநீருடனும், கணையத்திலிருந்து வரும் கணையநீருடனும், குடலில் உற்பத்தியாகும் குடல்நீர்களுடனும் கலந்து ஜீரணமாகி, ரஸாயினிகள் என்று சொல்லப்பட்ட குழாய்கள் மூலமாய் இரத்தத்துள் உறியப்பெற்று, தேகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் பரவுகிறது. மிகுதியாய் ஜீரணமாகாததும், ஜீரணமாதற்கு சாத்தியமில்லாததுமான கழிவிடைகள் புழுகுபோன்ற ஓர் அசைவினுல் குடலில் தள்ளிக்கொண்டு போகப்படுகிறது. மலபாதைக்குப் போகவேண்டிய தருணத்தில் அதற்கு உட்காரும்போது, சுவாஸத்தை உள்ளுக்கிழுத்தால் அது டயபிராமை அமுக்குகிறது. இது கீழேயுள்ள குடலை அமுக்குகிறது. அடிவயிற்றின் சதைகள் சுருங்கி, முன்பக்கமாக அமுக்குகிறது. இதன் மூலமாய் வாயில் ஏற்றுக்கொண்ட ஆகாரத்தின் கழிவிடைகளும், கோலனில் உண்டாகும் கழிநீர்களும் தேகத்தைவிட்டு வெளியே தள்ளப்படுகின்றன.

ஆனதுபற்றி, ஆரோக்கியத்தின் இரகசியம் யாதெனில், மலபாதைக்கு வரும்போது உடனே அதைக் கழிப்பதேயாம். ஆகாரம் செவ்

208349

வையாய் ஜீரணமாவதற்கு 8-மணிநேரம் செல்லும். ஆனதுபற்றி, ஒவ்வொருவரும் எட்டு மணிக்கொருதரம் மலத்தைக் கழிக்கவேண்டும். இவ்வாறாக, தினம் மூன்று வேளை ஆகாரமும், மூன்று வேளை மலவிஸர்ஜனமும் இயற்கையில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உழைப்பும் குழப்பமும் மிகுந்துள்ள இம்மானிட வாழ்வில், இயற்கையாய் ஏற்பட்டுள்ள மூன்று வேளை மலவிஸர்ஜனத்தையடக்கி, காலை ஒரே வேளையில் செய்யப்படுகிறது. 'இயற்கைக்கு அடுத்தபடி பழக்கம்' என்கிற ஓர் வசனமுண்டு. ஜனங்கள் ஒருவேளை மலவிஸர்ஜனம் செய்வது வெகு நாளைய பழக்கத்தின்கீழ் வந்துவிட்டது. ஆனால், ஆகாரத்தைப்பற்றி என்ன? அதுமட்டும் மூன்று வேளையுடன் நிற்கிறதில்லை. நாக்கு எத்தனைதரம் கேட்கிறதோ, அத்தனைதரம் ஆகாரம் கொடுக்கப்படுகிறது. அதனால் ஜீரணக் கருவிகள் இடைவிடாமல் சதா உழைக்கும்படி நேரிடுகிறது. ஆயுள் முழுவதும் அதற்கு ஒய்வு என்பதே கிடையாது. 'எப்போதும் விளையாடும் பையன் மந்தபுத்தியுள்ளவனாவான்' என்று சொல்வதுண்டு. அதேபோல், ஒய்வு என்பது இல்லாமல் எப்போதும் உழைக்கும் ஜீரணக்கருவிகள் மெலிந்து நோய்க்குட்படுகின்றன.

மலச்சிக்கல் உண்டாகக்கூடிய காரணங்கள் யாவையெனில் :—(1) கல்லீரல் நோயடைந்து பித்தநீர் சுரப்புக் கம்மிப்பட்டு, அதனால் கழிவிடைகள் மிருதுவாகாமலும், வழவழப்படையாமலும் போதல்; (2) மலத்தின் நீர்ப்பாகம் உறியப்படுமட்டோ, அல்லது அசங்கியையான வாயுவாக வெளிவருமட்டோ, அது தங்கியிருத்தல்; (3) அதிகமாக நீரை உறியும்படியான ஆகாரத்தை உபயோகித்தல்; (4) மலத்தைக் கட்டும்படியான ஆகாரத்தையோ, மருந்தையோ உட்கொள்ளுதல்; (5) போஷணையுள்ள ஆகாரத்தைமட்டும் வழக்கமாய் உபயோகித்தல்; ஆகாரத்தில் கனபதார்த்தமும் வேண்டும்; போஷணையுள்ள பதார்த்தமும் வேண்டும்; (6) அளவுகடந்து உண்பதனால் ஜீரணக்கருவிகளும் குடல்களும் அதிகமாக விரிந்துபோகும்; (7) குடல்களிலுள்ள சதையின் தசைநார்கள் தளர்ந்துபோதல்; அதனால் அவை மெதுவாகச் சுருங்குகின்றன; (8) இறுகக்கட்டிய உடையாலோ, வியாதியாலோ சுவாஸ சம்பந்தமான உறுப்புக்கள் சுருங்கிப்போய் அதனால் டயபிராத்தை ஆழமாக அமுக்க முடியாமற்போதல்; (9) அடிவயிற்றின் சதைகள் [illegible]னப்பட்டோ, அல்லது பருத்தோ அதனால் [illegible] குடல்களை அமுக்கமுடியாமற் போதல்; (10) ரெக்டம் அரைவாசியோ, முழுதலுமோ அசக்தமடைந்து, அதனால் மலத்தை வெளித்தள்ள அதற்கும் போதுமான பலம் இராமற்போவது. மலச்சிக்கலுக்கு ஆதிகாரணங்கள் எப்போதும் உட்கார்ந்துகொண்டே வேலைசெய்வதும், இரத்தம் சுத்தமில்லாமல் இருப்பதுமேயாம்.

மலச்சிக்கலின் குறிகளாவன : குடல்கள் நிரம்பி, விரிந்த மாதிரியான ஒரு உணர்ச்சி; உறக்கம், ஒய்ச்சல், தலைவலி, சில சேசுகளில் சுவாஸம் நாற்றமெடுத்து, மலம் துர்க்கந்தம் வீசுதல்; ஸ்திரீ புருஷர்களுடைய மர்மஸ்தானங்களுக்குக் கெடுதல் நேரிடுதல்; கல்லீரலின் சுறுசுறுப்பு அடங்கிப்போய், மலச்சிக்கல் தீராமல் நாட்பட இருந்துவந்தால், பித்தநீரும், மற்ற கழிவடைகளும், சர்மத்திலுள்ள சந்துகளின் வழியாய் வெளியாவது இயற்கை; அம்மாதிரி அது வெளிவரும்போது ஒரே துர்க்கந்தம் வீசும்.

மலச்சிக்கலுக்கு சிகிச்சை செய்யும்போது, அதன் காரணங்களைக் கண்டறிய வேண்டும்; ஆகாரத்தில் மாறுதல் வேண்டும். "வறுத்ததும், சுட்டதுமான உருளைக்கிழங்குகளும், பழுப்பு நிறமாகும்படி சமைக்கப்பட்ட காய்கறிகளும், மாமிசமும், நுண்ணிய கோதுமை ரொட்டியும், எந்தவிதமான அரிசி சாப்பாடும், தித்திப்பான ஆப்பில் பழங்களும், மலத்தைப் பந்தனம் பண்ணும்படியான எவ்வித ஆகாரமும், பழமும், வழக்கமாய் மலச்சிக்கல் உள்ள ஜனங்களுக்குக் கெடுதலானவை". மலத்தைக் கழிக்கும் குணத்தையுடைய பழங்களை உண்பதனால் மலச்சிக்கல் தீரும். அப்பழங்களுள் திராக்ஷை சிறந்தது. திராக்ஷைப் பழத்தின் சிறப்பைக் குறித்து ஒருவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார் :—"ஆரோக்கியமாயிருக்கும்போது சதையை மாத்திரம் விழுங்கு; குடலில் மலச்சிக்கலிருந்து மலத்தைக் கழிக்க வேண்டுமானால், சதையுடன் கொட்டையை விழுங்கு; தோலைத் தள்ளு; மலக்கழிச்சல் அதிகமாகவிருந்தால் அதை நிறுத்த, கொட்டையைத் தள்ளி சதையைமட்டும் விழுங்கு; தவிர தோலை நன்றாய் மென்று மலத்தைக் கட்டும்படியான அதன் ரஸத்தைமட்டும் விழுங்கு என்பதே.

சந்தா நேயர்கட்கு!

அன்பீர்!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1935-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும், புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பிவைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும், சென்ற வருஷத்திற்கு ஏற்கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள் நிகழும் 1936-ம் ஆண்டுக்குரிய சந்தா ரூபாயை முன்பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனாப் மு. முகம்மதுஷரீப் சாஹிப் அவர்கள்,

(208, ஸீலிங்கி ரோட்) இடமும்

பினங், மலாக்கா & மலாய் நாட்டு வாசிகள்

ஜனாப் **K. A.** பகீர் முகம்மது சாஹிப்,

(P. O. Box No. 60, கிள்ளான்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குதெருவு, கொழும்பு) இடமும்

தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

ஆங்கில அரிய நூல்கள்

மீரட், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ முஹம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்திக்கீ அவர்கள் அறபியிற் றேர்ந்த பண்டிராக இருப்பதுமல்லாமல் ஆங்கிலக் கல்வியிலும் உயர்தரப் பட்டப் பரீக்ஷையிற்றேர்ந்த மேதாவி என்பதும், ஜப்பான், ஆஸ்டிரேலியா, தென் ஆபிரிக்கா, மலாயா முதலிய தூரதேசங்கள் சென்று மார்க்கோபன்யாசம் புரிந்து வருவதும், இவர்களது அரிய உபன்யாசங்களைக் கேட்ட நூற்றுக் கணக்கான மேதாவிகள் இஸ்லாத்திற் சேர்ந்து வருவதும் உலகப் பிரசித்தம். மௌலானா அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளையும் தத்துவங்களையும் பற்றி ஆங்கிலத்தில் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். இந்நூற்கள், ஆங்கிலங் கற்றவர்களுக்கு தக்க பிரயோஜனம் அளிப்பதாக இருப்பதால், அன்பர்கள் இவைகளை வாங்கிப் படித்துப் பிரயோஜனம் அடைவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

புத்தகங்களின் விபரம்.

		Rs.	A.
1.	First Teachings of Islam (Shafi)	1	4
2.	The Elementary Teachings of Islam	0	12
3.	A New Muslim World in Making	0	8
4.	The Universal Teacher	0	4
5.	Religious & Scientific Progress of the World ...	0	6
6.	Spiritual Culture in Islam	0	6
7.	A Shavian meets a Theologian	0	4
8.	Deeni Omoomi (Urdu)	0	2

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T., Madras.